320

T.N.L.C. Debates

Official Report

Vol: CXCIX No: 3, 4.

983

D
V211,32'N83
N83.199.3-4)
143185

(Issued 30—11—1983)

23

320

தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

# TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

# OFFICIAL REPORT

WEDNESDAY 20th APRIL 1983

Volume CXCIX (No. 3)

©
GOVERNMENT OF TAMIL NADU
1983

*Legislative Council Department*
*Fort St. George, Madras*-600 009.

Price *Rs.* 2.75 *Paise*

143185

# தமிழ் நாடு சட்டமன்ற மேல்வை.

---

புதன்கிழமை, 1983 ஏப்ரல் 20.

சித்திரை 7, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு—2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அரசினர் விதைப் பண்ணைகள்

* 297 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1—5—1982 அன்றுள்ளவாறு தமிழகத்தில் மொத்தம் எத்தனை அரசினா விதைப் பண்ணைகள் உள்ளன? அவை எங்கெங்கு உள்ளன?

(இ) மேலும் புதியதாக விதைப் பண்ணைகள் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(உ) ஆம் எனில், அதற்கு ஒதுக்கியுள்ள மொத்தத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) அவையின் முன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டிருக்கிறது.

(இ) மற்றும் (உ) ஆம். ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள ஐந்து விதைப் பண்ணைகளுக்காக ரூ. 206.34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவரவர்களே, விவர அறிக்கையிலே 49 விதைப் பண்ணைகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே எண்ணெய் வித்துக்களுக்காக ஐந்து விதைப் பண்ணைகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மீதமுள்ள 44 விதைப் பண்ணைகளிலே எந்த

---

@ 481—482ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

வகையான விதைகளை உற்பத்தி செய்கிறார்கள்? அவைகள் எந்த வகையிலே விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன? அதனால் விவசாயப் பெருமக்கள் பெறும் நன்மைகள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, மற்ற 44-ம் வேளாண்மை இயக்குநரின் கீழ் இயங்குகின்றன. நெல், சிறுதானியப் பயிர்கள், வீரிய ஒட்டு ரகப் பயிர்கள், பருத்தி, பயறு விதைகள் ஆகியவை அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆண்டுக்கு 3,000 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. அவைகள் விதை மையங்கள் மூலமாக வழங்கப்படுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே ஐந்து விதைப் பண்ணைகள் புதிதாகத் தொடங்கப்பட இருப்பதாகச் சொன்னார்கள். அவை எவ்வளவு மூலதனத்தில், எங்கெங்கே தொடங்கப்படவிருக்கின்றன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே, 1984-85 ஆம் ஆண்டுவரைக்கும், இவைகள் தொடங்கப்படுவதற்காக 206.34 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 51.39 லட்சம் 1982-83 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பண்ணையும் 200 ஏக்கர் பரப்பளவில் அமைய இருக்கிறது. எங்கெங்கே என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

**திரு. க. அருணாசலம்:** தலைவரவர்களே, தனியார் துறையிலே உள்ள விதைப் பண்ணைகளுக்கும், அரசு விதைப் பண்ணைகளுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, இவை வேளாண்மைத் துறையின் கீழ் இயங்கக்கூடிய பண்ணைகள். தனியார் துறையில் இயங்கக்கூடிய பண்ணைகளில், இந்த விதைகள் மூலமாக அங்கே உற்பத்தி செய்து, அந்த விதைகளைச் 'சான்றிதழ் பெற்ற விதைகள்' என்று ஆக்கி, அவர்கள் மூலமாகக் கொடுக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவரவர்களே, விவர அறிக்கையிலே நீலகிரி மாவட்டத்தில் எதுமில்லை என்பதாகத் தெரிகிறது. அதன் காரணம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அங்கே விளையக் கூடியவை தோட்டக் கலைப் பயிர்கள்தான்.



**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இந்த விதைப் பண்ணைகள் மூலமாக நம்முடைய அரசுக்கு ஆண்டுதோறும் கிடைக்கின்ற லாபம் என்ன? மேலும் இதனை விரிவாக்க, இப்போது செய்யப்பட்டுள்ளதுபோல, ஆண்டுதோறும் திட்டங்களைத் தீட்டி, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, 1976-77-லே லாபம் 10.82 லட்சம் ரூபாய் என்று இருந்தது. 1977-78, 1978-79, 1979-80 ஆகிய ஆண்டுகளில் நாம் நஷ்டத்தைச் சந்தித்தோம். 1980-81-ல் லாபம் 5.42 லட்சம் ரூபாய் வந்திருக்கிறது.

**திரு. செ. முத்துசாமி:** தலைவரவர்களே, இப்போது தமிழகத்திலே கண்டு பிடிக்கப்பட்டுள்ள ஐ.ஆர். 50 என்ற ரகம் வேட்டைக்காரன்புதூரில் இதுவரை இல்லாத விளைவைத் தந்திருக்கிறது. 4,000 கிலோவிற்கு மேல் நெல் விளைச்சல் இருந்ததாகக் கூறுகிறார்கள். அதை எந்த அளவிற்கு நாடு பூராவும் விளைவிக்க அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அது நல்ல ரகமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அது நல்ல ரகம் தான். வறட்சியைத் தாங்கக்கூடியதுதான். அதை நாடு முழுவதும் பரப்ப இந்தத் துறை முயற்சி எடுக்கும்.

### தவிட்டிலிருந்து எண்ணெய் எடுத்தல்

*298 வினா.—**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலைகள் தொடங்கிட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** (அ) மற்றும் (இ) சேலம் மாவட்டத்தில் வசந்தபுரம் கிராமத்திலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் புனக்குளம் கிராமத்திலும் தவிட்டிலிருந்து எண்ணெய் எடுக்கும் ஆலைகளைத் தொடங்கியுள்ளது. முதல் ஆலையில் உற்பத்தி தொடங்கியுள்ளது. இரண்டாவது ஆலை கட்டுமானப் பணி முடியும் தறுவாயில் உள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவரவர்களே, இப்போது தொடக்கப்பட விருக்கும் இரண்டு ஆலைகளிலே அரசு சார்பிலே செய்யப்படவிருக்கும்

முதலீடு என்ன? அதிலே எந்த அளவுக்கு வருவாய் வருமென்று அரசு எதிர் பார்க்கிறது? அந்த இரண்டு இடங்கள் தவிர, வேறு மாவட்டங்களிலே அந்தத் தொழிலைத் துவங்க அரசு முனைப்பு காட்டுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வேறு இடத்திலே தொடங்குகின்ற உத்தேசமில்லை. வேளாண் தொழில் இணையம் மூலம் அந்த ஆலைகள் தொடங்கப்பட்டுள்ளன. மதிப்பீடு பற்றி விவரமில்லை. தமிழ் நாட்டில் மொத்தம் 14 ஆலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆண்டுக்கு சுமார் ஒரு லட்சம் டன் தவிட்டிலிருந்தும், 50,000 டன் பிண்ணாக்கு போன்றவைகளிலிருந்தும் எண்ணெய் தயாரித்து, விற்பனை செய்கிறார்கள். இதில் லாபம் கிடைக்கிறது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** தலைவரவர்களே, தவிட்டிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் எதற்குப் பயன்படுத்தப்படுகிறது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** அதுபற்றிய முழுமையான விவரக் குறிப்புகள் இல்லை.

## நிலக்கடலை சாகுபடித் திட்டம்

***299 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வட ஆற்காடு, தென் ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டத்தில் தேசிய பால்பண்ணை வளர்ச்சி வாரியத்தின் உதவியுடன் கூடிய நிலக்கடலை சாகுபடித் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** (அ) ஆம்.

(இ) தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு ஆகிய மாவட்டங்களில் ரூ. 11.50 கோடி மதிப்பீட்டில் 1.75 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவு பயனடையக் கூடிய வகையில் ஏழாண்டுகளுக்குள் நிலக்கடலை சாகுபடி, கொள்முதல், எண்ணெய் பிழிதல், விற்பனை செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கென கிராம அளவில் எண்ணெய் வித்து உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க அமைப்புகள் ஏற்படுத்தி, மாநில அளவில் கூட்டுறவு இணையம் ஒன்றினை ஏற்படுத்தி அவற்றின் மூலம் திட்டப்பணிகளை நிறைவேற்ற வகை செய்யப் பட்டுள்ளது.



**டாக்டர் இரா. சனார்த்தனம் :** தலைவரவர்களே, தமிழ் நாட்டில் நிலக் கடலை எந்த அளவுக்கு உற்பத்தியாகிறது? அதை வெளி நாடுகளுக்கு விற்கின்ற உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை.

**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவரவர்களே, இவ்வாறு எண்ணெய் எடுக்கும் ஆலைகள் ஆரம்பிக்கப்பட இருப்பது கூட்டுறவுத் துறையிலா, தனியார் துறையிலா அல்லது அரசுத் துறையிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தற்போது எண்ணெய் வித்துக்கள் துறையின் கீழ் கூட்டுறவு இணையத்தின் கீழ் அது துவங்கப்படுகிறது. அது உற்பத்தி ஆரம்பித்ததற்குப் பிறகு, எப்படி மாற்ற முடியும் என்பதுபற்றி முடிவு செய்யப்படும்.

**திரு. செ. முத்துசாமி :** தலைவரவர்களே, வறட்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள இந்தச் சூழ்நிலையில், கடலை மகசூல் எடுக்க வேண்டிய காலம் இது. எண்ணெய் வித்துக்களில், நிலக் கடலையைப் பொறுத்தவரையில், எந்த அளவுக்கு அரசு மகசூலை எதிர்பார்க்கிறது? நமக்கு எவ்வளவு கிடைக்கக்கூடும்? அப்படி கிடைக்காமல் போனால், அந்தப் பாதிப்பை ஈடுகட்டுவதற்கு எண்ணெயை இறக்குமதி செய்வது அல்லது மற்ற மாநிலங் களிலிருந்து பெற நடவடிக்கை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்திருக்கிற தகவல்கள் அரசின் நல்ல முயற்சியைக் காட்டுகிறது. நிலக் கடலை விவசாயம் செய்யும் விவசாயிகள் கட்டாயமாக கூட்டுறவு சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆக்கப்படுவார்களா? அப்படிச் செய்கிறபோது, அந்தக் கூட்டுறவுச் சங்கங்களை சில காலத்திற்கு—ஆறு மாதங்கள் அல்லது ஓராண்டுக்கு— (Monitered Society) மானிட்டர்ட் சொசைட்டி என்ற முறையில் அரசாங்க அலுவலர்கள் இருந்து, ஒழுங்குபடுத்தி, நிர்வகித்த பிறகு, கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கும் வகையிலே நடவடிக்கை எடுக்க ஒரு பரீட்சார்த்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** தலைவரவர்களே, நிலக்கடலை உற்பத்தி செய்யும் பெருமக்கள் நிச்சயமாகக் கூட்டுறவு அமைப்புகளிலே சேர வேண்டுமென்பதுதான் அரசின் விருப்பம். அப்படிச் சேரும்போதுதான் அவர்

களுக்கு உரிய நல்ல விலை கிடைக்கப்பெறும். இந்த ஆண்டுகூட நாமே கொள்முதல் செய்து, அவர்களுக்கு நல்ல விலையைப் பெற்றுத் தந்திருக்கிறோம். இது தொடர்பான ஆலைகள் அமைக்கும்போது, எல்லா விவசாயப் பெருமக்களும் பெரிதும் பயனடைவார்கள். 2,500 கிராமங்களிலே 1.50 லட்சம் விவசாயப் பெருமக்கள் பயனடையத் தக்க அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. 500 எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இப்போது அமைக்கப்பட்டிருக்கின்றன. தேசிய பால் வள வாரியத்தினுடைய உதவியில் இயங்குகிற காரணத்தால், நிச்சயமாக விவசாயப் பெருமக்கள் இதிலே ஆர்வமும், அக்கறையும், உற்சாகமும் பெற வாய்ப்பு இருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** தலைவரவர்களே, கூட்டுறவு எண்ணெய் ஆலைகள் எவ்வளவு முதலீட்டில், எந்த அடிப்படையிலே துவங்க இருக்கின்றன? எக்ஸ்பெல்லர்களாகத் துவங்க இருக்கிறார்களா? அதோடு விழுப்புரம் பகுதியில் இருக்கின்ற வனஸ்பதி பேக்டரிகளையும் இணைத்து நடத்த அரசு ஆலோசனை செய்யுமா?

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** ரூ. 11.50 கோடி மொத்த மதிப்பீட்டிலே இந்தத் திட்டத்தைத் தொடங்கியிருக்கின்றோம். சிறுகச் சிறுக தேசிய பால் வள வாரியத்தினுடைய உதவியையும் பெற்றுக்கொண்டே இருக்கிறோம். இராணிப்பேட்டையில் எண்ணெய் பிழிகின்ற ஆலையை அமைக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே மணிலா உடைக்கின்ற பிரிவு, எண்ணெய் பிழிகின்ற பிரிவு, பிண்ணாக்கு பிழிகின்ற பிரிவு, எண்ணெய் சுத்திகரிப்புப் பிரிவு ஆகியவைகளை எல்லாம் இணைத்து அந்த ஆலையை அமைக்க இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, 100 மெட்ரிக் டன் வனஸ்பதி உற்பத்திக்கும் ஏற்பாடு செய்திருக்கிறோம்.

### பஞ்சாயத்து ஒன்றிய மகப்பேறு மருத்துவமனை

*300 வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம் வட்டம், புவனகிரி பஞ்சாயத்து ஒன்றியத்தில் உள்ள பின்னலூர் கிராமத்திலிருக்கும் "ஊராட்சி ஒன்றிய மகப்பேறு மருத்துவமனை" சரியாகச் செயல்படவில்லை என்பதையும், மருத்துவமனைக் கட்டிடம் பழுதடைந்துள்ளது என்பதையும் அரசு அறியுமா?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை யாது?





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** (அ) சிதம்பரம் வட்டம், புவனகிரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பின்னலூர் கிராமத்திலிருக்கும் ஊராட்சி ஒன்றிய மகப்பேறு மருத்துவமனையில் மகப்பேறு உதவியாளர் பதவி காலியாக இருந்திருக்கிறது. மகப்பேறு மருத்துவமனைக் கட்டிடம் பயன்படுத்துவதற்கு தகுந்ததாகவே உள்ளது.

(இ) சேத்தியாதோப்பு மகப்பேறு உதவியாளரை பின்னலூர் மகப்பேறு நிலையத்திற்கு கூடுதல் பொறுப்பு வகிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு, அவர் பொறுப்பில் தற்சமயம் மகப்பேறு நிலையம் இயங்கி வருகிறது.

**திரு. பா. ரா. தாமஸ்:** பொதுவாக இவ்வாறு இருக்கின்ற மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தனித் தனிப் பொறுப்பு இருக்க வேண்டும். அண்டையிலுள்ள கிராமங்களில் பொறுப்பு வகிப்பவர்களை இங்கே அனுப்பினால், அங்குள்ள மக்களுக்குத் தேவைப்படும் சமயத்திலே அவர்கள் உதவ மாட்டார்கள். இதனால் மக்களுக்குத் தொல்லை ஏற்படுகிறது. தனித் தனியாக அந்தப் பொறுப்பை உருவாக்கி அவர்களை அங்கே அமர்த்தும் வகையிலே அரசு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதிலுள்ள சிக்கல்களை நான் சொல்கிறேன்.

In G.O. Ms. No. 1936, Health, dated 21st September 1982 the Government issued orders taking over all Maternity and Child Welfare Centres run by the Panchayat Unions with effect from 1st October 1982.

அக்டோபர் 1-ல் இருந்து எல்லாப் பஞ்சாயத்து யூனியன் மெட்டர்னிட்டி அன்ட் சைல்ட் வெல்பேர் சென்டர்களையும் அரசே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இன்றைக்கு அதை எதிர்த்து கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். இந்த உத்தரவை நிறுத்தி வைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதிலே பணியாற்றக் கூடிய சிலர், எம்பிளாயீஸ் அசோசியேசன் ஆட்கள், இந்த ஜி.ஓ.-வை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குப்போய் 'ஸ்டே' வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். நாம் அந்த ஸ்டேயை 'வெக்கேட்' செய்ய வேண்டுமென்று ரிப்ளை போட்டிருக்கிறோம். ஆறு மாதங்களுக்கு மேலாக அந்த வழக்கில் 'ஸ்டே' அப்படியே இருக்கிறது. இன்னும் 'வெக்கேட்' ஆகவில்லை. இதுதான் அங்கே இருக்கக்கூடிய சிக்கல்.

**திரு. பா. ரா. தாமஸ்:** அந்தப் பகுதி மக்களுடைய நலன் கருதி, தனித் தனியாக அவ்வாறு நியமிக்கக்கூடாது என்கிற வகையிலே 'ஸ்டே' வாங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஜி.ஓ.-வைப்

[1983 ஏப்ரல் 20

பற்றித் தெளிவாகத் தெரியாத காரணத்தால் கேட்கிறேன். 'ஸ்டே' என்கிற பெயரில் இவ்வாறு ஏற்படும்போது, உடனுக்குடன் நம்முடைய அரசு வழக்கறிஞர்கள் ஆஜராகி ஸ்டேயை 'வெக்கேட்' செய்ய நடவடிக்கை எடுத்து கிராமப்புறங்களில் இருக்கிற மக்களுக்குத் தொல்லை ஏற்படாத வகையில் ஆவன செய்ய, நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இதைப்பற்றி என்னுடைய மனதிலே இருக்கிற கருத்தைச் சொல்கிறேன். இதை நான் சொல்ல முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் சில பிரச்சினைகளைப்பற்றி அறிய வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அரசு நல்ல எண்ணத்துடன் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கூட இப்படிச் செய்ய வேண்டுமென்று பிளானிங் கமிஷன் சொல்லியிருக்கிறது. 'மல்டி பர்பஸ் ஒர்க்கர்ஸ்' என்கிற அடிப்படையில் அங்கே போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பணி அலுவலர்கள் இருக்க வேண்டுமென்று உத்தரவு போட்டோம். அதை எதிர்த்து, ஒரு சாதாரண அட்மினிஸ்ட்டிரேடிவ் மேட்டரை எதிர்த்து, சிலர் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறார்கள். நம்மிடத்தில் மிகவும் திறமைசாலியான வழக்கறிஞர்கள் எல்லாம் இருக்கிறார்கள். இன்னும் ஸ்டே 'வெக்கேட்' ஆகாமல் அப்படியே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம்

*301 **வினா.—திரு. பா. ரா. தாமஸ் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன்பெறும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக பல்பொடி வழங்கும் திட்டம் எப்பொழுது முதல் துவங்க இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** கிராமக் குழந்தைகளுக்கு இலவசப் பல்பொடி வழங்கும் திட்டம் 14—11—1982 முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** இலவசப் பல்பொடி வழங்கும் திட்டத்தின் கீழ் எவ்வளவு குழந்தைகள் பயன் பெற்று வருகிறார்கள் ? அதை அதிகப் படுத்துகிற எண்ணம் அரசுக்கு உண்டா ? இந்த இலவசப் பல்பொடி வழங்கும் திட்டத்தின் பேரால் மாவட்ட அளவில் எவ்வளவு குழந்தைகள் பயன்பெற்று வருகிறார்கள் ?



1983 ஏப்ரல் 20]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** 57 ஆயிரம் மையங்கள் மூலமாக இதை வழங்கிக்கொண்டிருக்கிறோம். 54 இலட்சம் குழந்தைகள் இதனால் பயனடைந்து வருகிறார்கள். 5 பிளஸ் 9 பிளஸ் என்கிற ஒரு குரூப் மற்றும் 2 பிளஸ் 4 பிளஸ் என்கிற ஒரு குரூப்—ஆக இரண்டு பிரிவிலே இருக்கிற குழந்தைகளுக்கு இது வழங்கப்படும்.

Thiru G. VASANTHA PAI : Will the Hon. Minister kindly clarify whether neem leaves are being used for making tooth powder, because I am told that neem leaves and neem stalks are very good for the teeth ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** இந்த காம்போசிஷனைப் பொறுத்தவரையில்

Calcium Carbonate precipitate 97 per cent, Sodium Laryn Sulphate 2 per cent, Clove oil 0.2 per cent, Peppermint oil 0.2 per cent, Methyl 0.4 per cent, Saccharine Sodium 0.2 per cent,

இதுதான் இதனுடைய காம்போசிஷன். இதனை சிட்கோ மூலம் வினியோகம் செய்து வருகிறோம். நீம் லீவ்சை, நீம் ஸ்டால்க்சைப் பொறுத்தவரையில், மா இலையைப் பொறுத்தவரையில், இவைகளின் பயனைப் பயன்படுத்தலாம். இதைப் பயன்படுத்துகின்ற நேரத்தில் எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டுமென்கிற விவரத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை ஆசிரியர்களும் பார்க்கிறார்கள். அது மட்டுமல்லாமல், நம்முடைய டாக்டர்களும் அதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் எப்படி இதைப் பயன் படுத்துவது என்று வருகிற நேரத்தில் இந்த யோசனையையும் எடுத்துக் கொள்ளலாம்.

**திரு. பா. ரா. தாமஸ் :** 2 பிளஸ் அதுபோல் 5 பிளஸ் என்கிற அடிப்படையில் வழங்கும்போது, 2 பிளஸ் என்ற வயதிலுள்ள குழந்தைகளைப் பொறுத்த வரையில், அந்தக் குழந்தைகள் இதைப் பயன்படுத்தி சரியாகப் பல் விளக்குவதில்லை. வீடுகளில் கூட குழந்தைகளின் தாய்மார் அல்லது மூத்தவர்கள் அவர்களுடைய கையைப் பிடித்து பல்லைத் தேய்த்து விடுகிற நிலை இருக்கிறது. இதற்காக அங்கே பயிற்சி ஏதாவது கொடுக்கப்படுகிறதா ? எத்தனை நாட்களுக்கு ஒரு முறை பல்பொடி கொடுக்கப்படுகிறது ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாதத்திற்கு ஒரு முறை கொடுக்கப் படும். பெற்றோர்கள்—தாய்மார்கள் அங்கு வருகிறார்கள். அவர்களிடத்தில் குழந்தைகள் எப்படி அதைப் பயன்படுத்த வேண்டுமென்பதுபற்றி விளக்கி சொல்லிக் கொடுக்கப்படும்.

**திரு. ஏ. ஜே. தாஸ்:** சென்னை நகரில் குடிசைப் பகுதிகளில் வாழ்கின்ற குழந்தைகளுக்கும் இது வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, கிராமங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். சென்னை நகர் போன்ற இடங்களுக்குக் கொடுக்கிற யோசனையையும் ஆராயலாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** இலவசப் பல்பொடித் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற பல்பொடியை சிட்கோ மூலமாகத் தயாரிப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மட்டும் தான் தயாரிக்கிறார்களா? தனியார் யாராவது அப்படி தயாரிக்கிறார்களா? யார் யார் தயாரிக்கிறார்கள்? எந்த அளவில் தயாரிக்கிறார்கள்? இப்போது தயாரிக்கப் படுவது போதுமானதா? மேலும் இது விரிவாக்கப்படுமா? அதற்கான உத்தேசம் அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** இதனை உற்பத்தி செய்வதற்கான பொறுப்பை சிட்கோவிடம் ஒப்படைத்திருக்கிறோம். சிட்கோ நிறுவனம் அங்கீகரிக்கப்பட்ட தனியார் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸிடம் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறது. அவர்கள் சரியாகப் பல்பொடியைத் தயாரிக்கிறார்களா என்று சிட்கோவிலிருந்து பார்க்கிறார்கள். அதுபோல் சின்கோனாவைப் பொறுத்தவரையில்,

In 3 districts, Cinchona Department has come forward to prepare tooth powder as per Government specifications and supply it at the rate at which SIDCO is supplying, that is, 42 paise per 30 grams. நீலகிரி, கோயம்புத்தூர், பெரியார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் இதனைச் செய்ய முன்வந்தார்கள், நாம் அவர்களுக்கு அனுமதி தந்திருக்கிறோம்.

**திரு. பா. ரா. தாமஸ்:** இதில் இனிப்புத் தன்மை இல்லையென்றால், நிச்சயமாகக் குழந்தைகள் இதைப் பயன்படுத்த முன்வரமாட்டார்கள். அந்த வகையில் அவர்கள் ருசித்துப் பார்க்கிற வகையில் இதனைக் கொடுக்கலாம். இப்போது நாம் வீடுகளில் பார்க்கிறோம். பேஸ்டுகளில் இனிப்புத் தன்மை யிருப்பதால், குழந்தைகள் மணிக் கணக்கில், ருசி பார்த்துக்கொண்டே, இன்னும் சில நேரங்களில் விழுங்கிக் கொண்டும் பல் தேய்க்கிற நிலையைப் பார்க்கிறோம்.

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இனிப்பு ரொம்ப அதிகமாக இருந்தால், குழந்தைகள் அந்தப் பல்பொடியைச் சாப்பிட்டு விடுவார்கள். ஆகவே சாக்ரீன் சோடியம் 0.2 சதவிகிதம் கலக்கிறோம். இதுவே இனிக்கும். மேலும் பெப்பர்மென்ட் ஆயிலும் 0.2 சதவிதம் கலந்திருக்கிறோம்.



**திரு. ஜே. எம். மியாகான்:** தலைவர் அவர்களே, நமது அரசு சித்த வைத்தியம், ஓமியோபதி வைத்தியத்தை ஊக்குவித்து வருகிறது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்பதைப்போல், அந்தமாதிரி சித்த வைத்தியத்தில் தயாரிக்கப்பட்ட பல்பொடியைக் கொடுக்காமல் அலோபதி பல்பொடியைக் கொடுக்கிறார்கள். அந்த முயற்சியை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. தமிழ் வைத்தியத்தில் பல்பொடி தயாரிக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். நாம் தயாராக இருக்கிறோம். இன்னும் கூட இந்த மாதிரி பல்பொடி செய்து தருகிறோம் என்று பலர் முன்வந்திருக்கிறார்கள். ஆனால் அனுபவத்தில் நாம் பார்த்து வருவது, சித்த வைத்திய மருத்துவ மனைகள் சில ஊர்களில் ஆரம்பிக்கப்படுகிறபோது, அங்குள்ள அரசியல் வாதிகள், இன்னும் பலர், அந்த சித்த மருத்துவமனையை அப்படியே மாடர்ன் மெடிசின் மருத்துவமனையாக மாற்றவேண்டுமென்று சொல்கிறார்கள். அதுமாதிரி சில இடங்களில் நடந்துவிடுகிறது. அதுமாதிரி பல்பொடி விஷயத்திலும் குறுக்கிடாமல் இருக்க உறுப்பினர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

## ஆட்டோ-ரிக்ஷா அளவிகள்

* 302 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஆட்டோ-ரிக்ஷா மீட்டரை திருத்தியதாக 1981-82 ஆம் ஆண்டில் தமிழகத்தில் எத்தனை மெக்கானிக்குகள் கைது செய்யப்பட்டுள்ளனர்?

(இ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

(உ) இதுபோல் மேலும் தவறுகள் நடைபெறாமல் இருக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மொத்தம் 30 பேர்கள் கைது செய்யப்பட்டனர்.

(இ) கைது செய்யப்பட்டவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் தொடரப் பட்டுள்ளது.

(உ) வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, சென்னை மற்றும் காவல் துறையினர் மீட்டர்களை திருத்துபவர்களை தீவிரமாக கண்காணித்து வருவதுடன் குற்றங்கள் புரிவோர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான்கைந்து பேர்கள் ஒரே தூரத்திற்குப் போகும்போது, இரண்டு வண்டிகளில் செல்ல நேருகிறது. அப்படிப் போகும்போது, இரண்டு ஆட்டோக்களிலும் வேறுவிதமான கட்டணங்கள் மீட்டர்களில் காட்டுகின்றன. அதுமாதிரி ஆட்டோ ரிக்ஷாக் காரர்கள் ஏதாவது வழிவகைகள் வைத்திருக்கிறார்களா? அப்படியானால் அது தடுக்கப்பட்டு ஒரே மாதிரி கட்டணம் வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை சில நேரங்களில் ஏற்பட்டுவிடுகின்றது. அதைக் கண்காணிக்க போக்குவரத்து அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் கண்காணித்து அப்படிப்பட்ட மீட்டர்களைப் பார்த்து, அதுகுறித்து கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். இருந்தாலும் ஆங்காங்கே சில தவறுகள் நடந்து விடுகின்றன.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷாக்களில் பெரும்பாலும் இரவு நேரங்களிலும் அதிகாலை நேரங்களிலும் மீட்டர்கள் போடப்படுவதில்லை. இதனால் பயணிகளிடம் தகராறு செய்யக்கூடிய நிலை இருக்கிறது. அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கிறார்கள் என்றாலும், தொடர்ந்து இந்தக் கஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தவிர்க்க, மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அதிகாரிகள் கண்காணித்து வருகிறார்கள். இருந்தாலும் சில இடங்களில் தவறு நடக்கிறது என்பதை மறுக்க முடியாது. எனவே இதுமாதிரி தவறுகள் நடக்கிற நேரத்தில், சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக அங்குள்ள காவல் துறையினரிடம், போக்கு வரத்து அதிகாரிகளிடம் புகார்கள் கொடுத்தால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். அதனால் பயனும் ஏற்படும். அதிகாரிகளே எல்லா இடங்களிலும் சென்று கண்காணிக்க முடியாது. பாதிக்கப்படுகிறவர்களும் இதை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து பரிசீலிக்கப் பட்டு, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.





**திரு. ஜி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, சில வெளி மாநி
இருக்கக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்கள் பெரிய அளவில் பொருத்
பின்புறம் மூன்று பேரும், முன்புறம் டிரைவர் அல்லாமல் ஒருவரும் உட
ஆக நான்கு பேர் பயணம் செய்கிற வகையில் பெரிய அளவில் இரு
அதுமாதிரி இங்கேயும் பெரிய ஆட்டோக்கள் செய்து கொடுக்க ம
அமைச்சர் அவர்கள் ஏதாவது வழிவகைகள் வைத்திருக்கிறார்கள
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, இப்போத
பேர் பயணிகள், ஒருவர் ஓட்டுனர் என்று இருக்கும்போதே, ச
ஐந்து பேர் வரை போகிறார்கள். அந்தச் சங்கடம் இப்போது இ
இன்னும் பெரிதாக்கிவிட்டால், 10 பேர் பயணம் செய்வார்கள். என
பயம் இருக்கிறது. இப்போதிருக்கிற ஆட்டோக்களின் தன்மை 2-ம்
மூன்று பேர் என்று இருக்கிறது. இதை விரிவுபடுத்துவது சரியாக
இப்போது உள்ள ஆட்டோக்களில் மூன்று பேர் பயணம் செய்ய
வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்திருக்கின்றன. மத்திய
இதுமாதிரி கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் வை
பார்க்கிறபோது, இது பொருத்தமாக இருக்காது.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** தலைவர் அவர்களே, ஆட்ே
மீட்டர்கள் டக் டக் என்று விழும்போது, நமது மனம் பக்
அடித்துக்கொள்கிறது. சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன் முன்பு ஆ
நிற்க போதுமான இடம் இல்லை. நாம் இருவர் நமக்கு இருவர் எ
யிருப்பது மாதிரி, அங்கே கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள். ஆட்
அதிகம் பேர் போவதற்கு, டெல்லி மாநகரில் உள்ள 'பட் பட்' மு
கொண்டுவரப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே,
சென்னையில் ஆட்டோக்கள் மிக அதிகமாக இருக்கின்றன. 'பட்
சென்னையில் கொண்டு வரப்பட்டால், இன்னும் சங்கடம் அதி
ஆகவே அதைப்பற்றி யோசனை எதுவும் இல்லை.

THIRU G. VASANTHA PAI: Will the Hon.
kindly clarify whether the Government will be in a po
indicate the distances between important places like
George Town, Adyar and Central Station or Egmore
and also the auto rickshaw fare for the said distances, in
nent place in the Railway Station, as is done in some ot
in India, so that we may easily understand the correc

be paid ? These particulars can be mentioned in a big sign-board in the Railway Stations. Will the Government examine this suggestion ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட தூரத்திற்கு இவ்வளவு கட்டணம் என்று போட்டிருப்போம். சில நேரங்களில் டிராபிக் பிராப்ளம் ஏற்பட்டு, சுற்றிக்கொண்டு போகிற நிலை ஏற்படும். அப்போது கூடுதலாகக் கட்டணம் காண்பிக்கும் மீட்டர்களைப் பார்த்து, பயணிகளுக்கும், ஓட்டுனருக்கும் சங்கடங்கள் ஏற்பட்டு விடக்கூடிய நிலைமை ஏற்படும். பத்து பைசா 20 பைசா வித்தியாசங்கள் நியாயமாக இருக்கலாம். ஆனால் இப்படி போர்டுகள் வைத்தால், இப்படிப்பட்ட பிரச்சினைகளில் அது பெரிதாகப் போய்விடும். அதைப்பற்றியும் சிந்தித்து, வேறுவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

Thiru J. M. MIAKHAN : While the Hon. Minister seeks the co-operation of the public, especially legislators, may I inform him that recently I made a complaint when the driver of an auto rickshaw demanded Rs. 6 for a ride from Periamet to Fort—Secretariat ? When I refused to pay the said fare, he would not take me and said that he was going to shed for lunch. I reported the matter to the police and I gave a written complaint at Periamet police station. I do not think that they have taken any action so far. The auto rickshaw drivers are very rude, they do not agree to ply for the metre charges, they want a minimum of Rs. 4 or one or two rupees more than the metre charges. One or two of them are honest but a majority of them are not so. Are the Government aware of it and have they taken any action ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்த புகாரைப்பற்றி எனக்குத் தகவல் தெரியவில்லை. இதுமாதிரி புகார்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இப்போதே அதுமாதிரியான புகார்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்து நடந்தால், இதற்கு மேலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஏ. ஜே. தாஸ் :** தலைவர் அவர்களே, ஆட்டோ ரிக்ஷா, டாக்சிகளில் மீட்டர்களில் தில்லுமுல்லு ஏற்படுவதால், பொது மக்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்றன. டெல்லியில் விமான நிலையத்தில் இறங்கியதும் ஒரு அட்டை கொடுக்கிறார்கள். இந்த இடத்திலிருந்து இவ்வளவு தூரத்திற்கு இன்ன



கட்டணம் என்று அதிலே குறித்திருக்கிறது. அந்த முறையை சென்னையில் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

**செல்வி ஆ. லீலாவதி :** தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள 'பட்பட்' முறை வண்டிகளைப் போல், சென்னையில் இருந்தால் மிக நன்றாக இருக்கும். ஒரே இடத்திற்குச் செல்பவர்கள் பல பேர் ஒரே வண்டியில் குறைந்த கட்டணம் செலுத்தி செல்ல வசதியாக இருக்கிறது. அரசு இப்போது அதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டாலும், பிற்பாடு அதைப் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் எல்லோருக்குமே இந்த 'பட்பட்' வண்டிமேல் ஆர்வம் இருக்கிறது. இருக்கிற சூழ்நிலையைப் பார்த்துத்தான், அதைச் செய்ய முடியும். அதை விடுவது மட்டுமல்ல, ஓட்டுவதற்கும் நாம் பயிற்சி கொடுக்க வேண்டும். அதற்கு ஆட்கள் வர வேண்டும். இருந்தாலும் இந்த யோசனை பரிசீலிக்கப்படும்.

**திரு. பா. சா. தாமஸ் :** தலைவர் அவர்களே, சென்னை தவிர பிற இடங்களில் மீட்டர் போடாத ஆட்டோக்கள், டாக்சிகள் இருக்கின்றன. அவற்றுக்கு எப்போது திட்டவட்டமாக மீட்டர்கள் பொருத்தப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மற்ற இடங்களிலும் மீட்டர் பொருத்தப்பட வேண்டுமென்று உத்தரவு போட்டிருக்கிறோம். சில இடங்களில் பொருத்த முடியவில்லை. இருந்தாலும் கூட, அதை நடைமுறைப் படுத்த கடுமையான நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். பல இடங்களில் புகார்கள் கொடுக்கப்படும்போது, அவை சரியானதாக இருக்கவில்லை. அதிகாரிகள் ஒவ்வொரு வண்டியையும் கண்காணிக்க முடியாது. பொதுமக்கள் புகார்களைக் கொடுக்கும்போது, முழுமையான அளவில் கொடுக்க வேண்டும். பொதுமக்களும் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். அதிகாரிகள் பார்க்கிற கேஸ்களில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

(முற்பகல் 10-00)

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாஸ் அவர்கள் குறிப்பிட்டதைப்போல், டெல்லி விமான நிலையத்தில் போய் இறங்கியதும், அங்கே ஒரு அட்டை கொடுக்கிறார்கள் என்பது உண்மை

**தான்.** அதை வாங்கிக் கொண்டுதான் நான் தமிழ் நாடு ஹவுசுக்குப் போனேன். மீட்டர் தொகை ரூ. 15-ஐக் காட்டியது. ஆனால் டிரைவரோ என்னிடம் ரூ. 25 கேட்டார். நான் "என்னிடம் அட்டை கொடுத்திருக்கிறார்களே" என்று சொன்னேன். அதற்கு அந்த டிரைவர் "வேண்டுமானால் நீங்கள் எழுதிப் போடுங்கள்" என்று சொல்லி ரூ. 25 கேட்டார். இப்படி அட்டை கொடுத்துவிட்டு, அதைக் கண்காணிக்காமல் இருப்பது சரியல்ல. எனவே அப்படிப்பட்ட முறையைச் சென்னையில் கொண்டுவருவதாக இருந்தால், கொடுக்கப்படும் அட்டைக்கு ஒரு மரியாதை இருக்கும்படி அரசு பார்த்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** டெல்லிப் பிரச்சினையைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. இங்கே நாம் அந்த முறையில் அட்டை வழங்கினால், அதை முறையாகப் பயன்படுத்துகிற வகையிலும், புகார்கள் வரும்போது நடவடிக்கை எடுக்கும் வகையிலும்தான் இருக்கும். இப்படிப்பட்ட முறைகள் மூலமாக குறைபாடுகளைப் போக்க வேண்டும் என்றுதான் முயற்சிகளை நாம் மேற்கொள்ளுகிறோம். வாய்ப்பு கிடைக்கும்போது, மாண்புமிகு உறுப்பினர் டெல்லியில் தம் அனுபவம் குறித்து உரியவர்களிடம் கேட்டுப் பார்க்கலாம்.

## *Night Bus Service.*

* 303 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether it is a fact that the Night Bus Service operated by the Thiruvalluvar Transport Corporation from Dindigul to Madras, has been stopped; and

(*b*) if so, the reasons for the same ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் திண்டுக்கல்-சென்னை என்ற தனி வழித்தடத்தில் பேருந்துகளை இயக்கவில்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. பா. ரா. தாமஸ்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னைக்கும் திண்டுக்கல்லுக்குமிடையே தனியான பேருந்து இயங்கி வந்ததாக நான் அறிகிறேன். இடைக்காலத்தில் அது நிறுத்தப்பட்டிருக்கிறது. திண்டுக்கல்லில் உள்ள பயணிகள் அங்கேயே தங்களின் பெயர்களைப் பதிவு செய்துகொண்டு சென்னைக்குப் பயணம் செய்திருக்கிறார்கள். இவ்வாறு முழுமையான அளவுக்குப் பயணிகள் அந்தப் பேருந்தில் பயணம் செய்யும் வாய்ப்பு இருக்கும்



போது, அந்தப் பேருந்து நிறுத்தப்பட்டதற்கு ஏதாவது தனிக் காரணம் உண்டா? அப்படி ஏதுமில்லை என்றால், மீண்டும் அந்த வழித்தடத்தில் தனிப் பேருந்து ஒன்றை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, 17—12—1981 மற்றும் 18—12—1981 ஆகிய நாட்களில் மட்டும் விழாக்கால பேருந்தாக, அந்த வழித்தடத்தில் பேருந்து விடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அது நிறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு பழனி செல்லும் பேருந்து, திண்டுக்கல்லைத் தொட்டுக் கொண்டு சென்றது. ஆனால் அதுவும் இடையில் வேறு வழியில் செல்ல அனுமதிக்கப்பட்டுவிட்டது. தற்போது 16 பேருந்துகள் திண்டுக்கல் நகரைத் தொட்டுச் செல்லும் நிலை இருப்பதால், பயணிகளுக்கு எந்தச் சங்கடமும் இல்லை. என்றாலும், தேவை என்ற நிலை இருப்பின், அதிகமான அளவில் திண்டுக்கல் நகருக்கு இருக்கைகளை ஒதுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** விரைவில் திண்டுக்கல் ஒரு தனி மாவட்டமாகப் பிரிக்கப்படவிருக்கிறது என்று மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார். இந்த நிலையில் அந்த நகருக்கு ஒரு தனிச் சிறப்பு வேண்டுமானால் சென்னைக்கும் திண்டுக்கல் நகருக்குமிடையே தனிப் பேருந்து விடுவது அவசியம். பின்னால் அது லாபகரமாக இல்லை என்றால், கைவிட்டு விடலாம். எனவே தற்போது பரிட்சார்த்தமாகவாவது சில காலத்திற்குத் தனிப் பேருந்து விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா? உரிய அளவுக்கு பயணிகள் எண்ணிக்கை இருந்தால், அது தொடர்ந்து நடத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த நகரைத் தொட்டுச் செல்லும் பேருந்துகளில் இருக்கைகளை ஒதுக்கி வைத்திருக்கிறோம். அவைகளேகூட சில நேரங்களில் முழுமையாக நிரம்பாத நிலை ஏற்படுகிறது. இந்தச் சூழ்நிலையில் தனியான பேருந்து ஒன்றை விடுவது சரியாக இருக்குமா என்பதை யோசிக்க வேண்டியிருக்கிறது. திண்டுக்கல் தனியான மாவட்டமாக வரும்போது, அங்கே பல்வேறு அலுவலகங்கள் போன்ற வசதிகள் ஏற்படும். அந்த நேரத்தில் நாமும் நிலைமைக்குத் தக்கபடி தனிப் பேருந்துகளை விடுவதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

**செல்வி ஆ. லீலாவதி:** திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் இரவு அல்லது பகல் நேரங்களில் நீண்ட தூரம் பயணிகளை ஏற்றிச் செல்லும்போது, அவற்றின் ஓட்டுநர்கள் சிலர் பேருந்துகளை ஓட்டல்

களுக்கு முன்னாலே நிறுத்துகிறார்கள். அப்படி அவர்கள் நிறுத்தும் இடங்களில் சரியான ஓட்டல் வசதி இல்லாமல் இருக்கிறது. சில நேரங்களில் மோசமான இடங்களில் நிறுத்திவிடுகிறார்கள். குறிப்பாக வேலூர் செல்லும்போது, "ராஜகுளம்" என்ற இடத்தில் இரவு 9½ மணிக்குச் சென்று பேருந்தை நிறுத்துகிறார்கள். அங்கே சரியான ஓட்டல் வசதியில்லை. இருந்தாலும் அந்தப் பேருந்தின் டிரைவர்-கண்டக்டர்களுக்கு அவர்கள் ஏதோ கொடுக்கிறார்கள் என்ற காரணத்திற்காக அப்படிப்பட்ட இடங்களில் நிறுத்துகிறார்கள். அங்கிருந்து ஏழு கிலோ மீட்டருக்கு அப்பால் சுங்கச்சாவடி இருக்கிறது. அப்படிப்பட்ட இடத்தில் நிறுத்தாமல், பொட்டல் காடுபோன்ற பகுதிகளில் நிறுத்தி அங்கே பயணிகளைப் போய்ச் சாப்பிடச் சொல்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட நிலைமையை மாற்றும் வகையில் அரசே சில இடங்களை நிர்ணயித்து, அங்குதான் பேருந்துகள் நிறுத்தப்பட வேண்டும் என்று ஆணையிட அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பில்லை என்றாலும்கூட, நாமே சில இடங்களை நிர்ணயித்து, அந்த இடங்களில்தான் போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் நிறுத்தப் பட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறோம். அதன் மூலம் வருகிற பேருந்துகளுக்கும் போகிற பேருந்துகளுக்கும் தனித்தனியாக இடம் என்றில்லாமல், ஒரே இடத்தில் இருந்தால், பயணிகளுக்கும் பிரச்சினை ஏற்படாது என்ற வகையில் செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய இடத்தில் சரியான ஓட்டல் வசதி இல்லையென்றால், சரியான ஓட்டல் வசதி எங்கே இருக்கிறதோ அங்கே பேருந்துகளை நிறுத்துவதற்கான முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Bus operated by Leco Gas.*

* 304 Q.—THIRU P. R. THOMAS : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) whether it is a fact that the Cholan Roadways Corporation has put into operation, a bus powered by Coal Leco Gas; and

(b) if so, whether there is any proposal to operate other Transport Corporation Buses also in this manner ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) ஆம்.

(இ) தற்போது இல்லை.



**திரு. பா. ரா. தாமஸ் :** தலைவர் அவர்களே, பத்திரிகையில் அப்படிப்பட்ட செய்தியைப் பார்த்தேன். லீக்கோ மூலம் இயக்கப்படுகிற பேருந்து நல்ல முறையில் செயல்படுகிறது என்றும், பொருளாதார ரீதியில் அது மிகவும் சிக்கனமாக இருக்கிறது என்றும் அதில் சொல்லப்பட்டிருந்தது. தற்போது டீசல் பற்றாக்குறை இருக்கிற காரணத்தால், ஒரு சில வழித்தடங்களிலாவது இத்தகைய பேருந்துகளை, போக்குவரத்துக் கழகங்கள் விடுவதற்கு அரசு ஆலோசனை கூறுமா ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை. காரணம் இதற்காக நாம் பேருந்துகளை மாற்றியமைக்கும் செலவு அதிகமாகிறது. இதன் காரணமாகப் பெரிய லாபம் கிடைக்கிறது என்றும் சொல்ல முடியாது. மேலும் இத்தகைய பேருந்துகளில் அதிகமான அளவுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாது. அவைகளுக்கான இழுவைச் சக்தி டீசல் எஞ்சின்களுக்கு இருப்பதைப் போல் இல்லை. நாம் இப்போது முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில் பின்நோக்கிப் போவது சரியல்ல. அதோடு அத்தகைய பேருந்துகளில் இருந்து வெளிவரும் புகையும் அதிகமாக இருக்கிறது. அதிகமான அளவுக்குப் புகை வரும்போது, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே அதை அனுமதிக்கமாட்டார்கள். எனவே இதோடு நிறுத்திக்கொள்ளலாம் என்ற முடிவுக்குத்தான் வந்திருக்கிறோம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** 13—4—1983 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திவைக்கப்பட்ட வினா எண் 281 தற்போது எடுத்துக் கொள்ளப்படும்.

### தலைஞாயிறு அக்ரகாரம் பெயர் மாற்றம்

*** 281 வினா.—திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், தலைஞாயிறு அக்ரகாரம் என்ற பெயரை தலைஞாயிறு அல்லது தலைஞாயிறு நகரம் என்று மாற்றவேண்டும் என்று அவ்வூர் பொது மக்களிடமிருந்து 5—7—1982-ல் கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** தலைவர் அவர்களே, 5—7—1982 அன்று இதுகுறித்த கோரிக்கை ஒன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதோடு, அதன் நகலும் எனக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கோரிக்கை எதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். நானே அந்தக் கோரிக்கையின் நகலை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தந்துவிடுகிறேன். தற்போது "தலைஞாயிறு அக்ரகாரம்" என்ற பெயர் இருக்கிறது. ஆங்கிலத்தில் Talanayar என்று எழுதப்படுகிறது. இப்படி இருப்பதனால் ஒருவேளை கேரள மாநிலத்திற்குச் சொந்தமான நாயர் பாம்பரையினருக்குச் சொந்தமான இடமோ என்று ஐயப்பட அவர்கள் அவ்வூருக்கு உரிமை கொண்டாடுவார்களோ என்ற ஐயம் ஏற்படுகிற நிலை இருக்கிறது. "தலைஞாயிறு" என்பது மிகச் சிறந்த தமிழ்ப் பெயர். என்ன காரணத்தாலோ அதோடு "அக்ரகாரம்" என்ற சொல்லும் சேர்ந்திருக்கிறது. அக்ரகாரம் என்பதால் அது ஒரு குறிப்பிட்ட ஜாதியினர் வாழ்கிற பகுதியைக் குறிப்பிடுவதைப்போல் இருக்கிறது. அந்தப் பகுதியில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினர் மட்டுமில்லாமல், எல்லாப் பகுதியினரும் குடியிருந்து வருகிறார்கள். எனவே இவ்வாறு ஒரு குறிப்பிட்ட பிரிவினர் மட்டுமே அங்கே இருப்பதைப்போன்ற உணர்வை ஏற்படுத்தும் "அக்ரகாரம்" என்ற பெயரையும் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், பல்வேறு சீர்திருத்தங்களை—எழுத்துச் சீர்திருத்தம், பெயர் மாற்றம் போன்ற பலவற்றை—செய்து கொண்டிருக்கிற காரணத்தால், இந்தக் கோரிக்கையைப் பரிவோடு கவனித்து, "எழுஞாயிறு" என்கிற வகையில் பொருள்படுகிற "தலைஞாயிறு" என்று பெயர் மாற்றம் செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேள்வி கேட்காமல் பெரிய சொற்பொழிவை நிகழ்த்தியிருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில், கூடியவரை மக்களின் விருப்பங்களை ஏற்று பெயர் மாற்றங்களைச் செய்வதில் தயக்கம் காட்டுவதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக, சில மாதங்களுக்கு முன்புதான் "மாயவரத்தை" 'மயிலாடுதுறை' என்று மாற்றியிருக்கிறோம். அதன் காரணமாக, மத்திய மாநில அலுவலகங்கள், புகைவண்டி நிலையம் ஆகியவற்றில் பெயர் மாற்றப்பட்டது மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரியும். அக்ரகாரம் என்றால், ஐயர்கள் இருக்கிற இடம் என்று சொல்வது உண்மையா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. தலைஞாயிறு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட நல்ல பெயர்தான். எனவே அப்படி பெயர் மாற்றப்பட வேண்டும் என்று அரசுக்கு மனுக்கள் வந்தால், முறைப்படியான



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மிக விரைவில் 'அக்கிரகாரத்தையும்' நீக்கி தலைஞாயிறு என்று ஆக்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அடுத்து, இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பகுதி கேரளாவுக்குப் போய்விடுமோ என்ற பயம் யாருக்கும் வேண்டாம்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அக்ரகாரம் என்று சொல்லப்படுகிற பகுதியில் பொதுவாக மேட்டுக்குடியினர் என்று சொல்லப்படுகிறவர்கள்தான் வசிப்பது வழக்கமாக இருந்து வந்தது. அப்படித்தான் முதலில் இருந்திருக்கிறார்கள். இப்போது அந்தப் பகுதியில் பல்வேறு பிரிவினரும் குடியேறி வாழ்ந்து வருகிறார்கள். அக்ரகாரம் என்று சொல்வதால், பலரும் ஐயப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, கோரிக்கை வந்தால், அரசு பரிசீலிக்கும் என்று சொன்னார். தற்போது தலைஞாயர் என்றுதான் வழங்கப்பட்டு வருகிறது. ஞாயர் என்றுதான் எழுதப் படுகிறது. எனவே இதை வெகு விரைவில் மாற்றி "தலைஞாயிறு" என்று பெயர் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதிலே எவ்வளவு ஆர்வம் இருக்கிறதோ அதைவிட அதிகமான அளவிற்கு இல்லையென்றாலும், குறைவாக இந்த அரசுக்கோ, சம்பந்தப்பட்ட அமைச்சருக்கோ இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அக்கிரகாரம் என்ற பெயரை மாற்றுவதிலே மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்தவரையில், பழனிக்குப் பக்கத்திலே அனைத்து மக்களும் வாழ்கிற ஒரு கிராமத்தின் பெயர் 'அக்கிரகாரம்' என்று இருக்கிறது. அதை மாற்றி என்ன பெயர் வைக்க இருக்கிறார்கள்?

அதைப்போலவே தமிழகத்திலே கவுண்டன்பட்டி, நாயுடுபேட்டை என்ற பெயர்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட ஊர்களின் பெயர்களை ரொம்ப ஆர்வத்தோடு மாற்ற ஏற்பாடு செய்கிறபோது, அதற்குப் பதிலாக என்ன சாதியின் பெயரை வைக்க இருக்கிறார்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்பதைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் எந்தச் சாதியின் பெயரை வைக்க இருக்கிறீர்கள் என்ற கேள்வியைக் கேட்டு என்னை மிகவும் சங்கடத்திலே சிக்க வைத்துவிட்டார்கள். நான் பெரியார் வாழ்ந்த காலத்திலே வாழ்ந்து கொண்டிருந்தவன். இன்றைக்குப் பெரியார்

இல்லாவிட்டாலும், அவரை மனதிலே எண்ணிக் கொண்டு, நடைமுறையில் அவருடைய கொள்கைகளை அமுல்படுத்த முயற்சி செய்து கொண்டிருக்கிறவன். அப்படிப்பட்ட என்னைப் பார்த்து சாதிப் பெயரை வைத்த அமைச்சர் என்று எண்ணுகிற அளவிற்குக் கேள்வியைக் கேட்டு பெரியாரையும், பெரியார் தொண்டனையும் அவமானப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி :** அக்கிரகாரம் என்ற பெயர் எதனால் உருவாயிற்று என்று பல பேர் தெரிந்துகொள்ளக் கூடிய அளவிற்குச் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறது. சில இடங்களில் ஒரு கிராமத்தின் பெயரே அக்கிரகாரம் என்று இருக்கிறது. அந்த அளவிற்கு அது தொன்மைவாய்ந்த பெயராக இருக்கிறது. அப்படி இருக்கும்போது, எல்லாப் பெயரையும் மாற்ற ஒரே அடிப்படையை வைக்க முடியாது. ஆகவே இதையெல்லாம் மனதிலே கொண்டு பதில் சொல்ல வேண்டும் என்றுதான் அந்தக் கேள்வியைக் கேட்டேன். அதையும் சொன்னால் நன்றாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தமிழக அரசின் சார்பில், தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களின் பெயர்களையும் அகரவரிசையில் எழுதி அச்சிட்டு புத்தகமாக வெளியிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் புத்தகத்தைப் பார்த்துவிட்டு, அதிலே எதில் மாற்றம் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்புகிறார்களோ அதற்கு உரிய முறையில் முயற்சி எடுத்துக்கொண்டால் அரசு அதைச் செய்யத் தயாராக இருக்கிறது. சில கிராமங்களின் பெயர்கள் அக்கிரகாரம் என்று இருக்கின்றன. அதைப்போல பெயர்கள் எத்தனையோ அந்தப் புத்தகத்திலே இருக்கின்றன. அதிலே எதை மாற்ற வேண்டும் என்று சொன்னால், மாற்றத் தயாராக இருக்கிறோம். அப்படி மாற்றுகிறபோது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பெயர்கள் இருக்க வேண்டும். அதனாலே மக்களுக்கு எந்தவிதமான சங்கடமும் வரக் கூடாது என்பதற்காகத்தான் மாற்றுகிறபோது, அவசரப்படாமல் இருக்கிறோம். மக்களுடைய எண்ணங்கள் வர வேண்டும் என்பதற்காகத்தான் சிலரிடமிருந்து கடிதங்கள் வந்த பிறகு, வெளியே தெரிவிக்கிறோம். அதற்குப் பிறகு மாற்ற வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளுகிறோம்.

**திரு. ஜி. சுவாமிநாதன் :** தமிழ் நாட்டிலுள்ள கிராமங்கள் மட்டுமல்லாமல், சென்னை நகரத்திலேகூட பல தெருக்களின் பெயர்கள் மாற்றப்பட்டிருக்கின்றன. சாதிப் பெயர்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஐயர் தெரு, முதலியார் தெரு என்ற பெயர்களை மாற்றிவிட்டதால், அதற்குப் பதிலாக வேறு பெயர் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சில இடங்களில் முன்னால் வாழ்ந்த முக்கியஸ்தர்களின் பெயர்கள் இருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு மேலவைத்





தலைவர் அவர்கள் இருக்கின்ற இடத்தில் இருசப்ப கிராமணி தெரு என்று அவருடைய உறவினருடைய பெயரை வைத்திருக்கிறார்கள். கிராமணி என்ற சாதிப் பெயரை எடுத்துவிட்டு இருசப்பன் தெரு என்று வைத்தால், எந்த இருசப்பன் என்று தெரிவதில்லை. அதைப்போலவே வி. எஸ். ஸ்ரீனிவாச சாஸ்திரி தெரு என்ற பெயரில் சாஸ்திரி என்ற பெயரை எடுத்துவிட்டு சீனிவாசன் தெரு என்று வைத்தால் எந்த சீனிவாசன் என்ற சங்கடம் வருகிறது. இப்போது கல்லூரிகளில்கூட என்ன சாதி என்று கேட்கிறார்கள். அப்படி இருக்கும்போது, சாதியினுடைய பெயர்களை மாற்ற வேண்டிய அவசியம் எதனால் ஏற்பட்டது, அதனால் அரசுக்கு என்ன லாபம் ஏற்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** இந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் எல்லோரும் சிறிய சொற்பொழிவை நிகழ்த்துகிறார்கள். அவர்கள் சொன்ன உணர்வுகளை நான் ஏற்றுக்கொள்கிறேன். சில பெயர்களில் அவர்களுடைய சாதியின் பெயரைச் சேர்த்தால்தான், தெரியும் என்று இருக்கிறது. அப்படிப்பட்ட உணர்வு இருக்கிறபோது, சில பெயர்களை மாற்ற வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. சாதிப் பெயர் இருக்கக் கூடாது, சாதிக்கு முக்கியத்துவம் தரக்கூடாது என்ற உணர்வு இருக்க வேண்டும். யாராவது தனிப்பட்டவர்களுடைய சாதிப் பெயரைச் சொன்னால்தான், அதனுடைய முக்கியத்துவம் இருக்கும், இல்லா விட்டால் வேறு யாரையோ குறிக்கும் என்றால், அந்தவிதமான இடத்தில் அந்தப் பெயர்களை மாற்ற அரசு முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சீனிவாச சாஸ்திரி என்றால் அவரைக் குறிக்கும். சீனிவாசன் என்றால் வேறு யாரையாவது குறிக்கும். நிச்சயமாக இதுபோன்ற பெயர்களை மாற்றுவதில் அரசு ஈடுபடாது. சில பெயர்களை மாற்றுகிறபோது கூட, அரசு முன் நின்று நடவடிக்கை எடுக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்ன மாதிரி, பொது மக்களிடமிருந்து வேண்டுகோள் வருகிறது. சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கடிதங்கள் வருகின்றன. அதற்குப் பிறகும் நிதானமாக ஆராய்ந்து, காலதாமதம் ஆனாலும் பாதகமில்லை என்று கருதி, முறையாகத்தான் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** வேதாரண்யம், கும்பகோணம், விருத்தாசலம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் ஆகிய பெயர்களை மாற்றுவது குறித்து அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறதா? ஊட்டி என்பதை உதகமண்டலம்

என்று மாற்றியதால், கேரளாவில் உள்ள உத்தியோக மண்டல் என்ற இடத்திற்குக் கடிதங்கள் போகின்றன. ஆகவே பழைய நல்ல பெயரான ஊட்டி என்பதை வைக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு பெயர் தொடர்ந்து வராமல் இருக்க வேண்டும் என்றும், அப்படி வந்தால் மாற்ற வேண்டும் என்பதற்காகத்தான் இருக்கின்ற கிராமங்களின் பெயர்களை அகர வரிசையில் அச்சிட்டு புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம். கேரளாவிலும் தமிழ் நாட்டிலும் ஒரே பெயர் வந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஊட்டி என்பதை உதகமண்டலம் என்று மாற்றியதை மீண்டும் ஊட்டி என்று மாற்ற வேண்டும் என்று சொல்லுகிறார். அப்படிப்பட்ட செயற்குறிப்பு என்னுடைய கவனத்திற்கும், அரசின் கவனத்திற்கும் வரவில்லை. அப்படி வந்தால், கவனிப்பேன் என்று சொல்லிக்கொள்கிறேன்.

வேதாரண்யத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்டுவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்களும் கையைத் தூக்கிவிட்டார்கள். அதை மறைக்காடு என்று மாற்றும் செயற்குறிப்பு அரசின் கையில் இருக்கிறது. சிதம்பரத்தை தில்லை என்று மாற்றும் செயற்குறிப்பும், விருத்தாசலத்தை முதுகுன்றம் என்று பெயர் மாற்றும் செயற்குறிப்பும், ஸ்ரீரங்கத்தை திருவரங்கம் என்று பெயர் மாற்றும் செயற்குறிப்பும் அரசின் கையில் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இப்படி மாற்றுவதற்கு அவசரம் என்ன வந்தது என்று கேட்டார்கள். இதை இங்கே இப்போது சொல்லிவிட்டால், அது செய்தித் தாள்களில் வந்துவிட்டால், மாற்றம் வேண்டுமா, வேண்டாமா என்ற கருத்துக்கள் வெளி வரும். மாற்ற வேண்டாம் என்ற எதிர்ப்புகள் வந்தால், அவற்றுக்கும் சேர்த்து பதில் அளிக்க ஏதுவாக இருக்கும். எதிர்ப்புகள் இருந்தால், அதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தால், அதையும் சேர்த்து அரசு பரிசீலிக்கும்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** பெரியார், அண்ணா ஆகியவர்களின் வழியில் நடக்கின்ற அரசு என்று சொல்லப்படுகிற இந்த நேரத்திலே பெரியாருடைய சீர்திருத்தத்தை முழுமையாகப் பின்பற்றுகிற வகையில் பெரியார் சாதியை ஒழிப்பதிலே மிக முனைப்பாக இருந்தார் என்பதைக் கருத்திற் கொண்டு, பிறருடைய மனம் புண்படாதவாறு எந்தெந்தப் பகுதியில் சாதியின் பெயரால் தெருக்கள், ஊர்வலம் இருக்கின்றன என்ற புள்ளிவிவரத்தைச் சேகரித்து, அதையெல்லாம் மாற்றுகிற மிகப் பெரிய சீர்திருத்தத்தைச் செய்ய ஒரு குழுவை அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** "பெரியார் அவர்களைப் பின்பற்றுகிற என்று சொல்லிக் கொண்டிருக்கிற" "அதை முழுமையாகப் பின்பற்றுகிற வகையில்" என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பித்து கருத்துக்களைச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் பெரியாரை அப்படியே பின்பற்றினார்கள். ஆனால் பெரியார் செய்ததை அப்படியே செய்யவில்லை. "பெரியார் சொல்லுவதைப் போல பிள்ளையாரையும் உடைக்கமாட்டேன், தேங்காயும் உடைக்கமாட்டேன். "பெரியார் கொள்கை இருக்கிறது, ஆனால் பெரியாருக்கு விரோதமாகச் செய்யவில்லை" என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆளும் கட்சியாக இருக்கின்றபோது, பிள்ளையாரையும் உடைக்கமாட்டோம், தேங்காயும் உடைக்க மாட்டோம், ஆனால் பெரியார் கொள்கையைப் பின்பற்றுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பெயர் மாற்றம் செய்ய ஒரு குழுவை அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த அரசு சமஸ்கிருதப் பெயரை மாற்றும்போது, சமஸ்கிருதப் பெயரை மாற்றி தமிழ்ப் பெயரைக் கொண்டுவர முயற்சி செய்கிறதா என்ற கேள்வி நாடாளுமன்றத்திலே

(முற்பகல் 10-20)

கேட்கப்பட்டு, அதற்கு நான் பதில் அனுப்பியிருக்கிறேன். யாரும் நாடாளுமன்றத்திலே கேள்வி கேட்பார்களோ என்ற பயத்தில் அவ்வாறு செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதை வெளிப்படையாகவே சட்டமன்றத்திலும் பொதுக்கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லி ஆராய்ந்துதான் அதைச் செய்யவிருக்கிறது. அரசு நியாயமான அளவில் பெயர்களை மாற்றுவதற்குத் தயாராக இருக்கிறது என்ற கருத்தும் பொதுமக்களிடம் பரவியிருக்கிறது. அங்கே இங்கே இருக்கின்ற பொதுமக்களிடமிருந்து கடிதம் மற்றவைகள் வந்தால், அதன் மூலமாகத் தெரிவித்தால், அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இந்தக் கேள்வியின் விவாதம் பட்டி மன்றம்போல நடக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஊர்களின் பெயர்களைச் சொல்கின்றபோது, பெயர் மாற்றத்திலே விருத்தாசலம் பற்றியும் சொன்னார்கள். விருத்தகிரீஸ்வரருடைய, அங்கேயுள்ள தொன்மையான ஈசுவரருடைய பெயரையொட்டி அந்த ஊரினுடைய பெயர் அமைந்திருக்கிறது. அதுபோன்ற மற்ற பெயர்களையும் மாற்றவேண்டுமா? தமிழ் அறிஞர் திரு. ஆர். பி. சேதுப்பிள்ளை அவர்கள் "ஊரும் பேரும்" என்ற புத்தகத்தில் ஊர்களின் பெயர்களையும் அதன் தொன்மையைப் பற்றியும் எழுதியிருக்கின்றார்கள். ஒரு 80 சதவிகிதம் ஊர்களின் சரித்திரத்தைப்பற்றி, அதன் தொன்மையைப்பற்றி எல்லாம் எழுதி

யிருக்கிறார்கள். எப்படி அந்தப் பெயர் வந்தது, இருக்கின்ற பெயர் எப்படி மருவி வந்தது என்பதைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். அதையும் வைத்துப் பரிசீலனை செய்து அந்த ஊர்களின் தொன்மையையொட்டிய பெயரை மாற்றாமலிருக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, தமிழ் அறிஞர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் எழுதிய புத்தகத்தில் நாம் சொல்கின்றபோது முதுகுன்றம் என்று இருக்கின்றது—அவர் திருமுதுகுன்றம் என்று எழுதியிருக்கிறார்கள். இப்படி நிறைய கேள்விகள் கேட்பார்கள் என்று தெரிந்திருந்தால், நான் அந்தப் புத்தகத்தையும் இங்கே கொண்டு வந்து படித்துக் காண்பித்திருப்பேன். அதில் விருத்தாசலத்திற்கு திருமுதுகுன்றம் என்றுதான் இருக்கின்றது. ஆகவே அதை பொதுமக்களுடைய முடிவுக்கு விட்டுவிடலாம்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### கிருஷ்ணா நதி நீர் பற்றி அறிக்கை குறித்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்கள் என்றும்விட இன்றைக்கு மிகுந்த மகிழ்ச்சியோடு இருக்கின்றார்கள். கிருஷ்ணா நதிநீர் வருவது பற்றியதாக இருக்கும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரிய முயற்சியில் கிருஷ்ணா நீர் வரவிருக்கிறது. நாம் எல்லாம் அதுபற்றி மகிழ்ந்திருக்கின்ற நேரம் இப்போது. அதுபற்றிய விவர அறிக்கையை நம் மேலவையிலும் வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** அது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் தெரிவிக்கலாம். எந்த அமைச்சர் வைப்பார் என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இதைப்பற்றி நேற்றையதினம் பேரவையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒப்பந்தம் ஆகிவிட்டது என்றும், ஒரு விவர அறிக்கை வைக்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். மேலவையிலும் வைக்கவேண்டும் என்பது பற்றி நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, அது ஒரு முக்கியமான ஒப்பந்தம். அதன் மீதான விவர அறிக்கையை வைக்க வேண்டும். அந்த விவர அறிக்கையின்மீது இந்த அவையிலே ஒரு விவாதம் வைக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

## 3. அறிவிப்பு.

### அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர் :** இன்று நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவில் கீழ்க்கண்ட நிகழ்ச்சி விபரம் முடிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| 21—4—1983 (வியாழக்கிழமை) மாலை 4 மணி | பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம் (அன்று கேள்வி நேரம் இல்லை). |
| 22—4—1983 (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி | 1. 1974-75 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவு குறித்த விவர அறிக்கையின் மீது விவாதம்.<br>2. நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |
| 23—4—1983 (சனிக்கிழமை) மாலை 4 மணி | அரசின் தீர்மானமும், சட்ட முன்வடிவுகளும். |
| 24—4—1983 (ஞாயிற்றுக்கிழமை) | விடுமுறை. |
| 25—4—1983 (திங்கட்கிழமை) | மகாவீரர் பிறந்த தினம்—விடுமுறை. |
| 26—4—1983 (செவ்வாய்க்கிழமை) மற்றும் 27—4—1983 (புதன்கிழமை) | அரசின் சட்ட முன்வடிவுகளை ஆய்வு செய்தல். |

தேவைப்படின் மேலவை 28—4—1983 அன்று கூடும். மேலவை வழக்கம் போல் காலை 9-30 மணிக்குக் கூடும்.

## 4. கவன ஈர்ப்பு.

### (1) தமிழ் நாட்டில் சிறுதொழில் துறையில் உற்பத்தியாகும் தீப்பெட்டி விற்பனையின் தேக்கத்தால் உற்பத்தியாளர் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்):** தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தமிழ் நாட்டில் சிறுதொழில் துறையில் உற்பத்தியாகும் தீப்பெட்டி விற்பனையின் தேக்கத்தால் உற்பத்தியாளர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து".

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்புத் தீர்மானத்தையொட்டி ஒரு விவர அறிக்கை @ இந்த அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே தற்போது தமிழ் நாட்டில் 107 தொழில் கூட்டுறவுத் தீப்பெட்டி சேவைச் சங்கங்கள் உள்ளன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தீப்பெட்டிச் சங்கங்களினால் தொழிற்சாலைகள் எல்லாம் தொடங்கப் பட்டு அத்தனையும் நடைபெற்றுக்கொண்டிருக்கவில்லை. நஷ்டம் ஏற்பட்டதனால் அல்லது வேறு காரணங்களினால் அந்தச் சங்கங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதற்குக் காரணம் அந்தத் தொழிலிலே அனுபவம் உள்ளவர்களுக்கு அது தரப்படவில்லை என்று சொல்கின்றார்கள். அதனால் அவர்கள் ஆரம்பித்தவுடனே மூடிவிடுகின்ற வகையிலே இருப்பதாகவும் அரசினுடைய மான்யம், கடன் தொகை பெற்றுக்கொண்ட பின்னர், அதற்குப் பின்னாலே மூடிவிடுகின்ற சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன என்றும் தெரிகிறது. அதுபற்றிய விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன். அதைப் பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? ஆரம்பித்த அந்தத் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் தொடர்ந்து நடக்க அரசு வழிவகை வகுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இல்லை. அவர்கள் சொன்ன கருத்தை முழு அளவுக்கு என்னால் ஒத்துக்கொள்ள

@ 483 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



முடியாத நிலையில் இருக்கிறேன். ஆரம்பிக்கப்பட்ட பிறகு, இந்த தீப்பெட்டித் தொழிற்சாலைகளை எல்லாம் மூடிவிடுகின்ற உணர்வு அவர்கள் வார்த்தையிலே தொனிக்கிறது. நான்கைந்து ஆண்டுகள்தான் ஆகியிருக்கிறது. அந்தத் தீப்பெட்டித் தொழில்கள் ஒரு வேகத்தோடும் வளர்ச்சியோடும்தான் இருக்கின்றன. 1977 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற தருணத்தில் தமிழ் நாட்டில் 11 தொழில் கூட்டுறவு சேவைச் சங்கங்கள் மட்டுமே இருந்தன. இன்றையதினம் 31—3—1983 வரை அது 107 என்ற அளவுக்கு வளர்ந்திருக்கிறது. 1977-ல் ஒரு பிரத்தியேகமான சூழ்நிலை இருந்தது. அதாவது சிவகாசி, கோவில்பட்டி, சாத்தூர் போன்ற டிரெடிஷனல் ஏரியாக்கள், பாரம்பரையாக 60 ஆண்டுக் காலமாக தொடர்ந்து அந்தத் தொழிலைச் செய்கின்ற பகுதியில் மட்டும் அந்தத் தொழில் இருந்தது. 1977 ஆம் ஆண்டுக்குப் பிறகு வேலைவாய்ப்பு நல்க வேண்டும், நலிந்த மக்களுக்கு, தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பு நல்க வேண்டும் என்ற குறிக்கோளோடு "நான்-டிரெடிஷனல்" ஏரியாக்களில் அந்தத் தொழில் கொண்டுவரப்பட்டது. அதாவது தர்மபுரி, கோவை மாவட்டம், சேலம் போன்ற பகுதிகளுக்கு அந்தத் தொழில் விரிவாக்கப்பட்டது. இந்த ஐந்தாறு ஆண்டுக் காலத்தில் அந்தப் பகுதிகளில் ஆரம்ப காலப் பிரச்சினைகள் இருந்துவந்தன. அந்த ஆரம்பகாலப் பிரச்சினைகளைப்பற்றி பல நடவடிக்கைகளை எடுத்து அதன் வாயிலாகத் தீர்வு காணப்பட்டுவருகிறது. குறிப்பிட்ட அந்தத் தொய்வு ஏற்படுவதற்குக் காரணம் பயிற்சி இன்மைதான். போதிய பயிற்சி இல்லாதவர்களாக இருந்ததால், அவர்கள் அங்கே தரமான தீப்பெட்டி உற்பத்தி செய்ய முடியவில்லை. மத்திய அரசினுடைய ஐ.ஆர்.டி.பி., ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினுடைய நிறுவனத்தின் வாயிலாக இன்றையதினம் அவர்களுக்கெல்லாம் ஆறு மாத காலப் பயிற்சி கொடுக்கப்பட்டது. சாத்தூர் போன்ற பகுதிகளுக்குச் சிலரை அனுப்பி அங்கே பயிற்சி கொடுத்தும், சாத்தூரில் உள்ள போர்மேன்களை எல்லாம் இங்கே அனுப்பி அவர்களுக்குத் தொழிற்பயிற்சி கொடுக்கப்பட்டும் இன்றைக்கு அங்கேயிருக்கின்ற குறை பாடுகள் நீக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, இங்கே உற்பத்தி செய்கின்ற தீப்பெட்டிகளை வடபுலத்திலிருந்து வருகின்ற வியாபாரிகள் சாத்தூர், கோவில்பட்டி போன்ற டிரெடிஷனல் ஏரியாக்களில்தான் வாங்கிவந்தார்கள். அப்படி வாங்கி வருகின்ற வியாபாரிகளை தர்மபுரி, சேலம் போன்ற பகுதிகளிலே சென்று வாங்க ஊக்குவிக்கின்ற அளவுக்கு அதற்காக என்று ஒரு தனி அலுவலரையும் இன்றையதினம் நியமித்திருக்கிறோம். இன்றைக்கு அசிஸ்டெண்ட் டைரக்டர் என்று ஒருவரை அந்தப் பொறுப்பில் வைத்திருக் கிறோம். அந்த வியாபாரிகளை ஊக்குவிக்கின்ற ஒரு லையசன் பணியை

அவர்கள் செய்வதற்கு முயன்று ஓரளவுக்கு இன்றைக்கு அந்தப் பகுதியிலே கொள்முதல் செய்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அது மட்டுமல்ல, இன்றைக்கு இருக்கின்ற தேக்கத்திற்குக் காரணம், தரம் இல்லை, குவாலிட்டி இல்லை என்ற குறைபாடு இருந்து வந்ததுதான். அந்தக் குறைபாட்டைப் போக்குகின்ற அளவுக்கு நல்ல மூலப் பொருள்களை, மருந்துகளைக்கூட, பாஸ்பரஸ் போன்ற மருந்துகளைக் கொடுக்கின்றார்கள். ஐ.ஆர்.டி.பி. மூலமாக நல்ல தரமான பொருள்களை, மருந்துகளை எல்லாம் கொடுக்க முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் தரமான தீப்பெட்டிகளைச் செய்ய முயல்கின்றார்கள். அப்படி தரமாகச் செய்ததன் காரணமாக சென்ற ஆண்டு மட்டும் நாம் எல்லாம் நம்பிக்கை கொள்ளும் அளவுக்குச் செய்திருக்கிறோம். உறுப்பினர் அவர்கள் சொல்வது போல, தேக்கம் கிடையாது. ஒரு குறிப்பிட்ட அளவுக்குத்தான் இருக்கின்றது. அதாவது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அன்சோல்ட் ஸ்டாக்கு, வியாபாரத்திலே இயற்கையாக இருக்கின்ற தேக்க நிலைதான் இருக்கிறது. சில நேரங்களில் இருக்கின்ற அந்த நிலவரம்தான் இருக்கிறதே தவிர, இதிலே தேக்கமோ சுணக்கமோ இல்லை. ஏறத்தாழ 25 கோடி ரூபாய் அளவுக்கு சென்ற ஆண்டு கூட்டுறவுத் தொழில் மூலம் உருவாகியிருக்கின்ற தீப்பெட்டி விற்பனையாகி இருக்கிறது. குறிப்பாக அந்தத் தொழில் கடுமையான போராட்டத்திற்கு மத்தியிலே இருந்திருக்கிறது. இரண்டு முனைகள். ஒன்று மெக்கனைஸ்ட் மேட்சஸ். விம்கோ, திருவொற்றியூரில் இருக்கும் பலமாற்று மூலதனத்தோடு இயங்குகின்ற, அந்த இயந்திரத்திலே செய்யப்பட்ட தீப்பெட்டியிடம் ஒரு போட்டி, மிடில் செக்டார், சாத்தூர், கோவில்பட்டி போன்ற பகுதிகளில் 60 ஆண்டுகாலமாக இருக்கின்ற நல்ல பலம் மிக்க, செல்வாக்கு மிக்க, செழுமை மிக்க, நல்ல பயிற்சி பெற்ற தொழில் செய்கின்ற நண்பர்களுக்கு மத்தியிலே, ஆக அவர்கள் இரண்டு முனைகளிலும் போட்டி போட்டு, மிக சாமான்யமாக இருக்கின்ற இந்தத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு ஏறத்தாழ ரூ. 25 கோடி அளவுக்கு , விற்பனை செய்கின்ற அளவுக்கு இருக்கின்றன என்பதோடு, இன்னும் சொல்லப்போனால், அவர்கள் இந்தியாவிலேயே ஒரு 60 சதவிகிதம் அளவுக்கு தீப்பெட்டி உற்பத்தியிலே முனைந்து செய்து கொண்டிருக்கின்றார்கள்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(முற்பகல் 10-30)

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் விவரங்களை அறிக்கையாகக் கொடுத்திருக்கலாம்.



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவரவர்களே, I am not going out of the **way and I am** not saying anything irrelevant. உறுப்பினர்களுக்கு விளக்கத்தை அளித்து, குறைகள் இருந்தால், அரசு அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற நல்ல நோக்கத்தில்தான் சொல்கிறேன். அந்தப் பாதையிலிருந்து மாறவில்லை. It is more relevant தீப்பெட்டித் தொழில்பற்றி கவனத்தை ஈர்க்கிறபோது, அதற்கான விவரங்களைச் சொல்லும்போது, அந்தத் தொழிலுக்குப் பாதுகாப்பு கிடைக்குமென்பதால்தான் சொல்கிறேன். இது பொருத்தமில்லை என்று நான் கருதவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவரவர்களே, இங்கே பின்பற்றும் மரபு, கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தவுடன் அமைச்சரவர்கள் அறிக்கை வைப்பார்கள். அதற்குப் பிறகு கருத்துச் சொல்லுவார்கள். இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அடுத்த இனத்திற்குப் போவது மரபு. அமைச்சரவர்கள் விவரமான அறிக்கை வைத்தால் நல்லது. நீண்ட விளக்கமாக இருக்கும்போது, அப்படிப்பட்ட முறையைப் பின்பற்றுகிறோம். உறுப்பினர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விவரங்களாக இருந்தால், அதைத் தயவுசெய்து உறுப்பினர்களுக்கு அறிக்கையாகக் கொடுத்தால், நன்றாக இருக்கும் என்பதால்தான் சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மேலவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள், அன்சோல்ட் ஸ்டாக் இருக்கிறதா என்று கேட்டதால், விவரங்களைச் சொன்னேன். அவர்களுக்குக் கேட்க உரிமையுண்டு. இரண்டு முறை விவரங்களைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு உண்டு. அது தொடர்பான கருத்துதான் இது.

**திரு. ஜி. சுவாமிநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, I rise on a point of order அமைச்சரவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மீது பதில் சொல்லுகிறார்கள். எப்படி பதில் சொல்ல வேண்டுமென்பதை அமைச்சரவர்கள்தான் நிர்ணயிக்க வேண்டும். அதை எப்படி ஓர் உறுப்பினர் நிர்ணயிப்பது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** அந்த வகையில் இன்றைக்கு தமிழ் நாட்டில் தொழிற் கூட்டுறவு தீப்பெட்டிகளைப் பொறுத்தவரையில், அன்சோல்ட் ஸ்டாக் மிகக் குறைவாக, இல்லையென்ற அளவுக்கு இருக்கிறது. அந்த முறையில் மேலும் அதை விரிவாக்குவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்து கொண்டிருக்கிறோம். இரண்டு வெவ்வேறு நடவடிக்கைகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். டெல்லியிலே இருக்கும் நேஷனல் கன்ஸ்யூமர்ஸ்

கோவாபரேடிவ் பெடரேஷன் வாயிலாகப் பரவலாக விற்பனை செய்யும் ஒரு வாய்ப்பை உருவாக்கியிருக்கிறோம். இரண்டாவதாக, இலங்கையில் இதற்கு அதிக கிராக்கி இருப்பதால், அவர்களே கேட்டிருப்பதால், இந்த ஆண்டு தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யும் தொழிற் கூட்டுறவு தீப்பெட்டிகளை அங்கே அனுப்ப முயன்று கொண்டிருக்கிறோம். இந்த வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (2) நீலகிரி மாவட்டத்தில் 'பார்சன் வேலி' திட்டத்தைத் தொடங்குவதில் தாமதம் ஏற்படுவதைக் குறித்து.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"நீலகிரி மாவட்டத்தில் 'பார்சன் வேலி' என்ற திட்டத்தை ரூபாய் 4½ கோடி செலவில் தொடங்கிட ஏற்கெனவே தமிழகத்தின் குடிநீர் வடிகால் வாரியம் திட்டமிட்டும், இத்திட்டம் இன்னும் தொடங்கப்படுவதில் பெரும் தாமதம் ஏற்படுவது குறித்தும், இதன் காரணமாக நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள தண்ணீர்த் தட்டுப்பாடு குறித்தும்"

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை@ அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவரவர்களே. 'பார்சன் வேலி' திட்டமென்பது ஒரு சிறந்த திட்டமாகும். நீலகிரி மாவட்டத்தினுடைய தண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு உதவிகரமாக இருக்க இந்தத் திட்டம் தீட்டப்பட்டு, இன்னமும் நடைமுறைப்படுத்தாமல் இருக்கும் நிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. உதகமண்டலம் நகராட்சியின் மக்கள் தொகை இப்போது 75,000 என்றும், 2011 ஆம் ஆண்டில் ஒரு லட்சத்து 50 ஆயிரத்திற்கு அது உயரும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது 'பார்சன் வேலி' திட்டத்தின்மூலம் பெறும் தண்ணீரின் அளவு தினமும் ஒரு மில்லியன் காலன்களாகும். அதைச் சரி பாதியாக்கி, நகராட்சிக்கும், பாதுகாப்பு நிறுவனத்திற்கும் தந்துவிடுகிறோம். அங்கே இருப்பவர்கள் 16,000 பேர்கள்தான். ஆனால் இங்கே, நகராட்சியில்

---

@ 486ஆம் பக்கத்தில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.



இருப்பவர்கள் 75,000 பேர்கள். குறிப்பாக சீசனில் நாள் ஒன்றுக்கு லட்சம் பேர்கள் கூடுகிற நகராக அது இருக்கிறது. அப்படி இருக்கிறபோது, புதிய திட்டத்தின்மூலம் மூன்று மில்லியன் காலன் தண்ணீர் வரும்போது, இரண்டு மில்லியன் காலன் தண்ணீரை நகராட்சிக்கும், ஒரு மில்லியன் காலன் தண்ணீரை பாதுகாப்பு நிறுவனத்திற்கும் தருவது சரியாக இருக்கும் என்றோ, மக்கள் தொகை அடிப்படையிலே பிரித்துத் தருவது நல்லது என்றோ அரசு கருதுகிறதா? இந்தத் திட்டம் நிறைவேறாததற்கு இராணுவத்தினரிடமிருந்து ஒப்புதல் வராதது காரணமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** துணைத் தலைவரவர்களே, இராணுவத்தினர் ஒப்புதல் வராத காரணத்தால் திட்டம் நிறைவேற்றப்படவில்லை அல்லது திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற தகவல் இல்லை. இத்திட்டத்திற்கு 457.44 லட்சம் ரூபாய் செலவு பிடிக்கும் என்றும், வருடந்தோறும் பராமரிப்புச் செலவு ரூபாய் 29.28 இலட்சமாகும் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டச் செலவை ஏற்க உதகமண்டலம் நகராட்சி மன்றத் தீர்மானம் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எதிர்பார்க்கப்படுகிறது. நகராட்சி தீர்மானத்தை நிறைவேற்றி, குடிநீர் வடிகால் வாரியத்திற்கு அனுப்பவேண்டும். அந்தத் தீர்மானத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தினுடைய சிறப்புகளைச் சொன்னார்கள். என்னுடைய பணிவான வேண்டுகோள், இதைப் பங்கிட்டுக் கொள்ளும் முறைபற்றியும் அல்லது பாதுகாப்புத் துறை இணைந்து செயலாற்றுகிற முறைபற்றியும் சிறிது கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது என்பதுதான். காரணம், ஒரு நிகழ்ச்சியைச் சொல்லலாம். தமிழ் நாடு மின்சார வாரியம் ஜகதளாவிலே 110 மெகாவாட் சப்-ஸ்டேஷன் அமைக்க 1975-ல் இடம் மட்டும் ஒதுக்குங்கள் என்று கேட்டபோது, அப்போது திட்ட மதிப்பீடு 25 லட்சம் ரூபாய்தான். அப்போது இடம் ஒதுக்காததால் இப்போது, 1983-ல் அந்தத் திட்ட மதிப்பீடு 43 லட்ச ரூபாயாக உயர்ந்திருக்கிறது. ஆகவே இந்தத் திட்டத்தில் பாதுகாப்புத் துறையின் முறையான ஒத்துழைப்பு இல்லை என்றால், ரூ. 457.44 லட்சம் என்ற திட்டம் நாள் கடத்தப்படுமானால் திட்ட மதிப்பீடு கூடும். இந்த நீரைப் பங்கிட்டுக்கொள்வதில், சரி பாதி என்ற நிலையை மாற்ற வேண்டும். அவர்கள் பகுதியை விஸ்தரித்துக்கொண்டு போகிறார்கள் அங்கே 16 ஆயிரம் பேர்கள்தான் இருக்கிறார்கள். ஊட்டியில் ஒரு லட்சம்

பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பகுதியை கூடலூருக்கு மாற்றினால், மக்களுக்குக் குடிநீர் வசதி செய்ய உதவியாக இருக்கும். அந்த அடிப்படையிலே பாதுகாப்புத் துறையின் நியாயமான ஒத்துழைப்பை இந்த அரசு பெறுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** துணைத் தலைவரவர்களே, பாதுகாப்புத் துறையினரின் ஒத்துழைப்பு இல்லை என்பதுபற்றி எந்தவிதமான தகவல்களும் என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் அதிகாரிகளோடு கலந்து பேசுகிறேன். இதற்கிடையிலே, டேவிட் பூங்கா மற்றும் பழைய ஊட்டி பகுதிகளில் திறந்த வெளிக் கிணறுகளை வெட்டி, குழாய்களை இணைத்து, புனித மேரி குன்றுக்கு நீரேற்றும் செயற்குறிப்பு நகராட்சியிடம் உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குக் கூடுதல் தகவலாகத் தர விரும்புகிறேன்.

## 5. தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தொழில் வளர்ச்சிபற்றி பேசும்போது, நாம் நம்முடைய தொழில் வளர்ச்சிபற்றி நாமே சுயேச்சையாக முடிவுகளை எடுக்கக்கூடிய அளவுக்கு நிதி அதிகாரங்கள் நிறைய உள்ள மாநிலமல்ல. மத்திய அரசின் கொள்கைக்கு உட்பட்டுத்தான் இங்கே தொழில் வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருக்கிறது. மத்திய அரசு தருகிற அல்லது தர வேண்டிய நிதி ஆதாரங்களையும், உதவிகளையும் கொண்டு, மாநில அரசின் சக்திக்கு ஏற்ப தொழில் வளர்ச்சிக்குத் திட்டம் தீட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே நாம் நம்முடைய மாநில தொழில் வளர்ச்சிபற்றிப் பரிசீலிக்கிறபோது, நம்முடைய நாட்டிலே அதிகமான நிதி ஆதாரங்கள் குவிந்துள்ள மத்திய அரசு, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு என்ன உதவி செய்கிறது, என்ன உதவி செய்து கொண்டிருக்கிறது என்பதுபற்றி ஆராயவும், மத்திய அரசு போதிய உதவி செய்யவில்லை என்றால், அதைத் தமிழக மக்களுக்கு எடுத்துக்கூறி, மத்திய அரசின்மீது நிர்ப்பந்தம் கொண்டுவரும் அளவுக்குச் செய்வதும் முக்கியமான விஷயம் என்று கருதுகிறேன். அமைச்சர் பெயராலே ஐந்து பக்கத்திற்கு ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலேகூட, மாநில அரசுக்கு மத்திய அரசு எந்த அளவுக்கு நிதி உதவி செய்கிறது என்பதைப்பற்றி 10-வது பாராவிலே சொல்லியிருக்



(முற்பகல் 10-40)

கிறார்கள். தமிழ் நாடு அரசு இந்த இந்தத் தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறது, ஆனால் மத்திய அரசிடமிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை; கலர் பிலிம் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்று மாநில அரசு கேட்டிருக்கிறது, இம்மாநிலத்தில் இம்மாதிரி பல திட்டங்களை மத்திய அரசு நிறைவேற்றும் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுதான் இவைகளைச் செய்ய முடியும் என்பது போலவும் மாநில அரசு எதையும் செய்ய முடியாது என்பது போலவும் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்க விரும்புவதெல்லாம், தொழில் துறையில் நாம் என்ன நிலையில் இருக்கிறோம் என்பதையும், போதுமான அளவுக்கு மத்திய அரசு நமக்கு உதவவில்லை என்பதையும் நாட்டு மக்களிடத்தில் எடுத்துச் சொல்ல வேண்டும் இதைப் பற்றியெல்லாம் சுட்டிக்காட்டவில்லை. நம்முடைய மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களும் சரி, மற்ற அமைச்சர்களும் சரி, மற்ற பிரமுகர்களும் சரி, பொதுவாக மேடைகளில், பொதுக்கூட்டங்களில் பேசுகிறபோது மட்டும், மாநில அரசுக்கு மத்திய அரசு நிதி உதவி செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஆனால் தொழில் கொள்கையும் திட்டங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பிலே அதுபற்றி ஜாடை மாடையாகக்கூட ஒன்றுமே சொல்லப்படவில்லை. இந்த நேரத்திலே நான் அதைப்பற்றிச் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். தொழில் கொள்கைபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, இதுபற்றிச் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், நான் "தொழிலாளர் நலன் பேணப்பட வேண்டும், முதலாளிகளின் ஏகபோகம் வேண்டாம்" என்கிற கருத்தை சொல்லப் போகிறேன் என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் பேசும்போது, என்னைப்பற்றி முதலிலேயே கொண்டிருக்கிற ஒரு கருத்தைச் சொல்லிவிட்ட காரணத்தால், நான் இப்போது அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவருகிறேன். இந்திய அரசியல் அமைப்பு சாசனத்தின் அடிப்படையில் தமிழ் நாடு மாத்திரம் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியாது. இதுபற்றி மத்திய-மாநில உறவுபற்றி விவாதிக்கிற நேரத்தில்கூட பேசியிருக்கிறோம். இன்றைக்கு தமிழ் நாட்டிலுள்ள தொழில் வளர்ச்சி ஏன் இப்படி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். "வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது" என்கிற கருத்தை பொதுவாக இரண்டு கழகங்களும் சொல்லி வந்திருக்கின்றன. இந்தக் கருத்தை நான் ஏற்கவில்லை. கடந்த இரண்டு, மூன்று வருடங்களாக இந்த அவையில் வைக்கப்படுகின்ற தொழில்

கொள்கை பற்றிய அறிக்கையை நாம் பார்ப்போமேயானால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. நிதி நிலை அறிக்கையில் இதுபற்றிச் சொல்லும்போதுகூட, கடந்த 15 ஆண்டுக் காலமாக தமிழ் நாட்டுக்கு, தொழில் வளர்ச்சிக்கு, மத்திய அரசு போதுமான அளவுக்கு நிதி ஒதுக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தவரை, தொழில்களுக்கு மத்திய அரசின் முதலீடு என்று பார்த்தால், 10 சதவிகிதம், தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் இப்போது நான்கு பெர்சண்ட்கூட ஒதுக்கப்படுவதில்லை. அப்படி என்றால், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தொழில் வளர்ச்சிக்காக அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்று தானே அர்த்தம்? நான் என்ன சொல்கிறேன் என்றால், அரசு இப்படிச் சொல்லாமல் தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்படாததற்குக் காரணத்தை மிகவும் துல்லியமாகச் சொல்ல வேண்டும். உண்மையான குற்றவாளிகளை நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டு காட்ட வேண்டும். இதுகுறித்து உண்மையான பரிகாரங்களைக் களைய அரசு முயல வேண்டும். தற்காலிகமாக ஏதாவது காரணங்களைச் சொல்வது கூடாது. அப்படிக் கூறினால், அது யதார்த்த நிலையை மறைத்துவிட்டதாக ஆகிவிடும். காங்கிரஸ் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருந்தவரை, முன்பு வந்துள்ள பட்ஜெட்டுகளில் எல்லாம் 10 பெர்சென்ட் பணத்தை ஒதுக்கியிருக்கிறார்கள். இப்படி ஒரு வாதத்தைச் சொன்னால், காங்கிரஸ் நண்பர்கள் என்ன சொல்வார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். அப்படி என்றால் "தெற்கு தேய்கிறது, வடக்கு வாழ்கிறது" என்று சொல்வதில் அர்த்தமில்லை என்கிற கருத்தைச் சுட்டிக்காட்டுவார்கள். ஆனால் உண்மையிலே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது. காங்கிரஸ் மாநிலங்களுக்கும் காங்கிரஸ் அல்லாத மாநிலங்களுக்கும் இடையே மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது என்பது உண்மை. இதை நான் உதாரணத்தோடு இங்கே சுட்டிக்காட்டுகிறேன். சேலம் இரும்பாலைக்கும், விசாகப்பட்டணம் இரும்பாலைக்கும் மத்திய அரசு ஒரே சமயத்தில்தான் அங்கீகாரம் அளித்தது. ஆனால் நம்முடைய சேலம் உருக்காலை இப்போது உருட்டாலை ஆகியிருக்கிறது. விசாகப்பட்டணம் இரும்பாலை மட்டும் இரும்பாலையாக ஆகியிருக்கிறது. அப்படி என்றால், ஜப்பான் நாட்டு நிபுணர்கள் எல்லாம் வந்து பார்த்து, கஞ்சமலையில் நல்ல இரும்பு தாது இருக்கிறது என்று சொன்னதெல்லாம் தவறா? நெய்வேலி நிலக்கரியைப் பயன்படுத்தலாம் என்று சொன்னதெல்லாம் தவறா? விசாகப்பட்டணத்தில் இரும்பாலை சோவியத் உதவியுடன் பெரிய அளவில் உருவாகியிருப்பதற்குக் காரணம் அங்கே நெடுங்காலமாக காங்கிரஸ் கட்சி ஆட்சியில்





இருந்தது தானே. மத்திய அரசு மாநிலங்களிடம், குறிப்பாக காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களிடம், பாரபட்சம் காட்டுகிறது என்பதற்கு இது ஓர் உதாரணம். சமீப காலம் வரை காங்கிரஸ் கட்சி ஆந்திராவில் ஆண்டு கொண்டிருந்தபடியால், அவர்களால் அதற்குரிய ஏற்பாட்டைச் செய்ய முடிந்தது. பாரபட்சத்துடன் மத்திய அரசு நடந்துகொண்டிருக்கிறது. மத்திய அரசு தனக்கு வருகின்ற ரெசோர்சிலிருந்து காங்கிரஸ் ஆட்சி, காங்கிரஸ் அல்லாத ஆட்சி என்று பாரபட்சம் பார்த்து நிதியை ஒதுக்குகிறது. சேலம் உருக்காலையும், விசாகப்பட்டணம் இரும்பாலையும் அதற்கு ஓர் உதாரணம். அரசு சொல்கிற காரணம் உண்மையான காரணமல்ல.

மேற்கு வங்க அரசு உண்மையான காரணத்தைச் சொல்லியிருக்கிறது. இன்றைக்கு மத்திய அரசு நமக்கு நிதி ஆதாரத்தைத் தரக்கூடிய இடத்தில் இருக்கிறது. மத்திய அரசு முதலாளித்துவ பாதையில் நாட்டை நடத்திக் கொண்டு போகிறது. நாடும் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையில்தான் சென்று கொண்டிருக்கிறது. சட்டியில் இருந்தால் தானே ஆப்பையில் வரும். [illegible]டிலே போதிய ரெசோர்ஸ் இல்லை. நாட்டு மக்களுக்குப் போதுமான அளவுக்கு உண்ண உணவு, உடை, வீடு, தொழில் போன்றவற்றை அரசு அமைத்துக் கொடுக்க வேண்டும். எல்லா மாநிலங்களுக்கும் மத்திய அரசு இத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கவில்லை. முதலாளித்துவ பாதையில் நாட்டை இட்டுச் செல்வதால்தான், இவைகளைச் செய்து கொடுக்க முடியவில்லை.

இன்றைக்கு குறிப்பாக மேற்கு வங்கம், திரிபுரா, கேரளா போன்ற மாநிலங்களில் இதைப்பற்றி மக்களிடத்தில் சொல்கிறோம். இந்த அரசு நாட்டு மக்களுக்கு அரிசி கொடுக்க, தண்ணீர் கொடுக்க, தொழில் கொடுக்க பாடுபட்டு வருகிறது என்று சொல்கிறது. அதே சமயத்தில் ஊட்டியில் கலர் பிலிம் தொழிற்சாலை—அங்கு போதிய வளர்ச்சியடைவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன—இன்ப்ராஸ்ட்ரக்சர் இருக்கிறது என்கிற அடிப்படையில், அது வேண்டுமென்று சொன்னோம். அவர்கள் அதற்கு இணங்கவில்லை. என்றாலும் இந்த அரசு இனிமேலாவது செய்ய வேண்டுமென்று மத்திய அரசிடம் சொல்லி, அதன்மூலம் நாட்டு மக்களிடையே ஒரு நப்பாசையை வளர்த்துக் கொண்டிருக்கிறது. அரசுக்கே அது குறித்து நம்பிக்கை இல்லையே. இதையெல்லாம் மக்களிடத்தில் தைரியமாகச் சொல்ல வேண்டாமா? உண்மை நிலைமை மக்களுக்குத் தெரிய வேண்டாமா?

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 20

இன்றைக்கு உலகம் இரண்டு விதமாகப் பிரிந்திருக்கிறது. பொருளாதாரத் துறையில் முதலாளித்துவ உலகம் என்றும் சோஷலிச உலகம் என்றும் இரண்டாகப் பிரிந்திருக்கிறது. நம்முடைய இந்திய தேசம் முழுவதும் முதலாளித்துவப் பாதையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி, இறக்குமதி, 'டெக்னிக்கல் நோ ஹவ்' எல்லாமே முதலாளித்துவ தொடர்பு கொண்டிருக்கின்றன. அப்படி மத்திய அரசு இருக்கும்போது, அதற்குரிய வாய்ப்பினைப் பெற்று அனுபவித்துக்கொண்டிருப்பவர்களும் நாட்டை முதலாளித்துவப் பாதையை நோக்கித் தானே கொண்டு போய்க்கொண்டிருப்பார்கள். 1930 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 50 ஆண்டுக் காலத்தில் இப்போது ஏற்பட்டிருப்பது மாதிரி, நெருக்கடி எந்தக் காலத்திலும் ஏற்பட்டதில்லை என்று பொருளாதார நிபுணர்கள் சொல்கிறார்கள். ரூஸ்வெல்ட் அவர்கள் ஆட்சிக்காலத்தில் நாட்டில் நெருக்கடி ஏற்பட்டு, காபி, கோதுமை போன்றவற்றை வாங்கிச் சாப்பிட ஆள் இல்லாமல், அனைத்தையும் கடலில் கொண்டு போய் போட்டார்கள். அதுபோல் இன்றைக்கு நாட்டிலே பொருளாதார நெருக்கடி வந்துகொண்டிருக்கிறது. முதலாளித்துவம் நாட்டை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் என்றும் இல்லாத அளவில் ஏற்பட்டிருக்கிறது. பணவீக்கம் ஏற்பட்டு, விலைவாசி மிக அதிகமாக ஏறியிருக்கிறது. முதலாளித்துவம் நாட்டில் வேரூன்றிவிட்ட நிலையில், அதன் விளைவாக இத்தகைய நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இதுபற்றியெல்லாம் சொல்வார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் உலகப் பொருளாதாரம் பற்றி எல்லாம் சொன்னார்கள். ஒரு நாடு வேறொரு நாட்டிடம் எப்படி பிணைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டுகிறேன்.

ஐ.எம்.எப். என்கிற ஒரு நிறுவனம் இருக்கிறது. அது கடன் தருவது நியாயம் என்று சொல்லும்போது ஒன்றைக் கவனிக்க வேண்டும். நாம் அவர்களிடம் பணம் கடன் வேண்டுமென்று கேட்கும்போது, எல்லாப் பொருள்களுக்கும் அட்மினிஸ்டர்ட் பிரைஸ் என்கிற முறையில் இறக்குமதி விலையை விட நீங்களாகவே விலையை உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசிடம் சொல்கிறார்கள். அந்த வகையில் பெட்ரோல், டீசல் போன்றவற்றுக்கு மாநில பட்ஜெட்டில் கோடிக்கணக்காக இருக்கிற பணம் அப்படியே மத்திய அரசுக்கு 'டிரான்ஸ்பர்' ஆகிறது. ஆகவே இன்றைக்கு மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையில் சம்பந்தப்படாமல் நாம் மாநிலக் கொள்கையைப்பற்றிப் பேச முடியாது. ஆகவே நம்முடைய் மத்திய அரசின் கொள்கை மேலும் மேலும் சுயேச்சைத் தன்மை அற்றதாக ஆகிவிட்டது. தொழில் கொள்கைபற்றிப்



1983 ஏப்ரல் 20] [திரு. ஆ. நல்லசிவன்]

பிரச்சினை வருகிறபோது, நம்முடைய நாட்டில் 51 சதவீதம் இந்தியப் பொருள் இருந்தால்தான், வெளிநாட்டு மூலதனத்தை அனுமதிக்கலாம் என்று நேரு காலத்து தொழில் கொள்கையில் கூறப்பட்டது.

(முற்பகல் 10-50)

உலகத்தில் உள்ள முதலாளித்துவ நாடுகள் எல்லாம் நிர்ப்பந்தத்தின் காரணமாக தேவைப்படுகிற தொழில் நுட்பம் 49 சதவீதத்திற்குமேல் தர முடியாது. உங்களுக்கு தேவைப்பட்ட தொழிற்சாலைகளோ, தொழில் நுட்பமோ அல்லது சாதனங்களோ வேண்டுமானால் எல்லாத் தொழிலையும் எங்கள் ஆதிக்கத்துக்குக் கீழே இருக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டு, 49 சதவீதத்துக்கு மேல் கொடுக்கக்கூடாது என்பதை மாற்றி 50 சதத்துக்கு மேல் போகலாம் என்று தொழிற் கொள்கையையே நிர்பந்தத்தின் காரணமாக மாற்றி விட்டார்கள். அந்நியச் செலாவணியைப் பொறுத்தவரையில், நம் நாட்டில் போட்டிருக்கும் மூலதனத்தில் ஏராளமாக லாபம் வாக்கூடிய அளவுக்கு வெளிநாட்டுச் செலாவணி ஒழுங்குமுறைச் சட்டத்தையே மாற்றியிருக்கிறார்கள். நம் நாட்டிலிருந்து 15 ஆயிரம் கோடி ரூபாய் கடன் கொடுத்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அதற்கான வட்டி 1,300 கோடி ரூபாய் போகிறது. அந்நிய மூலதனங்கள் வெளியேற்றப்பட வேண்டுமென்று போராடினோம். ஆனால் வெள்ளைக்காரர்கள் போட்ட மூலதனத்தை ஒப்பிட்டால், பின்னி மில்லும், பாரி அண்டு கம்பெனியிலும் நாம் சுதந்திரம் அடைந்த 35 ஆண்டுக் காலத்தில் கோடிக் கோடியாக வெள்ளைக்காரர்கள் பணம் அந்நியச் செலாவணியாக அந்நிய நாட்டுப் பணம் நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் லாபத்தைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு மத்திய அரசுமூலம் வெளிநாட்டு முதலாளிகளும் மற்றவர்களும் சேர்ந்து சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அந்த நிலையில் நம்முடைய நாட்டு உற்பத்தி வெளியே போகிறபோது, இருக்கிற கொஞ்ச நஞ்ச தொழில்களும் ஏகபோக முதலாளிகளிடம் வளருகின்றன. நம் நாட்டில் 125 முதலாளி குடும்பங்கள் ஐந்து ஆயிரம் கோடி ரூபாயைக் கட்டுப்படுத்துகிறபோது, மத்திய அரசின் கையிலிருந்து மாநிலங்களுக்குக் கொடுக்க சரக்கு இல்லை. சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும். ஆக நாடு முதலாளித்துவப் பாதையில் போகிறது. இந்த உண்மையை தமிழ் நாட்டு மக்களுக்குச் சொல்லவேண்டும். நாங்கள் முடிந்த அளவுக்கு கேரளாவிலும், மேற்கு வங்கத்திலும், திரிபுராவிலும் சொல்வதுபோல், மத்தியில் இந்தக் கொள்கையை மாற்றி அமைக்கவேண்டும். வடக்கு தெற்கு என்று சொல்வது சரியாகாது. அசாம் வடக்கேதான் இருக்கிறது. பஞ்சாப், ஒரிசா வடக்கேதான் இருக்கிறது. அசாமில் தொழில் வளர்ச்சி ஏற்படாமல் இருப்பதால்தான், தேயிலைத் தோட்டத்தில்

உள்ளவர்களை வெளியேற்றும் நிலைமை இருக்கிறது. அதுமாதிரி நிலை இருக்கிறபோது வடக்கு தெற்கு என்று பேசுவது எடுபடாது. பாரபட்சம் என்கிற வாதமே பாசிஸ்ட் நம்பர் 2. இந்த மத்திய அரசால் எல்லா மாநிலங்களுக்கும் தொழில் வளர்ச்சிக்குப் போதுமான மூலதனம் கொடுக்க சக்தியற்ற, கொள்கையற்ற, முதலாளித்துவப் பாதையில் போகிற இந்த நாட்டுக் கொள்கை மாற்றப்பட வேண்டுமென்று தமிழ் நாட்டில், மகாராஷ்டிரத்தில், ஆந்திராவில், மற்ற மாநிலங்களில் பிரசாரம் நடந்தால்தான், மத்திய அரசின் கொள்கை மாறும். அப்படிப்பட்ட ஒரு கொள்கைப் போராட்டத்தை தமிழ் நாட்டு மக்கள் நடத்த வேண்டியிருக்கிறபோது, நம்முடைய மாநில அரசு பொத்தாம் பொதுவாக மத்திய அரசுபற்றிப் பாரபட்சம் காட்டுகிறது என்று சொல்லுமே யானால், நீங்கள் எப்படித்தான் இந்த மக்களை 'எஜுகேட்' செய்யப் போகிறீர்களோ தெரியவில்லை. எல்லாவற்றையும் உங்களால் செய்ய முடியுமா? செய்ய முடியாததைக்கூட சொல்லக்கூடாதா? செய்ய முடியாமல் செய்கிறார்கள் என்று சொல்லக்கூடாதா? அது சரியல்ல என்பதைச் சொல்ல விரும்புகிறேன். நிலச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டு, நம் நாட்டில் கோடானுகோடி விவசாயிகளுக்கு நிலம் பகிர்ந்து கொடுக்கிறபோது, அவர்கள் விவசாயத்தில் காட்டுகிற அமோகமான உற்பத்தி இந்த நாட்டுக்கு உணவாகப் பயன்படுகிறது. நம் நாட்டு மூலப் பொருள் உற்பத்திக்குப் பயன்படுகிறது. நம் நாட்டில் முதலாளித்துவ ஆதிக்கம் ஒழிய நிலச் சீர்திருத்தம் தேவை. அப்படிச் செய்ததால்தான், சீனா வேகமாக முன்னேறியிருக்கிறது. ஆகவே சோஷலிஸ்ட் பொருளாதாரம்தான் இதற்கேற்ற பாதை, என்று நீங்கள் தமிழ் நாட்டில் சொல்லாமல் போனால் என்ன செய்யப் போகிறீர்கள் என்று தெரியவில்லை. தமிழ் நாட்டு மொத்த வருமானத்தில் 22.6 சதவிதம்தான் தொழில் வளர்ச்சி. இனிமேல் ஏற்படுகிற வளர்ச்சி ஃபார்முலேஷன் சரியா என்று யோசனை செய்து பாருங்கள். தமிழ் நாட்டில் தொழில் ஆதாரங்களைப் பெருக்குவதுதான் பொருளாதார மேம்பாட்டுக்கு வழி வகுக்கும். அப்போது தான் வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் மேலும் அதிகரிக்க இயலும். தமிழ் நாட்டில் விவசாய வருமானம் கணிசமாக இல்லை. விவசாயத் துறையில் நிலச் சீர்திருத்தம் செய்வதன் மூலமாக அவர்களுக்கு உற்சாகம் கொடுப்பதன் மூலமாக விவசாயத்திற்கு அதிக வருமானம் ஏற்படச் செய்யவேண்டியிருக்கிறது. அதுதான் நிலைமை. ஆனால் நிலச் சீர்திருத்தம் சரியாக நடக்கவில்லை. இதன் காரணமாக உச்சவரம்புச் சட்டம் வந்த பிறகும், ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் வைத்துக்கொண்டு பினாமியாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே மாற்றம் ஏற்பட வேண்டுமென்று Federation of Indian Chambers of Commerce and Industry (FICCI)





தலைவர் சொல்கிறார். உச்சவரம்புச் சட்டத்தை ரத்து செய்யுங்கள். பினாமி நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன என்று எல்லோருக்கும் தெரியும். இந்தச் சட்டத்தின் மூலமாக விவசாயிகளுக்கு நிலம் கிடைக்கவில்லை. எல்லாம் பினாமியாக இருக்கிறது என்று பயந்து பயந்து சொல்கிற நிலைமை இருக்கிறது. உச்சவரம்புச் சட்டம் தேவையில்லை. அதை நீக்கிவிடுங்கள் என்று திரு. ஏ. பி. ஜெயின் சொல்கிறார். விவசாயத்தைப் பொது உடைமையாக்கி, உற்பத்திப் பொருட்களை ஏராளமாக உற்பத்தி செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம். காரணம் உலக வங்கிக் கடன், ஐ.எம்.எப். கடன் நிறைய வாங்கியிருக்கிறோம். அதை அடைக்க வேண்டும் என்று ஃபிக்கி தலைவர் பகிரங்கமாகவே சொல்கிறார். இந்த நிலைமை இருக்கும்போது, நம்முடைய அரசு என்ன நினைக்கிறது? நம்முடைய அரசு நிலச் சீர்திருத்தத்தை உண்மையிலேயே அமுல்படுத்தினால்தான், பயன் ஏற்பட முடியும். அல்லது சோஷலிசமாக இருக்கவேண்டுமென்று எப்படி சொல்கிறோமோ அல்லது திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது மாதிரி தொழில் வளர்ச்சி ஏற்படுகிறபோது, அதில் ஏகபோகம் ஏற்படத்தான் செய்யும், மத்திய அரசும், அந்நிய நாடுகளும் வரத்தான் செய்வார்கள், அந்நியச் செலாவணி ஏற்படத் தான் செய்யும். அப்படி ஏகாதிபத்தியம் ஏற்படாமல் செய்ய முடியாது என்று சொல்வது சரியானது அல்ல என்பதை இன்று பல சோஷலிச நாடுகள் நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள். ஆக தொழில் வளர்ச்சியில் நமது நாடு எங்கே நிற்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஏன் கேட்கிறேன் என்றால், அதில் ஒன்றிரண்டு குறைகள் இருக்கின்றன. டிட்கோ மூலமாக ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதாவது இந்தப் புத்தகத்தை படித்த வரைக்கும், 11 தொழிற்சாலைகள் இருக்கின்றன. இப்போது தயாரிப்பில் இருப்பது, எதிர்காலத்தில் முடிவாக்க இருப்பது எல்லாம் சேர்ந்து 11 தொழிற்சாலைகள். அது 113 கோடி ரூபாய் மூலதனம் போடுவதாக இருக்கிறது. 40 தொழிற்சாலை ஜாயிண்ட் செக்டாரில் இருந்து அது பூர்த்தியடைய ரூ. 470 கோடி மூலதனம் ஆகிறது. டிட்கோ ஆரம்பித்ததே பொதுத் துறை நிறுவனங்கள் ஆரம்பிக்கத்தான். பப்ளிக் செக்டாரில் நான்கு தொழில் ஆரம்பித்தது. அதில் லாபம் கிடைத்த பிறகு மேலும் மூன்று தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டு, அவை தயாரிப்பில் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். ஆரம்பிக்கப்பட்ட டிட்கோவுக்காக ரூ. 113 கோடிக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஜாயிண்ட்செக்டாரில் தனியார் துறையில் 40 தொழிற்சாலைகளை ஆரம்பித்து ரூ. 470 கோடி போடுகிறீர்கள். பப்ளிக் செக்டாரில் ஆரம்பித்து ஏன் இப்போது ஜாயிண்ட் செக்டாருக்கு மாற்றியிருக்கிறீர்கள்? ஜாயிண்ட் செக்டாரில் ஏற்கெனவே நமக்கு அனுபவம் இருக்கிறது. ஸ்பிக்கை எடுத்துக்.

கொண்டால், அங்கே இருக்கிற மேனேஜிங் டைரக்டர் இரண்டு கோடி ரூபாய் தான் மூலதனம் போட்டார். 50 கோடி ரூபாய் மத்திய மாநில அரசு நிதி நிறுவனங்கள் போட்டனர். 50 கோடி பொதுப்பணத்தைப் போட்டுவிட்டு, இரண்டு கோடி போட்ட தனியாரிடம் இந்த 52 கோடி ரூபாய் சொத்தை ஒப்படைத்திருக்கிறீர்களே என்று முந்தைய தி.மு.க. சர்க்காரை விமரிசனம் செய்தோம். இப்போது இந்த அரசு 40 தொழிற்சாலைகளுக்கு 470 கோடி ரூபாய் மூலதனம் போட்டு அதை தனியாரின் கையில் ஒப்படைக்கப் போகிறதே, அதில் என்ன கேட்க இருக்கிறேன் என்றால், 470 கோடியில் எத்தனை கோடி நமது சர்க்கார் மூலதனம், அதிலே பொது நிறுவனங்கள் கடன் எவ்வளவு, தனியார் கையில் இருப்பது எவ்வளவு? சொல்லப்போனால் ஸ்பிக் கணக்குப்படி பார்த்தால், ரூ. 470 கோடியில் ரூ. 10 கோடிகூட தனியார் பணம் இருக்காது. பாக்கியெல்லாம் சர்க்கார் மூலதனத்தையும் பொதுமக்கள் டெபாசிட்டையும் ஏன் தனியாரிடம் கொடுக்க வேண்டும்? இன்னொரு வேடிக்கை என்னவென்றால், ஏற்கனவே உள்ள 19 ஜாயிண்ட் செக்டார் நிறுவனங்களில் நல்ல லாபம் கிடைக்கிறது. நான்கு பப்ளிக் செக்டார் நிறுவனங்களிலும் லாபம் கிடைக்கிறது. இப்போது இதை தனியார் கையில் கொடுக்கிறார்கள். எங்கள் ஊரில் ஒரு மில் இருக்கிறது. அதற்கு அவர்கள் போட்டது ஏழு லட்சம் ரூபாய். ஆனால் அதைக் கட்டி முடிக்க 70 லட்சம் ரூபாய் ஆகியது.

(முற்பகல் 11-00)

அதில் 63 லட்சம் ரூபாய் பப்ளிக் ஃபைனான்ஸ் இன்ஸ்டிடியூஷனில் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த மில் கண்ட்ரோல் முழுவதையும் அந்த முதலாளியிடம் கொடுத்திருக்கிறீர்கள் என்று பார்க்கும்போது எதற்காக இத்தகைய ஜாயிண்ட் செக்டார் தேவைப்படுகிறது? இத்தகைய ஜாயிண்ட் செக்டார் தொழில்கள் நம் நாட்டுக்கு அவசியம்தானா என்று கேட்க விரும்புகிறேன். சர்க்காரிடம் மூலதனம் இல்லை, தனியார் ஒருவர் 3/4 பங்கு மூலதனத்தை வைத்துக் கொண்டிருக்கிறார். அவரிடம் தொழில் நுட்ப அறிவு இருக்கிறது. இன்னும் ¼ பாகம் இல்லாததால், தொழில் தொடங்க முடியாமல் இருக்கிறார் என்றால், அப்போது அரசு ¼ பாகம் மூலதனம் போட்டு தொழில் தொடங்க அவருக்கு உதவலாம். ஆனால் 90 சதவீத மூலதனத்தை அரசும், அரசுப் பொறுப்பில் நிர்வகிக்கப்படும் நிதி நிறுவனங்களும் போடுகிறபோது, மொத்தத்தில் பத்தில் ஒரு பங்கு அல்லது பன்னிரண்டில் ஒரு பங்கு மூலதனம் போடுகிற முதலாளியிடம் ஒப்படைக்கிற வகையில் நம் நாட்டுக்கு ஒரு ஜாயிண்ட் செக்டார் தேவைதானா- என்பதைச் சிந்திக்க வேண்டும். குறைவான மூலதனத்தைப் போடுகிற தனியார் முதலாளியிடம் எதற்காகத் தொழிலைவிட-





வேண்டும்? நான் சொன்ன கோமதி மில்லில் அரசு மூலதனமும் நிதி நிறுவனங்களின் மூலதனமும்தான் அதிகமாக இருக்கிறது. அப்படி இருக்கும்போது, அந்தத் தனி நபரிடம் அந்தத் தொழிற்சாலையை ஒப்படைக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன காரணம்?

அடுத்து, சமீப காலம் வரையில் நம் நாட்டில் சர்க்கரை ஆலைகள் கூட்டுறவுத் துறையில்தான் தொடங்கப்பட்டு வந்திருக்கின்றன. அதிகமான அளவுக்கு லாபம் தருகிற தொழிலாக சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. எனவே அவற்றை கூட்டுறவுத் துறையிலோ, பொதுத் துறையிலோதான் இதுவரை தொடங்கி வந்தோம். ஆனால் இப்போது புதிதாக நான் ஒரு செய்தியைக் கேள்விப்படுகிறேன். அதாவது 11 சர்க்கரை ஆலைகளைத் தனியார்கள் தொடங்குவதற்குத் தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அதில் ஐந்து சர்க்கரை ஆலைகளுக்கான அனுமதி வந்துவிட்டது என்றும் கேள்விப்படுகிறேன். ஆக இந்த அளவுக்கு லாபம் தருகிற தொழிலை கூட்டுறவுத் துறையில் அரசே ஏற்றுச் செய்யாமல் தனியாருக்குத் தருகிற நிலை ஏன் வந்தது என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, மத்திய அரசின் தொழிற்கொள்கை சரியில்லை என்று பேசுகிறார்கள். அப்படிப் பேசுவதற்கு முன்னால் இந்த அரசு தன்னுடைய கொள்கையைச் சரியாக வைத்துக்கொள்ள வேண்டும். இவர்களுடைய கொள்கை சரியில்லாமல் இருக்கும்போது, இவர்கள் எப்படி மத்திய அரசைப் போய்க் குறை சொல்ல முடியும்? நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, இந்த வர்க்கப் பிரச்சினையில் இந்த அரசு எங்கே நிற்கிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். இந்த அரசு யார் பக்கம் நிற்கிறது? இவர்கள் சின்ன முதலாளிகளுக்கு உதவி செய்வதை நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. சிறிய முதலாளிகளுக்கு என்று இன்டஸ்ட்ரியல் காம்ப்ளெக்ஸ் உருவாக்கித் தருவதையும், புதிய வசதிகளைச் செய்து தருவதையும் நாங்கள் ஆட்சேபிக்கவில்லை; அதற்குப் பதிலாக அதைச் செய்ய வேண்டும் என்றுதான் வற்புறுத்துகிறோம். ஆனால் நம் நாட்டில் பெரிய முதலாளிகளும் பன்னாட்டு முதலாளிகளும், ஏகபோக முதலாளிகளும் இருந்தால்தான், நாடு தொழில் வளர்ச்சி அடையும் என்று மத்திய அரசு சொல்வதை இந்த அரசு ஒப்புக்கொள்கிறதா, எதிர்க்கிறதா என்பதுதான் என்னுடைய கேள்வி. எதிர்க்கிறோம் என்று இவர்கள் சொல்வீர்களானால் அதற்கு இணக்கமாக, அதற்கு ஆதாரமாக இவர்களுடைய நடவடிக்கை இல்லையே? அப்படியென்றால் அதிக லாபம் தருகிற தொழிலைப் போய், எதற்காகத் தனியாருக்குக் கொடுக்கிறார்கள்? இதை அரசு விளக்க வேண்டும்.

[திரு. ஆ. நல்லசிவன்] [1983 ஏப்ரல் 20

அவைகளைக் கட்டுப்படுத்த முடியுமா என்று பார்க்க வேண்டும். அந்த ரகங்களை மில்காரர்கள் உற்பத்தி செய்யக்கூடாது என்று நம்மால் உத்தரவு போட முடியுமா? நம் நாட்டு மில் முதலாளிகளுக்கு எந்த ரகத்தை வேண்டுமானாலும் தயார் செய்வதற்கான பரிபூரண சுதந்திரம் இருக்கிறது. அந்த உரிமையைக் கட்டுப்படுத்த முடியாது. கட்டுப்படுத்தினால் அவர்கள் கோர்ட்டுக்குப் போவார்கள். அப்படி அவர்களின் உரிமையைக் கட்டுப்படுத்த மத்திய அரசுக்குக்கூட உரிமை இல்லை. மத்திய அரசு உத்தரவு போட்டாலும், அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுவார்கள். நாங்கள் விரும்புகிற துணிகளை, இந்திய நாட்டு மக்கள் விரும்புகிற துணிகளை நாங்கள் எங்கள் மில்களின் மூலம் தயாரிப்பதை இவர்கள் தடுக்கிறார்கள் என்று சொல்லி, அவர்கள் கோர்ட்டுக்குப் போய்விடுவார்கள். எனவே கைத்தறிக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. இப்படிப்பட்ட நிலைமையிலும், போட்டிகளின் மத்தியிலும் சிறு தொழில்களையும் கிராமத் தொழில்களையும் பாதுகாக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கிறேன். பெரிய தொழில்கள் போட்டியிட்டு சிறு தொழில்களைச் சீர்குலைக்கும்போது, அவைகளுக்குப் பாதுகாப்பு தருவதற்கான முறையில் அரசு முயற்சிகளை மேற்கொள்வதை நான் வரவேற்கிறேன். இந்தக் கொள்கைக்கு நாங்கள் எங்களின் ஆதரவையும் தருகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே இறுதியாக, தமிழக அரசு தொழில் கொள்கையில் இரண்டு முக்கியமான கொள்கை முரண்பாடுகளைத் தெளிவுபடுத்த முன்வர வேண்டும். அதிலும் குறிப்பாக, மத்திய அரசிடமிருந்து நமக்கு நிதி போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை என்ற விவரத்தையும், மத்திய அரசு முதலாளித்துவத்தை வளர்க்கும் பாதையில் போகிறது என்ற விவரத்தையும் மக்கள் மத்தியில் நாம் பிரச்சாரம் செய்தாக வேண்டும். அந்த வகையில் தமிழ் நாட்டு மக்களை தேசிய சோஷலிச கருத்துக்கு ஆதாரவான முறையில் ஒன்று திரட்ட வேண்டும். அதற்கான முனைப்பான பிரச்சாரத்தைத் தமிழ் நாடு அரசு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983-84 ஆம் ஆண்டுக்கான தொழில் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் இங்கே தெரிவித்ததைப் போல், வெளியே மத்திய அரசாங்கத்தைப்பற்றியும், மத்திய அமைச்சர்களைப் பற்றியும் குறிப்பிட்டு அவர்களால் தமிழ் நாடு தொழில் துறையில்



1983 ஏப்ரல் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

புறக்கணிக்கப்படுகிறது என்ற கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருந்தாலும், இங்கே வைக்கப்பட்டிருக்கிற கொள்கைக் குறிப்பில் அதுபற்றிய எந்தக் கண்டனமும் இல்லாதிருப்பது வியப்பாக இருக்கிறது என்பதை முதலில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னைப் பொறுத்தவரையில், தமிழகத்தின் தொழில் அமைச்சர் அவர்கள், நாட்டு மக்களின் நன்மையைக் கருதித்தான் சில கருத்துக்களை நாட்டு மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்லி வருகிறார் என்று கருதுகிறேன். அதிலே குறிப்பாக தொழில்களைத்

(முற்பகல் 11-10)

துவங்க உரிமங்கள் கொடுப்பதில் சில ஆண்டுகளாக மத்திய அரசாங்கம் தமிழகத்தைப் புறக்கணித்து வருகிறது என்ற குற்றச்சாட்டுக்கு மத்தியிலே இருக்கின்றவர்கள் உரிய பதிலைத் தர முடியாவிட்டாலும், அதை வலியுறுத்துகிற அளவில் மத்திய அமைச்சர் அவர்கள் தமிழகத்திற்கு வந்த நேரத்தில், ஒரே மேடையில் நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் அந்தக் குற்றச்சாட்டைச் சொன்னதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் தமிழக அரசாங்கம் இந்தக் கொள்கையில் தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கருத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று கேட்க முனைந்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையில் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 52-வது பிரிவை நீக்க வேண்டும் என்று தமிழகத்தைப் பொறுத்த வரையில், மிகத் தெளிவாக ஒரு தீர்மானத்தை தொழிலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தால், திராவிட முன்னேறக் கழகத்தின் சார்பிலே நான் அதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, பத்து இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள காஸ் சிலிண்டர் தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று தனியார் விரும்பினால், அல்லது ஒரு மாநில அரசாங்கம் விரும்பினால், அதற்கு உரிமம் கொடுக்கிற அதிகாரம் மத்திய அரசிலே இருக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கம் அதிகாரத்தை தன் கையில் குவித்து வைத்துக் கொண்டிருந்தால், நிச்சயமாக தொழிலில் எந்த மாநிலமும் முன்னேறாது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அல்லது அனைத்திந்திய நிலையில் உள்ள அல்லது 100 கோடி ரூபாய்க்கு அதிகமான முதலீடு செய்யக்கூடிய தொழில்களைத் தவிர, மீதி எந்தத் தொழிலாக இருந்தாலும், உரிமம் வழங்கக் கூடிய அதிகாரம்

மாநிலங்களுக்குத்தான் இருக்க வேண்டும் என்பதை முதலிலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அந்த அடிப்படையில் தொழில் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அரசாங்கத்தைப்பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில், இப்படி ஒரு திருத்தம் தேவை என்று கூறி வலியுறுத்தினால், அதை நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே தெரிவித்த சில கருத்துக்களைப் பார்க்கும்போது, ஒரு மினி-ஜப்பானாக தமிழ் நாடு எதிர் காலத்திலே உருவாகுமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்படி வர வேண்டும் என்ற ஆசை அவருக்கு உண்மையிலேயே இருக்குமானால், நான் அவரைப் பாராட்டுகிறேன். அதற்கான முயற்சிகளை எடுக்காமல் கருத்துக்களை மட்டும் சொல்லிக் கொண்டிருப்பதாலே இந்த நாடு எப்படி முன்னேறும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்ட வேண்டும். "26 புதிய தொழிற் சாலைகளுக்குத் திட்டமிட்டிருக்கிறோம், கோடிக்கணக்கான ரூபாய்க்குத் திட்டங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன, கேரளாவிற்குப் போக இருக்கின்ற இரயில்வே பெட்டித் தொழிற்சாலையை தமிழகத்திலேயே ஆரம்பிக்க ஆயிரம் ஏக்கர் நிலத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்" என்று சொல்லியிருக்கிறார்கள். இரயில் பெட்டித் தொழிற்சாலையை இரயில்வே நிர்வாகம் இங்கே ஏற்படுத்த முன்வராவிட்டாலும், நம்முடைய அரசாங்கம் தாராளமாக நிலத்தைத் தருகிறோம் என்று சொல்லுகிற எண்ணத்தை நான் வரவேற்கிறேன். இப்படி இலவசமாக ஆயிரம் ஏக்கர் நிலத்தை நம்முடைய அரசாங்கம் கொடுக்கத் தயாராக இருக்கும்போது, அந்தத் தொழிற்சாலையை கேரளாவிற்குக் கொடுப்பதை மாற்றி தமிழகத் திற்குக் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நானும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏழு தாலுக்காக்களை தொழிலில் பின்தங்கிய பகுதிப் பட்டியலில் சேர்க்கப் போகிறோம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இதுகுறித்து ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்திலே வாலாஜா தாலுக்கா என்று இருந்தது. வாலாஜா தாலுக்காவை தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டுமென்ற கருத்தாரு அனுப்பிய நேரத்தில், ஆற்காடு அதிலிருந்து பிரியவில்லை. வாலாஜா தாலுக்கா தொழிலில் பின்தங்கிய பகுதி என்று அறிவித்த பிறகு, ஆற்காடு தாலுக்கா பிரிந்திருக்கிறது. ஆகவே ஏற்கெனவே இணைந்திருந்த ஆற்காட்டையும் தொழிலில் பின்தங்கிய பகுதியாக அறிவிக்க வேண்டும். வட்டம் பிரிந்ததால் ஆற்காடு தாலுக்கா தொழிலில் பின்தங்கிய பகுதி அல்ல என்று சொல்லுவதும், சலுகைகள்





கொடுக்க முடியாது என்று சொல்லுவதும் உள்ளபடியே வருந்தத்தக்கதாகும். இந்த நிலைமைகளை அரசாங்கம் மாற்ற வேண்டும். ஒரே எல்லையை வைத்து அந்தப் பகுதியில் உள்ள மொத்த இடங்களுட பின்தங்கிய வட்டம் என்று அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்து, பிரிந்து போன இடத்திற்குச் சலுகை இல்லை என்று சொல்லுவது சரியல்ல என்பதையும் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கக் கூடிய சில நிறுவனங்கள் எப்படிச் செயல் படுகின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தைப் பொறுத்தவரையில், 1982 மார்ச் வரையில் அரசுத் துறையில் நிறுவப்பட்டு வரும் தொழிற்சாலைகளுடைய மதிப்பீடு 34.94 கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். திட்ட நிலையில் உள்ளவை ரூபாய் 32 கோடியே 53 இலட்சம் என்று தெரிவித்திருக்கிறார்கள். இதனால் எவ்வளவு பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற புள்ளி விவரத்தைப் பார்த்தால், 553 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே ஊரகத் தொழில் அமைச்சர் அவர்கள், அண்ணா தி.மு.க. ஆட்சியில் மூன்று இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப் போகிறோம் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் பெருந்தொழில்கள் துறை அமைச்சர் அவர்கள் ரூபாய் 32 கோடியே 53 இலட்சம் ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலையில் 553 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு செய்து 300, 400, 500 பேருக்குத்தான் வேலை வாய்ப்பு கொடுக்கிறோம் என்றால், மூன்று இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கொடுக்க எத்தனை கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற புள்ளிவிவரத்தைத் தேடிப் பார்த்தால், அந்த விவரங்கள் இல்லை.

அதே போல கூட்டுத் துறையிலேயும் கிட்டத்தட்ட 500 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனம் இட்டு உற்பத்தி செய்யக்கூடிய தொழிலில், வேலை வாய்ப்பு எவ்வளவு பேருக்கு என்றால், பத்தாயிரம் பேருக்குத்தான் கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. இவைகள் எல்லாம் திட்டமிடப் பட்டாலும், உள்ளபடியே எப்போது முடிவுறும் என்ற புள்ளிவிவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்புகளில், இந்தத் திட்டங்கள் எந்த ஆண்டில் பலன் தரும் என்ற விவரத்தையும் சேர்த்துத் தந்திருந்தால் உதவிகரமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 20

திட்டங்களில் கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் இட்டு எவ்வளவு ஆதாயம் பெற்றிருக்கிறார்கள் என்று பார்த்தால், 1980-81-ல் ரூபாய் 29.60 இலட்சம்தான் ஆதாயம் பெற்றிருக்கிறார்கள். நாம போடுகிற மூலதனத்திற்கு வட்டி விகிதாச்சாரம் போட்டால், இந்த லாபம் எப்படி சரியாக இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. தனியார் கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு செய்கிறபோது, கோடிக்கணக்கான ரூபாயைக் கொள்ளையடிக்கிறார்கள். அரசாங்கத் துறையில் ரூபாய் 29.60 இலட்சம் ஆதாயம்தான் கிடைத்திருக்கிறது என்று சொல்லும்போது, உள்ளபடியே பொதுத் துறையை நாம் ஊக்குவிக்கிறோமா என்ற சந்தேகம் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனம் ரூபாய் 12.5 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்தில் இதுவரையில் ரூபாய் 11.80 கோடி செலவு செய்து மூன்று ஆலைகளை நடத்தி வருகிறது. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை நான்கு இலட்சம் டன் திறன் கொண்டது என்றும், அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை ஐந்து இலட்சம் மெட்ரிக் டன் திறன் கொண்டது என்றும் புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் 1976-77-ல் 3.38 இலட்சம் டன் உற்பத்தி ஆகியிருக்கிறது. 1977-78-ல் 3.09 இலட்சம் டன் உற்பத்தி ஆகியிருக்கிறது. 1981-82-ல் 2.94 இலட்சம் டன் உற்பத்தி ஆகியிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது, உற்பத்தித் திறன் நான்கு இலட்சம் டன்னாக இருந்தபோதிலும், உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. ஒரு பக்கத்திலே ஆலை இருக்கிறது, உற்பத்தித் திறன் இருக்கிறது, ஆனால் உற்பத்தி ஆகவில்லை. அதனாலே சிமெண்ட் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்லி, வெளி நாடுகளிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு சுமார் இரண்டு இலட்சம், மூன்று இலட்சம் டன் என்று சிமெண்டை இறக்குமதி செய்கிறோம். நமக்கு இருக்கின்ற ஆலைகளில் ஏன் உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை? அதற்கு ஒரு காரணம் மின்வெட்டு என்றாலும், தனியார் ஆலைகளில் இருப்பவர்கள் ஜெனரேட்டர்களை வைத்துக்கொண்டு உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். ஜெனரேட்டர் வாங்குவதற்கு நாம் கடன் தருகிறோம். ஆகவே ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் ஜெனரேட்டர்களை வாங்கி வைத்து உற்பத்தியைப் பெருக்க முடியாதா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய அரசாங்கம் சிமெண்ட் விலையில் இரண்டு விதமான கொள்கையை வைத்து, ஒன்று; அரசாங்கத்திற்கு அல்லது ஆயிரம் சதுர அடிக்குக் கீழே அளவுள்ள கட்டிடங்களைக் கட்டுகிறவர்களுக்கு ஒரு



1983 ஏப்ரல் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

விலை என்றும், மற்றவர்களுக்கு எல்லாம் ஒரு விலை என்றும் சொல்லி, வெளிச்சந்தையில் 62 ரூபாய்க்குத் தருகிறோம் என்று உத்தரவாதம் தந்து, பிறகு ஜெனரேட்டர் வைத்து உற்பத்தி செய்ததால், 72 ரூபாய் அளவிற்கு உயர்ந்துவிட்டது என்று காரணங்கள் சொல்லப்பட்டாலும், இன்றைக்கு தமிழகத்திலே சிமெண்ட் 80 ரூபாய்க்குக் கீழே கிடைக்கிறதா என்று கேட்டால், நிச்சயமாக இல்லை. ஒரு பக்கத்திலே அரசாங்கம் விநியோகிக்கின்ற

(முற்பகல் 11-20)

சிமெண்ட் என்ன ஆகிறது? அதுவும் புரியவில்லை. இன்னொரு பக்கத்திலே தனியாருக்குக் கிடைக்கின்ற சிமெண்டும் நியாயமான விலையிலே கிடைப்பதில்லை. கடைக்காரர்கள் கேட்டால், அவர்கள் தெளிவாகச் சொல்கின்றார்கள் சிமெண்ட் உற்பத்தியாகக்கூடிய இடத்திலேகூட தனியாகத் தொகையைப் பெற்றுக்கொண்டுதான் சிமெண்ட் வழங்குகின்றார்கள். நாங்கள் அந்தத் தொகையை வழங்க மறுத்தால், எங்களுக்கு சிமெண்ட் கிடையாது என்கின்றார்கள். டன்னுக்கு இவ்வளவு எக்ஸ்ட்ரா அமௌண்ட் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அது வேறு பக்கத்திலே வருகிறது. வேறு கணக்கிலே கறுப்புப் பணத்திலே வருகிறது. அப்படி தனியார் வசூல் செய்கின்ற நேரத்திலே, அரசாங்கத்திலே இருக்கின்ற ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையில் என்ன விலைக்கு விற்கின்றார்கள்? தனியார்கள் போல அங்கே உள்ள அதிகாரிகள் செய்கின்றார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஐந்து லட்சம் டன் உற்பத்தித் திறன் கொண்ட அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலையில் இந்த ஆண்டு 2.84 லட்சம் டன்தான் உற்பத்தி செய்திருக்கின்றார்கள். கடந்த ஆண்டு 2.47 லட்சம் டன் ஆக இருக்கிறது. ஆக உற்பத்தித் திறனிலே பாதியை நாம் உற்பத்தி செய்யாமல் வெளிநாட்டிலே இருந்து இறக்குமதி செய்வது என்ன நியாயம் என்று எனக்குப் புரியவில்லை. அதுபோலவே இறக்குமதி செய்கின்ற சிமெண்டிலேகூட குறைபாடுகளை எல்லாம் எடுத்துச்சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை இல்லை என்று சொல்லி மறுத்திருந்தார்கள். ஆகவே அதை நான் திரும்பத் திரும்பச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் இந்தியா முழுவதிலும் உள்ள பல மாநிலங்களிலே இறக்குமதி செய்கின்றார்கள். அந்த மாநிலங்களிலே இறக்குமதி செய்கின்ற விலையும் நம்முடைய மாநிலத்திலே இறக்குமதி செய்கின்ற

விலையும் ஒரே மாதிரி இருக்கின்றதா என்றால் இல்லை. முரண்பாடுகள் இருக்கின்றன. எனவே டெண்டர் வரவழைக்கப்படுகின்றபோது, நம்முடைய மாநிலத்திற்கு யார் குறைந்த விலையிலே சிமெண்டைக் கொடுப்பார்களோ அவர்களிடமிருந்துதான் நாம் அந்த சிமெண்ட்டை இறக்குமதி செய்ய வேண்டும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம், சிப்காட்டைப் பொறுத்த வரையில், 1972-லேயிருந்து 1982 வரையிலே 116 கோடி ரூபாய் உதவித் தொகையாக வழங்கி ஒப்புதல் அளித்தது என்று இந்தப் புள்ளிவிவரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சென்ற ஆண்டு இந்த நிறுவனத்திலே உருவாக்கப்படுகின்ற தொழிற்சாலைகளுக்கு சில இடங்களிலே, அது இராணிப்பேட்டையாக இருந்தாலும் சரி, அல்லது புதிதாக அமைக்கப்படுகின்ற கும்முடிபூண்டியாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த இடமாக இருநதாலும் சரி, 1983 மார்ச் மாதம் வரையிலே நிலத்திற்கு என்று ஒரு விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, ஆனால் அங்கே கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விலை நிர்ணயிக்கப்பட்டு, 1983 மார்ச்சுக்குப் பிறகு யாருக்காவது நிலம் தேவைப்பட்டால். கட்டிடம் தேவைப்பட்டால், அதற்கு வேறு விலை என்று சொல்லியிருக்கின்றார்கள். வேறு விலை என்று சொல்லும்போது, விலையை உயர்த்துவதைக்கூட நான் குறை சொல்லவில்லை. அந்த விகிதாச்சாரம் இருக்கின்றதே அதை நம்மால் கற்பனைகூட செய்துபார்க்க முடியவில்லை. அந்த விலை அந்த அளவிற்கு இருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். தினமணியிலேகூட வந்திருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களிலே தொழில் ஆரம்பிக்க வருபவர்கள் இருக்கின்றார்கள். அங்கு ஒரு எக்கர் ரூ. 20 ஆயிரம் என்று இருப்பதை 21 ஆயிரம் ரூபாய் என்று சொல்லியிருந்தால், அதிலே கருத்து வேறுபாடில்லை. ஆனால் அதிகமான அளவிற்கு விலையை உயர்த்துகின்ற காரணத்தினால், அந்த நிலங்களை அந்த நிறுவனத்திலிருந்து வாங்குவதைவிட தனியார்களிடம் வாங்கிக்கொள்ளலாம் என்ற எண்ணம்தான் தொழில் தொடங்குவதற்கு வருகின்றவர்களுக்கு ஏற்படுகிறது. அந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு விலையை மிக அதிகமாக உயர்த்தக் கூடாது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட்டியில்லாத, விற்பனை வரிக் கடன் என்று சொல்லி, 147 தொழில் களுக்கு நாம் 12 கோடியே 96 லட்சத்து ஐயாயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறோம் என்று ஒரு குறிப்பு சொல்கின்றது. ஆனால் அதே நேரத்தில் ஸ்டீல் ரோலிங் மில்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 3.2 கோடி ரூபாய் அளவுக்கு வரி





விலக்கு தந்து, அதனாலேயே அரசாங்கத்திற்கு வரவேண்டிய சுமார் 20 கோடி ரூபாய்க்கு அதிகமான பணம் வராமல் போய்விட்டது என்று பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அறிக்கை தந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்கின்றார்களா என்பது எனக்குத் தெரியாது. இதே அவையிலே வைக்கப்பட்ட அறிக்கை. நம்முடைய மன்றத்திலே வைக்கப்பட்டு, உறுப்பினர்கள் பரிசீலனை செய்து, கோப்புகளை ஆராய்ந்து இப்படிப்பட்ட அறிக்கையை வைத்திருக்கிறார்கள். ஆகவே ஒரு அரசாங்கம் 65 தனியார்களுக்காக ரூ. 20 கோடிக்கு அதிகமாக வரவேண்டிய பணத்தை இழப்பானேன்?

அதே நேரத்தில் இன்னொரு கருத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். விற்பனை வரியைப் பொறுத்தவரையில், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு பாண்டிச்சேரி போன்ற இடங்களிலே ஐந்து ஆண்டுகளுக்கு விற்பனை வரியே கிடையாது என்ற நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கின்ற காரணத்தினால், குறைந்தபட்சம் சேல்ஸ் டாக்ஸ் அளவுக்கு லாபம் வந்தால்கூட போதும் என்று எண்ணக்கூடிய முதலாளிகள் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துப்போகின்றார்கள். அப்படி இங்கே இல்லாத காரணத்தினால், தொழில் ஆரம்பிக்கவிருக்கின்றவர்கள் ஒரு பக்கத்திலே உற்சாகமின்றி ஊக்கமின்றி இருக்கின்றார்கள். எனவே பெரிய தொழில்களை நாம் உடனடியாகக் கொண்டுவர முடியாவிட்டாலும், 20 லட்சம் ரூபாய் அல்லது ஒரு 30 லட்சம் ரூபாய் அளவுக்கு மூலதனம் போடும் சிறுதொழில்களுக்கு ஒரு ஐந்து ஆண்டுகாலத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் கிடையாது என்கின்ற நிலைமை தமிழ் நாட்டிலே உருவாக வேண்டும். அந்தத் தொழில்கள் பெருகுவதற்கு இது உதவும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோலவே மின் அணுவியல்கள், மருந்துகள், மோட்டார் வண்டி துணைத் தொழில்கள் தொடங்குவதற்கு 10 சதவிகிதம் மான்யம் 3—10—1981 முதல் கொடுக்கப்படுகிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். அது பாராட்டத் கூடிய ஒன்று. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கொடுத்ததற்கு ஏன் பாராட்டவேண்டும் என்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும், இதைப் பாராட்ட காரணம் தொழில் பெருக வேண்டும் என்று நினைப்பதுதான். மின் அணுவியல் இப்போது உலகத்திலே அதிகமாகத் தேவைப்படுகிறது. எதிர்காலத்திலும் கம்ப்யூட்டரிலேதான், எலெக்ட்ரானிக் சிஸ்டத்திலேதான் தொழில்கள் மற்றவைகள் எல்லாம் வளர்கின்ற நிலை இருக்கின்றது. ஆகவே அவர்களுக்கு ஊக்கம் அளிக்க, உற்சாகம் அளிக்க 10 சதவிகிதம் மான்யம் கொடுக்கிறோம்

என்று சொல்கின்ற நேரத்திலே. இது தொடர்பான மற்ற தொழில்களுக்கும் மருந்துத் தொழில்களுக்கும் இதை விஸ்தரித்திருக்கிறோம், அதை மோட்டார் வண்டி துணை தொழில்களுக்கும் விஸ்தரித்திருக்கிறோம். இப்படிப் புதிய தொழில்கள் ஆரம்பிக்கின்றவர் யாராக இருந்தாலும் அவர்கள் இன்டஸ்ட்ரியல் பேக்வேர்ட் ஏரியாக்களிலே தொழில் தொடங்குவதற்கு 10 சதவிகிதம் மான்யம் கொடுக்கப்படும் என்று ஒரு பொதுவான கொள்கையை இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1980-81 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், ரூ. 19,58,10,000-த்திற்கு ஒப்புதல் தந்து, ரூ. 19,30,24,000-த்திற்கு செல்லுபடியாகத்தக்கது என்று ஏற்றுக்கொண்டு. வழங்கப்பட்டிருக்கின்ற கடன் எவ்வளவு என்று பார்த்தால், ரூ. 7,86,52,000, அதாவது ஒப்புதல் அளித்தது ரூ. 19 கோடியே 58 லட்சம், செல்லுபடி ஆகத்தக்கது என்று சொல்லியிருப்பது, ரூ. 19 கோடியே 30 லட்சம் ரூபாய், ஆனால் விினியோகிக்கப்பட்ட கடன் ரூ. 7 கோடியே 86 லட்சம்தான். ஆக ஒப்புதல் அளித்துவிட்டு அதில் 40 சதவிகிதத்தைக் கடனாக வழங்குகின்றபோது, விநியோகம் என்று சொன்னால். ஒப்புதல் அளிப்பானேன்? இதற்குச் செல்லுபடி ஆனது இவ்வளவு என்று சொல்வானேன்? பிறகு ஒப்புதல் அளித்துவிட்டு 60 சதவிகிதம் கடனைக் கொடுக்காமல் இருப்பானேன்? ஒப்புதல் அளிக்கப்பட்டாலேயே, யார் தொழில் ஆரம்பிக்க வந்தாலும், அவர்களுக்கு 30 நாட்களுக்குள்ளாக அந்தப் பணம் போய்ச் சேர வேண்டும். அப்படிச் சேர்ந்தால்தான், உண்மையாகத் தொழில்கள் வளரும். இல்லையென்றால். தொழில்கள் காகிதத்திலேதான் வளரும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறேன்.

அதைப்போலவே, தமிழ் நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தைப் பொறுத்தவரையிலே, 1980-81-ல், 5,183 தொழில் பிரிவுகளுக்கு ரூ. 36 கோடியே 90 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆனால் வழங்கப்பட்டது 22 கோடி ரூபாய்தான். 1980 ஆம் ஆண்டு 14 கோடி ரூபாய் வழங்கப்படவில்லை. 1981-82-லே 5,699 தொழில்பிரிவுகள் தொடங்கப்பட்டு, அதிலே ரூ. 52 கோடியே 13 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதிலே ரூ. 35 கோடிதான் விினியோகம் செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் 11 கோடி ரூபாய் அளவுக்கு விினியோகிக்கப்படவில்லை. 1982-83-லே ரூ. 55 கோடியே 68 லட்சம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. வழங்கப்பட்டது ரூ. 39 கோடியே 27 லட்சம்தான். அதற்கு "நாங்கள் கோடிக்கணக்கிலே பணத்தை ஒதுக்குகிறோம்" என்றும் "ஒப்புதல் அளிக்கிறோம்" என்றும் சொல்லிவிட்டு, வழங்குகின்றபோது அதிலே 40 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதம்தான் விினியோகம் பண்ணுகிறோம் என்று





தொழில் அமைச்சர் அவர்கள் சொன்னால், தொழில் வளருமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜெனரேட்டர்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அதிலேகூட புள்ளி விவரங்களிலே வித்தியாசம் இருக்கிறது. நம்முடைய தொழில் துறை மான்யங்களிலே பார்க்கின்றபோது இரண்டு புத்தகங்களைப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஆங்கிலத்திலே ஒரு புள்ளிவிவரம், தமிழிலே ஒரு புள்ளிவிவரம். தமிழிலே சொல்கின்றார்கள் 13 லட்சம் ரூபாய் 570 தொழில் பிரிவுகளுக்கு ஜெனரேட்டர் வாங்க கொடுத்திருக்கிறோம் என்று சொல்கின்றார்கள். நானும் யோசித்தேன். இப்படி 570 பிரிவுகளுக்கு எப்படி 13 லட்சம் ரூபாய் மட்டும் ஆகும் என்று பார்த்தேன். ஆங்கில புத்தகத்தை எடுத்துப்பார்த்தால் அதில் 413 லட்சம் ரூபாய் என்று இருக்கின்றது. ஆக புள்ளிவிவரம். தமிழிலே சொல்கின்றார்கள் 13 லட்சம் ரூபாய் ஒன்று என்று இருப்பது, இந்த இலாக்கா எவ்வளவு அக்கறையோடு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

அதுபோலவே தமிழ் நாடு இன்டஸ்ட்ரியல் இன்வெஸ்ட்மெண்ட் கார்ப்பரேஷன். அதனுடைய ஆதாயம் என்ன என்று பார்க்கின்றபோது, 1980-81-லே ரூ. 2.2 லட்சம் என்று தெரிவித்திருக்கிறார்கள். நான் இதையெல்லாம் சொல்வதற்குக் காரணம், கோடிக்கணக்கான அளவிலே மக்களுடைய வரிப்பணத்தைப் போடுகிறோம். அப்படிப் போடுகின்ற பணத்திற்கு வேண்டிய அளவுக்கு ஆதாயம் கிடைக்கவில்லை என்று சொன்னால், பொதுத் துறையிலே முதலீடு செய்வதற்கு ஆர்வம் இல்லாமல் போய்விடும். தனியார் துறையிலே இருப்பவர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆகவே இதைக் கண்காணிக்கவேண்டும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

(பிற்பகல் 11-30)

சர்க்கரை உற்பத்தியைப் பொறுத்தவரையில் 1981-82-ல் 85 லட்சத்து 93 ஆயிரம் டன் பிழியத் தொடங்கி, 7 லட்சத்து 55 ஆயிரம் டன் சர்க்கரையை உற்பத்தி செய்திருக்கிறோம். இப்போது வறட்சி இருக்கிறது. தண்ணீர் இல்லை. ஆனால் 1982-83-ஐப் பொறுத்தவரையிலே வறட்சி அவ்வளவாக இல்லை. ஏராளமான கரும்பு உற்பத்தி ஆயிற்று. இன்னும் சொல்லப்போனால், வட ஆற்காடு மாவட்டத்தில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையைச்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 20

சுற்றியுள்ள கிராமங்களில் உள்ளவர்கள் எல்லாம் எங்களுடைய கரும்பை எடுத்துக்கொள்ளுங்கள், எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும் நிலை இருந்தது. அப்படியிருந்தும்கூட, 85 லட்சம் டன் கரும்பு பிழியப்பட்டதற்குப் பதிலாக 76 லட்சம் டன்தான் 1982-83-ல் பிழியப்பட்டிருக்கிறது. 1981-82-லே 7.55 லட்சம் டன் உற்பத்தியானதற்கு மாறாக 1982-83-லே 6.79 லட்சம் டன் தான் உற்பத்தியாகி இருக்கிறது என்பதைப் பார்க்கும் நேரத்தில், உற்பத்தி குறைகிற காரணத்தாலே, ஒரு பக்கத்திலே தனியார் ஆலைகள் லெவி அல்லாத சர்க்கரையை வெளி மார்க்கெட்டுகளில் விருப்பம்போல் விற்க வசதி ஏற்படுகிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே உற்பத்தியைப் பொறுத்த வரையில், எங்கெங்கே வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் முழுமையாக உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கரும்பு விலைபற்றி ஒரு கருத்து கூற விரும்புகிறேன். அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. அமைச்சர்கள் கூடினார்கள். விவசாயிகள் தரப்பில், எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வந்து பேசினார்கள். கடந்த ஆண்டு டன்னுக்கு 125 ரூபாய் என்று சொன்னோம். அப்போது இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டது. அடுத்த ஆண்டு நிச்சயமாக அதிக விலை கொடுப்போமென்று சொன்னார்கள். ஆனால் இந்தியாவில் வேறு சில மாநிலங்களில், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் எவ்வளவு தருகிறார்கள் என்பதைப் பார்க்கிறபோது, இங்கு ஒரு டன் கரும்புக்கு 125 ரூபாய் என்று கொடுப்பதால், விவசாயிகள் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளை ஊக்குவிக்க, அந்த விலையைக் கூட்ட வேண்டும். இதை மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள்கூட ஒத்துக்கொள்வார்கள். அவர்களுடைய கட்சியும் இதை வலியுறுத்தியிருக்கிறது. எல்லாக் கட்சிகளும் வலியுறுத்துகின்றன. ஆனால் நம்முடைய நாட்டிலே ஒரு டன் கரும்புக்கு 125 ரூபாய் என்பது உண்மையிலேயே கட்டுப்படியாகாது. அதை 200 ரூபாய் என்று உயர்த்த வேண்டுமென்று விவசாயிகள் சார்பிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, "சாராவி வடிப்பகம்—தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியாக ஒவ்வொரு ஆண்டும் ஆறு மில்லியன் லிட்டர் சாராவி தயாரிக்கும் திறனுடைய இரு வடிப்பகங்களை அமைக்க திட்டமிட்டுள்ளது" என்று கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். சட்டமன்றத்திலே பேசும்போது, அந்த ஆலைகளுக்கு அங்கீகாரம் பெற்றுவிட்டோம். ஏறக்குறைய ஒவ்வொரு ஆலையும் ரூ. 1¾ கோடி



1983 ஏப்ரல் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அளவிலே துவக்க இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். திருச்சி மாவட்டத்திலே எசையூரிலும், சேலம் மாவட்டத்திலே மோகனூரிலும் அமைக்க இருக்கிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்று இந்தியா முழுவதிலுமுள்ள ஏராளமான சர்க்கரை ஆலைகளிலே மோலாசஸ் அப்படியே தேங்கியிருக்கிறது. இன்னும் சில சர்க்கரை ஆலைகளிலே அதை ஆற்றிலே கலந்துவிடுகிறார்கள். அதை ஸ்டோரேஜ் செய்வது எப்படி என்று தெரியாமல், அதற்கு இடமில்லாமல், ஆற்றிலே கலக்கிறார்கள் அல்லது மண்ணிலே விடுகிறார்கள். அந்த நிலைமை இருக்கிறது. ஆனால் சில நேரங்களிலே மோலாசஸ் கிடைக்காமல் தொழிற்சாலைகள் பாதிக்கப்படுகின்றன. இன்றைக்கு இந்தியாவில் கரும்பு ஏராளமாக உற்பத்தியாகும் நிலையில், எல்லா சர்க்கரை ஆலைகளிலும் மோலாசஸ் உற்பத்தி அதிகமாக இருப்பதால், அதைப் பயன்படுத்த தமிழக அரசு இரண்டு ஆலைகள் துவக்க இருப்பதை வரவேற்கிறேன். ஆனால் அந்தத் தொழிற்சாலைகள் சாராவி வடிக்கும் நேரத்தில் சில தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன். 1½ ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே தான் தென் ஆற்காடு மாவட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்தவர் திடீரென்று ஒரு ஆலையைப் பரிசோதனை செய்த நேரத்தில், அங்கே வேறொரு தொழிற்சாலை நடந்து கொண்டிருந்தது. அங்கே அரசுக்குத் தெரியாமல் ஸ்டாக் பதுக்கி வைத்திருந்தார்கள் என்ற செய்தி பத்திரிகைகளில் வந்தது. ஆகவே தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் நேரத்தில், அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமலிருக்க முன்கூட்டியே எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இன்றைய தினம் அதிகமாகப் பணம் நடமாடும் தொழிற்சாலைகள் சாராயத் தொழிற்சாலைகள்தான். கோடிக் கணக்கில் அங்கே பணம் போய்க் கொண்டிருக்கிறது. எனவே ஆரம்பிக்கும்போதே, முதலிலேயே அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்கும் முறையில், பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழ் நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னாலும்கூட, அதிலே உண்மையிலேயே வருத்தப்படும் அளவுக்கு, அரசாங்கத்தினுடைய போக்கைக் கண்டிக்கும் அளவுக்கு, இந்த அரசாங்கம் அந்தத் துறையிலே செய்து கொண்டிருக்கும் சில பணிகளை வேதனையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். 1978-லே ஆரம்பிக்கப்பட்ட பாட்டு இன்னும் முடியவில்லை. 'ஆலைகள் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம்' என்று சொல்ல ஆரம்பித்து, அது எங்கே வரப் போகிறது என்று மூன்று ஆண்டுக்காலம் முடிவெடுக்காமல் இருந்து, பிறகு புகளூரில் ஆரம்பிக்கப்

போகிறோமென்று சொல்லியிருக்கிறார்கள். இங்கே கொடுத்துள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால்கூட, 1985-லே ஆரம்பித்து விடுவோமென்று அமைச்சரவர்கள் சட்ட மன்றத்திலே சொல்லியிருந்தாலும்கூட, அது ஆரம்பிக்கப்படுமா என்ற சந்தேகம் வருவதற்கு சில அடிப்படையான நியாயங்கள் இருக்கின்றன. ஒன்று, 100 கோடி ரூபாயிலே ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். இப்போது அது 200 கோடி ரூபாய்க்குப் போய்விட்டது. புகளூர் கிராமத்தில் 735 ஏக்கர் நிலத்தை இந்நிறுவனத்தின் வசம் அரசு ஒப்படைத்துள்ளது, இதனால் 2,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லி விட்டு, மேலே சில விவரங்களைத் தருகிறார்கள். கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது; காகிதம் தயாரிக்கும் இயந்திரம் நிறுவும் பணி 1983 மார்ச் இறுதிக்குள் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று கொள்கைக் குறிப்பில் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்களின் குறிப்பு அது. 1983 மார்ச் போயாகிவிட்டது. ஆனால் குறிப்பிலே என்ன இருக்கிறது? கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது; காகிதம் தயாரிக்கும் இயந்திரம் நிறுவும் பணி 1983 மார்ச் இறுதிக்குள் தொடங்கப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது—அந்தப் பணி தொடங்கப்பட்டுவிட்டதா? இப்போது ஏப்ரல் 20-லே இருக்கிறோம். 'தொடங்கப்படும்' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பணி தொடங்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம்? பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்று சொல்ல விரும்புகிறேன். எவ்வளவோ திறமையானவர்கள் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு நம்பிக்கையான அதிகாரிகள் இருக்கக்கூடும். அவருடைய நண்பர்கள்கூட தொழிலதிபர்களாக இருக்கக்கூடும். ஆனால் வேறொரு பேப்பர் நிறுவனத்தில் இருக்கக்கூடிய டைரக்டரைக் கொண்டு வந்து, நம்முடைய தொழிற்சாலையின் மேனேஜிங் டைரக்டராக அல்லது தலைவராக நியமித்தால், இந்தத் தொழிற்சாலையில் அவர் உடனடியாக உற்பத்தியைப் பெருக்க அவருக்கு என்ன அக்கறை ஏற்படும்? ஏற்கெனவே ஒரு தொழிற் சாலையில் அவர் 'கமிட்' ஆகியிருக்கிறார். அந்த சேஷசாயி பேப்பர் மில்லிலே உற்பத்தியாவதுதான் அவருக்கு லாபம். தமிழ் நாடு பேப்பர் மில் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? ஆனால் அவர் வர வேண்டுமென்று விரும்புவார். ஏனென்றால் அவருக்கு கமிஷன் கொடுக்கிறார்கள், அதிகாரபூர்வமாகவே. அது எந்த அளவுக்கு நியாயம்? டெக்னாலஜி என்ற பெயராலே, டெக்னிகல்-நோஹவ் என்ற பெயராலே கொடுக்கிறோம் என்றாலும், அதற்கு ஒரு முறை இருக்க வேண்டும். அதற்கெல்லாம் அப்பாற்பட்டு இந்தக் காகிதத் தொழிற் சாலையில் தவறுகள் நடக்கின்றன. அந்தத் தொழிற்சாலை 1985-ல் வரக்கூடிய





வாய்ப்புகள் கிடையாது. இன்னும் சொல்லப்போனால், கரும்புச் சக்கைகளி லிருந்துதான் பேப்பரைத் தயாரிக்கப் போகிறோமென்று சொல்லும்போது கேட்கிறேன், 50,000 டன் பேப்பர் உற்பத்தி செய்ய கரும்புச் சக்கைகள் எங்கே இருக்கின்றன? பிற மாநிலங்களிலுள்ள சர்க்கரை ஆலைகளில் கேட்டீர்களா? அவர்கள் கொடுப்பதாகச் சொன்னார்களா? உங்களுக்கு மூலப் பொருள் இதுதான் என்று சொன்னால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உலகத்திலே, இந்த டெக்னாலஜி, டெக்னிகல் நோஹவ் இருக்கிறதே அது பெயில்யூர், அது உருப்படாது என்று ஒதுக்கிவிட்டோம் என்று ஒரு பக்கத்தில் ஜெர்மனி நாட்டுக்காரர்களும், இன்னொரு பக்கத்தில் ஜப்பான் நாட்டுக்காரர்களும் கருத்து சொல்லும்போது, பெயில்யூர்-ஆன டெக்னிகல் நோஹவ்-ஐ வைத்துக் கொண்டு, 200 கோடி ரூபாயை மக்களுடைய வரிப் பணத்திலிருந்து ஏன் செலவிடப் போகிறீர்கள் என்பது தெரியவில்லை. வீராணம் திட்டம் மாதிரி இது ஆகிவிடக்கூடாது எதிர்காலத்தில். இப்போது அதற்கு ஒரு குறை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 200 கோடி ரூபாய்க்குத் திட்டமிட்டு, 100 கோடி ரூபாயைச் செலவிட்டு, அதற்குப் பிறகு ஒரு ஆட்சி வந்து, டெக்னிகல் நோஹவ் சரியாக இல்லை என்று சொல்லி, மூட ஆரம்பித்தால், மக்கள் வரிப் பணம் பாழாகும். ஆகவே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு முன்னால் நான் கேட்டுக்கொள்வது, டெக்னிகல் நோஹவ்-க்குக் கொடுத்தது எவ்வளவு பணம்? அதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஒன்று கேள்விப்படுகிறேன். தவறு என்றால், அதைத் திருத்திக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். அப்படி விஸ்வநாதன் போன்றவர்களுக்கு கமிஷனாக அல்லது அங்கீகரிக்கப்பட்ட முறையிலே பணமாகக் கொடுக்க முடியாது என்ற காரணத்தால், ஷேராகக் கொடுப்பதாக அரசாங்கம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஐ.டி.பி.ஐ.-ல் இருக்கும் நண்பர்கள் அப்படி ஒரு கருத்தைத் தெரிவிக்கிறார்கள். அது உண்மையாக இருந்தால் . . . அரசாங்கம் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கிறது, தனியார் துறையிலே இருக்கக் கூடிய ஒருவரை அதிலே மேனேஜிங் டைரக்டராக நியமிக்கிறது, அவருக்கு டெக்னிகல் நோஹவ்-க்குப் பணமாகக் கொடுக்கவில்லை, பாதியை ஷேராகக் கொடுக்கிறோம் என்றால், எதிர்காலத்தில் அவர்தான் நிரந்தர எம்.டி.-யா? அரசாங்கம் விரும்பினால், அவரை மாற்ற முடியுமா, மாற்ற முடியாதா? என்ன ஒப்பந்தம் என்று சொன்னால் உறுப்பினர்கள் அதைத் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [1983 ஏப்ரல் 20

இவ்வளவுக்கெல்லாம் மேலாகச் சென்று, ஒரு கருத்து சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நாட்டிலேயிருந்து எத்தனையோ அதிகாரிகள் வெளி நாட்டுக்குச் சென்றார்கள். அந்த 'டெக்னிகல் நோஹவ்' பற்றி ஆராய்ந்தார்களா? அவர்களிலே ஒருவருக்குப் பயிற்சி அளித்து அவரைத் தலைவராக்கினால் என்ன? எதற்காக தனிப்பட்ட ஒருவரை, அதுவும் இன்னொரு தொழிற்சாலையில் பொறுப்பில் இருக்கிறவரை இம்மாதிரி நியமிக்க வேண்டும்? இதுபற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

(முற்பகல் 11-40)

அடுத்து, தமிழ் நாடு மின்னணு தொழில் நிறுவனம் 50 ஆயிரம் கைக்கடிகாரங்களைச் செய்கின்ற பணியை மேற்கொண்டிருக்கிறது என்று புள்ளிவிவரம் சொல்கிறது. இந்தத் தொழிற்சாலை நேரடியாக 20 பேருக்கும், மறைமுகமாக 40 பேருக்கும் வேலைவாய்ப்பு தரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை ஆங்கிலக் குறிப்பில் குறிப்பிடும்போது

"The project would provide employment to 21 persons directly and 40 persons indirectly."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவ்வாறு புள்ளிவிவரம் கொடுக்கின்றபோது, ஆங்கிலத்தில் இருக்கின்ற குறிப்புக்கும், தமிழில் இருக்கின்ற குறிப்புக்கும் எவ்வாறு மாறுபாடு வரும்? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்க வேண்டும். அமைச்சர்கள்தான் இதையெல்லாம் பார்க்க வேண்டுமென்று நான் சொல்ல மாட்டேன். இதையெல்லாம் அதிகாரிகள் புரூப் ஸ்டேஜில், கம்போசிங் ஸ்டேஜில் பார்க்க மாட்டார்களா? சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற புத்தகத்திலேகூட போதுமான கவனத்தை அதிகாரிகள் செலுத்தவில்லை என்றால், எதைத்தான் கவனிக்கப் போகிறார்கள்? இதை சீரியசாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டு, தவறு செய்தவர்களைத் தண்டிக்க வேண்டும்.

அடுத்து, கனிவள நிறுவனத்தை எடுத்துக்கொண்டால், இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில், அரசு அருமையான ஒரு கற்பனையில் மிதந்து கொண்டிருந்தது. இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, "இந்தியாவிலேயே இந்த நிறுவனம்தான் எல்லாவிதமான கனி வளங்களையும் வெட்டி எடுக்கும், ஏற்றுமதி செய்யும், நல்லமாதிரி செயல்படும்" என்றெல்லாம் சொல்லப்பட்டது. சமீபத்திலே அங்கு நடைபெற்ற ஒரு விழாவுக்குப் போய் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிறுவனத்தைப் பாராட்டி வந்திருக்கிறார்கள். தனிப்பட்டவர்களை, அந்தத் தொழிலில் முன்னேற்றம் கண்டவர்களை பாராட்டலாம். ஆனால் அப்படி இந்தத் தொழிலின் முன்னேற்றத்தைக் கண்டார்களா? அப்படி நடந்ததா? தமிழ் நாட்டிலே



1983 ஏப்ரல் 20] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

யாரோ விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரால் கருங்கல் வெட்டி எடுக்கப்பட்டது, கோடிக்கணக்கில் சம்பாதிக்கப்பட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டது. இந்த நிறுவனம் 1982-83-ல் ஆயிரம் கன மீட்டர் கருங்கல்லை வெட்டி எடுத்திருக்கிறது. இதைச் செய்திருப்பது அரசால் ஏற்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம். ஆனால் தனிப்பட்ட நபர் ஒருவர் ஆயிரம் கன மீட்டருக்கு அதிகமாக இதனை வெட்டி எடுத்து ஜப்பானுக்கு அனுப்பியிருக்கிறார். இதற்காக அரசு சார்பில் ஒரு நிறுவனம், ஒரு மானேஜிங் டைரக்டர், அவருக்கு மூன்று ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம், நூற்றுக்கணக்கில் ஆட்கள் எல்லாம் இருந்தும் அங்கு நல்ல முறையில் உற்பத்தி இல்லை. அதுபோல் சாம்பக்கல் 1,316 கன மீட்டர்தான் உற்பத்தி செய்திருக்கிறார்கள். உலகம் முழுவதும் இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு குன்னம் கருங்கல்லுக்கு ஏகப்பட்ட மதிப்பு இருந்தது. இப்போது அந்த நிலை மாறி ஐரோப்பா, ஜப்பான், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் பக்கம் இதன் மார்க்கெட் திரும்பியிருக்கிறது. இங்கே உற்பத்தியாகின்ற கல்லுக்குச் சரியான மார்க்கெட் இல்லை. அந்தப் புள்ளிவிவரத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதுமாத்திரமல்லாமல், கரும்பாறைகளை அறுத்து மெருகேற்றும் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், கடந்த ஆண்டிலேயே அது வரும் என்று எதிர்பார்த்தோம். அதாவது 1982-83 ஆம் ஆண்டில், மூன்றாவது காலாண்டில், இந்தத் தொழிற்சாலை தொடங்கும் என்று இருக்கிறது. அப்படி என்றால், 1982 டிசம்பருக்குள்ளேயே இது தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இதுவரை இந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படவில்லை. ஆக, கனிவளம் என்ற தலைப்பில் கருங்கல் உற்பத்தி சரியான அளவில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மேக்னசைட்டைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். இன்னும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள கனிவளங்கள் பூமியிலே புதைந்து கிடக்கின்றன. அவற்றைச் சரியான முறையில் வெட்டி எடுக்க முயற்சி செய்யவில்லை. அதுபோல் வெவ்வேறு வகையான ரூபி போன்றவைகள் புதைந்து கிடக்கின்றன. இன்றைக்கு 100 வகையான ரூபிகள் இருக்கிற நிலையில், அவைகளை உலகத்திலே இருப்பவர்கள் எல்லாம் நல்ல விலை கொடுத்து வாங்கத் தயாராக இருக்கிற நேரத்தில், இந்தக் கனிவள நிறுவனம் அவற்றை முறையாக வெட்டி எடுக்கவில்லை. அப்படி என்றால், எதற்காக இந்த நிறுவனம் துவக்கப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்தக் கனிவள நிறுவனம் சம்பந்தமாக, 1980-81 ஆம் ஆண்டு ஆடிட் ரிப்போர்ட்டைப் பார்த்தால், அதிலுள்ள ஒன்றை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். வாகன பராமரிப்பு 1 இலட்சத்து 79 ஆயிரம் ரூபாய் என்று சொல்லிவிட்டு, பயணப்படி 1 இலட்

சத்து 79 ஆயிரம் ரூபாய் என்று சொல்லியிருக்கிறார்கள். போக்குவரத்துச் செலவு 17 இலட்சத்து 16 ஆயிரம் ரூபாய் என்று சொல்லி யிருக்கிறார்கள். இப்படி செலவு செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகளால் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டனவா? செய்யப்பட்ட செலவினங்கள் எல்லாம் உண்மையில் அவசியமான செலவினங்கள்தானா? பயணங்கள் எல்லாம் தேவையானதுதானா என்பதையெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். யாரோ பயணம் செய்ய—ஊரைச் சுற்ற இப்படிப்பட்ட செலவுகள் செய்யப்படக்கூடாது. நான் ஒன்றை நன்றாக அறிவேன். இன்றைக்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களுடைய அறைகூட சாதாரணமானதுதான். பளபளப்பாக அவருடைய அறை 'ஏர் கன்டிஷன்' செய்யப்படவில்லை. ஆனால் இந்தத் துறையிலே இருக்கிற அதிகாரியினுடைய அறையைப் பார்த்தால், எப்படி இந்தத் துறையின் செலவுகளைச் செய்துகொண்டிருக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். மானேஜிங் டைரக்டர் ஒருவர், மாதந்தோறும் மூன்று ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டிருக்கும் ஒருவர் பராமரிப்புக்காக ஐந்து இலட்சம் ரூபாய் செலவு செய்கிறார் என்றால், இதெல்லாம் தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கடந்த ஆண்டு நான் ஒரு கருத்தைச் சொன்னேன். சிமெண்டுக்கான பெர்மிட் வழங்குகின்ற முறை 1982 வரை இருந்தபோது, இந்த அவை நடந்து கொண்டிருந்தபோது, எப்படி எப்படி எல்லாம் போலி பெர்மிட் தயாரிக்கப்பட்டது என்பதை நான் ஆதாரத்தோடு தெரிவித்தேன். அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பெருந்தன்மையோடு நான் சொன்ன கருத்தைக் கேட்டார்கள். அதுகுறித்து விசாரணை வைக்கப்படும், சூப்பிரன்டென்ட் ஆப் போலீஸ் லெவலில் விசாரணை நடத்தப்படும் என்று சொன்னார்கள். விசாரித்தார்களா? எந்த அளவு அது உண்மை? யார் யார் அதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்கிற விவரத்தை எங்களுக்குக்கூட தெரிவிக்கவில்லையென்று சொன்னால், எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இவ்வளவு நேரம் பேசிக் கொண்டிருப்பதில் என்ன அர்த்தம் இருக்கிறது? இப்படிப்பட்ட கருத்துக்கள் எல்லாம் இந்தத் துறை செம்மையாக இயங்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் சொல்லப்படுகின்றன. குற்றச்சாட்டுக்காகச் சொல்லப்படுபவை அல்ல. இவைகளையெல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனிமேலாவது கவனிக்க வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் ஒன்றைச் சொன்னார். தமிழ் நாட்டிலே இருப்பவர்களிலே தொழில் ஆரம்பிக்க ஆயிரத்தில் அல்லது இலட்சத்தில் ஒருவர்தான் முன்வருகிறார். அப்படி தொழிலை நடத்த





முன்வருகிற ஒருவர் ஏதோ கஷ்டத்தால் அல்லது குடும்பத் தகராறு போன்ற சூழ்நிலையால் ஒரு தொழிற்சாலையை மேற்கொண்டு நடத்த முடியாது என்கிற நிலைமை ஏற்பட்டால், ஒரு சிமெண்ட் தொழிற்சாலைக்கு அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால், உடனே அதை தமிழ்நாட்டிலே இருக்கிற யாராவது வாங்கி நடத்த அனுமதிப்பதுதான் நியாயமானது, அதுதான் நல்லதும்கூட. உண்மையிலேயே இந்தியா சிமெண்ட் என்கிற தொழிற்சாலையை தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர் நடத்தி வருகிற நிலையில், அதிலே நல்ல முறையில் உற்பத்தியாகிற நிலையில், இலாபம் வருகிற சூழ்நிலை வரும்போது, அதை பம்பாயிலிருக்கிற ஒரு நபர் வாங்கக் கூடிய நிலைமை ஏற்படுகிறது என்றால், அது தமிழ் நாட்டுக்கு நல்லதா? நாளைக்கு பம்பாய்க்காரர்களும், கல்கத்தாக்காரர்களும் தமிழ் நாட்டை வாங்கக் கூடிய நிலைமை வந்துவிடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவர்களிடமிருந்து தமிழ் நாட்டைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் மேட்டுப்பாளையத்தில் உள்ள சவுத் இந்தியா விஸ்கோஸ் நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட்டது. அது இன்றையதினம் வடநாட்டுக்காரர்களிடம் விலைபேசி அவர்கள் வாங்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் வாங்குவதற்கு முன் அரசின் அனுமதியைப் பெற வேண்டும். காரணம் நாமும் டிட்கோ, சிட்கோ போன்ற நிறுவனங்களின் மூலம் மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேல் ஷேர் எடுத்திருக்கிறோம். அதுபோல் எல்.ஐ.சி.-யிலிருந்து பணம் பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இவைகளையெல்லாம் கண்ட்ரோல் பண்ணுகிற அதிகாரம் அரசுக்கு இருக்க வேண்டும். யார் வேண்டுமானாலும் தமிழ் நாட்டிலுள்ள எந்தத் தொழிற்சாலையை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம் என்கிற நிலை அப்போதுதான் ஏற்படாது. அப்படிப்பட்ட நிலையை இந்த அரசு ஏற்படுத்த வேண்டும்.

அடுத்து, போளூரில் தனியார் முன்வந்தால், சர்க்கரை ஆலை ஆரம்பிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். 1974-75 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, இதுசம்பந்தமாக ஒரு கொள்கை முடிவை வகுத்தது. சர்க்கரை ஆலைகளை கூட்டுறவுத் துறையிலேதான் ஆரம்பிக்க வேண்டுமென்கிற கொள்கையைக் கொண்டு வந்தோம். அந்த வகையில் ஏராளமாக இலாபம் வராத தொழிற்சாலைகளை அரசு ஆரம்பிக்க வேண்டுமென்கிற நிலைக்குப் பதிலாக, இலாபம் வருகின்ற தொழிற்சாலைகளை அரசு சார்பாக ஆரம்பிக்க வேண்டுமென்கிற ஒரு முடிவை இந்த அரசு உண்டாக்க வேண்டும். அந்த அடிப்படையில் சிமெண்ட் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள் போன்றவை எல்லாம் கூட்டுறவுத்

துறையில்தான் இருக்க வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இவைகளைத் தனியார் துறைக்குக் கொடுக்கக் கூடாது. பொதுவாக தொழிற் சாலைகளை ஆரம்பிக்க உரிமங்கள் கொடுப்பதைப் பொறுத்தவரை, 100 கோடி ரூபாய்க்கு அதிகமாக முதலீடு செய்யக்கூடிய தொழில்களுக்கு உரிமம் வழங்குகிற அதிகாரத்தை மட்டும் மத்திய அரசு வைத்துக்கொள்ள வேண்டும். மற்றவை எல்லாம் தமிழகத்திற்குத்தான் இருக்கவேண்டும் என்ற அந்தக் கொள்கையை இந்த அரசாங்கம் வலியுறுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொண்டு, தொழில் வளர்ச்சி பற்றிய இந்தக் கோரிக்கையில் எனது கருத்துக் களைச் சொல்லி அமைகிறேன்.

(முற்பகல் 11-50)

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மேலவையில் வைக்கப்பட்டிருக்கிற தொழில் துறை கொள்கைக் குறிப்பின் மீது, 10 மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே இரண்டு நாட்களாக தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆலோசனைகள் வழங்கியதுடன், மாநில அரசு செய்யவேண்டிய சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் இன்னும் மைய அரசு அதற்கு உதவியாக இருக்கவேண்டுமென்பதையும் எடுத்து வைத்தார்கள். உரையாற்றிய அந்த மாண்புமிகு 10 உறுப்பினர் களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் உட்பட, என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏனென்றால், சென்ற தடவை சொன்னதைப் போலவே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட விவாதங்கள் தொழில் துறை இன்னும் சரியாக இயங்கவும், வேகமான வளர்ச்சி பெறவும் உதவுகிற வகையில் நியாய உணர்வோடு வைக்கப் பட்டவையாகவே நான் கருதுகிறேன் சில கருத்துக்களைத் தவிர. பொதுவாக தமிழகத்தில் தொழில் துறை வளர்ச்சியைப் பொறுத்தவரையில், திரு. வீராசாமி அவர்கள் பேசுகிறபோது, சட்டமன்ற அவையில் அமைச்சர் சொன்ன புள்ளிவிவரங்களைப் பார்த்தால், தமிழ் நாடு மினி ஜப்பானாக வளருகிற நிலை அளவுக்கு இருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அந்த அளவுக்குப் புள்ளிவிவரங்கள் மகிழ்ச்சி தரத்தக்க அளவுக்கு, பாராட்டத்தக்க வகையில் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார்கள்.

புள்ளிவிவரங்கள் ஏதோ மன்ற உறுப்பினர்களைத் திசை திருப்புகிற நோக்கத்தோடோ, எங்களை நாங்களே பாராட்டுகிற எண்ணத்திலோ சொல்லப்பட்டவை அல்ல என்பதையும், நாம் சொல்லியிருக்கிற புள்ளிவிவரங் களுக்கு ஆதாரமாக பல்வேறு செய்தித்தாள்கள், பொருளாதார ஜர்னல்கள்



கொடுத்திருக்கிற புள்ளிவிவரங்களையும் நான் சட்டமன்றத்தில் பேசுகிறபோது எடுத்துச் சொன்னேன். அங்கே இரண்டு மணி நேரம் ஆனது. அவ்வளவு நேரம் இங்கே பேசவேண்டுமா என்று நினைக்கிறேன். ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைத்தையும் நன்றாக உணர்ந்திருக்கிறார்கள். சட்ட மன்றத்தில் பேசியதை விட்டுவிட்டு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு மட்டும் பதில் சொல்லி, ஒட்டுமொத்தமாக தொழில் வளர்ச்சி எப்படி ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மொத்தத்தில் தொழில் வளர்ச்சியைப்பற்றிச் சொல்கிறபோது மன்றத்திலும் சரி, மன்றத்திற்கு வெளியிலும் சரி, அவரவர்களுக்குத் தோன்றிய எண்ணிக்கை எவ்வளவு வருகிறதோ அந்த எண்ணிக்கையை நினைவுபடுத்திச் சொல்லி, தமிழ் நாடு தொழில் உற்பத்தியில் மூன்றாவதாக இருந்தது, இப்போது எட்டாவது, பத்தாவது இடத்திற்குப் போய்விட்டது என்பதைப்போல் சொல்வது சமீப காலத்தில் ஒரு மரபாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. யதார்த்தமான நிலைமை, உண்மையான நிலைமை, தமிழகம் தொழில் வளர்ச்சியில் வளர்ந்து கொண்டுதான் வருகிறது என்பதற்கான புள்ளி விவரங்கள் பலவற்றை நான் எடுத்து வைக்க முடியும். குறிப்பாக தொழிற் சாலைகளுடைய எண்ணிக்கைப் பெருக்கம், உற்பத்திப் பெருக்கம், வேலை வாய்ப்பு எண்ணிக்கை அதிகரிப்பு, சேல்ஸ் டாக்ஸ் போன்ற வருமானங்கள் உயர்வு இவற்றையெல்லாம் ஆதாரமாக வைத்துக்கொண்டு தனி நபர் வருமானத்தைக் கணக்கிட்டால், தனி நபர் வருமானத்தை ஆய்வு செய்த 'சதர்ன் எக்கனாமிக்ஸ்' என்ற ஆங்கில மாதப் பத்திரிகையில் வந்த அந்தப் புள்ளிவிவரத்தைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்த விவரங்கள் 1983 மார்ச்சில் வந்திருக்கின்றன.

எல்லா மாநிலங்களின் தனி நபர் வருமானம்பற்றிச் சொல்கிறபோது, தமிழகம் தனி நபர் வருமானத்தில் 5-வது இடத்தில் இருப்பதாக அது சொல்கிறது. 1980-81-ல் தனி நபர் வருமான அளவு ரூ. 1,315 ஆக இருந்தது. பத்தாண்டுகளுக்கு முன்பு 1970-71-ல் அது ரூ. 583 ஆக இருந்தது. நிலையைப் (ராங்க்) பொறுத்தவரையில், 1970-71-ல் 9-வது இடமாக இருந்தது, 1980-81-ல் வருமானம் ரூ. 1,315 ஆக உயர்ந்து 5-வது இடத்தில் இருப்பதாக சொல்கிறது. பஞ்சாப் ஒன்றாவதாகவும், மகாராஷ்டிரா இரண்டாவதாகவும், அரியானா மூன்றாவதாகவும், குஜராத் நான்காவதாகவும், தமிழ் நாடு ஐந்தாவதாகவும் இருப்பதாக அது தெரிவிக்கிறது. ஏறத்தாழ ரூ. 1,315 என்பது தேசிய சராசரி என்று சொல்லப்படுகிற அளவாகும். அந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அகில இந்திய அளவில் பொருளாதாரப் பத்திரிகையான 'எக்கனாமிக் டைம்ஸ்' பல்வேறு மாநிலங்களின் பொருளாதாரத்தைப்பற்றிச் சொல்கிறபோது,

[திரு. சு. திருநாவுக்கரசு] [1983 ஏப்ரல் 20

"The Annual Survey of Industries released by the Central Statistical Organisation today stated that Tamil Nadu wrested the third position from Gujarat by sliding the latter to the 4th position, although Gujarat continued to maintain its lead in gross output".

என்று சொல்லி, மூன்றாவது இடத்தில் இருந்த குஜராத்தை நான்காவது இடத்திற்குத் தள்ளிவிட்டு, தமிழகம் இன்றைக்கு மூன்றாவது இடத்திற்கு வந்திருக்கிறது என்று அந்தப் பத்திரிகை சொல்கிறது. தொழிற்சாலைப் பெருக்கத்தில் மற்ற மாநிலங்கள் எல்லாம் குறைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறது.

On the other hand, Andhra, Maharashtra, Punjab, Tamil Nadu and U.P. report a substantial growth in the number of factories.

என்று சொல்லி, தொழிற்சாலைகளுடைய பெருக்கத்திலும், மற்ற மாநிலங்களைப் பின்னே தள்ளிவிட்டு தமிழ் நாடு தொழிற்சாலை எண்ணிக்கையில் முன்னேறியிருக்கிறது என்று அந்தப் பத்திரிகையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. அதைப்போலவே கோத்தாரி நிறுவனம் தாங்கள் வெளியிட்ட புத்தகமான

'Kothari's Economic and Industrial Guide of India'

எல்லா மாநிலங்களின் தொழில் வளர்ச்சிபற்றி ஆய்வு செய்து வெளியிட்டிருக்கிறார்கள். அதில் தமிழகத்தின் வளர்ச்சியைப்பற்றிப் போடுகிறபோது,

'It has a broad-based and well-balanced industrial complex. Tamil Nadu today occupies a prominent place in the industrial map of India. Next only to Maharashtra and West Bengal, large and medium scale units and technology-oriented small scale industries have emerged in various parts of Tamil Nadu. The growth and dispersal of industries all over the State is largely due to the infra-structure and other incentives including finance and training facilities offered by the State'

என்று சொல்லி, இந்த மாநில அரசு தருகிற உற்சாகம், கடன் உதவி மற்றும் சப்சிடி போன்ற காரணத்தால், இந்த மாநிலம் மகாராஷ்டிரம், மேற்கு வங்காளத்திற்கு அடுத்ததாக மூன்றாவது நிலையில் இருக்கிறது என்று அந்தப் பத்திரிகை ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டுகிறது.

The share of the State in All-India aggregate has gone up from 7.9 per cent in 1960-61 to 9.9. per cent in 1977-78

என்று மேலும் அது சொல்கிறது.



1983 ஏப்ரல் 20] [திரு. சு. திருநாவுக்கரசு]

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை)

(நண்பகல் 12-00)

Another significant point to note is that one-third of the industrial licences issued between 1977 and 1981 have gone to units in backward areas

என்று, அதாவது தொடங்கப்பட்ட தொழில்களில் மூன்றில் ஒரு பங்கு தொழிற்சாலைகள் பின்தங்கிய பகுதிகளில்தான் தொடங்கப்பட்டிருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மேலும்

According to the I.D.B.I. study, in the State-wise distribution of assistance between July 1980 and June 1981, Tamil Nadu held the first place in the sanction and the second place in disbursal among the States all over the country.

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது தொழில் வளர்ச்சிக்கான வங்கி கொடுக்கிற கடனை விநியோகிப்பதில்கூட தமிழ் நாடு முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது என்று அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது. அடுத்து

Under the Central Investment Subsidy scheme' the Tamil Nadu gets the first position among the States both in the aggregate and in the annual reimbursements obtained from the Government of India.

என்றும் குறிப்பிடுகிறது. பின்தங்கிய பகுதிகளில் தொழில்களைத் துவங்கும் போது மத்திய அரசும், மாநில அரசும் சப்சிடி கொடுக்கின்றன. அந்த வகையில் பார்த்தால்கூட, இந்திய அளவில் கடந்த ஐந்தாண்டுகளாக தமிழகம் தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது என்ற கருத்தும் அந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவல்லாமல்,

"Madras Institute of development and studies".

என்ற நிறுவனத்தின் பொருளாதாரப் பேராசிரியராக இருக்கும் புரபசர் குகன் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதாவது :

"Tamil Nadu, along with Maharashtra, West Bengal and Gujarat, is among the most industrialised States of India, whether measured in terms of employment or value of manufacture or capital investment. In the manufacturing sector, Tamil Nadu is the third most advanced State in India in employment and production. In the factory sector Tamil Nadu comes next only to Maharastra and West Bengal".

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு பல்வேறு பத்திரிகைகள், ஜர்னல்கள் மற்றும் அறிக்கைகளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் பார்த்தாலும்கூட தமிழ்நாடு தொடர்ந்து தொழில் வளர்ச்சியில் முன்னேறிக் கொண்டிருக்கிறது என்பதைக் காண முடியும் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, வேலை வாய்ப்புகளின் எண்ணிக்கை, பொருள் உற்பத்தியின் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் பார்த்தாலும்கூட, மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழகம் மிகச் சிறப்பாக வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை இத்தகைய புள்ளி விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன என்று நம்புகிறேன்.

நாம் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, "சப்சிடி" பெறுவதில் கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழகம் முதலிடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமல்ல, 1977 ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு ரூபாய் 4 கோடி மட்டும்தான் மூலதன மான்யமாக மைய அரசு கொடுத்திருக்கிறது. ஆனால் 1977 முதல் 1982 வரையான காலத்தில் நாம் ரூபாய் 17 கோடி அளவுக்கு மூலதன மான்யம் பெற்றிருக்கிறோம். இந்திய அரசு கொடுத்திருக்கிற மொத்த மூலதன மான்யத்தில் இது 15 சதவீதமாகும் என்பதை நான் இங்கே மகிழ்ச்சியோடு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே, இந்தியாவின் உற்பத்தியைப் பல்வேறு நிலைகளில் ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறபோதும், சில அம்சங்களில் தமிழகம் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்பதையும் நான் இங்கே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவின் மொத்தக் கதிர் திறனில் 25 சதவிதத்தை தமிழகம் பெற்றிருக்கிறது. அதைப் போலவே நூல் உற்பத்தியைப் பொறுத்த வரையிலும், இந்திய அளவில் 22 சதவிதத்தை தமிழகம்தான் உற்பத்தி செய்து வருகிறது. அதைப் போலவே, மோட்டார் வாகன உற்பத்தியில் தமிழ் நாட்டின் பங்கு 25 சதவீதமாக இருக்கிறது. சிமின்ட் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 19 சதவீதமாகவும், சர்க்கரை உற்பத்தியில் 10 சதவிதமாகவும் இதைப் போன்றே நைட்ராஜன் உர உற்பத்தியில் 17 சதவீதமாகவும், பாஸ்பேட் உற்பத்தியில் 21 சதவீதமாகவும், சைக்கிள் உற்பத்தியில் 10 சதவிதமாகவும், காஸ்டிக் சோடா உற்பத்தியில் 19 சதவிதமாகவும், மோட்டார் வாகன டயர் உற்பத்தியில் 15 சதவீதமாகவும், கால்சியம் கார் பைடு உற்பத்தியில் 11 சதவீதமாகவும், தீப்பெட்டி உற்பத்தியில் 60 சதவீதமாகவும், சீர்படுத்தப்பட்ட தோல் உற்பத்தியில் 77 சதவீதமாகவும், தோல் ஏற்றுமதியில் 64 சதவீதமாகவும், அனைத்து இந்திய அளவில்—மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்



போது, மேற்கண்ட துறைகளில் 10-ல் ஒரு பாகம் அல்லது நாலில் ஒரு பாகம் என்ற அளவுக்குத் தமிழகம் உற்பத்தி செய்வதோடு தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, 1976 ஆம் ஆண்டு வரை சுமார் 9,000 என்ற அளவில் இருந்த நிலைமை மாறி, 1977 முதல் 1981 வரையான காலத்தில் அது சுமார் 11,000 அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

அதைப் போலவே மூலதனத்தைப் பொறுத்த வரையில்கூட, 1977 ஆம் ஆண்டு வரை சுமார் 2,000 கோடி என்ற அளவில் இருந்த நிலைமை மாறி 1977-க்குப் பிறகு 1981 வரை சுமார் 4,290 கோடி அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

1977 ஆம் ஆண்டு வரை தொழில் உற்பத்தியின் மொத்த மதிப்பு சுமார் ரூபாய் 650 கோடி என்றிருந்த நிலைமை மாறி, 1980-81 ஆம் ஆண்டில் அது சுமார் ரூபாய் 1,200 கோடியாக உயர்ந்திருக்கிறது.

தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் அளவு 1976-77 ஆம் ஆண்டில் 3,000 யூனிட்டாக இருந்த நிலைமை மாறி, 1980-81 ஆம் ஆண்டில் அது சுமார் 4,020 யூனிட்டாக வளர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப் பொறுத்த வரையில், 1977 ஆம் ஆண்டு வரை பதிவு பெற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 7,00,000 என்றிருந்த நிலை மாறி இன்றையதினம் ஏறத்தாழ 9,00,000 என்ற அளவுக்கு அந்த எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பல்வேறு மட்டங்களிலும், பல்வேறு நிலைகளிலும் தமிழகம் தொழில் வளர்ச்சி அடைந்து வருகிறது. அதோடு, தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கத் தக்க முறையிலும், உற்சாகப்படுத்தத் தக்க முறையிலும் அமைக்கப்பட்ட நிறுவனங்களில் முன்னோடியான நிறுவனம் சிப்காட் ஆகும். அந்த நிறுவனம் தொழில்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதிலும், தவணைக் கடன்களைக் கொடுப்பதிலும், சப்சிடியைப் பெற்றுக் கொடுப்பதிலும், முதலிடம் வகித்து வருகிறது. இதற்கு முன்பு இராணிப்பேட்டை, ஓசூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் அது 2 தொழிற்பேட்டைகளை உருவாக்கி இருந்தது. தற்போது அங்கேயும் விரிவாக்கத்தை இந்த நிறுவனம் மேற்கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மேலும் 5 இடங்களில்—அதாவது தூத்துக்குடி, மானாமதுரை, புதுக்கோட்டை, கடலூர், கும்முடிப்பூண்டி ஆகிய இடங்களில் சிப்காட் நிறுவனம் புதிய தொழிற்பேட்டைகளை நிறுவிக்கொண்டிருக்கிறது. இதற்காக 4,000 ஏக்கர் நிலம்

அங்கே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. இராணிப்பேட்டை மற்றும் ஓசூர் விரிவாக்கம் உட்பட ரூபாய் 10 கோடி செலவு செய்து, தேவைப்படுகிற சாலை வசதிகள், மின் இணைப்புகள், டெலிபோன், டெலக்ஸ், தீயணைப்பு நிலையங்கள், காவல் நிலையங்கள், குடியிருப்பு வசதிகள் ஆகியவற்றை, சிப்காட் நிறுவனம் அங்கே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இந்த 5 தொழிற்பேட்டைகளிலும் தொடங்கவிருக்கிற தொழில்களுக்கு எப்போதும் மின் வெட்டு இருக்காது என்றும் அறிவித்திருக்கிறோம். கடுமையான மின்வெட்டு இருக்கிற சூழ்நிலையில்கூட இந்தச் சலுகையை நாம் அமுல்படுத்திக் கொண்டிருக்கிறோம். இராமநாதபுரம், மானாமதுரை பகுதிகளில் புதிதாக 4, 5 தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. புதிதாக எந்தத் தொழிலுக்கும் மின் இணைப்பு கொடுப்பதில்லை என்று மாநில அரசு உத்தரவிட்டிருந்தாலும்கூட, ஏற்கெனவே கொடுக்கப்பட்ட உறுதி மொழியின் அடிப்படையில், மானாமதுரையில் தொடங்கப்பட்ட 5 தொழில்களுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டு அவை உற்பத்தியைத் துவங்கும் நிலையில் இருக்கின்றன. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் மட்டும்தான் இத்தகைய வாய்ப்பு இருக்கிறது. அடுத்து, நாம் இந்தச் சலுகையை அறிவித்திருக்கிறோம். 5 ஆண்டுகளுக்கு இந்தப் பகுதிகளில் தொடங்கப்படும் தொழிற்சாலைகள் உச்சகட்டமாக எவ்வளவு மின்சாரத்தை உபயோகித்தாலும்கூட, அவைகளுக்கு மின்வெட்டு இருக்காது என்று அறிவித்திருக்கிறோம். இவ்வாறு மாநில அரசு தன்னுடைய அதிகார வரம்புக்குட்பட்டு என்னென்ன காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் தொழிற் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, தொழிற் துறையில் உள்ள அதிகாரிகளையும் அழைத்துக்கொண்டு, இந்தியாவில் தொழில் துறையில் மிகவும் முன்னேறியுள்ள மாநிலங்களாகக் கருதப்படும் மகாராட்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களுக்குச் சென்றிருந்தேன். அங்கே தொழிற் துறையைச் சார்ந்த அதிகாரிகளோடும், வளர்ச்சி பெற்றிருக்கும் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களோடும் பேச்சு வார்த்தை நடத்தினோம். அவர்கள் அங்குள்ள தொழில் முனைவர்களுக்கு என்னென்ன வசதிகளையும் சலுகைகளையும் கொடுக்கிறார்கள், நமக்கும் அவர்களுக்கும் இருக்கிற வேறுபாடுகள் என்ன, அவற்றை எந்த வகையில் குறைக்க முடியும் என்ற உணர்வோடு பேச்சுவார்த்தைகளை நடத்தினோம். ஒரு மாநிலத்திற்கும் மற்ற மாநிலத்திற்கும் வட்டி வீதம், சப்சிடி போன்றவைகளில் சிறிய வித்தியாசம் இருந்தாலும்கூட, அதனால் பெரிய பாதகங்கள் ஏற்படுகின்றன. எனவே ஒரு மாநிலம் ஒரு சலுகையை அறிவித்துவிட்டது என்றால், அடுத்த மாநிலம்—அது என்னதான் பொருளாதாரக் கஷ்டத்தில் இருந்தாலும் கூட—தன்னுடைய மாநிலத்தில் உள்ள தொழில்களுக்கும் அந்தச் சலுகையை வழங்கியாக வேண்டும் என்ற நிலை



இருக்கிறது. இல்லையென்றால் இங்கே இருப்பவர்கள் அங்கே போகிறோம் என்கிறார்கள். போகிறார்களோ இல்லையோ, போகிறோம் என்று மிரட்டுகிறார்கள். இந்த மாநிலம் தருகிற சலுகைகளைவிட அங்கே அதிகமான சலுகைகளைக் கொடுக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு மாநிலத்தோடு மற்றொரு மாநிலம் போட்டி போட்டுக் கொண்டு சலுகைகளை அளிக்க வேண்டி இருக்கிறது, இந்த வகையில் மாநிலத்திற்கு மாநிலம் ஒரு "சப்சிடி வார்" நடந்து கொண்டிருக்கிறது என்றுகூட சொல்லலாம். அந்த அளவுக்கு நிலைமைகள் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த அடிப்படையில்தான் கடந்த 20 ஆண்டுகளாக தமிழ் நாட்டில் வட்டியில்லாத விற்பனை வரிக் கடன் ஏற்கெனவே 48 லட்சம் ரூபாயாக இருந்ததை தற்போது ரூபாய் 1 கோடி என்ற அளவுக்கு உயர்த்திருக்கிறோம். அதைப் போலவே விரிவாக்கத்திற்கு ரூபாய் 15 லட்சம் என்றிருந்ததை தற்போது ரூபாய் 50 இலட்சம் என்று ஆக்கியிருக்கிறோம்.

(பிற்பகல் 12-10)

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சொன்னதைப் போல, சில சலுகைகளை அறிவித்தோம். தமிழ்நாடு வெகுவாக முன்னேற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள்கூட சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். எலக்ட்ரானிக்ஸ், டிரக்ஸ் அண்டு ஃபார்மசூட்டிக்கல்ஸ், ஆட்டோமொபைல் ஆன்சிலரீஸ் போன்ற மூன்று துறைகளில் தமிழ்நாடு பின் தங்கியிருக்கிறது. எலக்ட்ரானிக்சைப் பொறுத்தவரையில் இந்தியாவே பின் தங்கியிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. வளர்ந்திருக்கிற நாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, எலக்ட்ரானிக்சைப் பொறுத்த வரையில், இந்தியாவில் உற்பத்தி 2 சதவீதம் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். இந்தியாவில் 2 சதவீதம்தான் உற்பத்தியாகிறது என்று சொல்லும்போது, தமிழ் நாட்டில் எத்தனை சதவீதம் என்று கணக்கிட முடியாது. ஆகவே இந்த நிலையை மனதிலே கொண்டு பின்தங்கிய பகுதிகளில் தொழில்களை ஆரம்பிக்கும்போது, மின் வெட்டில் சலுகை, கட்டணச் சலுகை, கடன் பெறுவதில் சலுகை, மானியம் கொடுப்பதிலே சலுகை ஆகியவைகள் மாநில அரசு அறிவித்திருக்கின்ற 24 தாலுக்காக்களிலும், மைய அரசு அறிவித்திருக்கின்ற 32 தாலுக்காக்களிலும் கொடுக்கப்படுகின்றன. ஆனால் பிரத்தியேகமாக எலக்ட்ரானிக்ஸ், டிரக்ஸ் அன்டு ஃபார்மசூட்டிக்கல்ஸ், ஆட்டோமொபைல் ஆன்சிலரீஸ் போன்ற மூன்று துறைகளில் தமிழகம் முன்னேற வேண்டும் என்பதற்காக, இந்தத் தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கோடு தமிழகத்திலே எந்த இடத்திலே இவற்றை ஆரம்பித்தாலும், அது பின்தங்கிய பகுதியாக அறிவித்த இடமாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, பத்து சதவீத மானிய மூலதனம் அல்லது நிரந்தரமாக பணிக்கு அமர்த்துகிற ஒருவருக்கு இருபதாயிரம் ரூபாய்

என்ற விதத்தில் எது அதிகபட்சமோ அதைத் தருகிறோம் என்று அறிவித்திருக்கிறோம். இது மாநில அரசு சப்சிடி கொடுக்கும் திட்டம். மைய அரசு அறிவித்துள்ள 33 தாலுக்காக்களில் உயர்ந்த பட்சமாக 15 இலட்சம் ரூபாய் அளவில் சப்சிடி கொடுக்கப்படுகிறது. ஆனால் மாநில அரசு அறிவித்துள்ள 24 தாலுக்காக்களில் ரூபாய் மூன்று இலட்சம் வரை சிறு தொழில்களுக்கு சப்சிடி கொடுத்ததை அதிகப்படுத்தி மைய அரசு உயர்ந்தபட்சமாக என்ன தொகை கொடுக்கிறதோ அதற்குச் சமமாக, அதாவது 15 இலட்சம் ரூபாய் வரையில் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு வழங்கும் சலுகை உண்டு என்று மாநில அரசு அறிவித்துள்ளது. எனவே நாம் பேசாமல் இருக்கவில்லை. மற்ற மாநிலங்களோடு போட்டி போட்டுக் கொண்டு சில சலுகைகளைத் தருகிறோம். இங்கேயிருந்து எந்தத் தொழிலும் போகக் கூடாது என்று எச்சரிக்கையாக இருக்கிறோம் என்பதையும் வேலை வாய்ப்பு தர வேண்டும் என்ற நோக்கத்தோடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் எடுத்துக் காட்டுவதற்காகத்தான் சிலவற்றைச் சுட்டிக்காட்டினேன்.

இப்போது இங்கே தொழிலதிபர்கள் வெகு அதிக அளவிலே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையைச் சொல்லுகிற போது நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கும். ஒரு கோடி ரூபாய்க்கு மேலே போகிற திட்டமாக இருந்தால், நாம் சிபாரிசு செய்து மைய அரசுக்குப் போக வேண்டும். 3 கோடி ரூபாய்க்கு மேலே போனால் மைய அரசுக்குப் போக வேண்டும். 3 கோடி ரூபாய்க்கு உள்ளேயிருந்தால், உரிமம் கொடுக்கும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறதா என்றால், இல்லை. 3 கோடி ரூபாய்க்குள் இருந்தால், டைரக்டர் ஜெனரல் ஆஃப் டெக்னிக்கல் டெவலெப்மென்டுக்குப் போக வேண்டும். அதற்கு மேலே இருந்தால் மைய அரசுக்கு அனுப்ப வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படி அனுப்புகிற மனுக்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உரிமங்கள் கேட்டு, நாம் பரிந்துரை செய்து அனுப்பியுள்ள மனுக்களின் எண்ணிக்கை 1970-ல் 46. 1982-ல் 237 மனுக்களை மைய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறோம். ஆகவே நடுத்தர, பெருந் தொழில்களைத் துவக்குவதற்கான மனுக்களைப் பரிந்து செய்து மைய அரசுக்கு அனுப்புவது ஆண்டுக்காண்டு எண்ணிக்கை கூடிக் கொண்டிருக்கிறது என்பது தொழிலதிபர்கள் அதிகமான அளவில் தமிழகத்தில் தொழிலை ஆரம்பிக்க முன் வந்திருக்கிறார்கள் என்பதற்கு அடையாளமாகும். மைய அரசு அமைச்சர் திரு. திவாரி அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்தில் நானும், மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்களும்



பேசியதை மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் பாராட்டினார்கள். மைய அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தை மட்டும் அங்கே சொல்லிவிட்டுப் போய்விட்டார். அதற்குப் பின்னாலே அங்கே பேசுவது நாகரீகமாக இருக்காது என்பதாலே பத்திரிகை நிருபர்களிடத்திலே பேசும்போது, சொன்னார்கள். ஆண்டுக்காண்டு எப்படி லெட்டர் ஆஃப் இன்டென்ட் எண்ணிக்கை கூடியிருக்கிறது என்பதைப்பற்றிச் சொன்னார்கள். அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை 40-லிருந்து 230 ஆக கூடியிருக்கிறதே என்பதற்கு அவர் பதில் ஒன்றும் சொல்லவில்லை.. ஆனால் வழங்கிய உரிமங்களின் எண்ணிக்கை கூடியிருக்கிறது என்று அவர் சொன்னதை நானும் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட மனுக்களின் எண்ணிக்கைக்கும் உரிமம் வழங்கிய எண்ணிக்கைக்கும் உள்ள விகிதாசாரத்தைப் பார்க்கிறபோது, நமக்குக் கிடைக்கிற உரிமங்களின் விகிதாச்சாரம் மிகக் குறைவு என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார் துறையில் மட்டுமல்லாமல், பொதுத் துறையில் அனுப்பிய பல மனுக்கள் பல்லாண்டுகளாக அங்கே தேங்கிக் கிடக்கின்றன. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாளையம் சிமெண்ட் ஆலை இரண்டு, மூன்று ஆண்டுகளாக இருக்கிறது. சிமெண்ட் பற்றாக்குறை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் இரண்டு ஆலைகளை நிர்வகிக்கிறது. அதனுடைய உற்பத்தித் திறன் குறைவாக இருக்கிறது என்று கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். சில மாதங்களில் 100 சதவீதம் உற்பத்தி செய்திருக்கிறது. சில நேரங்களில் உற்பத்தித் திறன் 110 சதவீதம் அளவிற்குக் கூட போயிருக்கிறது. நிலக்கரி சரியாகக் கிடைத்து, மின் வெட்டு இல்லாமல் இருந்து, ஸ்ட்ரைக் எதுவும் இல்லாமல் இருக்கும்போது, முழு அளவில் இயங்கும்போது, மாக்சிமம் கப்பாசிட்டி அளவிற்குப் போயிருக்கிறது. நான்கு இலட்சம் டன்னிலிருந்து இப்போது உற்பத்தித் திறன் இரண்டு இலட்சம் டன் அளவிற்கு வந்திருப்பதற்குப் பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. மற்ற தனியார் ஆலைகளும் இது போல் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஜெனரேட்டர் வைக்கக் கூடாதா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். ஜெனரேட்டர் வைக்க வேண்டிய முயற்சியில் இப்போது ஈடுபட்டிருக்கிறோம். மாக்சிமம் கப்பாசிட்டி அளவிற்கு, எவ்வளவு முடியுமோ அந்த அளவிற்கு உற்பத்தி செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம். தமிழ் நாட்டில் உற்பத்தியாகிற சிமென்டில் பற்றாக்குறை இருப்பதால், வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோமா என்றால், நிச்சயமாக இல்லை. நமக்கு காலாண்டுக்குத் தேவையானது 5 இலட்சம் டன்கள். ஆனால் நாம் உற்பத்தி செய்வது அதைவிட நான்கு மடங்கு, அதாவது 25 இலட்சம் டன் சிமெண்ட் தமிழ் நாட்டிலுள்ள தனியார்

மற்றும் பொதுத் துறையில் உள்ள ஆலைகளில் தயாரிக்கப்படுகிறது. இவ்வளவு அதிகமாக உற்பத்தி செய்கிறோம் என்றாலும், அவற்றை இந்தியா முழுமைக்கும் உள்ள மற்ற மாநிலங்களுக்கு விநியோகித்துவிட்டு நமக்கு ஒரு காலாண்டுக்கு 1,42,000 டன் லெவி சிமெண்ட்தான் ஒதுக்குகிறார்கள். ஆகவே நமக்குத் தேவையான மீதியை வெளி நாடுகளிலிருந்து வாங்குகிறோம். எல்லா மாநிலங் களிலும் இதில் ஒரே விலை இருக்கிறதா என்றால், இல்லை, ஒரு டாலர், இரண்டு டாலர் வித்தியாசம் இருக்கலாம். ஒவ்வொரு மாநிலத்தவர்களும் அதை ரகசியமாக வைத்துக்கொள்வார்கள். நம்மிடத்திலே அவர்கள் கேட்ப தில்லை. அவர்களிடத்திலேயும் நாம் சொல்வதில்லை. ஆனால் 'குளோபல் டெண்டர்' 'கால்ஃபார்' பண்ணி முடிவு செய்கிறோம். அப்படிச் செய்கிற போது எந்த நாட்டுடையது குறைவாக இருக்கிறதோ, எது சாதகமாக இருக் கிறதோ அதை வாங்குகிறோம். ஆகவே அனைத்திந்திய அளவில் எஸ்.டி.சி. க்கு உட்பட்டு, வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். அதே நேரத் தில் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் என்ற அரசாங்க நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்து, மூன்று ஆண்டுகள் ஆகியும்கூட, உற்பத்தியைத் துவங்க லெட்டர் ஆஃப் இன்டென்ட்—உரிமம் கிடைக்கவில்லை என்பது மிக வருந்தத் தக்க ஒன்றாகும்.

தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலை ஒன்றை ஆரம்பிக்க மனுச் செய்து இரண்டாண்டுகள் ஆகின்றன. தமிழ்நாடு எலெக்ட்ரானிக்ஸ் மூலம் பிக்சர் ட்யூப் போன்றவற்றைத் தயாரிக்க தொழிற் சாலை ஒன்றை ஆரம்பிக்க மனுச் செய்து அதுவும் அங்கே தேங்கிக் கிடக் கிறது. இப்படி அரசுத் துறையில் அனுப்பும் மனுக்களுக்குக்கூட அனாவசிய மாகக் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை வருத்தத்தோடு சொல்லித்தான் ஆக வேண்டும்

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலை, சிமெண்ட் ஆலை ஆகியவற்றை கூட்டுறவுத் துறையில் துவக்க மத்திய அரசாங்கத்திடம் கேட்டும் இரண்டு, மூன்று ஆண்டுகளாக அனுமதியை அவர்கள் வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு என்ன காரணம் சொல்லுகிறார்கள்? மத்திய அரசாங்கம் அனுமதி தராமல் இருப்பதற்கு என்ன காரணங்களைச் சொல்லுகிறார்கள்? அமைச்சர் அவர் கள் அடிக்கடி வெளியேயும், சட்ட சபையிலேயும் இதைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இது அவர்களுடைய காதுக்குப் போகவில்லையா? அமைச்சர் அவர்கள் டில்லிக்குப் போயிருக்கிறார்கள். அங்கே அவர்கள் கொடுப்போம் என்கிறார்களா அல்லது கொடுக்க முடியாது என்கிறார்களா? கொடுக்க முடியாது என்றால், அதற்குக் காரணம் என்ன சொல்லுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** "மனம் இருந்தால் மார்க்கம் உண்டு" என்று ஒரு பழமொழியைச் சொல்லுவார்கள். அதைப் போல மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. நிராகரிக்கிறார்கள் என்றால், அதற்கு ஆயிரம் காரணங்களைச் சொல்லலாம். பாளையம் ஆலையைப் பொறுத்த வரையில், இரயில்வே லைன் இல்லை என்று சொன்னார்கள். பின்பு கரூர்-திண்டுக்கல் இரயில்வே லைன் அறிவிக்கப்பட்டது. பிறகு அதை எடுத்துக்காட்டினோம். அதற்குப் பின்னாலே '1990 வரைக்கும் நிலக்கரி கொடுப்பது எங்களாலே

(பிற்பகல் 12-20)

இயலாது' என்று சொன்னார்கள். இன்னொரு துர்ப்பாக்கியம், அதற்குப் பின்னாலே சில தனியார்கள் வேறு மாநிலங்களிலே வாங்கியிருந்தார்கள். நமக்கு நிலக்கரி தரமுடியாது என்ற காரணத்தைச் சொல்லி லெட்டர் வருகிறது, கடிதம் வருகிறது. சில தனியார்களுக்கு வேறு மாநிலங்களிலே கிடைக்கின்றது. அவர்கள் பெற்றுவிடுகின்றார்கள். அவர்களுக்கு நிலக்கரிக்குக் கோண்டி கிறது.

**திரு.ஆ. நல்லசிவன்:** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பாளையம் சிமெண்ட் பாக்டரியைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழ் நாட்டிலே தனியார் நிறுவனத்தினர் ஒரு பக்கம் எதிர்ப்பு தெரிவித்துக் கொண்டிருப்பதாகச் சொல்கின்றார்களே, அதிலே உண்மை இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதே அதிகப்படியான குற்றச்சாட்டு என்று நினைக்கிறேன். குற்றச்சாட்டு சொல்லக்கூடாது என்று இதை நான் மறுக்க வில்லை. எனக்கு அது தெரியாது. நாம் நம்பவில்லை. யாராவது ஒரு தனியார் போய்ச் சொல்லி, மத்திய அரசு உரிமம் வழங்குவதிலே காலந்தாழ்த்து கிறது என்ற அளவுக்கு அது அவ்வளவு பலகீனமானது, அப்படிப்பட்ட நிலையை தனியார் உண்டாக்கிவிட முடியும் என்று நான் கருதவில்லை. அதை நான் நம்பவில்லை. பல்வேறு காரணங்கள் அவர்கள் சொல்கின்றார்கள். பல்வேறு காரணங்களுக்காக அந்த அடிப்படையிலே தாமதம் ஏற்படுகின்றது. அது என்ன காரணமோ தெரியவில்லை. ஒரு சில காரணங்களை மட்டும் நான் சொன்னேன். உறுப்பினர்கள் அவர்களுக்குத் தெரிந்த காரணங்களைச் சொல் கின்றார்கள். நான் ஒரு காரணத்தைச் சொன்னேன். ஆனால் நான் அப்படி இருக்கும் என்று நம்பவில்லை. அது வேறு விவகாரம். இருந்தாலும்கூட நான் அதைச் சொல்வதற்குக் காரணம், நாங்கள் அங்கே போகிறபோது பார்க்கிறோம். நாங்கள் ஒவ்வொரு தடவையும் போகின்றபோது, ஏற்கெனவே எழுதியிருக்கின்ற மனுவைக் காப்பி எடுத்துக்கொண்டுதான் போகிறோம். அது போதாது என்று புதிதாக காப்பி கொண்டுபோய் கொடுக்கிறோம்;

அவர்களைப் பார்க்கிறோம், கேட்கிறோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் போகும்போதும், அவர்களை அங்கே பார்க்கின்றபோதும், மைய அமைச்சர் அவர்களிடமும், பிரதமரிடமும் சொல்கின்றார்கள். இன்னொன்று. அவர்கள் மறுப்பதில்லை. 'கன்சிடர்' பண்ணுகிறோம், பரிசீலிக்கிறோம் என்று அவர்களிடமிருந்து கடிதம் வரும். பரிசீலிப்பதிலே காலதாமதம் ஆகிறது என்பதைத் தான் நான் சொல்லிக்கொண்டு வந்தேன். இந்தச் சூழ்நிலையிலே கூட நாம் தொடர்ந்து உரிமங்கள், அதே போல நெம்பர் ஆப் லைசென்ஸ் . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அனுமதி கேட்க வேண்டும் என்பது ஒரு மரபுதான். அரசாங்கமே தொடங்க இருக்கின்ற இந்தத் தொழிற்சாலைக்கு மத்திய அரசு அனுமதி கிடைக்காத சூழ்நிலையில், ஏற்கெனவே காவிரித் தண்ணீர் கேட்டு நாம் இருந்தபோது, கர்நாடக அரசாங்கம் மத்திய அரசினுடைய அனுமதியில்லாமல் அணை கட்டியதைப்போல, நாமும் நம்முடைய கொள்கை தொழில் அதிகமாக ஆரம்பிக்க வேண்டும் என்று இருப்பதால், அந்தத் தொழில்கள் வேலைகளை ஆரம்பித்த பிறகு, அதற்கு ராடிபிகேஷன் வாங்கிக்கொள்ளக்கூடாதா என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் முதலிலேயே கட்ட ஆரம்பித்து அதற்குப் பிறகு அனுமதிபெறலாம். ஏற்கெனவே நாம் 3 ஆண்டுகளுக்கு முன்னாலேயே அனுமதி கேட்டோம். வரும் என்ற நம்பிக்கையில் ஆரம்பித்துவிட்டோம் என்று சொல்லக்கூடாதா? அந்த முயற்சியிலே அரசாங்கம் ஈடுபடாதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் வெளிப்படையாகவே வேண்டாம் என்று சொல்லி விடுவார் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இதிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதாவது ஒரு லெட்டர் ஆப் ரெபரன்ஸ் கொடுக்காமல் நாம் ஆரம்பிப்பதானால், பினான்சியல் இன்ஸ்டிடியூஷன்கள், நிதி நிறுவனங்கள் கடன் தரமாட்டார்கள். ஐ.டி.பி. யிலேயிருந்து நமக்கு அவர்கள் பெரும்பகுதி கடன் தர வேண்டும். 'லெட்டர் ஆப் ரெபரன்ஸ் இல்லை. உங்களுக்கு எங்கே அந்தத் தொழிலை ஆரம்பிப்பது என்று குறிப்பில்லை. எங்கே ஆரம்பிக்கப் போகிறீர்கள்?" என்பார்கள். அவர்கள் கடன் தரமாட்டார்கள். மற்ற வகையிலே நமக்கு உதவி கிடைக்காது. அவர்கள் நிராகரித்துவிட்டால், அதிலே 'கமிட்மெண்ட்' இல்லாமல் நாம் ஆரம்பித்துவிட்டால், அதற்குப் பின்னாலே பெரிய கஷ்டத்திற்கு ஆளாகவேண்டியிருக்கும். அப்புறம் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் குற்றச்சாட்டுக்கும் நாம் திரும்ப ஆளாக வேண்டும். "அனுமதியில்லாமல் ஏன் 40 கோடி ரூபாயில் 5 கோடி, 10 கோடி ரூபாய் செலவு செய்தீர்கள்?" என்பார்கள். அது நிராகரிக்கப்படு





கின்ற நேரத்தில், கான்ட்ராக்டர்களுக்குக் கட்டிடம் கட்டுவதற்கு என்று நீங்கள் கொடுத்தீர்களா?" என்று கேட்கின்ற கட்டம் வரும். ஆகவே அதற்கு மேலே வேகமாகப் போக முடியாது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான பேரமும் இல்லாமல் அப்படி ஆரம்பித்தால் சொல்ல மாட்டோம். இருந்ததால்தான் சொல்கின்றோமே தவிர இல்லாததை நாங்கள் கற்பனை செய்துகொள்வதில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** சந்தேகம் தருகின்ற வாய்ப்பைகூட தரக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். தகுந்த ஆதாரம் இல்லாமல் ஆரம்பிப்பது என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல. இருந்தாலும்கூட காலம் தாழ்த்திக்கொண்டே வந்தாலும்கூட அதைப் பரிசீலிப்பார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொல்கின்றபோது, வெளியிலே சொல்கின்றார்கள், இங்கே பேசுகிறார்கள், பொதுக்கூட்டத்திலே பேசுகிறார்கள், ஆனால் எழுத்துவடிவத்திலே வரும் போது மட்டும் கொஞ்சம் திரும்பிக்கொள்கிறார்கள் என்பதுபோல சொன்னார்கள். எடுத்துச்சொல்வதிலேகூட உங்களுக்கும் எங்களுக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது. உங்கள் வழியிலே நீங்கள் சொல்கின்றீர்கள். எங்கள் வழியிலே நாங்கள் சொல்கின்றோம். நீங்கள் கொஞ்சம் வேகமாகப் பேசுகிறீர்கள். வேண்டுமானால் நாங்கள் கொஞ்சம் இதமாகப் பேசுகிறோம். அதே நேரத்தில் ஸ்டெடியாகப் பேசுகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிப்காட் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அது இந்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது. சிப்காட் பொறுத்தவரையில் நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். உதவித் தொகை பெறுவதிலே, சப்சிடி பெறுவதிலே அதிகமாகப் பெற்றிருக்கிறது. அதே போல டேர்ம் ஆப் லோனைப் பொறுத்தவரைக்கும், சிப்காட்டினுடைய தவணை கடந்து 1972 லே ரூபாய் 26 இலட்சம் சேங்க்ஷன் கொடுக்கப்பட்டது. 1982 க்குப் பிறகு இன்றைக்கு சுமார் 14 கோடி ரூபாய் கொடுக்கப்படுகிறது. அது கூட மாண்புமிகு உறுப்பினர் கூறும் போது, 'தி அமௌண்ட் சாங்ஷன்ட்'-க்கும் டிஸ்பர்ஸ்மெண்ட் ஆகியிருக்கின்ற அமௌண்ட்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு சேங்க்ஷன் ஆகின்றபோது, மொத்தமாகக் கொடுப்பதில்லை. முழுவதும் ஒரே ஸ்டேஜிலே கொடுப்பதில்லை. இரண்டு மூன்று கட்டத்திலே கொடுக்கிறார்கள். கட்டுமானப் பணி, இயந்திரங்கள் வாங்குவது, புராஜெக்ட் கொடுப்பது, அதற்கு ஒரு அட்வான்ஸ் மட்டும் கொடுப்பது, டம்பிங் ஸ்டேஷன் இப்படி இரண்டு மூன்று ஸ்டேஜ்களிலே கொடுக்கின்றார்கள். மொத்தமாகக் கொடுத்தால், தொழிலே வராது. ரூபாய் 10 கோடிக்குக் கடன் சேங்க்ஷன்

[திரு. சு. திருநாவுக்கரசு] [1983 ஏப்ரல் 20

ஆகி, உடனே ரூபாய் 10 கோடியையும் கடனாகக் கொடுத்தால், தொழில் மட்டுமல்ல, அந்த ஆட்களும் இருக்கமாட்டார்கள். அந்த நிலைமைதான் வந்துவிடும். சேங்க்ஷன் ஆன தொகைக்கும் டிஸ்பேர்ஸ்மெண்ட் ஆன தொகைக்கும் இந்த டிபரன்ஸ் இருப்பதற்குக் காரணம் இதுதான். இப்படி டேர்ம் லோன்ஸ் கொடுப்பதிலே, சப்சிடி கொடுப்பதிலே தமிழ் நாட்டில் சிப்காட் நிறுவனம் அதிகமான அளவிலே சமீபகாலத்திலே கொடுக்கின்ற பணியினை வைத்துக் கொண்டிருக்கிறது. டி.ஐ.சி. நிறுவனம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், சிறு தொழில்கள், அதுபோலவே நடுத்தரத் தொழில்கள் ஆரம்பிப்பதிலும் அதிக கவனம் செலுத்தி வருகிறது. அதனுடைய அளவை நான் இங்கே சொல்லியிருக்கிறேன். சுமார் 1977லிருந்து 1982 வரைக்கும் ரூபாய் 102 கோடி வரைக்கும் கடன் கொடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "ரூபாய் 2,000 கோடி வந்திருக்கிறது, அது எங்கேயிருந்து வந்த பணம்?" என்று கேட்டார்கள். வேறு யார் இங்கே கொண்டு வந்து போட்டார்கள் என்று கேட்டார்கள். அந்த 2 ஆயிரம் கோடி என்பது, 4 ஆண்டுக் காலத்திலே ரூபாய் 2,000 கோடியாகும். அதாவது ஒரு ஆண்டுக்கு ரூபாய் 500 கோடி. அதிலே அரசு போடுவது ஒரு 50 கோடிவரைக்கும். அதாவது பட்ஜெட்டிலே அலாட்மெண்ட் ஏறக்குறைய ரூபாய் 40 கோடி அல்லது 50 கோடி என்று ஆண்டுக்கு வருவது. இதிலே தனியாரிடத்திலே ரூபாய் 50 கோடி என்றால் நான்கில் ஒரு பங்கு கடன், பைனான்சியல் இன்ஸ்டிடியூசன்ஸ், இங்கே இருக்கும் ஐ.டி.பி., மாநில நிதி நிறுவனங்கள் இப்படிப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் இது எல்லாம் சேர்ந்தது. நான் சொல்வது மொத்தமாக புராஜெக்ட்ஸ்க்கு இவ்வளவு, அதுவும் 4, 5 ஆண்டுக்காலம் என்று சொல்கின்றபோது, இப்படி ரூபாய் 2 ஆயிரம் கோடி என்று கணக்குச் சொல்கிறேன். இன்றைக்கு நிதி நிறுவனங்கள் மற்றவைகள் சேர்ந்துதான் ரூபாய் 2 ஆயிரம் கோடி என்று வருகிறது. அதில் 102 கோடி ரூபாய் வரையில் டி.ஐ.சி. நிறுவனம் அங்கே கொடுத்திருக்கிறது.

ஜெனரேட்டர் வாங்குவதற்கு 570 என்பதுதான் சரியான எண்ணிக்கை. ரூபாய் 413 இலட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறது. அதிலே ஏற்பட்டிருக்கின்ற தவறுக்கு வருந்துகிறேன். அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதிலே ஒன்றும் பெரிய தவறு இல்லை. ஒரு எழுத்து மிஸ்டேக், ஸ்பெல்லிங் மிஸ்டேக். எண்ணிலே எழுத்து மாறியிருக்கிறது. டோட்டலில் தவறு இருக்கிறபோது அது கவனக்குறைவுதான். அதிகாரிகள் அடுத்த ஆண்டிலே யாவது அந்தத் தவறு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அப்படி பார்த்துக்கொள்ளப்படும் என்று இந்த அவையிலே உத்தரவாதம் சொல்கின்றேன். அதற்காக அடுத்த ஆண்டு தவறி வந்துவிட்டால், போன ஆண்டும் அப்படி வந்தது என்று சொல்லவேண்டாம். அடுத்த முறை முடிந்த வரைக்கும்



1983 ஏப்ரல் 20] [திரு. சு. திருநாவுக்கரசு]

ஜாக்கிரதையாக இருப்போம் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோலவே தனியார் தொழில் பிரிவுகளை ஊக்குவிக்க லாரி, ஆட்டோ போன்றவற்றை வாங்க கடன் கொடுப்பதிலே சுமார் 3½ கோடி ரூபாய் இதுவரைக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. சுமார் ஆயிரம் பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். சிறு வேலைவாய்ப்புச் சலுகை என்ற அளவில், ஆட்டோ என்றால் குறைந்தது 2 பேர்களுக்கும் டாக்சி என்றால் குறைந்தது 2 பேர்களுக்கும் என்று கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு அதிலே கிடைக்கிறது.

அதிலே டெக்னோகிராட்களுக்கு, டி.எம்.ஈ.டி.ஈ., ஐ.டி.ஐ., படித்துவிட்டு தொழில் தொடங்க வருகின்றவர்களுக்குக் கடன் கொடுப்பதிலே அரசு வேகமாக இருக்கிறது. அவர்களுக்கு உதவி செய்கிறது. அதிலே 66 பேர்களுக்கு இதுவரையில் டெக்னிக்கல் தொழில் தொடங்க, ஆரம்பிக்க என்று உதவி செய்யும் முயற்சியிலும் ஈடுபட்டிருக்கிறது அரசு. அதைப் போலவே டி.ஐ.சி. இதற்கு முன்னாலே எல்லாம் ஹெட் ஆபிசிலே மட்டும்தான் லோன் கொடுப்பது என்று இருந்தது. நாங்கள் வந்ததற்குப் பின்னர்தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட அளவிலேயே பிராஞ்சு அளவிலேயே 25 ஆயிரம் ரூபாய் கடன் கொடுக்கலாம் என்று இருந்தது. அந்த 25 ஆயிரம் ரூபாய் எதற்குப் போதும் என்று சொல்லி, அதை ஒரு இலட்சமாக உயர்த்தினார்கள். இப்போது ஒரு இலட்சத்தை 2½ இலட்சம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். ரூபாய் 2½ இலட்சம் வரையில் பிராஞ்சு அளவிலேயே சேங்க்ஷன் பண்ணலாம். அவர்கள் 7½ இலட்சம் ரூபாய் வரையில் டிஸ்பர்ஸ்மெண்ட் பண்ணலாம் என்று அதிகாரம் கொடுத்திருக்கிறார்கள். அப்படி அதிகாரத்தைப் பரவலாக்கியதன் மூலம் அவர்கள் அலைச்சல் இல்லாமல், சிரமங்கள் இல்லாமல் கடன் பெறலாம். அந்தக் கஷ்டங்களையெல்லாம் நீக்கி அவர்களுக்கு வெகு விரைவிலே கடன் கொடுக்கவும் வசதி செய்து தந்திருக்கிறோம்.

இன்னொன்றை மகிழ்ச்சியோடு சொல்வேன். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே, டி.ஐ.சி.-யில், இரண்டு மாதத்திற்கு மேலே எந்த மனுவையும் தேங்க வைக்கக்கூடாது என்று சொல்லியிருக்கிறோம். இல்லை என்றாவது அவர்களுக்குத் தெரிவித்துவிடுவார்கள். பர்டிகுலர்ஸ் தேவைப்பட்டால், அந்த பர்டிகுலர்ஸ் தேவைப்படுகின்றன என்றாவது சொல்லி மனுவைத் திருப்பி அனுப்பி வைப்பார்கள். இல்லை என்று சொல்லி எல்லாவற்றையும் நிராகரிப்பதில்லை. அந்த பர்டிகுலர்ஸ் அல்லது டீடெயில்ஸ் தேவை என்று கேட்டு அனுப்புவார்கள். அந்த விவரங்களைப் பெற்று 2 மாதத்திற்குள் கடன் கொடுக்க வேண்டும் என்றும் அப்படி வருகின்ற மனுக்களைப் பைசல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறோம். அதற்கேற்ப பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

அதைப் போலவே டி.ஐ.சி. லோன் கொடுக்கின்ற நிறுவனமாக முன்பு இருந்தது. ஆனால் இப்போது சிப்காட், எப்படி இருக்கின்றதோ அதுபோலவே, தொழில் தொடங்க வருகின்றவர்களுக்கு ஆலோசனை சொல்கிறது, புராஜெக்ட் கொடுக்கிறது, மார்க்கெட்டிங் பெசிலிட்டீஸ் பற்றிச் சொல்கிறது, மூலப்பொருள்களைப் பற்றிச் சொல்கிறது, அதற்கான வாய்ப்புகள் உண்டாக்க என்று செபரேட் செல் ஒன்று டி.ஐ.சி.-யில் ஆரம்பிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடன் கொடுப்பதற்காக மட்டுமே இல்லாமல், தொழில் தொடங்குகின்றவர்களுக்கு உற்சாகம் ஊட்டுகின்ற வகையிலே அதற்கான புராஜெக்ட் தயாரித்து, எந்தெந்த மாவட்டத்திலே எந்தெந்த மூலப்பொருள்கள் இருக்கின்றது, உற்பத்தியாகின்ற இடத்திலே எப்படி மார்க்கெட்டிங் பண்ணலாம் என்றெல்லாம் அந்த நிறுவனம் சொல்கின்றது. அதற்கான வசதிகளை இந்த நிறுவனம் செய்து தருகிறது. அந்த வகையிலே பணிகளை விரிவாகவும் செய்ய 'செபரேட் செல்' ஒன்று தனியாக ஆரம்பிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

துணைத் தலைவரவர்களே, இதே 'ரேட்'-ல் நான் போய்க் கொண்டிருந்தால், நேரம் அதிகமாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். எவ்வளவு நேரம் பேசலாமென்று சொன்னால், அதற்குள்ளே முடித்துக்கொள்ளப் பார்க்கிறேன். இன்னும் ஒரு அரை மணி நேரத்திற்குள் முடித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம் :** துணைத் தலைவரவர்களே, அடிக்கடி கடிகாரத்தைப் பார்ப்பதால் ஒரு வேண்டுகோள். டிஜிட்டல் கடிகாரம் எங்களுக்கு கொடுத்ததற்கு மிகுந்த மகிழ்ச்சி. கடிகாரம் ஓடும்முன் ஓடி தேனீக்களைப் போலச் செய்திகளைச் சேகரிக்கும் நிருபர்களுக்கு அந்தக் கடிகாரம் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இனாமாகக் கொடுக்கவில்லை. மேலவைத் தலைவர் அவர்கள் அறையின் முன்னால் வைத்திருக்கிறோம். ஸ்பெஷல் டிஸ்கவுண்ட் 25 ரூபாய் என்றும், ஒருவர் இரண்டு கடிகாரங்கள் வாங்கலாமென்றும் சொல்லி, மொத்தத்தில் 50 ரூபாய் டிஸ்கவுண்ட் கொடுத்திருக்கிறோம். பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுப்பதுபற்றி பின்னால் யோசிக்கலாம்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இந்த ஆண்டு வறட்சி அதிகமாக இருப்பதால் இனாமாகக் கொடுத்தால் பரவாயில்லை.





**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** யாருக்குக் கொடுத்தாலும் மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களுக்குக் கொடுத்தால், பாரபட்சமாகவும், நாங்கள் உங்களிடம் ஏதோ எதிர்பார்ப்பது போலவும் இருக்கும். கண்டிப்பாக உங்களுக்கு அது கிடைக்காது. எனவே மாண்புமிகு துணைத் தலைவரவர்கள் மற்றவர்களுக்குச் சிபாரிசு செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே பேசுகிறபோது, உங்களை வேறுவிதமாக அழைக்கக்கூடாது என்பது சபையின் மரபு.

டிட்கோவைப் பொறுத்தவரையிலும், பொதுத் துறையிலே தொழில்களை ஆரம்பிப்பதிலும் கூட்டுத் துறையில் தொழில்களை ஆரம்பிப்பதிலும் கவனம் செலுத்தி வருகிறது. ஏற்கெனவே நான் சொன்னதுபோல், பொதுத் துறையில் 11 தொழில்கள், கூட்டுத் துறையில் சுமார் 40 தொழில்கள் என்ற அளவுக்கு டிட்கோ நிறுவனம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். அவர்கள் சொன்ன கொள்கையிலே அவருக்கும், எனக்கும் கொஞ்சம் கருத்து வேறுபாடு இருக்கிறது. அவர் சொல்லுவதை நடைமுறைப் படுத்துவதிலே அவருக்கேகூட சங்கடம் இருக்கிறது. எப்படி என்றால் இந்திய நாட்டின் பொருளாதாரமே 'மிக்சட் எகனாமி' என்று சொல்லப்படும் கலப்புப் பொருளாதாரமாக இருந்து கொண்டிருக்கிறது. முழுமையாக அனைத்துத் தொழில்களையும் பொதுத் துறையிலேயே ஆரம்பிப்பது என்பது எந்த மாநிலத்திலும் நடைமுறையில் இல்லை. அந்தக் கொள்கை நல்ல கொள்கை. அது வேறு பிரச்சினை. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியிலிருக்கிற மேற்கு வங்கத்தில்கூட கூட்டுத் துறையிலே பல தொழில்கள் வந்திருக்கின்றன. நான் அதை குறையாகச் சொல்லவில்லை. அப்படித்தான் முடியும். பொதுத் துறையிலே 11 தொழில்கள் என்று சொன்னேன். அதன் மொத்த முதலீடு 113 கோடி ரூபாய். அதில் டிட்கோவின் பங்கு 43 கோடி ரூபாய். விகிதாச்சார அடிப்படையிலே சொன்னால், திட்டச் செலவிலே 39 சதவிகிதம், ஏறக்குறைய 40 சதவிகிதம் வருகிறது. 11 தொழில்கள் பொதுத் துறையில் ஆரம்பிக்க டிட்கோவின் பங்கு அல்லது முதலீடு 40 சதவிகிதம். அதாவது 43 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. கூட்டுத்துறையில் 40 தொழில்கள் ஆரம்பிக்க அதே அளவுக்குத்தான் முதலீடு செய்கிறோம். அதில் நம்முடைய பங்கு பத்து சதவிகிதம்தான். தொழில்கள் 40 என்று வரும்போது, தனியார்கள் 40 குடும்பங்கள் என்று பார்க்காமல், அந்தத் தொழில்களாலே 500 பேர்கள் 1000 பேர்கள் வேலைக்கு வருவார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

[1983 ஏப்ரல் 20

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவரவர்களே, அதிலே தனியார் மூலதனம் எவ்வளவு? ஃபைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்ஸ் பங்கு அதிகமானால், தனியார் மூலதனம் குறையத்தானே செய்கிறது; அப்படியிருந்தும் அதை ஏன் தனியார்கள் கையில் ஒப்படைக்கிறீர்கள்?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, ஜாயின்ட் செக்டாரே தனியாரிடம் இருப்பதுதான். அரசு அவர்களுக்கு உதவி செய்யும். அவர்களுக்குத் தேவையான பணத்தை அரசாங்க நிறுவனம் கொடுத்து, கூட்டுத்துறையில் தொழிற்சாலைகளைக் கொண்டு வருகிறோம். எந்தத் தொழிலாக இருந்தாலும், ஐந்தில் ஒரு பங்கு போட வேண்டும். மீதி நான்கு மடங்கை வெளியிலிருந்தோ, மற்ற நிதி நிறுவனங்களிடமிருந்தோ, சப்சிடியாகவோ, கடனாகவோ அவர்கள் பெறுகிறார்கள். எனவே தனியார் என்று வரும்போது, மேற்கு வங்கத்திலேகூட அப்படிச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. நான் இதை மாநிலக் கொள்கையாக எடுத்துக் கொள்ளவில்லை. அகில இந்தியக் கொள்கையாகத்தான் எடுத்துக்கொள்கிறேன். மேற்கு வங்கத்திலும் கட்டாயம் ஏற்படுகிறது. வேறு வழியில்லை. இந்திய நாட்டின் பொருளாதாரத்தின் காரணமாக இந்த நிலைமை ஏற்படுகிறதென்பதைச் சொல்ல விரும்புகிறேன். அங்கே 13 தொழில்களை ஆரம்பித்திருக்கிறார்கள். அதுவும் மிக அத்தியாவசியமான தொழில்கள்—பத்திரிகை, சிமெண்ட் உட்பட—13 தொழில்களை கூட்டுத் துறையில் ஆரம்பித்திருக்கிறார்கள். சிமென்ட் தொழிற்சாலை கூட்டுத் துறைக்குக் கொடுக்கப்பட்டு, அங்கே அந்தத் தொழிற்சாலை வந்திருக்கிறது. நான் அதைத் தவறு என்று சொல்லவில்லை. இந்திய நாட்டின் பொருளாதாரம் மிக்சட் எகானமி என்ற நிலைமையில், பொதுத் துறைக்கு எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அந்த அளவிற்குக் கொடுக்கிறோம். அதில் முடியாத நிலையில் கூட்டுத் துறையை உற்சாகப்படுத்துகிறோம். அதற்குக் காரணம் தனியார்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்பதற்காக அல்ல. அதிலே கேபிடல் இன்வெஸ்ட்மென்ட் குறைவாக இருக்கிறது. 11 தொழில்களுக்கு பொதுத் துறையில் நாம் செய்யும் மூலதனம் 43 கோடி ரூபாய். அதே நேரத்தில் கூட்டுத் துறையில் 40 தொழில்களுக்கு நாம் செய்யும் மூலதனம் அதே அளவுதான் இருக்கிறது. அதில் பத்து சதவிகிதம்தான் இன்வெஸ்ட் செய்ய வேண்டியிருக்கிறது. அதன்மூலம் ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு, உற்பத்தி, உற்பத்திப் பொருள்கள் மார்க்கெட்டுக்குப் போகும்போது விற்பனை வரி, இதன்மூலம் இந்தியப் பொருளாதாரத்தில் பெர்-கேபிடா இன்கம் உயர்வு—இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன.



1983 ஏப்ரல் 20]

**திரு. ஆ. நல்லசிவன் :** துணைத் தலைவரவர்களே, மேற்குவங்கம் பற்றிச் சொல்வதை நான் புரிந்துகொள்கிறேன். அப்படித் துவங்கும் தொழில்களிலே தனியார் மூலதனம் 20 சதவிகிதம் என்று இருந்தாலும், நிர்வாகம் யாரிடத்தில் போகிறது? நிதி நிறுவனங்கள், மாநில அரசு எல்லாம் சேர்ந்து எண்பது சதவிகிதம் அளவுக்குப் போடும்போது, நிர்வாகத்தை எடுத்துக்கொள்வதில் என்ன சங்கடம் இருக்கிறது?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, கூட்டுத் துறை என்னும்போது, அதிலே 'டெய்லி அட்மினிஸ்டிரேஷன்' என்று வரும்போது, அது தனியாரிடத்தில் இருக்கும். அரசுத் துறை சார்பில் ஐ.ஏ.எஸ். அதிகாரி, நிதி நிறுவனம் சார்பில் அக்கவுன்ட்டன்ட் அல்லது அதிகாரி என்ற முறையில் போர்டிலே டைரக்டராக இருப்பார்கள். ஆண்டு அறிக்கையை ஆய்வு செய்யவும், வரவு-செலவைப் பார்க்கவும் அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது. தினசரி அலுவல்கள் முழுமையாகத் தனியார்களிடம்தான் இருக்கும். இங்கேயும் அப்படித்தான், மேற்கு வங்கத்திலும் அப்படித்தான், எல்லா இடங்களிலும் அப்படித்தான். அதற்குக் காரணம், நாம் குறைந்த அளவிலே மூலதனம் அளித்தால் போதும் என்பதால் கூட்டுத் துறையையும் உற்சாகப்படுத்தும் சூழ்நிலையில் இருக்கிறோம். எதிலே பொதுத் துறை வேண்டுமென்று நினைக்கிறோமோ, அதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். உதாரணத்திற்கு காட்பாடியில் இருபது கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெடி மருந்துத் தொழிற்சாலை வருகிறது. டிட்கோ நிறுவனம் தனியாகப் பொதுத் துறையில் ஆரம்பிக்கிறது. அதைப்போலவே லினியர் ஆல்கைல் பென்ஜின் உற்பத்தி செய்யும் கெமிக்கல் தொழிற்சாலை ஒன்று 60 கோடி ரூபாயிலே வருகிறது. டிட்கோ அதற்காக தனியாக ஒரு கார்ப்பரேஷன் மாதிரி 'பார்ம்' பண்ணி, பொதுத் துறையிலே கொண்டு வருகிறார்கள். அதைப்போலவே சிமென்ட் கார்ப்பரேஷன் எட்டு கோடி ரூபாயிலே வருகிறது. ஜாயின்ட் செக்டாரிலே இல்லை. இப்படி பலவற்றைச் சொல்லலாம்.

டிட்கோ அப்ளை செய்து லெட்டர் ஆஃப் இன்டென்ட வாங்கியிருந்தால், அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறோம். சில நேரங்களில் டெக்னாலஜிக்காக கூட்டு சேருகிறோம்; சில நேரங்களில் பணத்திற்காக கூட்டு சேருகிறோம். சில நேரங்களில் தனியார்கள், பிரைவேட் ஆன்ட்ரப்ரூனர்ஸ் மனுச் செய்து, லெட்டர் ஆஃப் இன்டென்ட் வாங்கி வைத்திருப்பார்கள். தொழிற்சாலை ஆரம்பிக்க அவர்களுக்குப் பணம் இல்லை என்றால், அரசிடம் உதவி கேட்கிறார்கள், டிட்கோவை நாடுகிறார்கள். டிட்கோ நிறுவனம் அந்தத் தனியார்கள் வைத்துள்ள லெட்டர் ஆஃப் இன்டென்டை வாங்கி, கூட்டுத்

துறையில் அந்தத் தொழிலை ஆரம்பிக்கிறது. இப்படி பல்வேறு சூழ்நிலைகளில கூட்டுத துறை உருவாக்கப்படுகிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த் அளவில் கூட்டுத் துறையில் தொழிற்சாலைகள் வேகமாக உருவாக்கப்பட்டு வருகின்றன. 1982-83 வரையில் வரிசையாகச் சொன்னேன். பொதுத் துறையிலே டிட்கோவின் முதலீடு 1977 லிருந்து 1982 வரை 8 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுத் துறையில் 19 கோடி ரூபாய் அளவுக்கு முதலிடு செய்யப்பட்டிருக்கிறது. பல்வேறு பொதுத் துறை, கூட்டுத் துறை சார்பில் 16 தொழில்கள் 234 கோடி ரூபாய் மூலதனத்திலே ஆரம்ப்பது குறித்து ஆய்விலே இருக்கின்றன. அதற்கான பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதை டிட்கோவின் சார்பிலே நான் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இனி ஒவ்வொரு நிறுவனத்தைப் பொறுத்தும், அதற்கான விவரங்களை மட்டும் சொல்லி, பேச்சை சுருக்கிக் கொவளலாமென்று நினைக்கிறேன். சிமெண்ட் கார்ப்பரேஷனைப் பொறுத்தவரையில், ஒன்றிரண்டு தொழிற்சாலைகள் வருகின்றன. பாளையத்திலே சிமெண்ட் தொழிற்சாலை வருகிறது. அஸ்பெஸ்டாஸ் சிமெண்ட் ஷீட் தயாரிக்கும் திட்டம் இருக்கிறதென்று சொன்னேன். அதனுடைய ப்ரொடக்ஷன் மேக்சிமம் கெப்பாசிடி வருவதற்கு பல்வேறு முயற்சிகளில் அரசு ஈடுபட்டிருக்கிறதென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக அரசாங்கத்தினுடைய நிறுவனங்கள் என்றால், நஷ்டத்திலே இயங்கிக்கொண்டிருக்கும் என்ற நிலைமை மாறி ஓரளவுக்கு லாபம் பெறும் அளவுக்கு பல்வேறு நிறுவனங்கள் வந்திருக்கின்றன. அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சி அளிக்குமென்று நான் நம்புகிறேன்.

(பிற்பகல் 12-40)

சிமெண்ட் கார்ப்பரேஷன் சென்ற ஆண்டு லாபத்தில் இயங்கி இருக்கிறது. அதோடு மட்டுமல்ல. தமிழ்நாடு ஸ்டீல் நிறுவனத்தைப் பொறுத்தவரையில் 1982-83-ல் 68 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. பஞ்சாலை நிறுவனத்துக்கு 1½ கோடி ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. டிட்கோவுக்கு சுமார் 1½ கோடி ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு 1 கோடியே 18 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. தமிழ் நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திற்கு—சிப்காட்-ஐப் பொறுத்தவரையில் 85 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. தமிழ் நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு 4½ இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. டான்சியைப் பொறுத்தவரையில், சுமார் 25 இலட்சம் ரூபாய் இலாபம்



கிடைத்திருக்கிறது. டாமின் நிறுவனத்துக்கு சுமார் 84 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளிலேயிருந்து மொத்தத்தில் சுமார் 10 இலட்சம் ரூபாய் இலாபம் கிடைத்திருக்கிறது. அது போல் பாண்டியன் கெமிக்கல்ஸுக்கு இலாபம் கிடைத்திருக்கிறது. கூட்டு நிறுவனங்கள் கூட இன்றைக்கு இலாபத்திலே இயங்க ஆரம்பித்திருக்கின்றன அதுபோல் தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன், சர்க்கரை கார்ப்பரேஷன் எல்லாம் இன்றைக்கு அக்குமுலேட்டட் இலாபம் என்கிற வகையில் இலாபத்தில் வந்துகொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு அந்த அடிப்படையில் இலாபம் வந்திருக்கிறது. 10, 15 ஆண்டுகளாகவே இதிலே அக்குமுலேட்டட் லாஸ் இருந்தது. இப்போது கொஞ்சம் கொஞ்சமாக ஆண்டுதோறும் நஷ்டத்தைக் குறைத்துக் கொண்டே வருகிறார்கள். ஆண்டுக்காண்டு இது குறைந்துக் கொண்டே வருகிறது.

அடுத்து, கடுமையான மின் பற்றாக்குறை சமயத்திலே சிப்காட் நிறுவனம் 2 கோடி ரூபாயும், டிக் நிறுவனம் 4 கோடியே 13 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தத்தில் ஏறத்தாழ 6 கோடி ரூபாய்க்கு மேல் ஜெனரேட்டர் வாங்குவதற்காக கடன் கொடுத்திருக்கிறது. குறைந்த காலத்திலேயே இதனை வழங்கியிருக்கிறோம். மனு செய்த பின் 15 நாட்களுக்குள் கடன் வழங்கி அதன் அடிப்படையில் மின் உற்பத்தியைப் பெருக்குகிற முயற்சியிலே இந்த இரண்டு நிறுவனங்களும் ஈடுபட்டன என்கிற தகவலை நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சர்க்கரை நிறுவனத்தின் சார்பில் திருத்தணியில் ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. மாயவரத்திலே அல்லது மயிலாடுதுறையிலே ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க முயற்சி செய்கிறோம். சர்க்கரை ஆலை அமைக்க அனுமதி கோரி, 9 தனியாரிடமிருந்து மனுக்கள் வந்தன. அவற்றில் 5 மனுக்களைப் பரிந்துரை செய்து மைய அரசுக்கு அனுப்பியிருந்தோம். அந்த 5-லே தனியாரைப் பொறுத்தவரையில், ஒன்றை அமைக்க நமக்கு உரிமம் தந்திருக்கிறார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஒன்றைச் சொன்னார். ஒன்றுக்கு உரிமம் தந்திருக்கிறார்கள் என்றிருக்கும்போது, மீதி 4 மனுக்கள் மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் சர்க்கரை ஆலையை அமைப்பதைப் பொறுந்தவரையில் தனியாருக்குக் கொடுப்பதா என்று இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் கேட்டார் அதோடு மாத்திரமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே தனியாருக்கு அனுமதி தரக்கூடாது என்கிற முறையில் முடிவெடுத்ததாகவும்

அவர் சொன்னார். நாங்களும் இது சம்பந்தமாக அமைச்சரவையில் வைத்துத் தான் முடிவெடுத்தோம். இதற்கான காரணத்தை நான் சொல்கிறேன். மற்ற மாநிலங்களில் எல்லாம் தனியார் துறையிலே சர்க்கரை ஆலைகளை அமைக்க அனுமதி வழங்குகிறார்கள். மற்ற மாநிலங்களில் எல்லாம் தனியார் துறையிலே சர்க்கரை ஆலைகள் வரும்போது, இங்கேயும் தனியார் துறையில் அமைக்கப்படும்போது, அதிலே ஷேர்ஹோல்டர்ஸ் இருக்கிற நிலையில் ஒரு குடும்பத்திற்கு மட்டும்தான் அதனுடைய இலாபம் என்பதல்ல பிரச்சினை, 6 ஆயிரம், 7 ஆயிரம் ஏக்கர்களில் கரும்பு பயிரிடப்படுகிற நிலை ஏற்படும். விவசாயிகளைப் பொறுத்தவரையில், கரும்புக்கு விலை குறைவு என்றாலும்கூட, நெல் போன்றவற்றோடு ஒப்பிடும்போது, கரும்பு பணப் பயிர். விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைக்கும். அது மாத்திரமல்லாமல், தொழிற்சாலை மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற வாய்ப்பும் இருக்கிறது. அதே நேரத்தில் தனியார் தொழிற்சாலைகள் பெருகுவதன் வாயிலாக தனியாருக்கும் அரசுக்கும் இடையே, இரண்டுக்கும் இடையே, ஒரு கான்டிராடிக்ஷன் என்கிற முறையில் பிரச்சினை இருக்கிறது. இப்படி, ஒவ்வொரு செக்டாரையும் தனியாருக்கு என்கரேஜ் பண்ணக்கூடாது என்கிற நிலை வந்தால், படிப்படியாக நாம் அனைத்தையும் பொதுத் துறையிலே, பப்ளிக் செக்டாரிலே கொண்டுவர வேண்டிய நிலை வந்து விடும். அப்படி வந்தால், தனியார்கள் மற்ற மாநிலங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை வந்து விடும். ஆகவே அவர்களுக்கும் நாம் வாய்ப்புகளையும், வசதிகளையும் கொடுத்துத் தான் ஆக வேண்டுமென்ற அடிப்படையில், அந்த உணர்வில், அவர்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில், இப்படி முடிவெடுத்தோம். இன்னொன்றையும் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பிளானிங் கமிஷனிலிருந்து இரண்டு சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்குத் தான் நமக்கு அனுமதி தந்திருக்கிறார்கள். இப்படி பொதுத் துறையிலே, கூட்டுறவுத் துறையிலே நாம் இரண்டு சர்க்கரை ஆலைகளை அமைக்கிற நிலையில் மற்ற மாநிலங்களை நாம் பார்க்கின்ற போது, அவர்கள் தனியார் துறையிலே கிட்டத்தட்ட 7, 8 தொழிற்சாலைகள் ஆரம்பிக்கக்கூடிய நிலை வந்துவிடும். இதன் மூலம் சர்க்கரை உற்பத்தி, வேலைவாய்ப்பு, தொழிற்சாலை வேறு இடத்திற்குப் போகிற நிலை எல்லாம் வருகிறது. இப்படி இங்கு வர வேண்டிய தொழிற்சாலைகள் பக்கத்து மாநிலங்களுக்குப் போனால், இங்கே நமக்குப் பல்வேறு பிரச்சினைகள் வரும். ஆந்திராவுக்கு இந்தச் சர்க்கரை ஆலை போனால், விவசாயிகளால் அங்கு கரும்பு பயிரிடப்படக்கூடிய சூழ்நிலை வரும். தவிர நம்முடைய மூலதனமும் அங்கே போய்விடும். எனவே தான் மற்ற மாநிலங்களைப்போல



நாமும் அனுப்புவோம் என்கிற அடிப்படையில் மனுக்களைப் பரிந்துரை செய்து அனுப்பினோம். என்றாலும் கூட மத்திய அரசு தாராளமாக நடந்து கொள்ளவில்லை. (சிரிப்பு) 9 மனுக்களை அனுப்பியதில்—நாம் பரிந்துரை செய்து 5 மனுக்களைத்தான் அனுப்பினோம்—அதில் ஒன்றுக்குத்தான் அவர்கள் உரிமம் தந்திருக்கிறார்கள். மனுக்களும் மொத்தம் 9 தான் வந்திருக்கின்றன. 9 பேர் தான் இதனை அமைக்க முன்வந்திருக்கிறார்கள். இன்னும் 5, 6 ஆண்டுகளில் ஒன்று அல்லது 2 சர்க்கரை ஆலைகளை அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி தரலாம். அந்த வாய்ப்பும் நமக்கு இல்லாமல் போய்விடக் கூடாது என்கிற உணர்வினால் தான், நாம் தனியாரை உற்சாகப் படுத்திக்கொண்டு வருகிறோம். வருகிற மனுக்களையும் அந்த வகையில் தான் பரிசீலித்து அனுப்புகிறோம். அதிக அளவில் அமைக்க தனியாரும் முன் வரவில்லை. 9 பேர் தான் முன்வந்திருக்கிறார்கள். அதுபோல் 1,500 டன்னுக்கு மேல் திறனளவுள்ள சர்க்கரை ஆலை என்றும் 500 டன் திறனளவுள்ள மினி சர்க்கரை ஆலை என்றும் இருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலே அமைக்கின்ற இரண்டு சர்க்கரை ஆலைகளையும் பெரிய சர்க்கரை ஆலைகளாக அமைக்கலாமா என்கிற பிரச்சினை இருக்கிறது. காரணம் மினி சர்க்கரை ஆலைகளின் மூலமாக நஷ்டம் ஏற்படுகிற சூழ்நிலை இருக்கிறது. மத்திய அரசிடமிருந்து கிடைக்க வேண்டிய இன்சென்டிவ் போன்றவை மினி சர்க்கரை ஆலைகளுக்குக் கிடைக்காதது தான் அதற்குக் காரணம் என்று சொல்கிறார்கள். அதனால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாம் 2 அல்லது 3 சர்க்கரை ஆலைகளைத் தான் அமைக்க முடியும் என்கிற காரணத்தால், 1500 டன்னுக்கு மேல் கெப்பாசிட்டி உள்ள ஆலைகளை அமைக்கலாமென்று நான் பொதுவாகத் தான் சொன்னேன். போளூர் பகுதி உட்பட இங்கே பல பிரச்சினைகள் பேசப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறினார்கள். வேலையில்லாமல் இருக்கிறார்கள், ஏழ்மையில் இருக்கிறார்கள், நாடுவிட்டுப் போகிறார்கள் என்றெல்லாம்கூட சொன்னார்கள். பம்பாயி லிருந்து கூட இங்கு வருகிறார்கள். அதுபோல் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்குப் போவது ஒன்றும் பெரிய காரியமில்லை. ஆகவே பிரச்சினைகள் இருக்கிற காரணத்தால், தனியார் முன்வரவில்லை என்றில்லை. இப்போதும் கோயம்புத்தூர், திருநெல்வேலி, பெரியார், இராம நாதபுரம், திருச்சி போன்ற மாவட்டங்களில் உள்ளவர்கள் தான் மனு செய்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளில் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. கரும்பு பயிரிட நில வசதி இருக்கிறது. ரெக்கவரி அதிகமாக வரக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே 1500 டன் திறனளவுள்ள சர்க்கரை

ஆலையை அமைக்க—நான் பேரவையில் சொன்னதையே இங்கும் சொல்கிறேன்—யாராவது தனியார்கள் ஸ்டடி பண்ணி அவர்களுக்கு உதவ வேண்டுமென்று மனு செய்தால், அவர்களுடைய மனுவை இந்த அரசு பரிந்துரை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல் தமிழ் நாடு செராமிக் கார்ப்பரேசன், தமிழ் நாடு மினரல்ஸ் கார்ப்பரேசன், தமிழ் நாடு சால்ட் கார்ப்பரேசன், டாமின் போன்ற நிறுவனங்கள் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. செராமிக் போன்ற ஒன்றிரண்டு நிறுவனங்கள் மட்டும் நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் இருக்கிறது. ஏற்கெனவே போட்ட செங்கல் சூளைகள் எல்லாம் சரியான எஸ்டிமேட் இல்லாமல் இருந்தன, காற்று அதிகமாகப் போய்விட்டது, புல் புரடக்ஷன் கெப்பாசிட்டி இல்லை. இம்மாதிரி குறைபாடுகளுடன் இந்த கார்ப்பரேஷன் இயங்க வேண்டியிருந்தது. மற்றபடி சிறு சிறு அமைப்புகள் எல்லாம் இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. உப்பு நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அதிகமான ஏரியாவில் அதை உற்பத்தி செய்கிறோம்.

அதுபோல் டாமின் நிறுவனத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியபோது, அதனுடைய பணியை அதிக அளவில் ஆக்க வேண்டுமென்ற உணர்வோடு கருத்துக்களைச் சொன்னார்கள். நானும் அந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்கிறேன். ஆயிரம் கியூபிக் மீட்டர் அளவிற்குத் தான் அதனுடைய உற்பத்தி இருக்கிறது என்று சொல்கிறபோது, அத்தகைய அப்ரோச்சோடு தான் இப்போது வெட்டி எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். காரணம் இப்போது அனுப்பிக்கொண்டிருக்கிற பிளாக் கல்லுக்குப் பதிலாக "கட்டிங் அன்ட் பாலிசிங்" என்கிற முறையில் அதைச் செய்து அனுப்பினால், நமக்கு நல்ல விலை கிடைக்கும். இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரியும். ஒரு நேஷனல் வெல்த் என்கிற அடிப்படையில், மினரல்ஸ் மைன்ஸ் வரும்போது, ஓராண்டிலே எவ்வளவு மேக்சிமம் இதை வெட்டி எடுக்க வேண்டுமென்ற உணர்வோடு நாம் இதிலே இருப்பதைவிட, சிஸ்டமேடிக் அப்ரோச் இருக்க வேண்டும். காலா காலத்திற்கு இது இருந்துகொண்டிருக்க வேண்டுமேயொழிய, எங்கெங்லாம் பிளாக் மினரல்ஸ் கிடைக்கின்றனவோ அதையெல்லாம் இரண்டாண்டுக்குள்ளேயே வெட்டி எடுக்க வேண்டுமென்கிற நிலையில், இருக்கிற மலைகளை எல்லாம் பிராப்பராக மைனிங் செய்யாமல் வெட்டி எடுப்பது என்பது ஒரு 'நேஷனல் வேஸ்ட்' ஆக அமையும். அந்த அடிப்படையில்தான் 'சிஸ்டமேடிக்



மைனிங்' என்கிற அடிப்படையில் "கட்டிங் அன்ட் பாலிசிங்" செய்து அனுப்பினால், அதிக இலாபம் கிடைக்கும் என்கிற எண்ணத்தில் 2½ கோடி ரூபாயில் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறோம். இந்தத் திட்டம் இந்த மாதத்திலேயே வந்திருக்க வேண்டுமே என்று மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். இதிலே சங்கடம் இருக்கிறது. ஐ.டி.பி.ஐ.-யிடமிருந்து கடன் பெறுவதிலே கொஞ்சம் சுணக்கம் இருந்தது. அதுவும் ஏறக்குறைய சரியான முறையிலே, நல்ல முறையிலே தீர்ந்து இந்த ஆண்டுக்குள் அந்தத் தொழிற்சாலை வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த வகையில் கட்டிங் அன்ட் பாலிசிங் என்கிற முறையில் வெட்டப்படும் மினரல்சினுடைய மைனிங் அளவு கூட அந்த அளவுக்கு அதிகரிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் அந்த மன்றத்திலே சொன்னேன். அதையே இங்கேயும் சொல்கிறேன். மைனிங் செய்வதற்கான நிலங்களை எடுத்துக் கொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தன. பட்டா நிலமாக இருந்தால்கூட தகராறு இருந்தது. அதிலே இப்போதெல்லாம் கொஞ்சம் 'பிளக்சிபிள்' ஆக இருக்கலாமென்று முடிவு செய்திருக்கிறோம். எல்லா இடத்திலேயும் டாமின் நிறுவனம் வெட்டி எடுத்துக்கொண்டிருக்கிற இடத்தைத் தவிர மற்ற இடங்களில் எல்லாம் மைனிங் செய்யாமல் அப்படியே போட்டுக் கொண்டிருப்பதுகூட வேஸ்ட். அரசாங்க இடம் தான், பட்டா நிலமாக இருந்தால், அவர்கள் மனு செய்தால் அவர்களுக்கும் வாய்ப்பு கொடுக்கலாமென்று அரசு முடிவு செய்திருக்கிறது. புறம்போக்கு நிலம் என்றால் கூட டாமின் நிறுவனமே எல்லாவற்றையும் எடுத்துச் செய்ய முடியாது. அதிலேயிருந்து தான் அவர்கள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதை டாமின் நிறுவனம் தான் செய்ய வேண்டுமென்று முடிவு செய்திருந்தோம். இந்த நிறுவனம் முழுமையாகச் செய்ய முடியாது என்கிற நிலையில் உதிரியை, அரை ஏக்கர், ஒரு ஏக்கர் என்று இருப்பதை, சின்ன சின்ன நிலமாக இருப்பதை தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும், பலர் மைனிங் தொழிலை செய்கிற நிலை ஏற்படும் என்கிற வகையில் இங்கே கருத்துக்கள் சுட்டிக்காட்டப்பட்டன. அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** ஏற்கெனவே கருங்கல் குவாரியைப் பொறுத்தவரையில், அதை தனியார் வெட்டி எடுக்கக்கூடாது, அரசுதான் வெட்டி எடுக்கும் என்கிற நிலையை அரசு எடுத்திருந்தது. இப்போது பாதிக்கப்பட்டவர்கள் வழக்குமன்றத்திற்குப் போயிருக்கும் நிலையில், அரசு

ஒரு பாலிசி டெசிஷன் எடுத்து, ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்றால், தனியார் வெட்டி எடுக்கலாம் என்றும் 500, ஆயிரம் ஏக்கர் என்றால், அரசே எடுத்து வெட்டி எடுக்கலாம் என்கிற முறையிலும் ஒரு முடிவுக்கு வரலாம். **அந்த** வகையில் இந்த அரசு கொள்கை முடிவை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு :** இதுபற்றி கொள்கை ரீதியாக ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் முடிவெடுக்கவில்லை. பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். பல்வேறு ரெப்ரசென்டேசன்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதுகுறித்து இந்த மன்றத்திலேயும், பேரவையிலேயும் பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இதிலே அரசாங்கம் பிடிவாதமாக இருக்காமல், எப்படி இருக்கலாம் என்றும் யோசித்துக்கொண்டிருக்கிறது. நிச்சயமாக இதுகுறித்து அரசு ஒரு முடிவுக்கு வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிய வரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

இன்னும் டான்பெட் போன்ற நிறுவனங்கள் எல்லாம் அதற்கான விரிவாக்கப் பணிகள், பியூரிபிகேஷன் செய்கிற திட்டம் ரூ. 6 கோடியில் ஆய்வில் இருக்கிறது. எண்பது கோடி ரூபாய் திட்டத்தில் மேகனைசட் தொழிற்சாலை நான்கு கட்டமாக நடக்க பிரிவுகள் அமைப்பதற்கான பணிகள் அங்கே நடக்கின்றன. பல்வேறு நிறுவனங்கள் சார்பாக இருக்கிற தொழில்கள் குறித்து எந்தெந்தத் தொழிலை எல்லாம் விரிவாக்கம் செய்ய முடியுமோ, லாபத்தில் இயங்க முடியுமோ, உற்பத்தியை அதிகப்படுத்த முடியுமோ அதில் அதிக கவனம் செலுத்திக்கொண்டு வருகிறோம். இவைகள் மாநில அரசு தங்கள் அதிகாரத்திற் குட்பட்ட, நிதி வசதிக்கேற்ப செய்திருக்கிற பணிகள்.

மைய அரசைப் பொறுத்தவரையில், மைய அரசு முதலீடு தமிழ் நாட்டில் மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பதை பல்வேறு நேரத்தில் நான் சுட்டிக் காட்டியிருக்கிறேன். குறிப்பாக 15 ஆண்டு காலம் என்று எடுத்துக் கொண் டால், தமிழ் நாட்டில் 180 கோடி ரூபாய் தவிர, வேறு எந்த பொதுத்துறை நிறுவனமும் வரவில்லை. இன்னும் சொல்லப்போனால், 21,171 கோடி ரூபாய் மத்திய அரசு தனது தொழில் துறையின் சார்பில் இந்த ஆண்டுகளில் முதலீடு செய்திருக்கிறது. கடந்த ஆண்டு தமிழ் நாட்டில் அதில் 926 கோடி ரூபாய் மட்டுமே போட்டிருக்கிறது. இது மொத்தத்தில் 23-ல் 1 பகுதியாகும். அதிலே 15 ஆண்டு என்று சொல்கிறபோது, இன்னும் சுமார் 125 கோடி என்கிற அளவுக்குத்தான் தந்திருக்கிறது. இன்னொரு கஷ்டமான நிலைமை இப்போது இருக்கிறது. இந்தியா - பூராவும் 87 மாவட்டங்களை, 0 இன்டஸ்ட்ரீஸ்





டிஸ்டிரிக்ட்—அதாவது ஒரு தொழிலுமே இல்லாத மாவட்டங்கள் என்று 87 மாவட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதில் தமிழ் நாட்டில் ஒன்றுகூட வரவில்லை. நாங்கள் மத்திய அரசு அமைச்சரைக் கேட்டபோது, ஏற்கெனவே நீங்கள் முன்னேறி விட்டீர்கள், மாவட்டங்களில் தொழில்கள் இருக்கின்றன என்று சொன்னார். மைய அரசு 33 தாலுக்காக்கள் பின்தங்கியவை என்று ஒரு பட்டியல் தயாரித்திருக்கிறது. அந்த 33 தாலுக்காவில் 89 பஞ்சாயத்து யூனியன் வருகிறது. அதில் 40 பஞ்சாயத்து யூனியனில் 20 லட்சம் ரூபாய்க்கு மேலே மீடியம் ஸ்கேல் இன்டஸ்டிரி இருக்கிறது. அதை அறிவித்ததோடு மட்டுமல்ல, இன்னும் 87 இந்திய மாவட்டங்களை அறிவித்துவிட்டு, அதில் பிரையாரிட்டி மட்டுமல்ல, கட்டாயமும் படுத்துகிறார்கள். 87 மாவட்டங்களில் ஏதாவது ஒரு மாவட்டத்தில் நீங்கள் தொழில் தொடங்கினால்தான், உங்களுக்கு லைசன்ஸ் கிடைக்கும் என்று லெட்டர் ஆப் இன்டென்டில் கண்டிஷன் போடுகிறார்கள். ஏன் இப்படி கட்டுப்படுத்துகிறீர்கள் என்று கேட்டால், "யாரையும் கட்டாயப்படுத்தவில்லை, அப்படியென்றால் பெயரைச் சொல்லுங்கள்" என்றார்கள். பெயரைச் சொன்னால் இன்னும் அவருக்குக் கஷ்டம் வருமே என்று சொல்லவில்லை. ஆனாலும் கடிதங்கள் எழுதி யிருக்கிறோம், அதில் சுட்டிக் காட்டியிருக்கிறோம். விரிவாக்கத்தில்கூட கட்டாயப்படுத்துகிறார்கள். நல்லவேளையாக எக்ஸ்பான்ஷன் புரோகிராமை அனுப்புகிறார்கள். நமக்கு வருகிறபோது, அதிலே போட்டு வருகிறது. நல்ல நிலையில் நடக்கும் தொழிற்சாலைகூட காலப்போக்கில் விரிவாக்கம் இல்லை யென்றால், நஷ்டத்தில் போகும் என்று சொல்லியிருக்கிறோம். திரும்பவும் அதை வற்புறுத்தியிருக்கிறோம். எந்தெந்த மாவட்டங்களில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று சொல்லி, தாலுக்கா அல்லது பிளாக் என்பதை பேசிக் யூனிட்டாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. திவாரி அவர்களிடம் சொன்னேன். "நீங்கள் முதலில் வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்று சொன்னீர்களே, இப்போது நிறுத்தி விட்டீர்களா ?" என்று கேட்டார். அது உண்மையோ இல்லையோ, இப்போது வடக்கு தேய்கிறது என்று கோஷம் எழுவதாகவும் அவர் தெரிவித்தார். அப்படி வடக்கே தொழில் இல்லை என்று சொன்னார்கள். உத்திரப்பிரதேசமும், பீகாரும் பின்தங்கியிருப்பதாக நினைத்தால், 50 தாலுக்காக்களை அறிவித்துக் கொள்ளுங்கள். குறைந்தபட்சம் 5-10 பிளாக்குகளை இங்கே பேசிக் யூனிட்டாக வைத்து எல்லா மாநிலங்களுக்கும் கொடுப்பதுபோல் இங்கும் கொடுக்க வேண்டுமென்று சொன்னோம். அதையும் மைய அரசு நிச்சயமாக கவனித்து ஆணையிடும் என்று நம்புகிறேன்.

இன்னொன்று. இந்தத் தொழிற்சாலைகள் விரிவாக்கம் கேட்கிறபோது 87 மாவட்டங்களுக்குப் போ என்று சொல்வது எந்த விதத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாதது, மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதை இந்த மன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் எக்ஸ்டென்ஷன் உத்தரப் பிரதேசத்திற்குப் போனால், அவர்களும் போக மாட்டார்கள், தொழிலும் போகாது, இங்கே வருவதும் கெட்டுப் போகும். அந்த சூழ்நிலை உருவாகக் கூடாது என்று சொல்கிற நேரத்தில், அவற்றை அதிகாரிகள் மட்டத்தில் அப்படி நடக்குமானால், அமைச்சர் மட்டத்தில், பிரதமர் மட்டத்தில் தலையிட்டு, எல்லா மாநிலங்களும் உரிய பங்கைப் பெறுகிற வகையில் மைய அரசு இருக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலைபற்றி டாக்டர் சனார்த்தனம் அவர்கள் சொன்னார்கள். நேவல் அகாடமிக்குக்கூட இடம் கொடுத்தோம். தருவதாக எழுதியும் இருந்தோம். ஆனால் அது கேரளாவுக்குப் போய் விட்டது. இன்னொன்றையும் பத்திரிகையில் படித்திருப்பீர்கள். பெரம்பூர் கோச் பாக்டரியின் விரிவாக்கம் இங்கே போடுவதுதான் லாபகரமானதாக இருக்கும் என்றும், இங்கிருந்தபடியே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்றும் நாம் சொன்னதோடு, பார்லிமெண்ட் எஸ்டிமேட் கமிட்டி அறிக்கையே தாக்கல் செய்திருக்கிறார்கள். அதனுடைய விரிவாக்கம் இங்கேதான் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். எனவே 'இந்த நேரத்தில் அந்த வேண்டுகோளையும் வைத்து, அதையும் ஏற்றுக்கொண்டு தமிழ் நாட்டில் ரயில் பெட்டித் தொழிற்சாலையின் விரிவாக்கத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்துஸ்தான் பிலிம் தொழிற்சாலையின் 'விரிவாக்கம் முதலில் தமிழ் நாட்டுக்குத்தான் வரும், அதன்பிறகுதான் பிற மாநிலங்களுக்கு அதற்கடுத்து கொடுக்கப்படும் என்று மைய அமைச்சர் சொன்னார்கள். அதையும் இந்த மன்றத்தின் மூலம் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுபோல் நேவல் அகாடமிக்கு இடம் கொடுத்தும்கூட, நமது ஊர் அமைச்சர் அங்கே ராணுவ அமைச்சராக இருந்தும்கூட, நமக்குத் தரப்படவில்லை. இப்போது பத்திரிகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் படித்திருப்பீர்கள். ஆட்சி வேண்டுமா, நேவல் அகாடமி வேண்டுமா என்ற அளவுக்கு கேரளாவில் ஒரு போராட்டம், உண்ணாவிரதம் என்று தொடர்ந்து கொண்டிருக்கிறது. நேவல் அகாடமிக்காக அவர்கள் ஒதுக்கிய இடம், விளை நிலங்கள் என்றும் அதனால் பாதிப்பு உணவு உற்பத்தியில் ஏற்படும் என்றும் போராடுகிறார்கள். ஆகவே, இதைக் காரணமாகக் காட்டி, இப்போதாவது அந்த நேவல் அகாடமியை தமிழ் நாட்டுக்குக் கொண்டுவர வேண்டும், அதற்காக இடம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும் இந்த மன்றத்தின் மூலமாக மத்திய அமைச்சருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சண்டை ஓய்ந்த பிறகு, நேவல் அகாடமியின் பிற பகுதிகள், டிஃபென்ஸ் யூனிட் போன்றவைகளை கேரளாவுக்குக் கொடுக்கலாம் என்றும் சொல்லிக்கொள்கிறேன். இதை மைய அரசு கவனிக்க வேண்டும்.



அதைப்போலவே, நியூஸ் பிரிண்ட் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், சேஷசாயி நிறுவனத்தின் தலைவர் திரு. விஸ்வநாதன் தான் தலைவராக இருக்கிறார். நமது அரசு தொழில் துறையின் செயலாளர் திரு. ராமச்சந்திரன் அவர்கள்தான் மேனேஜிங் டைரக்டராக இருக்கிறார். அதற்கான கட்டிடப் பணிகள் நடக்கின்றன. இயந்திரங்கள் வந்து, இப்போது அவைகளை நிர்மாணிக்கும் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. விரைவில் துவங்க இருக்கிறது. 1985-ல் உற்பத்தி நிச்சயமாகத் துவங்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதுபோல், ரூ. 100 கோடியில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்ன காகிதத் தொழிற்சாலை இப்போது ரூ. 170 கோடிக்கு போயிருக்கிறது என்று சொன்னார்கள். அது ரூ. 100 கோடி அல்ல. முதன்முதலில் திட்ட மதிப்பீடே ரூ. 170 கோடி. அது இப்போது ரூ. 190 கோடி அல்லது 195 கோடியில் வந்து நிற்கும் என்ற கவலை இருக்கிறது. அதற்கு இரண்டு காரணம் இருக்கிறது.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் 1978-ல் ஆளுநர் உரையாற்றிய நேரத்தில் ரூ. 100 கோடி அளவில் காகித ஆலை அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதைத்தான் நான் சொன்னேன். அடுத்த ஆண்டு ரூ. 120 கோடியானது. முதலில் சொன்னது ரூ. 100 கோடிதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** ப்ராஜக்ட் ரூ. 100 கோடியில் ஆரம்பித்து, அது உயர நாம் காரணம் அல்ல. ஒன்று வெளிநாட்டுச் செலாவணி. அப்போது டாலர் ரேட் 8 ரூபாயாக இருந்தது. இப்போது மார்க்கெட் ரேட் மாறி, 10 ரூபாய், 10.50 ரூபாய் என்று டாலர் ரேட் மாறியிருக்கிறது. அது ஒரு காரணம். இறக்குமதி வரியும் அதிகரித்திருக்கிறது. அதுவும் ஒரு காரணம்.

(பிற்பகல் 1-00)

அடுத்த காரணம் மத்திய அரசால் இம்ப்போர்ட் டியூட்டி அதிகப்படுத்தப் பட்டதாகும். அதன் காரணமாக சுமார் 7 முதல் 10 கோடி ரூபாய் வரி இதற்கு அதிகமாகச் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கெனவே,

[திரு. சு. திருநாவுக்கரசு] [1983 ஏப்ரல் 20

உலக வங்கி, மத்திய அரசு மற்றும் ஐ.டி.பி.ஐ. அதிகாரிகளோடு சேர்ந்து பேசும்போது, இவ்வாறு இந்தத் திட்டம் இதே அளவுக்குத்தான் இருக்க வேண்டும். இதன் தொகை எந்த வகையிலும் அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளப்பட வேண்டும், டியூட்டி அதிகப்படுத்தப்படக்கூடாது என்றெல்லாம் பேசப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது. அதற்குப் பிறகு மைய அரசு இம்போர்ட் டியூட்டியை அதிகரித்திருப்பதன் காரணமாக. திட்டச் செலவு அதிகரிக்கிறது என்ற காரணத்தை எடுத்துச் சொல்லி, மத்திய அரசு இதற்கான இம்போர்ட் டியூட்டியைக் கைவிட வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல், இது முழுக்க முழுக்க பொதுத் துறை நிறுவனம் என்ற விவரத்தையும் சொல்லி, தற்போது இந்திய நாட்டிற்குத் தேவைப்படும் பத்திரிகைக் காகிதம் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது என்பதையும் நினைவுபடுத்தி, தமிழ் நாட்டில் தொடங்கப்படும் இந்தப் பத்திரிகைக் காகித உற்பத்தியாலை தயாரிக்கும் காகிதம் தமிழ் நாட்டிற்கு மட்டுமின்றி இந்தியா முழுவதுமுள்ள மாநிலங்களுக்குப் பயன்படும் என்பதையும் எடுத்துச் சொல்லி, ஆகவே இதன்மீது விதிக்கப்படும் இம்ப்போர்ட் டியூட்டியைக் கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதைச் சொல்லும்போது, இன்னொரு விஷயத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய தொழிற் துறை அமைச்சர் திரு. திவாரி அவர்கள்கூட ஒரு விவரத்தைச் சொன்னார். இந்தத் தொழிற்சாலையைப் போல் உத்தரப்பிரதேசத்திலும் இன்னொரு தொழிற்சாலையை உருவாக்கலாமா என்று யோசிக்கிறோம். எனவே இந்தத் தொழிற்சாலையை விரைவில் துவக்குங்கள் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். இந்தக் காரணங்களையெல்லாம் சுட்டிக்காட்டி இந்தத் தொழிற்சாலையின் ‘வையபிலிட்டியைப்’ பாதிக்காத வகையில் இதை விரைவில் துவக்குவதற்கு விரைவில் உற்பத்தியை மேற்கொள்வதற்கும் ஏதுவாக இந்த இம்போர்ட் டியூட்டியைப் பொறுத்த வரையில், ஒரு எக்சம்ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்களும் இந்தக் கோரிக்கையை மிகவும் பரிவோடு கவனிப்பார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

அடுத்து, திரு. விஸ்வநாதன் அவர்களுக்குக் கொடுக்கப்படும் பீஸ்பற்றி இங்கே குறிப்பிடப்பட்டது. அவருக்குக் கொடுக்கும் பணத்தை கமிஷன் என்றே குறிப்பிட்டார்கள். நான் ஏற்கெனவே இதைக்குறித்து இங்கே தெரிவித்திருக்கிறேன் என்று நினைக்கிறேன். இந்தத் தொகையை திரும்பத் திரும்பக் கமிஷன், கமிஷன் என்று சொல்வதால், அது வேறு பொருளைத் தந்துவிடும்



1983 ஏப்ரல் 20] [திரு. சு. திருநாவுக்கரசு]

என்பதால், அதுபற்றிய நிலையை மட்டும் மீண்டும் விளக்க விரும்புகிறேன். அது அவருடைய டெக்னிகல் பீஸ். அவ்வளவுதான் “பிராஜக்ட் காஸ்ட்டில்” எவ்வளவு பீஸ் தரப்பட வேண்டுமோ அதைத்தான் அவருக்குத் தருகிறோமே தவிர, அவருக்குக் கமிஷன் எதும் தரப்படவில்லை. தனியார் துறையைச் சார்ந்த அவருடைய அனுபவத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள இருக்கிறோம். எனவே திரும்பத் திரும்ப “அவர் இன்னொரு தொழிலில் ஈடுபட்டிருப்பதால், இந்தத் தொழிலில் முழுமையாக ஈடுபடுவாரா? இதில் முழுமையான இன்ட்ரஸ்ட்டைக் காட்டுவாரா” என்றெல்லாம் நாம் சந்தேகப்படத் தேவையில்லை. அவர் இன்னொரு காகித மில்லில் தொடர்பு கொண்டுள்ளார் என்றாலும், அது வேறு இது வேறு என்பதையும் நான் விளக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, இதற்குத் தேவைப்படும் மூலப் பொருளான—பகாசி—கரும்புச் சக்கையைப் பொறுத்தவரையில், அது எங்கேயிருந்து கிடைக்கும் என்று கேட்டார்கள். 40,000 அல்லது 50,000 டன் தேவைப்படும் என்றால், எங்கேயிருந்து இதைக் கொண்டு வரப் போகிறீர்கள் என்றெல்லாம் கேட்டார்கள். இதற்காக ஐந்து சர்க்கரை ஆலைகளோடு—ஒவ்வொன்றும் 1,750 டன் பகாசி அளிக்கக்கூடிய திறனுள்ளது—ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. இவ்வாறு இந்த ஐந்து சர்க்கரை ஆலைகளிலிருந்தும் கரும்புச் சக்கை எடுத்துக்கொள்ளப்படுவதால், அவைகளுக்குத் தேவைப்படும் எரிபொருளான நிலக்கரிக்கு நாம் உத்தரவாதம் அளித்து, மத்திய அரசிடமிருந்து ஒரு கமிட்மெண்ட்டை வாங்கிக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும், இந்த டெக்னாலஜியைப் பொறுத்தவரையில், இது ஏற்கெனவே பல நாடுகளில் கையாளப்பட்டு தோல்வி கண்டது என்றெல்லாம்கூட சொல்லப் பட்டது. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், எல்லாவற்றையும் மாநில அரசே முடிவு செய்துவிடவில்லை. இவ்வாறு உலகத்தில் எங்குமே இல்லாத டெக்னாலஜியைக் கொண்டு வருவதில், நாங்கள் மட்டும் என் அவசரத்தைக் காட்டப் போகிறோம்? அதுமட்டுமல்ல. உபயோகமற்ற டெக்னாலஜியைக் கொண்டு வருவதில் நாங்கள் ஆர்வம் காட்ட வேண்டிய அவசியமுமில்லை. இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இதற்கு உலக வங்கியும் ஐ.டி.பி.ஐ.-ம் அதிகமான நிதி உதவி செய்கிறார்கள். அதாவது நாம் போடும் மூலதனம் சுமார் 30 கோடி என்றால், அவர்கள் போடும் மூலதனம்—அவர்கள் தரும் கடன்—சுமார் ரூ. 170 கோடியாகும். இப்படி மற்ற நிறுவனங்கள் துணிந்து வந்து ரூ. 170 கோடி அளவுக்கு மூலதனக் கடன் கொடுக்கிறார்கள் என்றால், அவர்களெல்லாம் இந்தத் திட்டமெல்லாம்

வையபிளாக, சக்சஸ்புலாக இருக்காதென்றால், இந்த அளவுக்குத் துணிந்து நிதி உதவி செய்வார்களா, கடன் கொடுக்க முன்வருவார்களா என்பதைச் சிந்திக்க வேண்டும். எனவே இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை, இப்படி பல்வேறு உலக நிறுவனங்களோடு பேசிப் பேசி, பல்வேறு முறைகளில் ஆய்வு செய்து அதற்குப் பிறகுதான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் அமெரிக்கா சென்றிருந்தபோது, இங்கேயிருந்து கரும்புச் சக்கை "விலாயத் கார்ப்பரேஷனுக்கு" அனுப்பி வைக்கப்பட்டு அங்கேயுள்ள மாடல் பிளாண்ட்டில் பத்திரிகைக் காகிதம் உற்பத்தி செய்யப்பட்டு என்னிடம் தந்தார்கள். நான் அதை வெளியே எடுத்து வந்து நிருபர்களிடம்கூட காட்டினேன். நல்ல தரமான பத்திரிகைக் காகிதம் என்பதை நாம் பார்த்தேன். எனவே இது நிச்சயமாக வெற்றிகரமான திட்டமாக அமையும் என்றுதான் நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். அவ நம்பிக்கை கொள்ளத் தேவையில்லை என்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். உறுதியான இந்தத் திட்டம் வெற்றி பெறும் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்க விரும்புகிறேன்.

அடுத்து, சிமின்ட்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் சென்ற முறை பேசும்போது, கோபாலபுரம் கொடோனில் எப்படி ஒரு அதிகாரி போலியான உத்தரவு கொடுத்தார், அதனால் எத்தகைய தவறு நடந்தது என்பதைப்பற்றிக் குறிப்பிட்டார். அப்போதே நான் அதுபற்றி விசாரிக்கப் படும் என்றும், லெவி சிமெண்ட்டைத் தவறுதலாகக் கொடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டேன். அந்தக் குற்றச்சாட்டு பற்றிய விவரம் இங்கே இப்போது என்னிடம் இல்லை என்றாலும், அதுபற்றிய விசாரணை நடந்திருக்கிறது, யார் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்ற விவரத்தை இந்த அவையிலேயே வைக்கத் தயாராக இருக்கிறேன். தற்போது சிமின்ட் விநியோகத்தில் டியூயல் சிஸ்டம் வந்துவிட்டதால் அத்தகைய பிரச்சினைகள் தற்போது இல்லை. கிடைக்கிற லெவி சிமின்ட் முறையாக விநியோகிக்கப்படுகிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவிக்கப்படுவதைக் குறித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் வாலாஜாபேட்டை, ஆற்காடு என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டதால் இந்தத் திட்டத்தின் மூலம் ஆற்காடுக்கு இருந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது என்று சொல்லி ஆற்காட்டையும் பின்தங்கிய வட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கோரினார். நான்கூட அதை இங்கே அறிவிக்க முடியுமா என்று பார்த்தேன். அதில்



இருக்கிற கஷ்டம் என்னவென்றால், அது 'சென்ட்ரல் சப்சிடி ஏரியா'-வில் வருகிறது. மத்திய அரசு பின்தங்கிய வட்டங்கள் என்று 33 தாலுக்காக்களை அறிவித்திருக்கிறது. அதில்தான் வாலாஜா வருகிறது. நேற்றைக்கு நான் பேரவையில்கூட ஒரு அறிவிப்பைச் செய்தேன். நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி—இராதாபுரம் இரண்டாகப் பிரிந்த காரணத்தால்—அங்கே ஸ்டேட் சப்சிடி கொடுக்கிற காரணத்தால்—நான் உடனடியாக பின்தங்கிய வட்டங்களாக அறிவிக்கப்பட்ட ஆறு வட்டங்களோடு ஏழாவது வட்டமாகச் சேர்த்து அறிவித்துவிட்டார். ஆனால் புதுக்கோட்டை மாவட்டத்தில் சென்ட்ரல் சப்சிடி கொடுக்கப்படுகிற ஏரியாவில் இப்படிப்பட்ட ஒரு சங்கடம் ஏற்பட்டிருக்கிறது. கந்தர்வக்கோட்டை இரண்டாகப் பிரிந்த காரணத்தால், அங்கே ஆரம்பிக்கப்படும் தொழில்களுக்கு மத்திய அரசின் சப்சிடி கிடைக்காத நிலை இருக்கிறது. எனவே கந்தர்வக்கோட்டையையும் ஆற்காட்டையும் மத்திய அரசு பின்தங்கிய பகுதிகளாக அறிவிக்க வேண்டும் என்று கேட்கிறோம். வட்டங்களைப் பிரிப்பதால், மக்கள் அங்கேதான் இருக்கிறார்கள். தொழில்களும் அங்கேதான் இருக்கின்றன. இவ்வாறு வட்டங்களின் எல்லைகளை நாம் மாற்றும்போது இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறது. எனவே இந்த இரண்டு வட்டங்களையும் பின்தங்கிய பகுதிகளில் சேர்க்க வேண்டும் என்று எழுதி யிருக்கிறோம் என்று நினைக்கிறேன். எழுதவில்லை என்றாலும் எழுதி இதை வலியுறுத்துவோம் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஏற்கெனவே தெரிவித்தபடி, ஏழு தாலுக்காக்களையும் புதிதாக பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திருக்கிறோம். அங்கெல்லாம் உச்சகட்டமான ரூ. 15 லட்சம் சப்சிடியும் கடன் வசதிகளும் கிடைக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன் . . .

**திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு தாலுக்காக்களையும்பற்றி மத்திய அரசுக்கு எழுதி அனுமதி பெறுகிறேன் என்று குறிப்பிட்டதற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அனுமதி எப்போது வருமோ தெரியாது. எனவே அந்த வகையில் ஏற்படுகிற காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையில் தற்போது ஏழு வட்டங் களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்போல், இந்த இரண்டு வட்டங்களையும் சேர்த்து அறிவித்துவிட்டால், நன்றாக இருக்கும். மத்திய அரசு இவைகளைச் சேர்க்கும் வரையாவது தமிழக அரசே சப்சிடிகளைக் கொடுக்க முன்வரும் வகையில் ஆற்காட்டை எட்டாவது வட்டமாக அறிவிக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** நான்கூட இதைப்பற்றி யோசித்தேன். ஆஃப் தி ரெக்கார்டு பேசுவதற்கு மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால்—ஒரு நிமிடத்திற்கு மட்டும் அனுமதித்தால்கூடபோதும்—அது பத்திரிகைகளில் வராமல் இருக்க வேண்டும்—அப்படி அனுமதி கொடுத்தால் உண்மையை நான் இங்கே சொல்ல முடியும். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால் இப்போது மாநில அரசு அவ்வாறு அறிவித்துவிட்டால் அதற்குப் பிறகு மத்திய அரசு "நீங்கள்தான் ஏற்கெனவே அறிவித்து விட்டீர்களே, இதற்கு மேல் நாங்கள் எதற்குத் தர வேண்டும்" என்று கேட்க ஆரம்பித்துவிடுவார்கள். எனவேதான் ஆற்காடு மற்றும் கந்தர்வக்கோட்டைபற்றி இங்கே அறிவிக்கவில்லை என்பதைச் சொல்லிக்கொண்டு அதற்கான வாய்ப்பு வசதிகள் எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதையும் பரிசீலிக்கிறேன் என்று சொல்லிக்கொள்கிறேன். எனவே இந்த இரண்டு வட்டங்களைப் பொறுத்தவரையில், மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்திப் பெறுவோம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, 10 இடங்களில் ஒவ்வொன்றும் 70 ஷெட்கள் அமைக்க வசதி செய்துள்ளோம். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் சுமார் 700 ஷெட்களை, இராமநாதபுரம் மாவட்டம் ஓரியூர், பெரியார் மாவட்டம் திங்களூர், புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி, திருநாவலூர், கரூர், தென்னாற்காடு மாவட்டம் மணலூர்ப்பேட்டை, உசிலம்பட்டி, மேலப்பாளையம், மேலவீரவநல்லூர், பண்ருட்டி ஆகிய 10 இடங்களில் அமைக்க இருக்கிறோம். அநேகமாக மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய அனைத்துப் பிரச்சினைகளுக்கும் நான் பதில் சொல்லியிருக்கிறேன். இதற்கு மேலும் பேசி மாண்புமிகு உறுப்பினர்களின் பொறுமையைச் சோதிக்க விரும்பவில்லை. நேரம் அதிகமாகிக் கொண்டிருக்கிறது . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** தொழில்கள் வருகின்றன என்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நாங்கள் பொறுமையோடு இருக்கத் தயாராக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு:** தற்போது, தமிழகம் தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறது. நமது நிலை உயருவதற்கு இன்னும் அதிகமான வாய்ப்புகள் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். மத்திய அரசின் பரிபூரணமான ஒத்துழைப்பு இருந்தால், நாம் இன்னும் வேகமாக முன்னேறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இந்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்துகிற அளவுக்கு, காலதாமதம் ஏதுமில்லாமல் தற்போது நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம் என்று



சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் எடுத்துக் கூறியுள்ள ஆலோசனைகள், அறிவுரைகள் ஆகிய அனைத்திற்கும் நன்றி தெரிவித்து விடை பெறுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** அவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை 21—4—1983 வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 1-09)

## 6. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

260. Notification issued with G.O. Ms. No. 1498, Rural Development and Local Administration, dated the 22nd August 1981 regarding certain amendments to the Tamil Nadu Municipal Medical Service Rules, 1970 [Laid on the table of the House under section 304 (d) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)].

261. Notification issued with G.O. Ms. No. 3038, Home, dated the 1st December 1982 regarding certain amendments to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

262. Tenth Annual Report of the Pallavan Transport Corporation Limited for the year 1981-82 (English). [Laid on the table of the House under section 619 (A) of the Companies Act, 1956 (Central Act I of 1956)].

*B. Reports, Notifications and Other Papers.*

157. Fourth Report of the Committee on Delegated Legislation. (English).

158. Report of the High Level Committee headed by Dr. Kulandaiswamy to Review the Higher Secondary School Vocational Training Courses. (Tamil).

159. Audited Accounts of the Fifth World Tamil Conference, Madurai, 1981. (Tamil).

160. Policy Note on Demand No. 58—Loans and Advances by the State Government. (Tamil and English).

161. Policy Note on Pension, 1983–84. (Tamil and English).

162. Policy Note on Miscellaneous Relief and Rehabilitation of Indian Overseas and Refugees and Evacuees. (Tamil and English).

163. Performance Budget on Rehabilitation Department, 1983–84. (Tamil and English).

164. Policy Note on State Excise Department, 1983–84. (Tamil and English).





## இணைப்பு I

[381 ஆம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண் 297-க்கான விடையைக் காண்க.)

1982 ஆம் ஆண்டு மே திங்கள் 1-இல் இம் மாநிலத்தில் 49 அரசு விதைப் பண்ணைகள் இயங்கி வந்தன. மாவட்ட வாரியாக இயங்கி வந்த அரசு விதைப் பண்ணைகளின் விபரம் பின்வருமாறு :—

| மாவட்டம். (1) | பண்ணை அமைந்துள்ள இடம். (2) |
|---|---|
| (1) செங்கற்பட்டு | (1) காஞ்சிபுரம் |
| | (2) கொழுந்தலூர் |
| | (3) புட்லூர் (எண்ணெய் வித்துப் பண்ணை) |
| (2) வட ஆற்காடு | (1) அந்தியாந்தல் |
| | (2) வாழவச்சனூர் |
| | (3) நல்லாக் (எண்ணெய் வித்துப் பண்ணை) |
| | (4) துரைராஜ் நகர் (எண்ணெய் வித்துப் பண்ணை) |
| (3) தென் ஆற்காடு | (1) மிராளூர் |
| | (2) வண்டிராயன்பேட் |
| | (3) வெள்ளப்பாக்கம் |
| | (4) இருவேல்பட்டு |
| | (5) காருப்பம் |
| | (6) வாலூர் |
| | (7) வடக்கநந்தல் |
| (4) தஞ்சை | (1) சாக்கோட்டை |
| | (2) நாகமங்கலம் |
| | (3) திருக்கடையூர் |
| | (4) திவாம்பாள்பட்டிணம் |
| | (5) காஞ்சிக்குடிக்காடு |
| | (6) மூங்கில்குடி |
| | (7) ஓரத்தூர் |
| | (8) சிக்கல் |
| | (9) நெடும்பலம் |
| | (10) கீராந்தி |

| மாவட்டம். (1) | பண்ணை அமைந்துள்ள இடம். (2) |
|---|---|
| (5) திருச்சி | (1) நெய்குப்பைப்புதூர் |
| | (2) புதூர்பாளையம் |
| | (3) இனுங்கூர் |
| (6) புதுக்கோட்டை | (1) அண்ணாபண்ணை |
| (7) மதுரை | (1) வினாயகபுரம் |
| | (2) கீழ்க்கூடலூர் |
| | (3) வைகை அணை-1 |
| | (4) வைகை அணை-2 |
| (8) இராமநாதபுரம் | (1) தேவதானம் |
| (9) திருநெல்வேலி | (1) கரையிருப்பு |
| | (2) மேலகரம் |
| | (3) கிள்ளிகுளம் |
| | (4) வடகரை (எண்ணெய் வித்துப் பண்ணை) |
| (10) கன்னியாகுமரி | (1) திருப்பதிசாரம் |
| (11) கோவை | (1) கண்ணம்பாளையம் |
| | (2) பாப்பான்குளம் |
| | (3) பொங்களூர் |
| (12) பெரியார் | (1) பவானி |
| | (2) பவானிசாகர் |
| | (3) பவானிசாகர் (எண்ணெய் வித்துப் பண்ணை) |
| | (4) சத்தியமங்கலம் |
| (13) சேலம் | (1) டேனிஷ்பேட் |
| | (2) மேட்டூர் அணை |
| | (3) முள்ளுவாடி |
| (14) தர்மபுரி | (1) பாப்பாரப்பட்டி |



## இணைப்பு II

408 ஆம் பக்கத்தில் இனம் 4(1)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

### விளக்கவுரை.

தற்பொழுது, தமிழ் நாட்டில் 107 தொழிற் கூட்டுறவு தீப்பெட்டி சேவை சங்கங்கள் உள்ளன. அவைகள் பாரம்பரியமுள்ள பகுதிகளிலும் பாரம்பரியமில்லாத பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. பாரம்பரியமில்லாத பகுதிகளிலுள்ள தொழிற் கூட்டுறவு தீப்பெட்டி சேவை சங்கங்கள் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகளின் தரம் குறைவாக இருக்கும். ஆதலால் அவைகளை சந்தையில் விற்பனை செய்வதில் சிரமம் இருந்தது. இதன் விளைவாக சென்ற ஆண்டில் தீப்பெட்டி விற்பனையில் தேக்கநிலை இருந்தது. இந்நிலையைப் போக்க சாத்தூரிலுள்ள தமிழ் நாடு தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு சங்கங்களின் கூட்டமைப்பு, தொழில் துறை உதவி இயக்குநர் ஒருவரின் தலைமையின்கீழ் விற்பனை பிரிவு ஒன்றை அமைத்தது. அவர் பாரம்பரியமற்ற பகுதிகளுக்கு சுற்றுப்பயணம் செய்து அங்குள்ள தொழிற் கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலைகள் நல்ல தரமான தீப்பெட்டிகள் உற்பத்தி செய்ய அறிவுரை வழங்கியும் அவைகள் உற்பத்தி செய்யும் தீப்பெட்டிகளை விற்பனை செய்யவும் ஏற்பாடுகள் செய்கிறார். அதன் விளைவாக, அத்தீப்பெட்டி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டிகளுக்கு சந்தையில் நல்ல வரவேற்பு உள்ளது. தற்சமயம் தீப்பெட்டிகள் உற்பத்தியான உடன் நல்ல விலையில் விற்பனை ஆகின்றன. தேக்கநிலையும் இல்லை. மேலும் விற்பனை ஆகாத தீப்பெட்டிக் கட்டுகள் இருப்பில் இல்லை.

## இணைப்பு III

412 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

நீலகிரி மாவட்டத்திலுள்ள பார்சன் வேலி நீர்த் தேக்கத்திலிருந்து நீர் கொண்டு வரப்பட்டு உதகமண்டலம் நகராட்சிக்கும், வெல்லிங்டன் பாதுகாப்பு நிறுவனத்திற்கும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 1981-ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி உதகமண்டலம் நகராட்சியின் மக்கட் தொகை 74,592 ஆகும். 2011-ம் ஆண்டில் மக்கட் தொகை 1,50,000-க்கு உயரும் என எதிர் பார்க்கப்படுகிறது. அதிகரித்து வரும் மக்கள் தொகையின் காரணமாக குறிப்பாக கோடைக் காலத்தின் தேவைக்கு, உதகமண்டலம் நகராட்சி தண்ணீர் விநியோகத்தைப் பெருக்குவது அவசியமாகிறது.

2. நகராட்சிக்கும், பாதுகாப்பு நிறுவனத்திற்கும் பார்சன் வேலி நீர்த் தேக்கத்திலிருந்து தினமும் ஒரு மில்லியன் காலன் நீர் எடுக்கப்படுகிறது. இந்நீர்த் தேக்கத்திலிருந்து இன்னும் அதிக அளவிலான நீரைக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த அபிவிருத்தித் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ப தினமும் நகராட்சிக்கு இரண்டு மில்லியன் காலனும் பாதுகாப்பு நிறுவனத்திற்கு ஒரு மில்லியன் காலனுமாக மொத்தம் மூன்று மில்லியன் காலன் நீர் கொண்டு வர திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 457.44 இலட்சம் செலவு பிடிக்கும் என்றும் வருடந்தோறும் பராமரிப்புச் செலவு ரூ. 29.38 இலட்சம் ஆகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. திட்டச் செலவினை ஏற்பதற்கான உதகமண்டலம் நகராட்சி மன்றத் தீர்மானம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் எதிர்பார்க்கப்படுகிறது.

3. பார்சன்வேலி நீர்த்தேக்கம் மற்றும் வேறு ஒன்பது நீர்த் தேக்கங்களிலிருந்தும் உதகமண்டலம் நகராட்சிக்கு தண்ணீர் வழங்கப்படவிருக்கிறது. பாதகமான பருவ நிலையாலும் பருவமழை தவறியதாலும் அனைத்து நீர்த் தேக்கங்களிலும் நீர் மட்டம் குறைந்துள்ளது. தினமும் வழக்கமாக வழங்கப்பட்டு வரும் 8,66,000 காலன் நீருக்குப் பதிலாக தற்சமயம் தினசரி 5,50,000 காலன் என்ற குறைந்த அளவான நீரே வழங்கப்பட்டு வருகிறது. 36 இடங்களில் லாரிகள் மூலம் நீர் வழங்கப்பட்டு வருகிறது. டேவிஸ் பூங்கா மற்றும் பழைய ஊட்டி முதலிய பகுதிகளில் திறந்த வெளிக் கிணறுகளை வெட்டி குழாய்களை இணைத்து புனிதமேரி குன்று பகுதிக்கு நீர் ஏற்றம் செய்யும் செயற்குறிப்பு நகராட்சியிடம் உள்ளது.

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி
5 ஏப் 1984
தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

[ISSUED 27—12—19

# TAMIL NADU LEGISLATIVE COUNCI DEBATES

# OFFICIAL REPORT

THURSDAY 21st APRIL 1983

Volume CXCIX (No. 4)

© GOVERNMENT OF TAMIL NADU 1983

Legislative Council Department
Fort St. George, Madras-600 009.

Price Rs. 2.75 Paise]

# தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

---

வியாழக் கிழமை, 1983 ஏப்ரல் 21.

சித்திரை 8, ருத்ரோத்காரி—திருவள்ளுவராண்டு 2014.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 1. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### புதுக்கோட்டை மேல்நிலைப் பள்ளியின் தேர்வு கண்காணிப்பாளர் தாக்கப் பட்டது குறித்து.

**மாண்புமிகு மேலவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பா. ரா. தாமஸ், திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் ஆகியோர் புதுக்கோட்டை மேல்நிலைப் பள்ளித் தேர்வுக்கு கண்காணிப்பாளர் பணிக்குச் சென்ற ஆசிரியர்கள் தாக்கப்பட்டது குறித்து ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கான முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது எவ்வாறு விதிகளின் கீழ் வருகிறது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பா. ரா. தாமஸ்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாதம் 8 ஆம் தேதி அன்று புதுக்கோட்டை அருள்மிகு பிரகதாம்பாள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற 'பிளஸ்-2 தேர்வுக்கு ஆசிரியர்கள் மேற்பார்வைப் பணி செய்தபோது, தமிழ் நாடு பட்டதாரிகள், மேல்நிலை முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த பொருளாளர் திரு. மங்கப்பன் அவர்கள் மேற்பார்வை செய்தார்கள். அங்குள்ள மாணவர்கள் தவறான முறையைப் பின்பற்ற முயன்றபோது, மேற்பார்வை செய்த அவர் அருகில் நின்று தவறு செய்ய விடாமல் முழுமையாகத் தடுத்தார். ஆகவே அவர் வெளியே வந்தவுடன் அவரை அடித்து, உதைத்து, கேவலப்படுத்தி விட்டார்கள். சங்கத்தினர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட கல்வி அலுவலருக்கும், மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளருக்கும் முறையீடு செய்திருக்கிறார்கள். அதோடு கூட தேர்வுப் பணியை மேற்கொள்ள முடியாது என்றும் எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அதிகாரிகளுடைய வேண்டுகோளுக்கிணங்க, அரசின் வேண்டுகோளுக் கிணங்க, தேர்வுப் பணியைச் செய்து ஒத்துழைத்திருக்கிறார்கள்

18 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், தனியார் மேல்நிலைப் பள்ளி களிலும் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் பணி நீக்கம செய்யப்பட்டுள்ளது குறித்து

[1983 எப்ரல் 21

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசினர் மேல்நிலைப் பள்ளிகள் சிலவற்றில், இந்திய கலாச்சாரப் பாடம் (தத்துவம் மற்றும் தர்க்கவியல் உள்ளிட்ட) போதனைக்குப் போதிய மாண வர்கள் சேர விரும்பாமையின் காரணமாக 1981-82-ல் 11 ஆம் வகுப்பிலும், 1982-83-ல் 12 ஆம் வகுப்பிலும் இந்தப் பாடப் பிரிவு சில அரசினர் மேல் நிலைப் பள்ளிகளில் நடத்தப்பட வில்லை. அதனால், இப்பாடத்திற்கென நியமனம் செய்யப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியாகள் சிலருக்கு வேலையே இல்லாமல் இருந்தது. வேலை வாய்ப்புத் துறையிடமிருந்து பட்டியல் பெற்று தற்காலிகமாக நியமனம் பெற்று பணியாற்றி வந்தவர்களில், இளையோராக இருந்த மூன்று ஆசிரியர்கள், விதிகளின்படி, 4—12—1982-ல் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். பணிநீக்கம் செய்யப்பட்டுள்ள மூன்று முதுகலைப் பட்டாதரி ஆசிரியர்கள் மற்றும் தமிழ் நாடு முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் கழகம் கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவர்களைப் பணியில் அமர்த் துவதற்கான நடவடிக்கை பள்ளிக் கல்வி இயக்குநரால் எடுக்கப்பட்டு வரு கிறது.

தனியார் மேல் நிலைப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில், முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள், இவ்வாறான காரணத்திற்காக பணிநீக்கம் செய்யப் பட்டதற்கான முறையீடு ஏதும் பெறப்படவில்லை.

திரு. பா. ரா. தாமஸ்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய அறிக்கைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகிறேன். வருகிற கல்வி ஆண்டிலே நமது அரசுப் பள்ளிகளில், இந்திய கலாச்சாரப் பாடம் படித்த இந்த மூன்று பட்டதாரி ஆசிரியர்களை எப்படியாவது பணியில் அமர்த்தும் வாய்ப்பை உருவாக்கி, அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாணவர்கள் படிக்க வந்தால், அவர்களுக்கு வேலை தரலாம். மாணவர்கள் எடுத்துப் படிக்க மறுக்கிற காரணத்தால், அவர்களுக்கு வேலை கொடுப்பதிலே சிக்கல் ஏற்படுகிறது. நிறைய பள்ளிகள் நடைபெறும் நேரத்தில் ஏதாவது சில பள்ளிகளில் மாணவர் கள் இந்தப் பாடத்தை எடுத்துப் படிக்க முன்வந்தால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு தந்துவிடலாம்.



(2) தஞ்சை மாவட்டம், சீர்காழி அருகில் உள்ள தென்னம்பட்டினத்திலும் தென்னாற்காடு மாவட்டம்-விழுப்புரம் வட்டத்தைச் சேர்ந்த பாக்கம் கிராமத்திலும் சிலர் காலரா நோயினால் இறந்தது குறித்து.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தஞ்சை மாவட்டம், சீர்காழி அருகில் உள்ள தென்னம்பட்டினத்தில் 24—3—1983 அன்று இருவரும், தென்னாற்காடு மாவட்டம்—விழுப்புரம் வட்டத்தைச் சேர்ந்த பாக்கம் கிராமத்தில் 10 பேரும் காலரா நோயினால் இறந்ததால் மக்களிடையே தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து."

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: அவைமுன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், சீர்காழி பகுதியில் காலரா நோயால் பாதிக்கப்பட வாய்ப்புள்ள வர்கள் 560 பேர்கள் என்றும் அதிலே 428 பேருக்கு காலரா தடுப்பூசி போடப் பட்டுள்ளது என்றும் விவர அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மீதியுள்ள 132 பேருக்கு என்ன காரணத்தாலே தடுப்பு ஊசி போடப்பட வில்லை? அது மட்டுமல்லாமல், இந்த குறிப்பிட்ட இடத்தைத் தவிர, நாடு பூராவும் அங்கொன்றும் இங்கொன்றுமாக சில நிகழ்ச்சிகள் நடந்துவருவதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய பகுதியிலே கூட 8 பேருக்கு காலரா நோய் கண்டு அவர்கள் உரிய நடவடிக்கைக்காக மருத்துவ மனைக்குச் செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்படி நாடு பூராவும் இருக்கக் கூடிய நிலைமைகளை மாற்றுவதற்கு அரசு எந்த வகையில் முன்தடுப்பு நடவடிக்கை எடுத்திருக்கிறது?

காலரா நோய் கண்டுவிட்டால், உடலில் நீர் வற்றியதை ஈடு செய்ய காய்ச்சி குளிர் செய்யப்பட்ட நீரில் ஒரு கரண்டி சர்க்கரையும் ஒரு சிட்டிகை உப்பையும் கலந்து குடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அந்தப் பகுதிக்கு மட்டுமல்லாமல், நாடு பூராவும் எல்லோரும் அறியும்படி

@ 586-587 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 ஏப்ரல் 21

அனைத்து ஏடுகளிலும் விளம்பரமாகத் தெரிவித்தால், மக்கள் பயன் அடைவார்கள் அல்லவா? அதைச் செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 4-10)

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொன்னபோது, அவருடைய இரண்டாவது பகுதியில் ஒரு கருத்தை யோசனையாகச் சொல்லியிருக்கின்றார்கள். அது ஒரு அருமையான யோசனை. அது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது. விளம்பரங்கள் மூலமாக இது மக்கள் மனதிலே பதியக்கூடிய அளவுக்குச் செய்யலாம். திருச்சி மாவட்டத்தில் எல்லா மருத்துவ மனைகளிலும் அப்படி இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் ஏழு ரீஜனல் டைரக்டர்கள் இருக்கின்றார்கள். அவர்களிடம் இந்த 'ஓரல் ரிஹைட்ரேஷன் சால்ட்' பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது வாய் மூலமாக காய்ச்சி குளிர் செய்யப்பட்ட நீரில் ஒரு கரண்டி சர்க்கரையும் ஒரு சிட்டிகை உப்பையும் கலந்து குடிக்க பொதுமக்களுக்கு விளம்பரம் செய்யப்படுகிறது. அதைப் பத்திரிகையிலேயும் விளம்பரம் செய்யலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்து கவனிக்கப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நோயினால் பாதிக்கப்பட வாய்ப்புள்ளவர்கள் 560 பேர்கள் பொல்யூஷன் ரிஸ்க் என்பதுபற்றி விவர அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்திலும் தமிழிலும் சொல்லப்பட்டிருக்கிறது. 'பொல்யூஷன் ரிஸ்க்' என்றால், அந்த வியாதி வரக்கூடிய வாய்ப்புள்ளவர்கள் என்ற கணக்கை மொத்த ஜனத்தொகை அடிப்படையில் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எல்லோருக்கும் அந்த ரிஸ்க் என்று செய்ய முடியாது. சில பேர்கள் எங்காவது போய் விடுகிறார்கள். ஒட்டுமொத்தமாகப் பார்த்து யாதிரிக்கு இவ்வளவு பொல்யூஷன் ரிஸ்க் என்ற அளவில், அவர்கள் அந்த வியாதி வரக்கூடிய வாய்ப்புள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று கருதுகிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் வீட்டிற்குச் சென்று 'வேக்சினேஷன்' செய்கிறார்கள். அதில் சில பேர்கள் தடுப்பூசி போட்டுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கின்றார்கள். இல்லாவிட்டால், அவர்கள் வேலைக்குப் போய் விட்டதாகவும், அவர்கள் வீட்டில் இல்லை என்றும் தெரிவித்துவிடுகின்றார்கள். அந்த 560 பேர்களில் 423 பேர்களுக்குத் தடுப்பூசி போட்டிருக்கின்றார்கள் என்று சொன்னால், அது பாராட்டக்கூடிய விஷயம்.



1983 ஏப்ரல் 21] [டாக்டர் எச். வி. ஹண்டே]

தமிழகம் பூராவும் எல்லா மாவட்டத்திலும் இவ்வியாதி இல்லாத அளவுக்கு நாம் விளம்பரம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே வறட்சி காரணமாக ஏற்படக்கூடிய சுகாதாரக் கேடுகளிலிருந்து பொதுமக்களைக் காக்கவேண்டி, பொது சுகாதாரப் பணிகளுக்காக என்று இந்த அரசு மத்திய அரசிடம் ரூ. 17 கோடி கேட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு மத்திய அரசிடமிருந்து ஏதாவது தகவல் வந்திருக்கின்றதா? அரசு அதற்கு என்று ரிமைண்டர் கொடுத்து, அந்தப் பணிகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கிறதா? காலரா ஊசி போடப்போனாலே மக்கள் ஓடிவிடுகின்றார்கள், அச்சப்படுகின்றார்கள் என்று சொல்கின்றார்கள். அப்படி ஓடிவிடுவது, அச்சப்படுவது தவறு என்று பொதுமக்களிடையே பிரச்சார சாதனங்கள் மூலமாகப் பிரச்சாரம் செய்ய அரசு முன்வந்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, பிரச்சாரம் மிகத் தீவிரமாகச் செய்து கொண்டுதான் வருகிறோம். பிரச்சாரம்கூட வெற்றிகரமாக இருக்கிறது என்று தான் நான் கருதுகிறேன். ஏனென்றால், எத்தனை விழுக்காடு என்று கணக்குப்பார்த்து அதில் 560 பேர்கள் காலரா வியாதி வரக்கூடிய வாய்ப்புள்ளவர்கள் என்று வைத்திருக்கின்றார்கள். அதில் 428 பேர்களுக்கு ஊசி போட்டிருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல், இன்னொரு கேள்வியும் உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். அந்தத் தொகை வந்திருக்கின்றதா என்று கேட்டார்கள். அது இன்னும் வரவில்லை. ஒட்டுமொத்தமாக ஒரு சிறு தொகையைத் தான் கொடுத்திருக்கின்றார்கள். அதை இந்த இலாக்கா இன்னும் வாங்கிக் கொள்ளவில்லை. அந்தத் தொகை வருகின்ற வரையில் நாம் காத்துக்கொண்டிருக்க முடியாது என்ற அளவில் நாங்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

3. அரசின் தீர்மானம்.

பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்க குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவேண்டும்".

THIRUMATHI TARA CHERIAN : Mr. Chairman, Sir, I thank you for giving me an opportunity to participate in the discussion on the Policy Note on the Backward Classes Department.

Sir, I may not be speaking for some time in the future and I may not be here all the time. Therefore, I would like to take this opportunity to make mention of the two great achievements that took place just about two days ago. Our scientists, who are second to none, have once again made their mark in space technology. The Rohini satellite which is now in the orbit is doing very well. May God bless this achievement. Our congratulations and also respectful and proud appreciation to the team of scientists and the staff associated with this great venture. The second one is the great achievement in tre signing by the Chief Ministers of Andhra Pradesh and Tamil Nadu, of the long-awaited agreement for the supply of Krishna water to Madras City. It is truly and undoubtedly a historic achievement. Our hats off to the two great Chief Ministers. Sir, I hope I will not be misunderstood when I say this. I do not go very often to the picture. But, I know that in the cinema-world, both of them have earned a name for themselves. They have gone on achieving many things that are impossible for others to achieve. Sir, about 25 years ago, I was Mayor of the Madras Corporation. At that time, the responsibility for providing water-supply to Madras City remained with the Corporation of Madras. Over the past

@ 588-634 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



thirty years or more, we have been hoping that a scheme for providing assured water-supply to Madras City would come through. Therefore, the present achievement is undoubtedly a good achievement and, from my point of view, it is an excellent achievement. If all the details are worked out in proper perspective, we will be able to get Krishna water for Madras City. Therefore, there should be no further delay, no procrastination, no political wrangling and no dependence on the vagaries of the monsoon. All the four or five millions of people in Madras City should have their rightful opportunity and privilege of getting all the water that they need. This must be done by giving the work top priority and by executing the scheme on a war-footing. I am sure that this will be done.

Sir, I now come to the subject of Backward Classes and Denotified Communities. I congratulate the Hon. Minister, who has got so many other portfolios like Finance, Food, etc., on having produced a wonderful Policy Note. The Policy Note clearly indicates what is going to be done during 1983-84 for the welfare of the Backward Classes. An amount of nearly Rs. 10,22,23,000 has been earmarked for implementing the schemes for the welfare of the Backward Classes during the year 1983-84. Details of the various schemes, achievements made so far, etc., are all explained very clearly in the Policy Note. There are schemes for continuing the educational scholarships that are given now, for grading the new applicants and giving them fresh scholarships, etc. All these things are going to be done through the officials of the Department. This is one thing where the Government seem to have gone away from the original way of doing it. At present, there are separate subsidised hostels for Backward Classes. There are also separate subsidised hostels for Denotified Communities, Scheduled Tribes, etc. I hope that the Hon. Minister will not mind my saying that the Policy Note does not give any kind of feeling that the Government are trying to go out of the way to see that there is better co-operation and co-ordination between these students belonging to various communities. The students belonging to various communities should mingle together in the hostels and there should be a cohesion among them. For those students, the hostel itself should become another educational institution and students belonging to different communities should not be made to stay in different hostels as is being done now.

Sir, coming to the admission to Engineering Colleges and other professional colleges, what the Government are doing for

should be completely kept out of the picture. Even in Tamil Nadu, which has always been comparatively quieter and more peaceful, we find that casteism is raising its ugly head in many districts. All these years, people belonging to different castes and communities have always lived very amicably in Tamil Nadu. Sir, here I would like to refer to my own small Christian community. Today, if a person belonging to a backward class becomes a Christian, he becomes forward overnight. If he gets himself re-converted to Hinduism, again he gets back all his earlier backwardness. This is strange logic, Sir. Backwardness is not hereditary to be passed on from generation to generation. Backwardness is, of course, an unfortunate situation. But, every year, at least a few people should be able to come out of that backwardness due to their progress. The hon. Member Thiru Damodaran is not here. Once he spoke to me about this matter. Backwardness is not the monopoly of any religion or caste. Backwardness should not become a vested interest; nor should it be perpetuated. Many sub-castes are considered as Backward Classes. But, the youngsters of today say—I do not know whether it is a Parliamentary word "To Heli with the backward status". Not only that, Sir. There is corruption everywhere, from top to bottom. It is so, not only in our State but in many other States also. Therefore, these things have got to be watched and the list of Backward Classes should not be allowed to go on longer and longer. To increase the number in the list of Backward Classes may be a vote-catching device. But, it disturbs social peace. Sir, I know something of what the Constitution of India says about backward classes and about reservations. As time will not permit, I may not be able to cover the entire thing. Let us see what the word 'backward' means. The word 'backward' is defined in Article 15 (4) and in Article 16 (4) of the Constitution. Article 15 (4) says, "Nothing in this Article shall prevent the State from making any special provision for the advancement of any socially and educationally backward class". Article 16 (4) says, "Nothing in this Article shall prevent the State from making any provisions for reservation of appointments for posts in favour of any Backward Class". Here, 'backward class' means that class which, in the opinion of many people, is not adequately represented. Then, is it not up to the State Government and the powers-that-be to see that the requirements of the Constitution are fulfilled, that the classification is made accordingly and that those who are backward, especially those who are educationally backward, are able to come up and determine their own future? I am



not going into the details. Whatever may be the provisions of the Constitution, I would like to say one thing. The Hon. the Chief Minister who has seen to it that the Krishna Water comes to Madras City can also certainly see that all these people, who are unduly punished just because of their birth, get an opportunity and more of equality. Now, so many schemes are being implemented and large sums of money are being set apart for implementing those schemes. If the officers are changed from time to time, none could be held responsible for the failure of the schemes or for any malpractices that are found.

(பிற்பகல் 4-30)

This is an important thing so far as the Social Welfare Department is concerned. There are a lot of things that are being done by the Government. What I want to say is that an evaluation or a periodical review of the work done is necessary. In this we should also take the people at the grassroot level into confidence and see what is being done in taluk, block and other levels. Then the people also will be happy to know what is being done for them. While I thank you for giving me the opportunity, I hope that when I get an opportunity to speak on this next year, it will not be necessary for me to raise the same points and I need not talk on the same problems.

THIRU G. VASANTHA PAI: Hon. Chairman, may I congratulate the hon. the Lady Member on her excellent speech?

* DR. M. A. MUTHIAH CHETTIAR: Mr. Chairman, I wish to congratulate the Hon. the Finance Minister who is in charge of the important portfolio of Backward Classes on his good work. If he is convinced about the reasonableness of any item of work connected with the Backward Classes, there will be no further delay in its implementation, because he himself is the Finance Minister also. I am very happy that the Government are spending about Rs. 10 crores for the benefit of the Backward Classes and the Hon. Minister deserves congratulations.

The question depends upon the uplift of the people. They are in the backward class, because of lack of education and therefore, for their uplift, education is the first pre-requisite. Education is absolutely necessary for the prosperous living of the people. Education should be provided for them and any Government will have to do that. I found in 'the Hindu' that in a meeting or seminar, in which the Governor had also participated, our Hon. Education

[Dr. M. A. Muthiah Chettiar] [1983 April 21

etc. This has happened in various places. Some of them have sold even photographs, paintings, etc., and there is nothing more with them to be sold. In certain villages, 9 out of 10 houses have been demolished. Several of them who are living in villages are not able to get higher education. They are not able to get admission in colleges. What we want for our people is only education. We do not want even money, loan or any other facilities. We want admission to educational institutions. At the same time, I want to emphasise that there need not be any reduction in the number available to the Backward Classes, whether it is 31 per cent or 50 per cent. Some people say "Why should they be given concessions for generations?" That is a different argument. I do not want to argue in that manner. We, Chettiars, as a community should be given an allotment in the seats in the colleges. There may be some people of other communities also who had returned from foreign countries.

(பிற்பகல் 4-40)

Our Chettiars' Association had requested, through the Finance Minister and through Thiru R.M. Veerappan that the Government may allot 25 per cent seats in colleges and schools, technical schools, medical and other professional educational institutions. When they are not able to get admission here, they go to Manipal, Karnataka and Kerala and other places and get admission after spending a lot of money. They sell away their properties and get help from other friends and relations. Since the time is limited, I do not want to take up much time of the House.

There is absolutely no complaint about doing social justice to the Backward Classes. Without any increase in expenditure, the teacher may be asked to teach 125 students instead of the present 100 students. In Chengalvaraya Polytechnic, we had 100 students in a class and now there are only 60. The admission may be increased up to 100. The hon. Member Thiru Damodaran knows well about it, because his uncle and father were trustees along with me in Pachaiappa's Trust. I have mentioned several times that we must have a polytechnic in every taluk and there is no need to increase the number of Engineering Colleges. A student who has completed polytechnic course and who has an experience of five years may be allowed to write B.E examination. Thus we can reduce the rush for admission to Engineering Colleges. I am only giving a suggestion and I am not an expert and the experts in education can decide about the details.



1983 April 21] [Dr. M. A. Muthiah Chettiar]

There are so many facilities, loans, and scholarships extended to the Backward Class people. A sum of Rs. 10,000 is given for housing. In these days of inflation, it is not sufficient to build a house. The amount should be raised to at least Rs. 25,000.

So far as our Chettiars' Association is concerned, we are trying to get an interview with our Hon. Chief Minister and we hope we will get an opportunity to represent our case, with the help of the Hon. Minister Thiru R.M. Veerappan.

I am happy that the Government have appointed a Backward Classes Commission under the Chairmanship of Thiru Ambasankar. We will be able to put forth our case before the Commission that we should be included in the list of Backward Classes. It is not for all time to come but at least for 25 years we should be added in the list and we should be extended all the concessions given to Backward Classes. Afterwards, the concessions may be withdrawn. By this, we hope our boys and girls will be able to get education. If some industrial centres are opened in Ramanathapuram district, a number of poor boys and girls of Chettinad—Devakottai, Karaikudi. Sivaganga, Pudukkottai, Tirumayam and other places will be able to get employment. On account of such education and employment, the poor boys of our place will get the benefit. I have seen many poor children working in match factories, cracker factories and cashew factories in many places. That is a different case. They are going to teach tailoring and tailoring may not destroy the health of children. I would only like to say that poverty should be the basis for deciding one's backwardness. Poverty does not necessarily mean that one should have become insolvent or that one's family should have been poverty-stricken for ages. A person might have been well off in the past. But, if he has become poor today, his present position must be taken into consideration. That is our earnest request. The Chettiars are not well off today. Just two months ago, we, the Chettiars, had a conference. We are convening another conference on the 26th of this month at Madurai. We expect that about 1,000 people would attend the conference. Of course, we have restricted the number because the venue of the conference is the Pandian Hotle at Madurai and, as the hon. Member Thiru Thomas knows, the Pandian Hotel can accommodate only about 800 or 1,000 persons. When an earlier conference was held in a 'Manram' at Karaikudi, many people attended that conference. I wish that Thiru Saw Ganesan had been alive today and been a Member of

[1983 April 21

பிற்பட்டோர் நலன் குறித்து தமிழ் நாட்டில் ஒரு தனிக் குழு அமைத்து அந்தக் குழு மற்றவர்கள் குறித்து பரிந்துரை செய்ய வாய்ப்பு அளித்த தமிழக அரசையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது சமுதாயமான வேட்டுவ கவுண்டர் சமுதாயம், 1959 ஆம் ஆண்டுக்கு முன்பு தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது. என்ன காரணத்தாலோ 1959-க்குப் பின்பு மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. எல்லா வகையிலும் வேலை வாய்ப்பில், கல்வியில், பொருளாதாரத் துறையில் பின் தங்கியுள்ள ஒரு சமுதாயத்தை எந்தக் காரணத்தால் மிகவும் பின் தங்கியுள்ள சமுதாயத்தில் கொண்டு வந்தார்கள் என்று தெரியவில்லை.

(மாற்றுத் தலைவர் திரு. க. இராமமூர்த்தி தலைமை)

(பிற்பகல் 4-50)

ஆகவே அந்தச் சமுதாயத்தை மீண்டும் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலேயே கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் அவர்கள் இன்னும் தாழ்த்தப்பட்டவர்கள் பட்டியலில் இருக்கிறார்கள். திருச்சி மாவட்டத்தில் "டி—நோட்டிபைடு டிரைப்ஸ்" என்றும், சேலம், பெரியார் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மிகவும் பின்தங்கியோர் பட்டியலிலும் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இப்படி ஒரே மாநிலத்தில் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மூன்று வகையான பட்டியல்களில் சேர்க்கப்பட்டிருப்பதன் காரணம் எனக்குப் புரியவில்லை. எனவே, இதையெல்லாம் மீண்டும் ஆய்வு செய்து, இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரையும் முதலில் இருந்தபடியே தாழ்த்தப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

* திரு. க. மீனாட்சிசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலன்குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது பல்வேறு செய்திகள் சொல்லப்பட்டிருந்தாலும், அவைகள் அனைத்திற்குள்ளும் சென்று விரிவாகப் பேசக்கூடியவர்கள் பலர் இருக்கிற காரணத்தால், நான் ஓரிரு கருத்துக்களை மட்டுமே இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த நாடு எவ்வளவுதான்



1983 ஏப்ரல் 21] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

முன்னேற்றம் அடைந்தாலும்கூட, இந்த நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றமடைவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதைக் கருதித்தான் இங்கே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்று தந்தை பெரியார் அவர்கள் முதன் முதலாகத் தென்னகத்திலேயே பெரியதொரு போராட்டத்தைத் தமிழகத்தில் நடத்திக் காட்டினார்கள். அதன் அவசியத்தை இந்தியப் பேரரசும் ஏற்றுக்கொண்டு, அதற்குப் பின்னால் அரசியல் சட்டத்திலேயே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்துக்கு வழி செய்ய வேண்டும் என்ற வகையில் அரசியல் நிர்ணய சட்டத்திற்கே திருத்தம் கொண்டு வந்தது என்ற வரலாற்றை இங்கே உள்ள அனுபவம் மிக்க உறுப்பினர்கள் நன்கு அறிவர். அந்த வகையில் பிற்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் என்று ஒதுக்கீடுகள் செய்யப்பட்டாலும்கூட அதற்குப் பின்னாலும் அவர்களுடைய நிலை எதிர்பார்த்த அளவுக்கு உயரவில்லை என்ற காரணத்தாலே, 1953 ஆம் ஆண்டு பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் "காகா காலேல்கர்" என்பவரின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோர் நலன்களைப் பரிசீலித்து, மேற்கொண்டு அரசு என்ன செய்ய வேண்டும் என்று ஆய்வு செய்து அறிக்கை தருக என்று கேட்டுக் கொண்டார்கள்.

அவ்வாறு அந்தக் குழு அளித்த அறிக்கை பின்னாலே இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா என்றால், இல்லை என்ற நிலைமையைத் தான் பார்க்கிறோம். குழுக்கள் தருகிற அறிக்கைகள் ஆட்சியில் இருப்பவர்களுக்குச் சாதகமாக இருந்தால்தான், அவற்றை ஏற்றுச் செயல்படுத்துவது என்பதும், அவ்வாறில்லை என்றால்—ஆட்சியில் இருப்பவர்களின் கருத்துக்கு குழுவின் அறிக்கை முரண்பட்டிருந்தால்—அத்தகைய அறிக்கைகளைத் தூக்கி எறிவது என்பதும் பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல் ஆட்சி பீடத்தில் இருக்கிற கட்சிகள் மேற்கொள்கிற நிலைமை இருப்பதால், மத்திய அரசில் இருப்பவர்களால் காகா கலேல்கர் அவர்களின் அறிக்கை குப்பைத் தொட்டியில் தூக்கி எறியப்பட்ட வரலாறு அனைவருக்கும் தெரிந்த ஒன்றாகும்.

அதற்குப் பிறகு, தற்போதுள்ள இந்தியப் பிரதமர் அவர்கள் மண்டல் கமிஷனை நியமித்தார்கள். அந்த மண்டல் கமிஷனும் பல்வேறு நிலைமைகளையும் ஆராய்ந்து பார்த்து, இறுதியாக தன்னுடைய அறிக்கையை அளித்தது. அந்த அறிக்கை நம் நாட்டில் இருக்கக்கூடிய கோடானுகோடி பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைச் சாசனமாக இன்றைக்குத் திகழ்கிறது என்றால், அது மிகையாகாது.

பணம் வந்தாலும்கூட, சமுதாயத்தில் உயர்ந்தவராக வருவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது; சமூக நடை முறை பழக்கவழக்கங்களிலே எஜுகேஷனலி என்றுதான் இருக்க வேண்டுமே தவிர ‘ எக்கனாமிக்கலி ’ என்று இருக்கக்கூடாது” என்று பண்டித நேரு அவர்களே அப்போது குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை நான் ஏன் இங்கே சொல்கிறேன் என்றால், இன்றையதினம் இருக்கிற ஆட்சி மேற்கொண்ட சில நடவடிக்கைகள் நமக்கு ஒரு சந்தேகத்தைக் கிளப்பிக் கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொதுவாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டபடி சோஷலி அண்டு எஜுகேஷனலி—அதாவது சமுதாயத் துறையிலும், கல்வித் துறையிலும்—பிற்பட்டவர்களுக்குத்தான் சலுகை என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் பேசும்போது இந்த அரசைப்பற்றி சந்தேகப்படுவதைப் போல் இருமுறை குறிப்பிட்டார். அதனால் அவருக்கு உண்மை நிலையை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். அரசு ஒரு நல்ல கருத்தின் அடிப்படையில்தான் அந்த ஆணையைப் பிறப்பித்தது. ஆனால் அதை நடைமுறைப்படுத்துவதில் சிலபல சிக்கல்கள், சங்கடங்கள் ஏற்பட்டதால், அதைக் கைவிட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. 31 சதவீதமாக இருந்தது 50 சதவிகிதமாக உயர்ந்தது. பிற்பட்டவர்களுக்கு முதலில் 51 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டது.

(பிற்பகல் 5-00)

அந்தப் பிற்பட்ட மக்களிலே பொருளாதாரத்திலே குறைந்திருப்பவர்களுக்கு அந்த இடம் போக வேண்டும் என்ற நோக்கம் எப்படி தவறாக இருக்க முடியும்? வேறு ஒரு சமுதாயத்தினருக்குத் தரவில்லை. வசதி படைத்த பிற்பட்டவர்களுக்குப் போக வேண்டாம், வசதியற்ற பிற்பட்டவர்களுக்குப் போக வேண்டும் என்ற நோக்கம் வைக்கப்பட்டது. அந்த நோக்கம் சந்தேகத்திற்குரியதல்ல. இதிலே சிலபல சங்கடங்கள் இருக்கலாம். வசதி படைத்தவர்கள், வசதியற்றவர்கள் பெறுகிற சில சலுகைகளைப் பெற முடியாமல் போகிறது என்ற காரணத்தைத் தவிர, அந்த நோக்கம் எப்படி கெடுதலாக இருக்க முடியும் என்பதைக் கேட்கிறேன்.



**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே குடும்பத்தில் அண்ணன், தம்பி இருந்து அண்ணன் 750 ரூபாய்க்கு மேல் வருமானம் வாங்கினால், அவருடைய குடும்பம் முன்னேறிய சமுதாயம் என்றும், அவருடைய தம்பி 750 ரூபாய்க்குக் கீழே வாங்கினால் தம்பியினுடைய குடும்பம் பின்தங்கிய சமுதாயம் என்றும் வருகிறது. ஒரே குடும்பத்தில் உள்ள ஒரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் இடையில் இரண்டுவிதமான பாகுபாடு இருப்பதை எப்படி நாம் ஏற்றுக்கொள்வது என்பதுதான் என்னுடைய கேள்வி

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்ட சமுதாயம் என்று சிலரை ஆக்கியதற்குப் பிறகு இதிலே சில குடும்பங்கள் முன்னேறி வந்திருக்கின்றன. இன்றைய சூழ்நிலையைப் பார்த்தால் ஒதுக்கப்பட்ட இடங்கள் பிற்பட்ட சமுதாயத்தில் உள்ள முன்னேறிய குடும்பங்களுக்குப் போய்க் கொண்டிருக்கின்றனவே தவிர, பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கிறவர்களுக்கும், கிராமங்களில் இருக்கிறவர்களுக்கும் அந்த இடங்கள் போய்ச் சேரவில்லை என்பதற்காகத்தான் 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு கொண்டு வரப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர்கள் கூட பல்வேறு சந்தர்ப்பங்களில் கிராமத்தில் இருக்கின்றவர்களுக்குக் கிடைக்கவில்லை, கிடைக்கவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். என்ஜினியர் மகன் என்ஜினியராக ஆகிக் கொண்டிருக்கிறான், டாக்டர் மகன் டாக்டராக ஆகிக் கொண்டிருக்கிறான் என்று பல்வேறு முறைகளில் பேசியிருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட இடங்கள் குறிப்பிட்ட சில முன்னேறிய குடும்பங்களுக்குள்ளே போய்ச் சேருவதன் மூலமாக புது வகை பிராமணர்கள் உருவாவதைப் போல நிலைமைகள் சமுதாயத்திலே ஏற்படுகின்றன. பிற்பட்ட சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலைமையில் இருக்கின்ற அப்பாவி மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரவில்லை. 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பு என்று கொண்டுவந்த நேரத்தில், தியேட்டரில் டிக்கெட் கிழிக்கும் பையனுக்கு இடம் கிடைத்தது, கள்ளக்குறிச்சியில் மக்களை வைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரின் பையனுக்குக் கிடைத்தது. பாத்திரம் தேய்க்கிற அம்மையாரின் பெண்ணுக்குக் கிடைத்தது. இன்னும் சொல்லப்போனால், லஞ்சம் கொடுக்க முடியாத நிலைமை அந்தப் பகுதி மக்களைப் பொறுத்த வரையில் ஏற்பட்டது. லஞ்சம் வாங்க வேண்டும் என்று நினைத்தாலும், அவர்களாலே கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டது.

பிற்பட்ட மக்களுக்கு வருமான வரம்பு வைத்ததால், வசதி படைத்தவர்கள் அனுபவித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக வசதி இல்லாத பிற்பட்ட சமுதாயத்தினருக்குப் போய்க் கொண்டிருந்தது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். நான் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன். வருமான வரம்பு கொண்டு வருகிறபோது எனக்குக் கிடைக்காது. என்னிடத்திலே பணியாற்றுகிற டிரைவர், பியூன் ஆகியோருக்குப் போய்ச் சேரும். நான் அதைப்பற்றி சந்தோஷப்பட வேண்டுமே தவிர, அதற்காக நான் போட்டி போடக்கூடாது. 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பைக் கொண்டு வந்த நோக்கில் அதை எதிர்த்தவர்கள் என்.ஜி.ஓ.க்களும், படித்தவர்களும்தான் என்றால், படிக்காத சமுதாயத்திற்கு எதிராக அவர்கள் பேசியிருக்கிறார்களா என்று நான் இன்றைக்கும் சொல்லுகிறேன். படிக்காத சமுதாயத்தைப்பற்றிக் கவலைப்படாமல் பேசியிருக்கிறார்கள். படிக்காத சமுதாயத்தை ஏமாற்றுவதில் முன் நின்றிருக்கிறார்கள். படிக்காத மக்களுக்காக யார் பேசினார்கள்? திராவிடக் கழகமாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, யாருக்காக பெரியாரும் அண்ணா அவர்களும் பாடுபட்டார்களோ அவர்களுக்கு முழுக்க முழுக்க எதிராகத்தான் அவர்கள் அந்த நிலையை எடுத்திருக்கிறார்களே தவிர, ஏழையெளிய மக்களுக்காக அவர்கள் நியாயமாகப் பேசவில்லை.

**திரு. ஆற்காடு நா. வீராசாமி :** அந்த ஏழையெளிய மக்களுக்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழகமும், திராவிடர் கழகமும் பேசியது. அப்படி கிராமத்தில் இருக்கக்கூடிய படிக்காத மக்களுக்கு ஒதுக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்பினால், மொத்தம் உள்ள 50 சதவீதத்தில் ஒரு 25 சதவீதத்தை அப்படிப்பட்ட மக்களுக்கு என்று ஒதுக்கியிருந்தால், இந்தப் பிரச்சினையே வந்திருக்காது. தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்த பின்தங்கியவர்களுக்காக வாதாடினார்களோ அவர்கள் இப்போது முன்னேறிவிட்டார்கள் என்று நமக்கு நாமே கற்பனை செய்து கொண்டு ஒரு முடிவிற்கு வருவது சரியல்ல. அப்படி ஒன்றிரண்டு சமுதாயத்தினர் முன்னேறியிருக்கலாம். வைத்திருக்கின்ற சர்டிபிகேட்டுகள் எல்லாம் உண்மையாக இல்லை. எனக்கே கூட தெரியும். ஐம்பதாயிரம் ரூபாய் சம்பாதிக்கக் கூடிய டாக்டர் பொய் சர்டிபிகேட் வாங்கி இடம் வாங்கியிருக்கிறார். யாரோ ஒருவர் தவறு செய்கிறார் என்பதற்காக மொத்தமாக திராவிட இயக்கம் சொல்லி வந்த கொள்கையைக் குழிதோண்டி புதைப்பது நல்லதல்ல.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன், குழிதோண்டிப் புதைக்கும் நோக்கம் அல்ல. இந்த நோக்கம் எப்படித் தவறாகும்? டாக்டர் கலைஞர் அவர்கள் நியமித்த சட்டநாதன் குழு, குறிப்பிட்ட பத்துப் பன்னிரெண்டு சாதியினரை பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் இருந்து எடுத்துவிட வேண்டும் என்றும், புதிதாகச் சில சாதிகளைச் சேர்த்தது தவறு என்றும், சலுகை யாருக்குப் போக வேண்டுமோ அவர்களுக்குப் போய்ச் சேரவில்லை என்றும் சொல்லியிருக்கிறது. அண்ணன் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் வாங்கும்போது, தம்பி அதைவிடக் குறைவாக வாங்கும்போது, ஒரே சமுதாயத்தைச் சேர்ந்த அவர்கள் இருவருக்கும் ஒன்றாகச் சலுகையைத் தர வேண்டும் என்ற கருத்து நியாயமல்ல. ஆகவே எங்களுடைய நோக்கத்திலே தவறு இல்லை. மாற்றம் செய்யலாம் என்றால் சொல்லலாம். காலம் கனியட்டும் என்று சொல்லலாம். இன்னும் சில ஆண்டுகள் போகட்டும் என்று சொல்லலாம். அது வேறு விஷயம். ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டிருந்த நோக்கத்திலே தவறு கிடையாது. ஆகவே அதை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலே அல்ல இந்தப் பிரச்சினை வந்தது. 31 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருந்தது. வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு 50 சதவீதம் என்று உயர்த்தினோம். நோக்கத்தைப்பற்றி நான் பேசுகிறேன். மற்றதை எப்படிச் செய்யலாம், என்ன செய்யலாம் என்பது வேறு.

**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** 9 ஆயிரம் ரூபாய் வருமான வரம்பை எதிர்த்து அரசு ஊழியர்கள் கருத்து தெரிவித்தது படிக்காதவர்களை ஏமாற்றுவது போல ஆகிறது என்ற கருத்துப்பட நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இங்கே கூறினார்கள். அது அப்படியல்ல.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அவைத் தலைவர் அவர்களே, ஒரு பத்து இடம் இருக்கிறது என்றால், அந்தப் பத்து இடத்தையும் நான்தான் எடுத்துக்கொள்வேன் என்று சொல்லும்போது, அது மற்றவர்களுக்குக் கிடைக்காமல் செய்யும்போது, அது அவர்களை ஏமாற்றுவது தவிர வேறு என்ன? அவர்களால் நம்மோடு போட்டி போட முடியாது. பிராமணர்களை எதிர்த்து என்ன காரணங்களைச் சொல்லுகிறோமோ அந்தக் காரணங்கள் இல்லையென்று எப்படிச் சொல்ல முடியும்?

[1983 ஏப்ரல் 21

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** என்.ஜி.ஜி.ஓ. க்கள், ஆசிரியர்கள் வாங்குகின்ற பளம் திறந்த புத்தகம். ஆனால் பெரிய தொழிலைச் செய்பவர்கள், க்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, லி சர்டிபிகேட் வாங்கி சலுகைகளை அனுபவிக்க முடியும். ஆனால் ஜி.ஜி.ஓ. க்களும், ஆசிரியர்களும் அப்படி அனுபவிக்க முடியாது. ஜி.ஜி.ஓ. க்கள், ஆசிரியர்கள் என்றாலே வெள்ளைச் சட்டைக்காரர்கள், ர்ந்துவிட்டவர்கள் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அதை எங்க லே ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** நாங்கள் கவலைப்படுவது கிராமத் மற்றும் சேரிகளில் வாழ்கிற வறுமையிலுள்ள மக்களைப் பற்றித்தான். ர்கள் வாழ்கிறார்கள் என்பதைப் பார்த்து பொறாமைப் படவில்லை. இருக் ற இடம் கொஞ்சம்தான். பொறியியல் கல்லூரியில் 1,500 இடங்கள் இருக் றன. அதிலே 750 இடங்களை அவர்களுக்காக ஒதுக்குகிறோம். அதிலே க்குச் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், மாணவர்கள், குழந்தைகள் எப்படிச் வது என்பதைப் பார்க்கும்போது, எத்தனை நாளைக்குத்தான் அவர்களை ர் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும்?

**திரு. செ. முத்துசாமி:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி மைச்சர் அவர்கள் ஒரு அருமையான விளக்கத்தைச் சொன்னார்கள். நான் வர்களை அவைத் துணைத் தலைவர் மூலமாக ஒன்றைக் கேட்க விரும்பு றேன். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் இரண்டாயிரம் ரூபாய் ான் சம்பளம் வருகிறது. ஆனால் தொழிலை நடத்துகிறவர்கள் ஆயிரம், ான்காயிரம் என்று கூட சம்பாதிக்கிறார்கள். ஆனால் குறைந்த வருமானத் க்கணக்கிலே காட்டி சான்றிதழ் பெறுகிறார்கள்.

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ருக்கிறேன் என்று நீண்ட நேரம் ஆகிவிட்டது. ஆகவே எனக்குரிய நேரத்தைக் டித்துத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அரசு ஊழி ர்கள், ஆசிரியர்கள் குழந்தைகள் எல்லோரும் போய் பொறியியல் கல்லூரி ளில் இடம் பிடித்துக்கொள்ளவில்லை. அதிலே ஒன்றிரண்டு பேர் தான் பாக வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அந்த ஒன்றிரண்டு பேரை வைத்துக்கொண்டு அந்தச் சமுதாயத்தினர் முன்னேறிவிட்டார்கள் என்று மக்கு நாமே கற்பனை செய்துகொள்ளுவது ஏற்றுக்கொள்ள முடியாத கருத் ாகும். நாம் அனைவருக்காகவும், எல்லா சமுதாயத்தினருக்காகவும் கவலைப் டுகிறோம். அதே நேரத்தில் ஒரு பிரிவிலே இருப்பவர்கள் அந்தப் பிரிவினர்



1983 ஏப்ரல் 21] [திரு. க. மீனாட்சிசுந்தரம்]

களுக்காக சற்று அதிகமாகக் கவலைப்படுகிறார்கள். அந்தப் பிரிவினர்களுக்காக அவர்கள் கவலைப்படுவது தவறு, அது அநீதி அவர்களுக்குச் செய்யும் துரோகம் என்று சொல்லும் கருத்தை எப்படி ஏற்றுக்கொள்ளுவது என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. அது அப்படியே இருக்கட்டும். அதைத் தொடர்ந்து பேசச் செல்லுகிறேன். இப்போது நான் சொல்லக் கூடியவற்றை மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இப்போது பிற்பட்டோர்களுக்கு 50 சதவிதம் என்று உயர்த்தியிருக்கிறோம். உயர்ந்தபட்ச வருமானம் ரூ. 9 ஆயிரம் என்ற ஆணை வந்த நேரத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளின் விளைவாக, எதிர்ப்புகளின் விளைவாக முதலில் தரவே முடியாது என்று சொல்லி, அதற்குப் பிறகு எழுந்த கோபத்திலே 50 சதவிகிதமாகத் தந்தார்கள். 50 சதவிதம் தந்ததிலே பிரச்சினை இல்லை. ஆனால் 50 சதவிதம் தந்ததற்குப் பிறகு, இன்றைக்குள்ள நிலைமை என்னவென்று பார்க்க வேண்டும். சந்தேகம் என்று சொன்னபோது, நோக்கத்தைச் சந்தேகப்படாதீர்கள் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனக்குச் சந்தேகம் மீண்டும் எழுகிறது. உதாரணத்திற்கு

(பிற்பகல் 5-10)

உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். அதாவது கலைஞர் காலத்திற்கு முன்னதாக தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், திறந்த போட்டி முறையே 13 : 18 : 69 என்று இருந்தது மாறி கலைஞரின் ஆட்சியின் ஆணையால் அது 18 : 31 : 51 என்று மாறி அதற்குப் பின்னாலே இன்றைக்கு 18 : 50 : 32 என்று ஆகியது. அப்படி 32 என்று ஆகியதற்குப் பின்னாலே ஒரு பிற்படுத்தப்பட்டோர் சங்கத்தினுடைய தலைவரிடம் அந்தச் சங்கத்தில் உறுப்பினர் ஒருவர் கேட்டார். அவர் என்ன கேட்டார் என்றால் கலைஞர் அவர்கள் காலத்திலே 51 இடம், ஓ.சி. ஆக இருந்தது. இப்போது 32 தானே ஓ.சி. ஆக வந்திருக்கிறது. இதை நீங்கள் ஏன் 'சப்போர்ட்' செய்கின்றீர்கள் அல்லது ஆதரவு தருகின்றீர்கள் என்று கேட்டபோது, அந்தத் தலைவர் என்ன பதில் சொல்கின்றார்கள்? "கலைஞர் அவர்கள் காலத்திலே 51 என்று இருந்தது. ஆனால் அந்த 51-லே ஏறத்தாழ 31-க்கு மேலே, அதாவது; அந்த 31-ம் 18-ம் ஆக 49 ஓடு இந்த 51 லிருந்து 31 ஐயும் சேர்த்து 80 பேர்கள் தாழ்த்தப்பட்டவர்களும், பிற்படுத்தப்பட்டவர்களும் வருவதற்குரிய வாய்ப்பு தேர்வு முறையிலே இருந்தது. ஆனால் இன்றையதினம் 33 என்று

என்பதாகும் என்று விளக்கினார்கள். இது அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறினார்கள். அப்படி தட்டச்சர்கள் தவறு செய்துவிட்டார்கள். அதை நாங்கள் திருத்திக்கொள்கிறோம் என்று அவர்கள் பின்னர் தகவல் தெரிவித்தார்கள். இது தேர்வாணைக் குழுவில் நடந்த ஒரு நிகழ்ச்சி. இதோடு நின்றதா? இந்த நிகழ்ச்சிக்குப் பின்னாலே இன்னொரு நிகழ்ச்சி. கல்வித் துறையிலே என்று நான் சொல்லவில்லை. இந்த நிகழ்ச்சியோடு நின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இப்போது இங்கே இல்லை. அவர்கள் துறையிலே சமீபத்திலே 1983-84-ல் மருத்துவப் பட்ட மேற்படிப்பு விண்ணப்பம் கோரியபோது அதிலே கல்வி பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'பொருளாதார ரீதியாகப் பிற்படுத்தப்பட்டவர்கள்' என்று சொல்லி, அதிலே உள்ளவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ரூ. 9000 வருட வருமானம் என்று கூறியதாலே, சந்தேகப்படாதீர்கள் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்கூட சொன்னார்கள். அவர்கள் சொன்னாலும்கூட, நடைமுறையிலே 9000 ரூபாய் வருமானத்திற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் வாய்ப்புத் தர வேண்டும் என்ற எண்ணம் முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற காரணத்தினாலேயே, அவர்களுடைய எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலே மருத்துவத் துறையிலே உள்ள அமைச்சர் அவர்கள் 'பொருளாதார ரீதியில் பிற்பட்டவர்கள்' என்ற விளக்கமே தந்து, அது பத்திரிகையிலே வந்தது, அதுமட்டுமல்ல ரிசர்வேஷனுக்குரிய தேர்வுகளை முடித்தபின்தான் திறந்த போட்டி நடத்தப்படும் எனவும் கூறினார்கள். அதுவும் ஏற்கெனவே வந்தது. அப்படி வந்ததற்குப் பின்னாலே திராவிடர் கழக பொதுச்செயலாளர் திரு வீரமணி அவர்கள் தலைமைச் செயலாளருக்கு அதை எதிர்த்து எழுதியிருக்கின்றார்கள். அதற்குப் பின்னாலே பல்வேறு போராட்டம் எல்லாம் நடக்கும் என்று தெரிவித்திருக்கிறார்கள். வழக்கு மன்றத்திற்குக் கூட சென்றிருக்கிறார்கள். இவ்வளவுக்கும் பின்னர் மருத்துவச் செயலாளர். "I am directed to refer to your letter cited and to state that the dicrepancy pointed out by you, is a printing error". என்று பதில் அனுப்புகிறார். எப்போது? முதலிலேயே ஒரு சம்பவம் நடந்திருக்கின்றது. அதற்குப் பின்னாலேயும் 'பிரிண்டிங் எர்ரர்' என்று சொல்லப்படுகிறது. 'பிரிண்டிங் எர்ரர்' எப்படி வரும்? 'எஜுகேஷனலி' என்பதற்குப் பதில் 'சோசியலி, எகானாமிக்கலி' என்று எப்படி பிரிண்டிங் எர்ரர் வரும். ஏதேனும் ஒரு எழுத்து மாறலாம்; வார்த்தையே மாறி அதுவும் முதல்வர் வார்த்தையாக வருமா? அதை யோசித்துப் பார்க்க வேண்டும்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அரசாங்கத்தினுடைய கொள்கை என்று சொல்லுகிறோம். ஓ.சி. என்பது 'ஓப்பன் காம்படிஷன்'. அதிலே எல்லா கம்யூனிட்டிகளையும் சேர்ந்தவர்களும் 32 பேர்கள் என்று வைத்து தேர்ந்தெடுத்த பிறகு இன்றைக்கு 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் ஒதுக்குகிறோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் ஒதுக்குகிறோம். பலபல இடங்களிலே சில தவறுகள் ஏற்படுமானால், அந்தத் தவறு 'ஜெனரலைசேஷன்' ஆகாது. அந்தத் தவறு 'ரெக்டிஃபை' ஆகிவிட்டது. அந்தத் தவறைச் சுட்டிக்காட்டுவதோடு சரி. அந்தத் தவறைச் சுட்டிக்காட்டத்தான் எதிர்க் கட்சியிலே வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். நாங்களும் திருத்தத்தான் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். இதுதான் 'ஜெனரலைஷேசன்' என்றால் எப்படி அது நியாயமாகும்?

**திரு. க. மீனாட்சிசுந்தரம்:** அது அரசினுடைய 'பாலிசி' என்றால் நான் அமைச்சர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொள்கிறேன். "சந்தேகப்படாதீர்கள் நோக்கம் இதுதான்" என்று அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அந்த நோக்கம் ஏற்கெனவே உண்டு அல்லவா? அதனால்தான் அந்த நோக்கத்திற்கு ஏற்ப, உள்ளூர, அடியிலே சென்று எந்த அளவுக்கு அதை நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்கு அதை நிறைவேற்ற நீங்கள் முயற்சிப்பதாக நாங்கள் சந்தேகப்படுகிறோம். எனவேதான் அதைச் சொல்கிறேன். வேறு ஒன்றுமில்லை. அந்தத் துறை மட்டுமல்ல, அதைக் கூட விட்டுவிடுங்கள். அதற்குப் பின்னாலே வானொலியிலே 'வேலை வாய்ப்பு' பகுதியிலே விளம்பரமாகச் சொல்கின்றபோது, மீண்டும் 'சோசியலி, எகனாமிக்கலி பாக்வர்டு' பிற்படுத்தப்பட்டவர்களுக்குத்தான் தரப்படும் என்று விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது. மீண்டும் அதே திராவிட கழகப் பொதுச்செயலாளர் திரு. வீரமணி அவர்கள் வானொலிக்குப் போன் செய்கின்றார்கள். அங்கே போன் செய்து கேட்ட பிறகும், சரியான பதில் இல்லை. அதற்குப் பின்னாலே 'விடுதலை'யிலே மிகப் பெரிய போராட்டம் நடைபெறும் என்று எழுதுகிறார்கள். அதற்கு மறுநாள் ஒரு திருத்தம் வானொலியில் அறிவிக்கப்படுகிறது. எனவே ரூ. 9000 என்று மனதிலே வைத்துக்கொண்டு இந்த அரசு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றதோ என்று ஒரு சந்தேகம் எங்களுக்கு வருவது நியாயமானதே. ஆகவே அது நோக்கமல்ல என்று சொன்னால், அரசியல் சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்படாமல், எக்காரணம் கொண்டும் 'எஜுகேஷனலி' என்பதை 'எகனாமிக்கலி' என்று மாற்றாமல் செயல்படுங்கள் என்று வேண்டுகிறேன். அதற்கு அடுத்து இந்தத் தேர்வைப் பற்றிக் கூட நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

[திரு. க. மீனாட்சிசுந்தரம்] [1983 ஏப்ரல் 21

முதலிலே இதுபோன்ற தேர்வுகளிலே, ஓ.சி.யை தேர்ந்தெடுத்துவிட்டு, அதற்குப் பின்னாலேதான் ரிசர்வேஷன் இடம் ஒதுக்குகிறோம் என்று சொன்னார்கள். அது சரி. ஆனால் அந்தத் தேர்வுபற்றி நம்முடைய மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்? முன்னாலேயே ரிசர்வேஷன் எல்லாம் முடிந்தபிறகுதான் அதற்குப் போகிறது என்றார்கள். அதற்குப் பின்னாலே அக்கருத்தை மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உண்மை நிலைமைகள் இப்படியெல்லாம் இருப்பதாலேயே எங்களுக்கு மீண்டும் சந்தேகம் வருகிறது. அதைத்தான் நான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நம் நாட்டிலே புள்ளி விவரப்படி 90 சதவிகிதம் பேர் பிற்படுத்தப்பட்டோர்கள். தாழ்த்தப்பட்டவர்கள். ஏனெனில் பிராமணர் என்று எடுத்துக்கொண்டால் ஒரு 3 சதவிகிதம். மற்ற பார்வேர்ட் லிஸ்ட் என்று எடுத்துக்கொண்டால் 3 சதவிகிதம், கிருத்துவர்கள் என்று எடுத்துக்கொண்டால் ஒரு சதவிகிதம். இப்படி ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டு மொத்தமாகப் பார்த்தால், நம்நாட்டில் முற்பட்டோர் 10 சதவிகிதம் தான் என்பது தெரியவரும். ஏனைய 90 சதவிதத்தினர் பிறபடுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்டவர்களே யாவார். எனவே, சலுகைகளும் அந்த சதவீதத்தில்தான் கிடைக்க வேண்டும். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 90 சதவிகிதம் மற்றவர்களுக்கு 10 சதவிகிதம் இப்படித்தான் வாய்ப்பு வரவேண்டும். ஆனால் 50 சதவிகிதம் என்று சொன்னால்கூட, அந்த 32 சதவிதம் முற்பட்டோருக்குமட்டுமே கிடைக்கக்கூடிய சூழ்நிலையிலே எந்த ஏற்பாடு செய்வதாக இருந்தாலும், அது கண்டிக்கத்தக்கது. அது மட்டுமல்ல, தேர்வுகளிலே முன்னாலே பொதுவாக ஓ.சி., அதாவது 'ஓப்பன் காம்படிஷன்' நடத்திவிட்டு அதற்குப் பின்னாலே ரிசர்வ்ட் சீட்டுக்குத் தேர்வு நடத்த வேண்டும் என்று நான் வற்புறுத்திச் சொல்கிறேன். இதை நிலை நிறுத்தப்படாததால் **தான் நான்** சந்தேகப்பட வேண்டியிருக்கிறது என்று சொல்லி, **அந்த** சந்தேகத்தை நிவர்த்திக்கக்கூடிய அளவுக்கு தக்க நடவடிக்கைகளை நிதி அமைச்சர் அவர்கள், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக எடுக்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.



1983 ஏப்ரல் 21]

(பிற்பகல் 5-20)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே, பிற்பட்டோர் நலன்களுக்காக ஒரு தனித் துறையையும் ஏற்படுத்தி, அந்தத் துறை நிதி அமைச்சரவர்களின் கையிலே தரப்பட்டால், அதிகமான நிதியை ஒதுக்குவதற்கு வாய்பாக இருக்குமென்பதால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவரிடம் அந்தத் துறையைத் தந்திருக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். அமைச்சரவை எடுக்கும் முடிவின் அடிப்படையில் எவ்வளவு நிதி தர முடியுமோ அதைத் தந்திருக்கிறார்கள் என்றாலும், சில ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு, பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் இவர்களுக்கெல்லாம் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. நான் அதைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் வசித்துக் கொண்டிருக்கும் பகுதிக்குப் பக்கத்திலே உள்ள கொல்லி மலைப்பகுதி, ஏற்காடு பகுதி, என் தொகுதியில் அமைந்திருக்கிற தாளவாடி பகுதி, இன்னும் மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களுக்கு, இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுபோல் சலுகைகள் வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பழங்குடி மக்களுக்கு உடை வழங்கப்படாமல் இருக்கிறது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அவர்களுக்கு அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர்களைவிட இன்னும் தாழ்ந்த நிலையில் இருந்துகொண்டிருக்கும் அவர்களுக்கு இந்தச் சலுகை இல்லாமல் இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இந்த நேரத்தில் வங்க மாநில அரசினுடைய நடைமுறையை அரசுக்குச் சொல்லுவது என்னுடைய கடமையாக இருக்கிறது. அங்கே செகண்டரிப் பள்ளிவரை இருக்கக்கூடிய மாணவிகளுக்கு உடை தருகிறார்கள். அதே சமயத்தில் ஆரம்பப் பள்ளிகளிலே இருக்கக்கூடிய எல்லா மாணவ மாணவிகளுக்கும் உடைகளைத் தருகின்றார்கள். இங்கே பழங்குடி மக்களுக்கு இன்னும் பல சலுகைகளை வழங்க வேண்டுமென்று கேட்கும்போது, ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். வீடு கட்டும் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கான பள்ளிகள்—கள்ளர் நலப் பள்ளிகள்—என்று மதுரை மாவட்டத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்திலும் இருக்கின்றன. அந்தப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வீடு கட்டித் தரும் திட்டத்தை அரசு கொண்டு வந்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் 10,000

ரூபாயில் வீடு கட்ட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். விலைவாசிகள் உயர்ந்துள்ள இந்தக் காலத்திலே ஒரு ஆசிரியருக்கு 10,000 ரூபாயில் வீடு கட்டுவது எப்படி என்பது புரியவில்லை. அதை நிதி அமைச்சரவர்கள்தான் விளக்க வேண்டும். ஓர் ஆசிரியர் குடியிருக்க 10,000 ரூபாயில் வீடு கட்ட முடியுமா என்று கேட்பதோடு, இந்த நிதி உதவியை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுவும் 13 வீடுகளுக்குத்தான் இந்த ஆண்டு ஒதுக்கி யிருக்கிறார்கள். அதாவது 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய். இதிலே மிகப் பெரிய பஞ்சத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். குறைந்தது 100 வீடுகள் கட்டித் தர திட்டமிடுங்கள். அதே சமயத்தில் இந்த ஆண்டு 2 மடங்காக வீடுகள் கட்ட நிதி ஒதுக்க முன் வாருங்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் மலை வாழ் பகுதிகளில் பணியாற்றும் ஆசிரியர் களுக்கு, பழங்குடி மக்களுக்காகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் குடிசைகள் கூட சில நேரங்களில் விடப்படுவதில்லை. அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வீடுகள் கட்டித்தர முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அவர்கள் அங்கே குடியிருந்து பணியாற்ற வசதியாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இங்கே ஒரு பெரிய சர்ச்சை எழுந்தது. அதிலே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களெல்லாம் மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படவில்லை என்பதுபோல கொஞ்சம் வேதனைப்பட்டு கல்வி அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் பணிவோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மிகச் சரியாகத்தான் நாட்டிலே பிரச்சினையை எழுப்புகிறார்கள். அந்தப் பிரச்சினையில் தவறு இருந்தால், நேரடியாக, சரியாகச் சொல்லுங்கள். மொத்தமாக அவர்கள் யாரைப்பற்றியும் கவலைப் படுவதில்லை என்று சொல்லுவது வேதனைப்படத்தக்கதாகும். இந்த நேரத்தில் தெளிவாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். மாதா மாதம் சம்பளத்தை கையெழுத்துப் போட்டு வாங்குபவர்கள் தங்களுடைய வருவாய் எவ்வளவு என்று எழுதித் தரும்போது, ஏமாற்ற முடியாத நிலையில், சரியான வருவாயை எழுதித் தர வேண்டியதாக இருக்கிறது. ஆனால் அதே சமயத்திலே அதே பிரிவைச் சேர்ந்தவர்கள்—பிற்பட்டவர்கள் அல்லது தாழ்த்தப் பட்டவர்கள்—ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரைவிட மிக அதிகமான அளவுக்கு வருமானம் உடையவர்கள், தங்களுக்கு மிகக் குறைந்த வருமானம் என்று சர்ட்டிபிகேட் வாங்கி வந்து, சலுகைகளைப் பெறுவது என்பது காலாகாலமாக, மரபாக நடந்து வருகிறது என்பது அறியாததல்ல. கல்விக் கூடங்களிலே



பார்க்கலாமே! இரண்டு ஆயிரம் ரூபாய் ஆண்டு வருமானம் என்று சான்றிதழை மாமூலாக வருவாய்த் துறை கொடுத்துக் கொண்டிருக்கிறது. டெபுடி தாசில்தார்கள் அந்தச் சான்றிதழைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எந்த அளவுக்கு அதைக் கண்டுபிடிக்க முடிந்தது? நம்மிடத்தில் உள்ள நிர்வாக இயந்திரம் மிகச் சரியாக வருமானத்தைக் கணக்கிட்டு, சலுகைகளை வழங்கமுடியுமா? மிகச் சரியாகக் கணக்கிட்டு வழங்க முடியாத ஒன்றை, ஊழியர்கள்மீது மட்டும் திணிக்கப் பயன்படுத்தினார்கள் என்பதுதான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் கேள்வி. ஒரு அரசு ஊழியர் அல்லது ஆசிரியர் அல்லது ஒரு அதிகாரி வேண்டுமானால் அந்தச் சலுகையைப் பெற முடியாமல் போக வழி ஏற்படும். அதே சாதியைச் சேர்ந்தவர்கள், வருமானம் அதிகமாக உள்ளவர்கள் அந்தச் சலுகைகளைப் பெறுவார்கள். அந்தக் கவலையால்தான், எங்களை மட்டும் ஏய்க்கும் சூழ்நிலை ஏற்படும், எங்களுக்குச் சலுகைகள் கொடுக்காமல் இருக்கும் சூழ்நிலை ஏற்படும், எங்களைவிட பொருளாதார வசதியும், பண வசதியும் உள்ளவர்கள் அந்தச் சலுகைகளைத் தட்டிப் பறித்துச் சென்றுவிடுவார்கள், அவர்களுக்குக் கிடைக்கும் வசதி ஏற்படுகிறது என்று சொல்லுகிறார்கள். அரசு நினைக்கக் கூடிய பலகீனமான வீக்கர் செக்ஷனுக்கு அந்தச் சலுகைகள் போய்ச் சேருமென்று எதிர்பார்ப்பது நடைமுறையில் நடக்காத ஒன்று என்று தீர்க்கதரிசனத்தோடு பணியாற்றும் ஊழியர்கள் உணர்ந்ததால்தான், இந்தத் தவறான நடைமுறை நிர்வாக இயந்திரத்தில் தொடர்ந்து நீடிக்குமென்றும், அதை நீக்க முடியாது என்றும் பல பிரத்யட்சமான உண்மைகளை ஆசிரியர் களும், அரசு ஊழியர்களும் எழுப்புகிறார்கள். தயவுசெய்து இந்த உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். யாருக்கோ கொடுப்பதைத் தட்டிப்பறிக்க வேண்டும் ஓட்டல் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதைத் தட்டிப் பறிக்க வேண்டும் அல்லது சினிமாக் கொட்டகையிலே சீட்டு கொடுப்பவனுக்கு அளிக்கும் உரிமையைத் தட்டிப் பறிக்க வேண்டும் என்பது அல்ல. அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் எண்ணம். அதைப் புரிந்துகொண்டால் போதும். எதற்காகப் பிரச்சினையை எழுப்புகிறோம் என்று பார்க்கும்போது, எங்களைச் சீக்கிரமாக 'டிஸ்போஸ்' செய்துவிடலாம். நாங்கள் அரசின்கீழே பணியாற்றுகிறவர்கள். திடீரென்று எங்கள் சம்பளம் எவ்வளவு என்று கண்டுபிடித்துவிடலாம். எங்களைத் திடீரென்று 'எக்ஸ்போஸ்' செய்வதால் என்ன பயன் ஏற்படும்? இன்னொருவரை இதன்மூலம் காப்பாற்றுகிறார்கள். அதை மறந்துவிடக் கூடாது. அதைத்தான் இந்த நேரத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற முறை நான் இதைப்பற்றிப் பேசினேன். 9,000 ரூபாய் வருமானம் என்ற பிரச்சினை வந்தபோது, நான் சொன்னேன், முதலமைச்

ரவர்கள் முதலிலே கடுமையாகச் சட்டம் கொண்டு வந்தாலும், 50 சதவிகிதம் பிற்பட்டோருக்கு ஒதுக்கியிருப்பது தமிழகத்திலே பாராட்டக்கூடிய செயலாகும். அதே நேரத்தில் குறைபாடுகளைச் சொன்னாலும், அவற்றை வலியுறுத்திச் சொன்னாலும், அழுத்திச் சொன்னாலும், தவறுகளைச் சொன்னாலும், செய்திருக்கக்கூடிய நல்ல காரியங்களைப் பாராட்டாமல் இருப்பது நடுநிலையாளர்களுக்கு அழகல்ல. நான் அதைப் பாராட்டுகிறேன். ஐம்பது சதவிகிதம் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இன்றைக்குக்கூட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இன்னும் பிற்பட்டவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று ஆராயவும், சட்டநாதன் குழுவின் அறிக்கையை ஆராயவும் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு என்ன சிபாரிசு செய்யுமென்பது தெரியாது. அந்தச் சிபாரிசின் அடிப்படையிலே அரசு நடவடிக்கைகளை எடுக்கும்போது, இந்தச் சமுதாயத்தில் சலுகை என்று வரும்போது, சாதி, மதம் என்ற பெயரால் பிரச்சினைகள் வரும். அவரவர்கள் கொடி தூக்குவார்கள். சாதிக்கு ஒரு சங்கம் வைப்பார்கள். அப்போதுதான் சலுகைகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு மக்கள் போராடும் குறுகிய வட்டத்திற்குள் வந்துவிட்டார்கள். அதற்கு என்ன காரணம்? இந்த அடிப்படையிலே ஆட்சிப் பொறுப்பில் உள்ள நாம் சிந்திக்க வேண்டும். அதற்குக் காரணம் மக்களுக்கு வேலை வாய்ப்பை முழுமையாக உண்டாக்க வழியில்லாமல் ஆட்சி இருப்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அவர்கள் சாதியின் பெயரைச் சொல்லி, சாதி வளர்ந்தால்தான் ஏதாவது கிடைக்கும் என்று எண்ணி போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் வியாபாரம் அல்லது தொழில் செய்வதில் ஈடுபடுகிறார்கள். அவர்கள் உத்தியோகம்பற்றிக் கவலைப்படுவதில்லை. எந்தச் சாதி உத்தியோகம்பற்றி அதிகமாகக் கவலைப்படுகிறதோ அந்தச் சாதி வேறு தொழில்களுக்குச் செல்ல முடியாமல் தடுமாறுகிறது. இன்றைக்கு நம்மைப் பொறுத்தவரையில், ஆட்சி முறையில் என்ன கோளாறு என்பது தெரியவில்லை. சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்தச் சமுதாயத்தில் சாதிகளின் பெயராலே, மதத்தின் பெயராலே சலுகைகள் வழங்குவது இன்னும் நீடிக்கிறது என்றால், இந்த நாடு எப்போதுதான் முன்னேறப் போகிறது? எல்லா சாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். 'எஜுகேஷனல்' என்ற தத்துவத்தை எல்லோரும் தூக்கிப் பிடிக்கிறார்கள். அதே சமயத்தில் 'சோஷியலி பேக்வார்ட்' என்று அரசியல் சட்டம் கூறுகிறது



என்று, அதைச் சாதகமாக்கிக் கொண்டு, சிலர் தூக்கிப் பிடிக்கிறார்கள். தாங்கள் ஓட்டல் தொழிலாளியாக இல்லையா, எங்களுக்குச் சலுகை வேண்டுமென்று, அதற்கான நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். இப்படி எல்லா நியாயங்களும் வருவதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம்தான். அதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெறும் ஊதியத்திற்குச் சமமாக ஒரு தொழிற்சாலையில் பணியாற்றும் தொழிலாளி ஊதியம் பெறுகிறான்.

(பிற்பகல் 5-30)

இது சாதாரணமான விஷயம் என்று யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது. அதேசமயத்தில் ஒரு சாதாரண தொழிலாளி இவ்வளவு சம்பாதித்துக் கொண்டிருக்கும்போது, அதைப் பார்த்து பல அதிகாரிகள் மனமுடைந்து நாங்கள் ஏன் இவ்வளவு குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய வேண்டும் என்று வருத்தப்பட்டுச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஒரு நல்ல தொழிற்சாலை என்றால், அதில் உற்பத்தியாகிற பொருளுக்கு மார்க்கெட் ஏற்பட ஏற்பட சம்பளமும் தானாகவே தொழிலாளர்களுக்குக் கூடுகிறது. இந்த சமுதாயத்திலே சாதியில்லாத ஒரு அமைப்பு ஏற்பட வேண்டுமென்று பாரதி சொல்லியிருந்தாலும் கூட, சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் கூட, பொருளாதார அடிப்படையில் சமத்துவம் வரும் காலம் வரை இப்படிப்பட்ட சலுகைகளைக் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள், அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்திக்கொண்டு தான் இருப்பார்கள். இப்படிக் கேட்பது குறுகிய நோக்கில் இருக்கிறது. ஒரு ஜனநாயக நாட்டில் இதுபற்றி தொலைநோக்கோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழில் அடிப்படையில், உத்தியோக அடிப்படையில் போட்டி வந்து, தேர்தல் அடிப்படையில் போட்டி வந்து, பின்பு ஒருவருக்கொருவர் மோதலை வளர்த்துக் கொள்கிற நிலையில் பொருளாதாரத்தில் அனைவரும் சமத்துவம் அடையும் காலம் வரும்வரை, இதனைத் தவிர்க்க முடியாது. அதற்காக இவற்றையெல்லாம் நான் எதிர்க்கிறேன் என்பதல்ல. இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் சாதியையும், மதத்தையும் ஒழிக்காமல் எப்படி எல்லாம் சமுதாயத்திற்கு நன்மை செய்யலாம் என்று சிந்திக்கிறார்கள். எல்லோரும் சமம், எல்லோருக்கும் வேலைவாய்ப்பு உண்டு என்கிற நிலையை உருவாக்கினால், பிரச்சினையே இல்லை. "எல்லோரும் எல்லா திசை நோக்கி நகர்க" என்று அன்றைக்கு பாரதிதாசன் சொல்லியிருந்தும் கூட, இங்கே இது நகர மாட்டேன் என்கிறது. பாரதிதாசன் கவிதையிலிருந்து நான் எதற்காக மேற்கோள் காட்டிப் பேசுகிறேன் என்றால், பாரதிதாசன் கவிதைகளை நாள்தோறும் சிறப்பான முறையிலே பாடிய மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே இருக்கி

ரவர்கள் முதலிலே கடுமையாகச் சட்டம் கொண்டு வந்தாலும், 50 சதவிகிதம் பிற்பட்டோருக்கு ஒதுக்கியிருப்பது தமிழகத்திலே பாராட்டக்கூடிய செயலாகும். அதே நேரத்தில் குறைபாடுகளைச் சொன்னாலும், அவற்றை வலியுறுத்திச் சொன்னாலும், அழுத்திச் சொன்னாலும், தவறுகளைச் சொன்னாலும், செய்திருக்கக்கூடிய நல்ல காரியங்களைப் பாராட்டாமல் இருப்பது நடுநிலையாளர்களுக்கு அழகல்ல. நான் அதைப் பாராட்டுகிறேன். ஐம்பது சதவிகிதம் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இன்றைக்குக்கூட ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். இன்னும் பிற்பட்டவர்கள் யார் யார் இருக்கிறார்கள் என்று ஆராயவும், சட்டநாதன் குழுவின் அறிக்கையை ஆராயவும் ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு என்ன சிபாரிசு செய்யுமென்பது தெரியாது. அந்தச் சிபாரிசின் அடிப்படையிலே அரசு நடவடிக்கைகளை எடுக்கும்போது, இந்தச் சமுதாயத்தில் சலுகை என்று வரும்போது, சாதி, மதம் என்ற பெயரால் பிரச்சினைகள் வரும். அவரவர்கள் கொடி தூக்குவார்கள். சாதிக்கு ஒரு சங்கம் வைப்பார்கள். அப்போதுதான் சலுகைகளைப் பெற முடியும் என்ற நம்பிக்கையோடு மக்கள் போராடும் குறுகிய வட்டத்திற்குள் வந்துவிட்டார்கள். அதற்கு என்ன காரணம்? இந்த அடிப்படையிலே ஆட்சிப் பொறுப்பில் உள்ள நாம் சிந்திக்க வேண்டும். அதற்குக் காரணம் மக்களுக்கு வேலை வாய்ப்பை முழுமையாக உண்டாக்க வழியில்லாமல் ஆட்சி இருப்பதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே அவர்கள் சாதியின் பெயரைச் சொல்லி, சாதி வளர்ந்தால்தான் ஏதாவது கிடைக்கும் என்று எண்ணி போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். சில வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் வியாபாரம் அல்லது தொழில் செய்வதில் முற்படுகிறார்கள். அவர்கள் உத்தியோகம்பற்றிக் கவலைப்படுவதில்லை. எந்தச் சாதி உத்தியோகம்பற்றி அதிகமாகக் கவலைப்படுகிறதோ அந்தச் சாதி வேறு தொழில்களுக்குச் செல்ல முடியாமல் தடுமாறுகிறது. இன்றைக்கு நம்மைப் பொறுத்தவரையில், ஆட்சி முறையில் என்ன கோளாறு என்பது தெரியவில்லை. சுதந்திரம் பெற்று 36 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. இந்தச் சமுதாயத்தில் சாதிகளின் பெயராலே, மதத்தின் பெயராலே சலுகைகள் வழங்குவது இன்னும் நீடிக்கிறது என்றால், இந்த நாடு எப்போதுதான் முன்னேறப் போகிறது? எல்லா சாதிகளிலும் ஏழைகள் இருக்கிறார்கள். அந்தத் தத்துவத்தை எல்லோரும் தூக்கிப் பிடிக்கிறார்கள். 'ஸோஷலிசம்', அதே சமயத்தில் 'சோஷியலிசம் பேசுவார்கள்' என்று அரசியல் சட்டம் கூறுகிறது





என்று, அதைச் சாதகமாக்கிக் கொண்டு, சிலர் தூக்கிப் பிடிக்கிறார்கள் நாங்கள் ஓட்டல் தொழிலாளியாக இல்லையா, எங்களுக்குச் சலுகை வேண்டு மென்று, அதற்கான நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார்கள். இப்படி எல்லா நியாயங்களும் வருவதற்குக் காரணம் வேலையில்லாத் திண்டாட்டம்தான். அதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பெறும் ஊதியத்திற்குச் சமமாக ஒரு தொழிற்சாலையில் பணியாற்றுப் தொழிலாளி ஊதியம் பெறுகிறான்.

(பிற்பகல் 5-30)

இது சாதாரணமான விஷயம் என்று யாரும் எடுத்துக்கொள்ளக் கூடாது அதேசமயத்தில் ஒரு சாதாரண தொழிலாளி இவ்வளவு சம்பாதித்துக் கொண் டிருக்கும்போது, அதைப் பார்த்து பல அதிகாரிகள் மனமுடைந்து நாங்கள் ஏன் இவ்வளவு குறைந்த சம்பளத்தில் வேலை செய்ய வேண்டும் என்று வருத்தப்பட்டுச் சொல்வதை நான் கேட்டிருக்கிறேன். ஒரு நல்ல தொழி சாலை என்றால், அதில் உற்பத்தியாகிற பொருளுக்கு மார்க்கெட் ஏற்பட ஏற்பட சம்பளமும் தானாகவே தொழிலாளர்களுக்குக் கூடுகிறது. இந்த சமுதாயத்திலே சாதியில்லாத ஒரு அமைப்பு ஏற்பட வேண்டுமென்று பாரதி சொல்லியிருந்தாலும் கூட, சாதியின் பெயராலும், மதத்தின் பெயராலும் ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும் கூட, பொருளாதார அடிப்படையில் சமத்துவ வரும் காலம் வரை இப்படிப்பட்ட சலுகைகளைக் கேட்டுக்கொண்டுதான் இருப்பார்கள், அரசுக்குச் சங்கடத்தை ஏற்படுத்திக்கொண்டு தான் இருப்பா கள். இப்படிக் கேட்பது குறுகிய நோக்கில் இருக்கிறது. ஒரு ஜனநாய நாட்டில் இதுபற்றி தொலைநோக்கோடு சிந்தித்துப் பார்க்க வேண்டும். தொழில் அடிப்படையில், உத்தியோக அடிப்படையில் போட்டி வந்து, தேர்த அடிப்படையில் போட்டி வந்து, பின்பு ஒருவருக்கொருவர் மோதலை வளர்த்துக் கொள்கிற நிலையில் பொருளாதாரத்தில் அனைவரும் சமத்துவ அடையும் காலம் வரும்வரை, இதனைத் தவிர்க்க முடியாது. அதற்கா இவற்றையெல்லாம் நான் எதிர்க்கிறேன் என்பதல்ல. இன்றைக்கு இருக்கி சூழ்நிலையில் சாதியையும், மதத்தையும் ஒழிக்காமல் எப்படி எல்லாம் சமுதா யத்திற்கு நன்மை செய்யலாம் என்று சிந்திக்கிறார்கள். எல்லோரும் சம எல்லோருக்கும் வேலைவாய்ப்பு உண்டு என்கிற நிலையை உருவாக்கினா பிரச்சினையே இல்லை. "எல்லோரும் எல்லா திசை நோக்கி நகர்க" என்ற அன்றைக்கு பாரதிதாசன் சொல்லியிருந்தும் கூட, இங்கே இது நகர மாட்டே என்கிறது. பாரதிதாசன் கவிதையிலிருந்து நான் எதற்காக மேற்கோ காட்டிப் பேசுகிறேன் என்றால், பாரதிதாசன் கவிதைகளை நாள்தோறு சிறப்பான முறையிலே பாடிய மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே இருக்

றார்கள், நான் அவர்களுடைய பேச்சைக் கேட்டுக் கேட்டு அந்த உணர்விலே வசப்பட்டவன். காரல் மார்க்ஸ் சமத்துவம் பற்றிச் சொல்லியுள்ள தத்துவத்தை பல நாடுகள் இன்றைக்கு ஏற்றிருக்கிற நிலையில், பாரதிதாசன் அன்றைக்குப் பாடிய கவிதைகள், சொல்லிய கருத்துக்கள் அப்படியே இருக்கின்றன. இதை நிறைவேற்ற மாநில அரசால் மட்டும் முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இந்திய அரசு இந்தக் கருத்தை உணர்ந்து, இந்தச் சமுதாயம் முன்னேற உண்மை அடிப்படை இது தான் என்பதை எண்ணி உடனே இதை இந்தியா முழுமைக்கும் செயல்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆட்சி புதிதாக ஒரு நல்ல காரியத்தைச் செய்திருக்கிறது. பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் ஐ.ஏ.எஸ். பதவியை அடைய வேண்டுமென்கிற அடிப்படையில், அனைத்து இந்தியத் தேர்வில் அவர்கள் வெற்றி பெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு, இந்த ஆண்டு இங்கே ஒரு தேர்வை நடத்தி, அதில் வெற்றி பெற்றவர்களை டெல்லிக்கு நேர்முகத் தேர்விற்கு அழைத்துச் சென்று, டெல்லியிலே அவர்களைத் தங்க வைத்து, சர்மா இன்ஸ்டிட்யூட்டில் அதற்கான பயிற்சியையும் கொடுத்திருக்கிற நிலைமைகளை நான் பாராட்டுகிறேன். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மக்கள் உண்மையிலேயே முன்னேற வேண்டுமென்ற அடிப்படையில் இந்த அரசு இதைச் செய்திருப்பதால், நான் இதைப் பாராட்டுகிறேன். இந்த சந்தர்ப்பத்தில் நான் இன்னொரு விஷயத்தையும் சொல்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் என்பது பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. 7 ஆண்டுகளுக்கு முன்பு இதிலே வளர்ச்சி இல்லை. இப்போது வளர்ச்சி அடைந்திருக்கிறது. அப்படி என்றால், அவர்கள் ஆட்சிக் காலத்தில் வளர்ச்சி இல்லை, இப்போது தான் வளர்ச்சி என்பதல்ல. இந்த 7 ஆண்டு கால இடைவெளியில் இது படிப்படியாக வளர்ந்திருக்கிறது என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். 1977 ஆம் ஆண்டு 683 கோடி ரூபாய் வருவாய் வந்தது. ஆனால் இப்போது 1,652 கோடி ரூபாய் வந்திருக்கிறது. ஆகவே பல வழிகளிலும் வளர்ச்சியடைந்துகொண்டிருக்கிற தமிழகம் இந்த விஷயத்திலும் முன்னேறிக் கொண்டு வருகிறது என்று தான் பொருள். இன்றைக்கு அந்த அளவுக்கு ஆதி திராவிடர் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்பது குறித்து தான் பெருமைப்படுகிறேன்.



சலவைத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்குச் சில துறைகளை கட்டித் தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதற்காக அவர்களுக்கு 50 சதவிகித கடனும், 50 சதவிகித மானியமும் அளிக்கப்படுகிறது. இது ஒரு நல்ல திட்டம். இந்தத் துறைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. பெரும்பாலான நோய்கள் எல்லாம் இந்தச் சலவைத் துணிகளின் மூலமாகப் பரவுகின்றன என்று சொல்கிறார்கள். சுகாதாரம் என்கிற முறையிலும் சலவைத் தொழிலாளர்களின் நலன் கருதியும், அரசு பல கோடி ரூபாய்களை இதற்காக அனுமதித்தால் கூட பாவாயில்லை. குட்டையில் தேங்கிக் கிடைக்கிற அழுக்குத் தண்ணீரில் துணிகளைச் சலவை செய்கிற பரிதாபக் காட்சியை நாம் பார்க்கிறோம். ஆகவே சுகாதாரம் கருதியும், சலவைத் தொழிலாளர்களின் நலன் கருதியும் இன்னும் அதிகமாக தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் மணி அடித்தார்.)

இதற்கு மேலும் அதிகமாகப் பேசிக்கொண்டிருக்க நேரம் போதுமானதாக இல்லை என்பதால், நான் சொன்ன கருத்துக்களை ஏற்று, உணர்ந்து, பரிசீலித்து, நல்ல முறையில் சீர்தூக்கி, நல்லவைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

**திரு. ஆ. நல்லசிவன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின்மீது என்னுடைய கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூறுகிறேன். பிற்பட்ட மக்களுக்குக் கல்வி கற்கின்ற வாய்ப்பினைத் தந்தமை அவர்களுடைய பிற்பட்ட தன்மையைப் போக்குகின்ற ஒரு முக்கியமான காரியம். அவர்கள் நல்முறையில் கல்வி கற்க வசதி, ஸ்காலர்ஷிப், படிப்பு உதவித் தொகை போன்ற ஏற்பாடுகளைச் செய்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன். படிப்படியாக அவர்களிடையே இதில் வளர்ச்சி ஏற்பட்டுக்கொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன் 1948-49 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அப்போது இது 609 மாணவர்களுக்கு மட்டும் தான் பயனளித்துள்ளது. ஆனால் 1981-82 ஆம் ஆண்டு டி-நோட்டிபைட் கம்யூனிட்டீஸ் மட்டும் 1 இலட்சத்து 76 ஆயிரத்து 851 பேர் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்காக வேண்டி அரசு 43 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் செலவிட்டுள்ளது. அதுபோல் பிறபட்ட வகுப்பினருக்காக அரசாங்கம் ரூபாய் 3 கோடியே 29 இலட்சத்து 18 ஆயிரம் செலவு செய்து 2,14,934 மாணவர்கள் பயன் பெற உதவித் தொகை வழங்கியுள்ளது. ஆகவே பிற்பட்ட வகுப்பினர் படிப்பைப் பொறுத்தவரையில், கல்வி அறிவைப்

பொறுத்தவரையில், வளர்ச்சி அடைந்திருப்பது குறித்து என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை வரவேற்கிறேன். தொடர்ந்து ஒன்றிரண்டு விஷயங்களை மட்டும் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிறேன். பிற்பட்ட வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு உதவித் தொகை 9 ஆம் வகுப்பிலிருந்து அளிக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் டி-நோட்டிபைட் வகுப்பைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு 4 ஆம் வகுப்பிலிருந்து உதவித் தொகை தரப்படுகிறது. 3 ஆம் வகுப்பு வரை புத்தகம் இலவசமாக அளிக்கப்படுகிறது. அதுபோல் பிற்பட்ட வகுப்பு மாணவர்களைப் பொறுத்தவரையில், 40 சதவிகிதம் மதிப்பெண்களுக்கு மேல் வாங்கியிருந்தால் தான், உதவித் தொகை உண்டாம். ஆனால் டி-நோட்டிபைட் கம்யூனிட்டிஸ் தேர்ச்சி பெற்றாலே போதும் என்று இருக்கிறது. அதுபோல் இந்த அரசே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே 24 ஆம் பக்கத்திலே ஒன்றைச் சொல்லியிருக்கிறது. "பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிட மக்களை விட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலியோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த 1981-82 முதல் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது" என்று அரசே சொல்லியிருக்கும் போது, அவர்கள் வீட்டிலுள்ள குழந்தைகள் 40 சதவிகிதத்திற்கு மேல் மார்க் பெறவில்லை என்பதற்காக அவர்களுக்கு உதவித் தொகை இல்லை என்று சொல்வது எந்த வகையில் நியாயம்? அதுபோல் அவர்களுக்கு 9 ஆம் வகுப்பு வரையில் உதவித் தொகை இல்லை என்பது எந்த வகையில் நியாயம்? இவர்களுக்கு 9 ஆம் வகுப்புக்குப் பிறகு தான் தரப்படும், அதுபோல் 40 சதவிகித மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும் என்று சொல்வதெல்லாம் எப்படி பொருத்தமாக இருக்க முடியும்? சர்க்காரிடம் இவ்வளவு தான் பணம் இருக்கிறது, அதை வைத்துக்கொண்டு இப்படித்தான் செய்ய முடியும் என்கின்ற வாதம் சொல்லப்படுமேயானால், இவர்களுக்கு 'மோஸ்ட் பேக்வர்ட்' என்கிற அடிப்படையில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டிருப்பது போல் கொடுத்திருக்க வேண்டாமா? இப்படி 9 ஆம் வகுப்பிலிருந்து வழங்கப்படும் என்றும், 40 சதவிகிதத்திற்கு மேல் மார்க் பெற்றிருக்க வேண்டுமென்றும் விதித்திருப்பது நியாயமல்ல. 'ஷெட்யூல்ட் காஸ்ட்' என்று பார்க்கிறபோது அவர்களுடைய சமூக, கல்வி, பொருளாதார நிலை பார்க்கப்படுகிறது. அவர்களைப் போல இவர்களும் மிகவும் பின்தங்கியவர்களாக எல்லாத் துறைகளிலும் இருக்கிறபடியால் இவர்களையும் அந்தப் பகுதியினரைப்போல விசேஷமாக கவனிக்க வேண்டும். இந்த அறிக்கையிலுள்ள விவரத்தின் அடிப்படையிலேயே தான் கருத்துக்களைச் சொல்கிறேன். பேக்வர்ட் கம்யூனிட்டீஸ் என்றாலும் சரி,



டி-நோட்டிபைட் கம்யூனிட்டீஸ் என்றாலும் சரி, இந்த ஸ்காலர்ஷிப் தொகையை அதிகப்படுத்த வேண்டும். இந்த இரண்டு பிரிவினருக்காகவும் அரசாங்கம் 1982-83 ஆம் ஆண்டில் செய்திருக்கும் ஒட்டுமொத்தச் செலவைக் கணக்கிட்டுப் பார்ப்போமேயானால், ரூபாய் 3 கோடியே 73 இலட்சம் தான் வருகிறது. 3,91,785 மாணவர்களுக்கு, அதாவது கிட்டத்தட்ட 4 இலட்சம் மாணவர்களுக்கு அரசாங்கம் இந்தத் தொகையை உதவித் தொகையாகக் கொடுக்கிறது. அரசே இப்படி பிற்பட்ட வகுப்பினருக்காகவும் டி-நோட்டிபைட் கம்யூனிட்டிஸ்சுக்காகவும் கொடுக்கிற ஸ்காலர்ஷிப் தொகையை அதிகப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமான, அவசியமான ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 5-40)

அடுத்தபடியாக, இட ஒதுக்கீடு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1979ஆம் ஆண்டு கடைசியில் ரூ. 9000 என்று வருமான வரம்பு வைத்தார்கள். அதை அப்போது நாங்களும் ஆதரித்தோம். இப்போதுள்ள பண வீக்கத்தின் காரணமாக அதை 12,000 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னோம். அப்படி வைத்துக் கொண்டால், ஒரு குடும்பத்தில் 2 பேர்கள் வேலைக்குச் சென்றாலும், ஆளுக்கு ரூ. 500 என்று வருமானம் வைத்துக் கொண்டாலும் வருடத்திற்கு ரூ. 12,000 வந்து விடுகிறது. ஆனால் இட ஒதுக்கீடு பிரச்சினையில் அது கல்வியாகட்டும், வேலை வாய்ப்புக்காக என்று இருக்கட்டும், வருமான வரம்பு இருப்பது எப்படி பிற்பட்ட வகுப்புகளை பாதிக்கிறது, பிற்பட்ட வகுப்பிற்காகத்தான் வருமான வரம்பு என்றால், இப்படி வரம்பு என்று வைப்பதன் மூலமாக, பிற்பட்டோர் அல்லாத பிரிவினருக்குப் போகிறதா? அல்லது பிற்பட்ட இனத்திலேயே அடிமட்டத்தில் இருப்பவர்களுக்குப் போகிறதா? ஏனென்றால் பதவிகள் குறைவு. அது ஒரு குறை. நிறையபேர் பதவிக்குப் போட்டி போடுகிற நிலை இருக்கிறது. இருக்கிற வேலையைப் பகிர்ந்து கொடுப்பது என்று வருகிறபோது வருமான வரம்பின் காரணமாக அவர்களுக்கு என்று ஒதுக்கிய இடங்கள் வேறு வகுப்புகளுக்குப் போகிற வாய்ப்பு இருக்கிறதா? இல்லையே. அந்த இடங்கள் பூர்த்தி செய்யப் படுகிறபோது, அந்த வகுப்புக்குள்ளேயேதான் போகும். அப்படிப் போகிற போது இன்றைக்கு இருக்கிற சமுதாய அமைப்பில், சர்டிபிகேட்டிலோ, அல்லது வேறு பல வாய்ப்புகளிலோ, அரசியல் செல்வாக்கை உபயோகித்து, வாய்ப்பு உள்ளவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது. அது இல்லாமல் வருமான வரம்பை வைத்திருப்பது இந்த பிற்படுத்தப்பட்ட வகுப்புக்குள்ளேயே அடித்தட்டில் இருப்பவர்களுக்குக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் சொன்னபோது, சர்டிபிகேட் கொடுப்பதில் ஊழல் ஏற்படலாம், அப்படிச் செய்ய முடியாதா என்று கேட்டார். அதுவும் நடக்கலாம். வருமான வரம்பில் என்ன பிரச்சினை என்றால், கிராம முன்சிப்பை இப்போது எடுத்துவிட்டு, அரசாங்க அசிஸ்டென்ட் லெவலில் ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரை போட்டிருக்கிறார்கள் அவர்களுக்கு இருக்கிற வரம்புகள் அவர்கள் சர்டிபிகேட் கொடுக்கலாம். முன்பெல்லாம் பாரம்பரையாக இருந்த கிராம முன்சீப்புகள் சர்டிபிகேட் எப்படி வேண்டுமானாலும் கொடுந்துவிட்டு தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் இவர்களால் அப்படி தப்பிக்க முடியாது. இவர்கள் இஷ்டம் போலவும் கொடுக்க முடியாது. இருந்தாலும் அப்படியும் தவறு நடக்கும். இந்தச் சமுதாயத்தில் தேவைகள் இருக்கும் வரைக்கும். முதலாளித்துவ அமைப்பில் லஞ்சமும் ஊழலும் இருந்து கொண்டேதான் இருக்கும். அதை ஒழிக்க முடியாது. நான் சொல்வது ரூ. 9,000, ரூ. 12,,000 என்று வருமான வரம்பு வைக்கிறபோது, குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு பகுதியாவது போகிறதா என்று அரசு கண்காணிக்க வேண்டும் என்பதுதான். அப்படி கண்காணிக்க வாய்ப்புகள் இருக்கின்றன. ரூ. 5 ஆயிரத்துக்குக் கீழே உள்ளவர்களுக்கு மட்டும்தான் இலவசப் படிப்பு என்று சொல்வதை காலி பண்ணுங்கள் என்று ஏன் அரசு கேட்கக் கூடாது? எப்போது பிற்பட்டவர்கள் என்று அறிவித்துவிட்டார்களோ அப்போது 5 ஆயிரம் ரூபாய் வருமானம் என்று சொல்லக் கூடாது. யார் எல்லாம் பிற்படுத்தப்பட்டவர்களோ அவர்களுக்கு மேல் பட்டப் படிப்பு வரைக்கும் ஸ்காலர்ஷிப் உதவித்தொகை, இலவசக் கல்வி உண்டு என்று ஏன் சொல்லக் கூடாது? கல்வியில் பின்தங்கியோர் என்றால், அதிகமாக வரும் இல்லையா? முதலில் படிக்க வசதி, அப்புறம்தானே வேலை வாய்ப்பு. அப்படித் தரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

பின்தங்கியோர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் குழந்தைகள் என்று வரும்போது, ரூ. 5,000 லிமிட் போட வேண்டாம் என்றும் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மேல் பட்டப்படிப்பு வரை படிக்க வைப்பது என்பது இந்தச் சமுதாயத்தில் சாத்தியமா என்று கேட்கலாம். அது எனக்கும் தெரியும். ஆனால் லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான பிற்படுத்தப்பட்ட, குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் குழந்தைகள் என்று வரக்கூடிய பிள்ளைகளுக்கு வருமான வரம்பு வைக்காமல் உதவித் தொகைக்கு வருமான வரம்பே கூடாது என்று ஏன் கேட்கக் கூடாது?



**திரு. க. இராமமூர்த்தி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுபோன்ற சலுகைகள், பின்தங்கியோருக்கு வருவது ஒரு நல்லது தான். சிந்தனை கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டு வருகிறது. நல்ல சிந்தனை. இதற்கு நாங்களும் கூட இருக்கிறோம். ஏன் கேட்கக் கூடாது என்பது கிடையாது. மற்றவர்களுக்கு இந்தச் சிந்தனை தோன்ற வில்லை. உறுப்பினர் அவர்களுக்குத் தோன்றியிருக்கிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** தோன்றவில்லை என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. உறுப்பினர் அவர்கள் எல்லாம் தெரிந்தவர்.

**திரு. க. இராமமூர்த்தி :** உறுப்பினர் அவர்கள் சொல்வதைத் தான் நம்ப வேண்டும். நம்ப முடியும். அதுதான் முறை. இதுவரை தோன்றவேயில்லை. உறுப்பினர் அவர்கள் சிந்தனை நல்ல சிந்தனை என்று சொல்கிறோம். அப்போதும் அதிலே ஏதோ காரணம் இருக்கிறது என்று சொன்னால் என்ன செய்வது?

**திரு. ஆ. நல்லசிவன் :** நல்ல சிந்தனை உறுப்பினர் அவர்களுக்கும் இருக்கிறது என்று சொல்கிறோம். உறுப்பினர் அவர்கள் ஒரு யதார்த்தத்தைப் புரிந்து கொள்கிறார்கள். நானும் புரிந்து கொள்கிறேன். அதாவது பின்தங்கியோர் குழந்தைகளுக்கு வருமான வரம்பு இல்லாமல், இலவசக் கல்வியுடன் உதவித் தொகை என்று கேட்டால், இந்த அரசாங்கத்தால் அது முடியாது என்று தெரிந்திருப்பதன் காரணமாக, அதை வேண்டாம் என்று உறுப்பினர் அவர்கள் சொல்லுவார்களா? நான் கூட அப்படி கேட்கலாமா என்று தயங்கிக் கொண்டிருக்கிறேன். உறுப்பினர் அவர்களுக்கும் தெரியாமல் இல்லை. எனக்கும் தெரியாமல் இல்லை. பாயிண்ட் என்னவென்றால் இந்த உத்தியோகம் ஒதுக்கப்படும் விஷயத்தில் நாங்கள் தெரிந்துதான் சொல்கிறோம் என்று சொல்கிறார்.

**திரு. க. இராமமூர்த்தி :** துணைத் தலைவர் அவர்களே, நான் தெரிந்துதான் இதைச் சொல்கிறேன் என்று சொல்கிறார். அவருக்கு என்ன தெரியுமோ அதற்கு மாறாகச் சொல்லியிருக்கிறார். ஆனால் ஒன்றைச் சொல்கிறேன். (De-notified Tribe) டி-நோடிபைடு டிரைப்-க்கு வருமான வரம்பு இல்லாமல் சலுகை அளிப்பதால் எந்த அரசாங்கமும் மூழ்கிவிடாது. தைரியமாகச் செய்யலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் முக்கியமாக கவனிக்கப்படவேண்டியது இரண்டு (1) வாய்ப்பு (2) வசதி. பல்லாயிரக்கணக்கான ஆண்டு காலமாக, பிற்படுத்தப்பட்டவர்கள் கல்வி வாய்ப்பு அல்லது வேலை வாய்ப்பு பெறாத சூழ்நிலையில் அவர்களுக்கு என்று குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட வேண்டியிருக்கிறது. அவர்களுடைய பொருளாதாரத்தைக் கவனிக்காமல், நிலையை கவனித்து, வாய்ப்பு அளிப்பதில் 50 சதவீதம், 18 சதவீதம் என்று ஒதுக்கப்படுகிறது. அதற்குப் பிறகு சமாளிப்பது என்பது வசதியைப் பொறுத்து வருகிறது. வசதி படைத்தவர்களாக, பணக்காரர்களாக இருந்தால், அவர்களுக்கு ஏன் கொடுக்க வேண்டும்? ஆகவே தான் ரூ. 5,000-க்குக் கீழே இருப்பவர்களுக்கு ஸ்காலர்ஷிப், ரூ. 6,000 க்குக் கீழே வருமானம் இருக்கும். ஆதி திராவிடர்களுக்கு உதவித் தொகை என்று வைத்திருக்கிறோம். ஆனால் வாய்ப்பு அளிக்கிறபோது, அவர்களுடைய வகுப்பின் தன்மையின் அடிப்படையில் வைக்கிறோம். இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து கவனிக்கக்கூடாது

திரு. ஆ. நல்லசிவன் : நானும் அதைத்தான் சொல்லவந்தேன். கல்வியில் பின்தங்கியோர் என்பதற்காகத்தான் நாங்கள் போராடுகிறோம் என்றால், நாங்களும் அதற்குத் துணையாக இருக்கிறோம். சமூகத்தில் பின்தங்கியோர், பொருளாதாரத்தில் பின்தங்கியோர் என்று சொல்வதில் அர்த்தம் இல்லை. சமூகத்தில், கல்வியில், பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு உதவி செய்ய வேண்டுமென்ற பிரச்சினையில், அதை அணுகுகிற போது, இந்த வேலை வாய்ப்பு வருகிறபோது, கல்லூரியில் இடம் ஒதுக்கிறபோது, வருமான வரம்பை வைப்பதன் மூலமாக, இந்த இனத்தவர்க்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அவர்களுக்குக் கிடைக்காமல் போகிறதா? அவர்களுக்கு அதுதான் கிடைக்கிறது. இப்படி இந்த வரம்பைக் கட்டுப்படுத்தாமல் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாக செல்வாக்கு உள்ளவர்கள் அரசியல் கட்சியில் புகுந்து அரசியலில் மேல்தட்டில் இருப்பவர்களுக்கு ஒதுக்கும் நிலைமை இருப்பதன் காரணமாக, ஒதுக்கிக் கொள்ளத்தக்க வாய்ப்பு இருப்பதன் காரணமாக, கள்ள சர்டிபிகேட் வாங்கி, அதைக் கொண்டுபோய் விட வாய்ப்பு இருக்கும். அப்படி சர்டிபிகேட் கொடுப்பதில் கூட இன்றைக்குள்ள கால கட்டத்தில் அதில் உள்ள ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டும். உண்மையிலேயே யார் இந்த வருமான வரம்பிற்குட்பட்டு இருக்கிறார்களோ அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்க வேண்டும். வருமானக் குறைவு யாருக்கு உண்மையாகவே இருக்கிறதோ, அப்படிப் பின்தங்கியவர்களுக்கு இருக்கிற பதவிகளைக் கொடுக்கவும் அவர்களுக்குக் கிடைக்கவும், நாம் முயற்சி செய்வோம். அதற்கான சாத்தியக்கூறுகளை நாம்



யோசனை செய்ய வேண்டும். நான் ஆசிரியர்களுக்கோ அரசு ஊழியர்களுக்கோ எதிரானவன் அல்ல. அவர்களுக்கு அதிகச் சம்பளம் வேண்டுமென்று சண்டையை, இங்கு மட்டுமல்ல, வெளியிலும் போடுகிறவன். சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் அடித்தளத்தில் இருப்பவர்களுக்கு உதவிகள் போய்ச் சேர வேண்டுமென்ற வகையில் இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் முன்னால் எனக்குப் பதில் சொன்னதைப்போல், இதற்கும் பதில் சொன்னால் நல்லது. வருமான வரம்பு வைக்கும்போதுகூட, பதவிகள் என்பது அப்போதும் பிற்பட்டவர்களுக்குத்தான் போகிறதே தவிர, வேறு யாருக்காவது போய்விடுமா? எதற்கு பயப்பட வேண்டும் என்று கேட்க விரும்புகிறேன். கண்டிப்பாக வேறு யாருக்கும் போகாது. அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் போகாது. நிலச்சுவான்தார்களுக்குப் போய்விடும், காரணம் அவர்கள் கள்ள சர்டிபிகேட் வாங்கி வந்துவிடுவார்கள் என்று சொல்லலாம். இன்றையதினம் கிராமங்களில் அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆபீசர்ஸ் என்று நியமித்துவிட்ட காரணத்தால், அங்கே இதை 'செக்' பண்ணுவதற்கும் ஒரு வாய்ப்பு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. பிற்பட்டவர்களிலும்கூட, கீழ்த்தட்டில் இருப்பவர்களுக்குத்தான் அந்தச் சலுகைகள் போக வேண்டும் என்றுதான் நான் வற்புறுத்துகிறேன். வேண்டுமானால் வருமான வரம்பு ரூ. 9,000 என்றிருப்பதை ரூ. 12,000 என்று ஆக்கிக் கொள்ளுங்கள். இது எப்படி பிற்பட்டவர்களுக்குப் பாதகமாக இருக்கும் என்று சொன்னால், நான் அறிந்துகொள்ள முயற்சிக்கிறேன் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் நலக் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் ஜனதா கட்சி ஆகிய மூன்று கட்சிகள் மட்டும் பிரதிநிதித்துவம் பெறாமல் இருக்கின்றன. இதைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கேட்டபோது, அரசியல் கட்சிகளின் அடிப்படையில் இது போடப்படவில்லை என்றார்கள். அப்படியென்றால் இந்த மூன்று கட்சிகள் மட்டும் தற்செயலாக விடுபட்டுப் போயினவா? அல்லது அரசியல் கட்சிகளிடையில் பாரபட்சம் காட்டப்படுகிறதா? இல்லையென்றால் எங்கள் கட்சியில் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் யாரும் இல்லை என்று முடிவு செய்யப்பட்டுவிட்டதா? அல்லது எங்கள் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தப் பொருள்குறித்து ஆய்வு செய்வதற்குத் தகுதியில்லாதவர்கள் என்று நினைக்கிறார்களா?

THIRU A. R. DAMODARAN: Probably, the Communist Parties have been denied representation because they deny representing any community and because, therefore, they may not fight up the case on that body.

திரு. ஆ. நல்லசிவன்: எங்களுக்கு சாதியில்லை என்று சொல்வது உண்மை தான். எங்கள் சொந்த வாழ்க்கையில் திராவிடர் கழகத்தைப்போல் ஜாதி வழக்கங்களையெல்லாம் விட்டுவிட்டுத்தான் இருக்கிறோம். கலப்புத் திருமணங்களுக்கான முயற்சிகளைத்தான் மேற்கொண்டிருக்கிறோம். ஆனாலும் நாங்கள் ஒப்புக்கொள்வது அனைத்தையும் நாடு ஒப்புக்கொள்ளவில்லையே. அந்த அளவுக்குச் சமுதாயம் முழுவதுமாக மாறிவிடவில்லையே. எனவே எங்களை மட்டும் ஏன் தனியாகப் பிரிக்க விரும்புகிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. மூன்று அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே இடம் அளிக்கப்படவில்லை. எனவே அரசு இதுகுறித்து எங்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட சர்ச்சைக்கிடமான விஷயம்பற்றி ஓர் ஆய்வு நடக்கிறபோது. மூன்று கட்சிகளைச் சார்ந்தவர்கள் மட்டும் விடுபட்டுப் போவது சரியல்ல. இதை அரசு சிந்தித்து அனைவருக்கும் பிரதிநிதித்துவம் வழங்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிகவும் பிற்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருப்பவர்களைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்டவர்களுக்கும். ஆதிவாசிகளுக்கும் கட்டாயமாக வீட்டு மனைகள் தருவதைப்போல் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். சென்ற ஆண்டு 1,000 பேருக்குக் கொடுத்தோம், இந்த ஆண்டு இவ்வளவு கொடுக்கிறோம் என்றில்லாமல், மிகவும் வேகமான முறையில் அதிகமான அளவுக்குப் பணத்தை ஒதுக்கீடு செய்து அவர்கள் அனைவருக்கும் கட்டாயமாக வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பிற்பட்டோர் அல்லாதவர்களிலேயே மிகவும் பலவீனமான பிரிவினருக்கும் அரசு உதவி செய்ய வேண்டும் என்று உத்தேசித்திருக்கிறது; தொடர்ந்து அவர்கள் தங்களின் குறைகளை அரசுக்குத் தெரிவித்துக்கொண்டே இருக்கிறார்கள்; "எங்களால் பிற்பட்டவர்களுக்கான சலுகைகளையும் பெற முடியவில்லை. முன்பு முற்பட்டவர்கள் பட்டியலைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்திற்காக இப்போது பொருளாதாரத் துறையில் மிகவும் பிற்பட்டவர்களாகப் போன பிறகும் எங்களால் எந்தவிதமான அரசுச் சலுகைகளையும் பெற முடியவில்லை" என்று அவர்கள் பல பிரச்சினைகளைக் கூறுவதால் அவர்களுக்கு உதவி



செய்வதற்கான முறையில் இந்தத் திட்டம் உருவாக்கப்படும் என்று முன்பு அறிவித்தார்கள். அப்படி அறிவிக்கப்பட்ட அந்த முயற்சி என்னவாயிற்று? அறிவிக்கப்பட்டு பல மாதங்கள் ஆகிவிட்டனவே? குறைந்தபட்சம் இப்படிப் பொருளாதாரத் துறையில் மிகவும் பலவீனமாக இருப்பவர்களுக்குக் கல்விச் சலுகைகளையாவது அளிக்க வேண்டும் என்று அதற்கான ஏற்பாடுகளைக் குறித்து இந்த அரசு சிந்திக்கிறதா? அவர்களெல்லாம்கூட இப்போது சாதி அடிப்படையில் சலுகைகள் கோரி கிளர்ச்சிகளைச் செய்கிறார்களே, அவர்களைப்போல் ஒன்றாகக் கூடி கிளர்ச்சி செய்தால், அதற்குப் பிறகு பார்க்கலாம் என்று அரசு இருக்கிறதா? ஏனென்றால் இங்கிருக்கும் நிலைமை "அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்" என்பதைப்போல் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட கிளர்ச்சிகள் துவங்குவதற்கு முன்னாலே பொருளாதாரத் துறையில் மிகவும் பலவீனமாக இருப்பவர்களுக்குக் கல்விச் சலுகைகளை யாவது கொடுக்க அரசு திட்டங்களை உருவாக்க வேண்டும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு, முடித்துக்கொள்கிறேன்.

* THIRU A. R. DAMODARAN: Sir, I did not wish to speak today because my throat is very bad. But, since the issues raised are very important, I felt that I should also express my opinions because they might be of help to the Government.

Sir, my first request to the Government is this. While I congratulate the Government on the excellent work they are doing in this department, I have always considered education to be the primary factor which will remove backwardness. In fact, I do not wish to speak about the rest of India. But, as far as the history of Tamil Nadu is concerned, ever since the Communal G.O. was introduced by Thiru Muthiah Mudaliar in 1925, we have recognised the fact that education is the primary factor that will remove backwardness from those sections which may be socially and educationally backward. Sir, from 1925 we are now 58 years ahead. We now have 375 hostels for boys and girls. In these hostels, boys from the Backward Classes and from the Denotified Tribes are given admissions. They are also given scholarships, etc. My request is that in each district one school of excellence should be promoted and all the boys belonging to the Backward Classes and the Denotified Tribes in that district, who have a higher intellectual talent than the others in those hostels, should be selected and put into the special school and given extra tuition facilities, extra coaching, extra food, extra clothing allowance, etc. Sir it was one Pope—I think it was Pope

Pius XII—who said, " Give me a boy at the age of 3; and by the time he has reached the age of 12, I will show that he is equal in intellect and temperament to any other boy in the world." We are now having only 15 districts. The Government can select one hostel in each district, select 50 boys in that district and admit them into that hostel. Those boys can be given special coaching, particularly, coaching in English. The reason why the candidates belonging to these communities are not able to compete and come through in the Indian Administrative Service Examinations and in the Indian Police Service Examinations is that they are not well up in English. I hope the Government will bear this in mind because I know that this is where we differ very strongly. Although they say that they are for promoting English, they are not really doing so and that is where the cause of the backward classes is being hurt and hurt very badly. It is not the boys of the forward community—whether they be socially forward, educationally forward or economically forward—who will be hurt by neglect of English. But, it will be the vast majority of the rural backward classes, belonging to the most backward communities as well as the denotified tribes, who will be hurt if they are not given proper education in their own mother-tongue as well as in English. Therefore, my request to the Hon. Minister would be this. Not only should he give them the scholarship, the boarding fees, the lodging fees, etc. which he is giving now, but, in every Matriculation School and CBSE School in the State, four or six seats may be requested of those managements to be given to such boys and the entire fees and board and lodging for such boys should be paid by the Government. You do this for ten years and you need not bother about the results. Within fifteen years, you will find 50 to 60 boys from these communities coming up and serving in important positions in public life.

(பிற்பகல் 6-00)

Number two, Sir, is the controversy about reservation. This is an old story and as far as school education in Tamil Nadu is concerned, up to Plus two there is no controversy at all, because all boys are admitted—of course, including girls; when I say 'boys', I also have in mind the girls also. All children are admitted to schools and they are given free education. Those who are economically weak are given scholarships, loan scholarships, means scholarships and some allowance to enable them to read, whether that is sufficient or not. It is a matter the Government may investigate and I am not going into this aspect. The problem arises after the children pass out of the schools. There are two avenues which the Government control. One is the provision of jobs in the Government sector and number two is the admission to professional institutions and graduate colleges, where there is severe competition and we face difficulties. In my opinion, if we go on an ideological plane, the sins of the father should not be visited on the children. In a free sovereign independent Republic, every child is entitled to gain admission into a professional institution whether his father is Ramasami Iyengar, Ramasami Mudaliar, Ramasami Pillai or Ramasami Chettiar. If we ask the youth of today, he says: "To hell with your reservation. I want to enter the Engineering College or Medical College. Because my father has a sacred thread around his neck, why should I be denied admission?" This is what the hon. Members Thiru Vasantha Pai, Thirumathi Tara Cherian and Dr. Muthiah Chettiar had been pleading on behalf of the forward communities. The forward communities complain that their children are being discriminated against. But, Sir, the point has to be recognised that when our Constitution was framed, the framers realised that there were vast majorities of our rural population who belonged to communities which were extraordinarily backward, socially and educationally. What is meant by social backwardness? 35 years ago—and I hope my hon. Friends in this House will not mistake me—there were certain members of the community, not Scheduled Castes and Tribes, but amongst the other backward communities themselves, who would not be allowed into the kitchen or into the house. I know even in South Arcot, the members of a major community would wash the vessels and keep them outside the kitchen door and only our cook who belonged to other communities could go and take those vessels. Fortunately, as the hon. Member Thiru Ramamoorthy remarked, by evolution, many of us have forgotten all these artificial and dreadful discriminations and today the backward classes and other communities are coming closer and closer together. Unfortunately, I am mentioning this because I would like the Hon. Minister to understand my viewpoint. In 1973 or 1974 we had fixed reservation at a maximum of 49 per cent, 18 per cent for Scheduled Castes and Tribes and 31 per cent for the backward communities. Subsequently an attempt was made to revise that also by prescribing a salary limit of Rs. 9,000.

[Thiru A. R. Damodaran] [1983 ஏப்ரல் 21

This was not accepted by society because it would eliminate all those economically weaker sections also who would be earning above Rs. 800 or Rs. 700 a month, whether you consider those earning Rs. 9,000 in a year to be economically weak or not. For example, is an NGGO or an officer in the Government or a teacher, who is a first-generation occupant of that post, or a lawyer or a doctor, who is a first-generation entrant to the profession, to be told that his son will not get admission into an Engineering College excepting under Open Competition? This has raised a lot of doubts and I am very glad that the policy has been dropped. But, after dropping that policy, they have touched a hornet's nest. Even two years ago, I said, ' You have opened the Pandora's Box. ' Today, what you find in the Upper House in 1983 is that each one of us, whether we like it or not, have to come in defence of our community, a thing we have not done for 35 years. Nor was this done only because the Government of Tamil Nadu raised the reservation from 49 per cent to 68 per cent. This was not done only by the Tamil Nadu Government. I have got a book which has given a complete history of the origin of reservations and the special dispensations. This was first done in Karnataka by the Havanur Commission. It raised the reservation for backward communities to 50 per cent and that for Scheduled Castes to 18 per cent. Then, the Naganna Gowd Committee was appointed. That Committee said, ' You must give special concessions to those who serve in Government service. ' Because they found that the Government servants were opposing, the Naganna Gowd Committee said that 10 per cent should be reserved for Government servants. When this went to the Supreme Court, the Supreme Court held that the reservations could not be done for more than 49 per cent. Noting this, our Government raised the reservations from 50 per cent to 68 per cent. What happened here? The case was taken to the Supreme Court, after it had been dealt with by the Madras High Court which said that the reservation was justifiable. What did the Supreme Court do? It did not give a Judgment according to its earlier Judgment. It did not see whether the limit of 49 per cent was followed or not. It did greater mischief. It asked the Tamil Nadu Government to appoint a Backward Classes Commission to go into the whole question. I do not know how it is going to go into the whole question. Firstly, the hon. the Education Minister said—and I would like him to educate us on this matter—" After 30 years of reservation, we find that all the seats in the Medical Colleges and Engineering Colleges have been occupied by those who are economically forward. "



1983 ஏப்ரல் 21] [Thiru A. R. Damodaran]

May I ask him what evidence he has produced before this House to justify his statement? How can a Minister make a statement without giving us a report by an expert committee? Have they given us the particulars of admissions over the past 10 years? Have they give us he groups which have been benefited, whether they come from rural areas or urban areas? This sort of generalisation on the part of the Government is extremely bad, because it is not based on statistics but it is based on subjective feelings of individual Ministers. I must venture to protest, because when a Minister makes a statement, it is given publicity throughout Tamil Nadu and all the rural sections belonging to the less economically benefited will say that the people in the Secretariat and doctors and lawyers have been taking away the jobs as well as the reservations in the professional colleges which is a wrong approach. The reason why we are able to get into these colleges is that we are having a better educational background. There again we come to the same problem. It is not economic betterment that has resulted. My grandfather was a matriculate, my father was a graduate and so I am a graduate. So educationally I am a little forward. But my driver who may belong to the same community is only III Class passed and he is definitely backward. How can we say that a community is backward or forward on economic considerations? That is why I say that the appointment of the Commission is going to create a lot of trouble not only for the Government but for the entire society in Tamil Nadu. It is an unfortunate Commission. I do not know what it is going to solve. Firstly, we are hopelessly deficient in statistics. The census that has been conducted in 1981 has to be relied upon. I do not know whether it has gone into the educational background and social background of the parents, etc. whose children seek reservation and we expect this Commission to give its report in 1984, one year before 1985 elections. All this is going to create a lot of trouble. Anyhow the mess is of the Government's own making. I cannot do anything now to help it out. They will have to resolve it themselves. But my point is this. If the Government had stuck to 49 per cent, the hon. Member the Rajah of Chettinad would not have got up and pleaded on behalf of Nagarathar community nor would the hon. Lady Member Thirumathi Tara Cherian have pleaded on behalf of he forward communities, though she incidentally has better protection as a minority community and she cannot be prevented from starting any educational institution. It is natural, Sir. All the forward communities are anxious because their children are suffering. I can understand

their suffering. If my son does not get a seat when he is fully qualified, his heart-burning and frustration would render him anti-national. That is why we must solve this problem in a smooth and peaceful manner. All the points that have been raised by the hon. Member Thiru Nallasivan about economic backwardness do not come into the picture because, if the Government want to solve that problem, they can set apart Rs. 25 crores for loan scholarships to poor students and solve the problem. No reservation is necessary for economic backwardness. For example, you might have an Adi Dravida who is now earning Rs. 1,000 per month. Can anybody in this House say that this gentleman, even though he earns Rs. 1,000 a month, is still treated as an equal in society? He is not socially recognised as an equal. That is where social backwardness comes in. Educational backwardness must relate to the first-generation learners. A father may be earning Rs. 1,000 a month. He may be a Chettiar having a 'Maligai Kadai' and he may be earning Rs. 1,000 a month. But, his son, being a first-generation learner, is backward and is entitled to the benefits of the reservation principles. In that bearing, I feel that the principle of reservation canot be attacked. All these refinements that have been suggested with very good intentions are are likely to lead us to grave trouble.

(பிற்பகல் 6-10)

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் பேசுகின்ற போது, நான் என்னவோ ரிசர்வேஷனை எதிர்த்துச் சொல்வதாக அவர்கள் கொள்ளக்கூடாது. நான் ரிசர்வேஷனைப் பொறுத்தவரைக்கும், அதை ஆதரிக்கிறேன். நான் சொன்னது, இந்த இட ஒதுக்கீடு பிரச்சினையில் வருமானம்பற்றி வருகிறதே அதுகுறித்துதான் கேட்டேன். வருமானம் என்ற பிரச்சினை வருகின்றபோது, அது எப்படி பிற்பட்டவர்களைப் பாதிக்கிறது என்றுதான் கேட்டேன். என்னைப்பற்றிச் சொல்லும்போது நானே ரிசர்வேஷனை 'அப்போஸ்' பண்ணியமாதிரி அர்த்தம் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

THIRU A. R. DAMODARAN: What the hon. Member has suggested is that he now wants to split one community into two communities. I do not want multiplication of these communities and to have many communities within the same community. As far as his philosophy is concerned, it may be right; but it is not in keeping with the nation's philosophy. He may like to have



economically stronger sections. But, I do not want further splitting of the community. I only wish to state that the Government need not try out all these ideas. For fifty years, veterans have been debating on this question of backward communities. The Government want to upset everything in one year by suggesting a new philosophy. It is not going to be accepted, Sir. I agree that the evolution is there, as my hon. Friend said. 25 years later, possibly, our country may be better. But, it looks as if it is going down and there does not seem to be any improvement. Today, there are fights between communities; and linguistic groups and religous groups murder other linguistic groups and religious groups. Perhaps, some time later, good sense may dawn upon them. But, my only wish is that we should not create new tensions by such new formulations. If necessary, we could have withdrawn the case from the Supreme Court and gone back to our 49 per cent reservation.

That would have been definitely preferable to having a new Backward Classes Commission which is going to have a terrific job in deciding on the criteria for determining backward classes, in veiw of the fact that our Constitution has laid down that only social and educational backwardness should be recognised.

THIRUMATHI TARA CHERIAN: May I suggest one thing? To decide whether a person is backward socially and educationally, in 1964 the High Court had passed a judgment when it said that the occupation and economic condition of the person have got to be taken into consideration in determining backwardness. That means the test of backwardness is only to see whether he is socially and economically backward.

THIRU A. R. DAMODARAN: Unfortunately, the Constitution makers did not have this in view, because they have put 'educationally and socially backward'.

THIRUMATHI TARA CHERIAN: The Supreme Court has passed judgment. We have got to admit that.

THIRU A. R. DAMODARAN: I must study all the Supreme Court judgments. I am afraid I cannot answer. I cannot off-hand answer the hon. the Lady Member. I shall certainly study and find out whether it is the position. Perhaps that may be one of the criteria. Occupation may mean this. For example, one may have the occupation of carrying nightsoil on his head. It is an unclean

occupation. Therefore, he is socially backward. He may be earning Rs. 900 per month. It does not matter. But anyhow it will certainly be studied. As I said, this is not a matter to be debated in one day. It is a big social problem. My only wish is that the Government should not complicate further the situation by creating Commissions, etc., although I welcome the Commission and there are 18 members. I do not envy their task. What will happen is this. I will tell my friends who want certain communities to be pushed out of 68 per cent that it will not solve the problem. There will be more competition for this 32 per cent. It solves nothing unless the percentage is reduced from 68 to 49. If 10 backward communities with 1½ million population are pushed to this 32 per cent, then the present availability of seats will be reduced for 32 per cent. So, my point is that we should go back to 49 per cent and quietly dissolve the Commission, if necessary, so that further complications may not be created. Thank you.

* திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறையினுடைய கொள்கை விளக்கத்தின்மீது சில கருத்துக்களைத் தெரிவிக்கின்ற வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் தெரிவித்த அத்தனை கருத்துக்களையும் வார்த்தைக்கு வார்த்தை நான் வழிமொழிந்து பேசுகின்ற அளவிலேதான் நான் இங்கு இருக்கிறேன் என்பதிலே பெருமை அடைகிறேன். அதுதான் இருக்கின்ற உண்மையான நிலைமை அதற்கு வருவதற்கு முன்னால் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் பாராட்டு தெரிவிக்காமல் தொடங்க முடியாது. பிற்பட்டோர் நலத் துறை நிர்வாகத்தைப் பொறுத்தவரையிலும், மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது என்பதை நான் மனப்பூர்வமாக மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இடையிலே சில ஆண்டுகள் இந்த (Scholarship) ஸ்காலர்ஷிப் கிடைப்பதிலே சங்கடங்கள் கூட இருந்து வந்தன. ஆனால் இன்றைக்கு ஒரு முனகல்கூட இல்லாமல் அது எளிமையாகத் தகுதியுடையவர்களுக்குக் கிடைக்கின்ற வகையிலே அமைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதற்கு நான் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு அமைந்திருக்கின்ற பல்வேறு விடுதிகள் மாணவர்களுக்கான விடுதிகள், படித்து முடிந்த மாணவர் களுக்கு மேலும் அரசு பதவிகளுக்கு, வேலைகளுக்கு, பணிகளுக்குச் செல்வதற்காக, வாய்ப்புக்களைத் தேடித்தந்து அவர்களை ஊக்குவிக்க



எடுத்திருக்கின்ற முயற்சிகள் மட்டுமல்லாமல், குற்றப் பாரம்பரையினர் சட்டத்தின்கீழ் இருந்தவர்களையும் இன்றைக்கு வாழ்வு நடத்துவதற்கு, முன்னேறுவதற்கு இந்தத் துறை எடுத்திருக்கின்ற நடவடிக்கைகளையும் நான் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாற்றுத் தலைவர் திரு. சி. இராமலிங்கம் தலைமை)

இந்த நலத்துறை சிறப்பாக இயங்குகின்ற அதே நேரத்தில் பிற்பட்ட இனங்கள் வளர வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன், ஒரு தனித் துறை அமைத்து, எற்கெனவே ஒரே அமைச்சர் பார்த்ததை இரு வேறு அமைச்சர் களிடம் கொடுத்து, இந்தத் துறை அமைச்சர்களுக்கு முழுப் பொறுப்பையும் கொடுத்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறோம். இதிலே எங்கே சங்கடம் இருக்கின்றதோ அதைத் தீர்க்காத வரையிலே நிர்வாகத்திலே நாம் எவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டாலும் கூட, உண்மையான நோக்கங்களை நிறைவேற்ற முடியாது, அடைய முடியாது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற குறிப்பிலே ஒன்றைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறார்கள். கடைசியாக அதிலே இதனைச் சொல்லி முடிக்கிறார்கள்.

'At present there is a scheme for acquisition and distribution of house-sites to persons belonging to Backward Classes. Some of the Backward Classes are worse than Adi Dravidars. A scheme was, therefore, proposed for acquiring lands for assignment of house-sites.'

எதற்காகச் சொல்கிறேன் என்றால், இத்தனை ஆண்டுக்காலமாக, 35 ஆண்டுக் காலத்திற்குப் பிறகு இன்னும் சாதியின் அடிப்படையிலே சோசியலி, எஜுகேஷனலி, எகனாமிக்கலி பேக்வர்ட் (Socially, Educationally Economically backward) என்று இன்னும் சொல்ல வேண்டுமோ என்று கேட்கிறோம்—ஓர் உயரிய சிந்தனை ஓட்டம் செல்கின்ற நேரத்திலே, நாமே ஒன்றை எற்றுக்கொள்கிறோம். இன்னமும் பின்தங்கியோர் நிலைமைகள் முன்னேறவில்லை என்பது மட்டுமல்ல. கடை கடையாக அவர்கள் கடைநிலையிலேயே இருக்கின்றார்கள் என்பதை நம்மால் மறுக்க முடிய வில்லை. அந்த அளவுக்கு அவர்கள் இன்னும் பேக்வேர்ட்டாக (Backward) இருக்கின்றார்கள். இதைச் சொல்லியேகூட பேக்வேர்ட் கம்யூட்டிக்கு எதிரான பயன்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றனவே தவிர

இதிலேயாவது பேக்வேர்ட்டுக்கு சாதகமாகச் சொல்கின்றார்களா என்று பார்த்தால் அதைக்கூட காணோம். இன்னமும் பார்த்தேன். பக்கம் 35-லே பெர்பார்மன்ஸ் பட்ஜெட்டிலே சொல்லியிருக்கிறார்கள் :

'The percentage of selection of candidates from Backward Classes from Tamil Nadu for appointment in I.A.S., I.P.S. by the Union Public Service Commission is very low.'

அதற்கு அப்புறம் மாற்றத்திற்கு என்ன காரணம் என்று சொல்லியிருக்கின்றார்கள். எதற்காகச் சொல்கின்றேன் என்றால், அந்த பேக்வேர்ட்ஸ் எங்கே போயிற்று என்று எனக்குத் தெரியவில்லை. ஐ.ஏ.எஸ்.-லே, ஐ.பி.எஸ்-லே வெரி லோ (verylow) என்று சொல்லப் பட்டிருக்கிறது. பேக்வேர்ட் கம்யூனிட்டியிலே யார் யார் அதற்குத் தகுதியுடைய அளவிலே வந்திருக்கின்றார்கள்? யாரும் வரவில்லை. பெரும்பணம் சம்பாதித்து பேக்வேர்ட் கம்யூனிட்டியிலே வளர்ந்துவிட்டதால் முன்னேறி விட்டார்கள். ஏன் இந்தச் சலுகை எல்லாம் தரவேண்டும்? பாம்பரையாக அவர்கள் மட்டுமே வைத்துக்கொள்ள வேண்டுமா என்றுகூட சிலர் கேட்டார்கள். மாண்புமிகு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னது மாதிரி, நானே அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன். இப்போது ஐ.பி.எஸ். மற்றும் ஸ்டேட் சர்விசிலே எந்த பர்சென்டேஜிலே வந்திருக்கின்றார்களே அவர்கள் இன்று வேலைக்கு வந்ததற்குப் பின்னால் யாரெல்லாம் வந்திருக்கிறார்கள் என்று கணக்கு இருக்கின்றது. அப்படி அவர்கள் வேலைக்கு வருவதற்கு முன்னாலே வசதி என்ன என்று சொல்லியிருக்கலாம். யார் யார் எல்லாம் ஆர்.டீ.ஓ.-வாக வந்தார்கள். யார் யார் எல்லாம் டி.எஸ்.பி.-ஆக வந்தார்கள் என்ற புள்ளிவிவரம் அரசிடம் இருக்கிறது. அவர்களுடைய குடும்பத்தினுடைய 'வாட் இஸ் தி பேக்கிரவுண்ட்' (what is the background) என்று எடுத்துப்பார்ப்போம் I challenge. அவர்களுடைய பின்னணி, அவர்கள் பொளாதாரத் துறையிலே பின்தங்கியவர்கள்தான். படித்து வந்த, ஒரு உத்தியோகம் கிடைத்த பிறகு, பணக்காரர் யாராவது பெண் கொடுத்திருக்கலாம் அல்லது பெண் எடுத்திருக்கலாம். அது வேறு விஷயம். இன்றைக்கு பல அரசாங்க அதிகாரிகள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களைத்





(பிற்பகல் 6-20)

தெய்வமாகக் கும்பிடுகிறார்கள். அவர்களிடம் போகும்போது, சொல்லுவார்கள். "யாரையும் எனக்குத் தெரியாது, சிபாரிசு கிடையாது. ஆள் தெரியாது, படித்தோம், இப்படி வாய்ப்பு இருக்கிறதென்று சொன்னார்கள், எழுதிப் போட்டோம், ஒரு சிபாரிசு இல்லாமல் மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்தது, பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தது, வந்துவிட்டோம், படித்து, எக்சாமினேஷன் எழுதி வந்தோம்" என்று சொல்லுவார்கள். இன்றைக்கு இருக்கும் நிலைமை என்ன? அந்தச் சமுதாயம் வளர்ந்திருக்கிறதா? இத்தனை காலத்திற்குப் பிறகு பேக்வார்ட் கம்யூனிட்டியைச் சேர்ந்த பணக்காரக் குடும்பங்கள் வேலைகளை வாங்கிவிட்டார்கள் என்பதற்கு ஆதாரம் என்ன? லிஸ்ட் கொடுங்கள். இந்த நேரத்தில் ஒன்றை மறந்துவிடக் கூடாது. திரு. முத்தையா முதலியார் அவர்கள் கம்யூனல் ஜி.ஓ.-வை உருவாக்கினார்கள் என்பது மாத்திரமல்ல, அது எப்போது உடைந்தது என்பது ஞாபகத்தில் இருக்கிறது. **1951**-லே யார் உடைத்தார்கள் என்பதும் ஞாபகம் இருக்கிறது. அரசியல் சட்டத்தை உருவாக்கிய வித்தகர்களிலே ஒருவரான திரு. அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் அவர்களே உயர்நீதி மன்றத்திலே வாதாடி, அரசியல் சட்டத்தில் ஒரு பிரிவு சரியில்லை என்று எடுத்துச் சொல்லி, அதற்குப் பிறகுதான் இந்த கம்யூனல் ஜி.ஓ. உடைக்கப்பட்டது, செல்லாது என்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு பச்சையப்பன் கல்லூரியில் முதன்முதலாக வேலைநிறுத்தம் ஏற்பட்டது. அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்சினையை எடுத்துக்கொள்ளவில்லை. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. அந்த வேலை நிறுத்தத்தை ஏற்பாடு பண்ணியவர்களில் நானும் ஒருவன். அதிலே திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி எல்லாம் துணை இருந்தார்கள். அந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியது திரு. முத்தையா முதலியார்தான். பிரெசிடென்சி கல்லூரிக்கு எதிரே அந்தக் கூட்டம் நடந்தது. வேகாத வெய்யிலிலே, பிற்பகல் 2 அல்லது 3 மணியிருக்கும் அண்ணா அவர்கள் ஒரு மணி நேரம் அங்கே பேசிவிட்டு போனார்கள். இதனுடைய அத்தியாயத்தை உணர்ந்து, திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஞாபகம் இருக்குமென்று நினைக்கிறேன். அந்த வரலாற்றை அறிந்தவர்களுக்கு ஞாபகம் இருக்கும். திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி என்று சொன்னார்கள். இதற்காகத்தான் சொன்னார்கள். அப்போது பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் பிரிந்து இருந்த நேரம். இரண்டு பேரும் சேர்ந்து இதற்குப் போராட்டம் நடத்த வேண்டிய கட்டாயம் வந்தது. அப்படி

அவர்கள் இரண்டு பேரும் சேர்ந்து செய்வார்களா என்ற பிரச்சினை வந்த போது, இரட்டைக் குழல் துப்பாக்கியாக இந்தப் பிரச்சினையில் இணைந்து நிற்போம் என்று அண்ணா அவர்கள் சொல்லி, பெரியார் அவர்கள் சொல்லி, இரண்டு பேரும் சேர்ந்து போராட்டம் நடத்தி, அந்த அடிப்படையிலே தமிழகம் கொடுத்த குரலிலேதான் அரசியல் சட்டமே திருத்தப்பட்டது. கம்யூனல் ஜி.ஓ. என்ற அந்த உணர்வு இங்கே ஏன் கொப்புளிக்கிறது என்றால், இந்திய அரசியல் சட்டத்திலே முதன்முதலாகத் திருத்தம் கொண்டு வர வேண்டிய ஒரு நிலைமையை ஏற்படுத்தியது தமிழகம்தான். அப்படிப்பட்ட நிலைமை இங்கே இருந்தது. படிக்கிற எல்லா மாணவர்களுக்கும் சம வாய்ப்பு இருக்கவேண்டுமென்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் என்ன நடக்கிறது என்றால், சமுதாயத்திலுடைய சம நீதி எல்லோருக்கும் கிடைக்கவில்லை அதனால்தான் சங்கடம் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதான் அவர்கள் பாலிஷ்ட் Polished ஆகச் சொன்னார்கள் தென் ஆற்காடு மாவட்டம் எப்படி இருந்தது என்று சொன்னார்கள். இன்றைக்கும் ஒன்று சொல்லுகிறேன். பல கிராமங்களிலே இன்னும் செருப்பு போட்டுக் கொண்டு வீதியிலே போக முடியாது. நான் 'சாதி' என்று இதுவரை பேசியதில்லை. பல கிராமங்களில் வன்னியர்கள் செருப்பு போட்டுக்கொண்டு போக முடியாது. தோளில் துண்டு போட்டுக்கொண்டு போக முடியாது. தப்பித் தவறிப் போகும் நிலை இருந்தாலும், இன்றைக்கும் பல வீடுகளிலே உள்ளே போக அல்லது நுழைய முடியாது. இன்றைக்கும் பல கிராமங்களிலே பல வீடுகளிலே சாதிப் பெயர் சொல்லிக் கூப்பிடும் நிலைமை இல்லை. சாதிப் பெயரைச் சொல்லி, மரியாதைக் குறைவாக, 'அந்தக் கவுண்டனைக் கூப்பிடு' என்பார்கள். இதுகூட பாலிஷ்ட்தான். 'அந்தப் பள்ளியைக் கூப்பிடு' என்றுதான் அவர்களுக்கு வரும். அதுதான் இன்றைக்குள்ள சோஷியல் பேக்வேர்ட்னஸ் (Social Backwardness) அவர்களுக்கு சொத்து இருக்கிறதா என்றால் இருக்கிறது. அவர்களும் 10 காணி நிலம் வைத்திருக்கிறார்கள் அவர்களுக்கு இருக்கும் நிலமே அதுதான். சோஷியல் பேக்வர்ட்னஸ், எஜுகேஷனல் பேக்வர்ட்னஸ் என்பது பற்றி அவர்களுக்கு என்ன தெரிகிறது? 10 ஏக்கர் வைத்திருக்கிறேன். பையன் மாடு மேய்த்தாலே போதும், விவசாயம் பண்ணால் போதும், ஒருவரை, எதிர் பார்க்காமல் இருக்கலாம் என்று சொல்கிறார்கள். காரணம், பல நூற்றாண்டுகளாக 'படிப்பது பாவம்' என்று வளர்ந்த பரம்பரை அது. அவர்கள் யாரிடம் போட்டி போடுகிறார்கள்? எதை விற்றாவது படித்தால் போதும் என்று சொல்லும் அந்தச் சமுதாயத்தோடு போட்டி போடுகிறார்கள். இரண்டு பேரும் ஒரே மார்க்தான் வாங்குகிறார்கள். அவர்களுக்கு இடம்



கொடுக்க வேண்டுமென்று சொல்லுவது நியாயம்தான். 3000, 4000 ஆண்டுகளாக இந்த நிலை என்று நான் சொல்லவில்லை. குறைந்தபட்சம் 350 ஆண்டுகளாக, அவர்கள் கல்லூரிக்குப் போக முடியாது. கல்லூரியை எட்டிப் பார்த்ததில்லை, படித்து வெளியே போகவில்லை. அவர்களுடைய நிலைமை என்ன? இப்போது ஒரு தலைமுறையாகத்தான் அவர்கள் படிப்புலகத்திற்கு வந்திருக்கிறார்கள். அதைத் தாங்க முடியவில்லையே? எத்தனை தலைமுறைகள் அவர்கள் தாங்கியிருக்கிறார்கள்! அவர்களுடைய வாழ்க்கையிலே மாற்றம் ஏற்படுவதற்கு என்ன வாய்ப்பு கொடுத்திருக்கிறோம்? யாராலே அவர்கள் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள்? எனக்கு உண்மையிலேயே பொறாமையாக இருக்கும். அதே நேரத்திலே மகிழ்ச்சியாகவும் இருக்கும். சில குடும்பங்களிலேயிருந்து பிள்ளைகளை தாய்மார்கள் அழைத்துப் போவார்கள். சின்னக் குழந்தைகள். வீட்டுக்காரர் வேலைக்குப் போய்விடுவார். பிறகு இரண்டு குழந்தைகளையும் இரண்டு கைகளிலும் பிடித்துக்கொண்டு போய் பள்ளிகளில் விடுவார்கள். பின்பு, வேகாத வெய்யிலில் சாப்பாடு எடுத்துக்கொண்டு வருவார்கள். சாயங்காலம் நேரப்படி குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போவார்கள். 9000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ள பின் தங்கியோர் வகுப்பில் உள்ள ஒரு குடும்பத்திலே உள்ள தாய்க்கு அந்த எண்ணம் வந்து குழந்தைகளைப் படிக்க வைக்கும் எண்ணம் ஏற்படுவது உண்டா? மாட்டை அவிழ்த்துவிட்ட மாதிரி பள்ளிக் கூடத்திற்கு அதுவா போகிறது, அதுவா வருகிறது என்றுதான் இருக்கிறது. அதனுடைய அருமை தெரிந்தவர்களுக்குத்தான், கல்வியின் அவசியம் தெரிந்தவர்களுக்குத்தான் அந்த நடைமுறை வருகிறது. அது தெரியாதவர்கள்தான் "பேக்வார்ட் கம்யூனிட்டி", பின் தங்கிய வகுப்பினர்.

சினிமாவிலே நிறைய வருமானம் வந்தது. பல பேர்கள் நுழைய முடியும் என்ற நிலைமை வந்தது. சினிமாவில் நடிக்கிறவர்கள் பற்றி, (Ladies) லேடீஸ் பற்றி, அவர்களுடைய கேரக்டர் பற்றி பலரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். சினிமாபோல புனிதமான இடமுண்டா என்று சொல்லி, குறிப்பிட்ட சமுதாயம் நுழைந்து, அவர்களெல்லாம் பெரிய நடிகைகளாகி, இவர்கள்போல் சிறந்தவர்கள் உண்டா என்று பேசும் நிலைமை ஏற்படுத்தப்பட்டது. காவல் துறையில் தென் ஆற்காடு, வட ஆற்காடு, சேலம், தஞ்சையில் ஒரு பகுதி, திருச்சியில் ஒரு பகுதி, செங்கை, சென்னை, தர்மபுரி எல்லாம் ஒரு பகுதி. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம், தஞ்சை, திருச்சி இதெல்லாம் ஒரு பகுதி கள்ளர்கள், வீரம் பொருந்திய பரம்பரை என்று சொல்லுவார்கள். இங்கே இருக்கிறவர்கள் படையை ஆண்டவர்கள் என்று சொல்லுகிறார்கள். முதன் முதலில் யார் போலீஸ் வேலைக்குப் போனார்கள்? இந்த வீர பரம்

[திரு. க. இராமமூர்த்தி] [1983 ஏப்ரல் 21

பரையாக யார் நுழைந்தது? அமைச்சராக வந்தது கல்வி அமைச்சர் இங்கு இருந்தால் பதில் சொல்லுவார்கள். பரம்பரையாக ஏர். பரிந்து, தெருவிலே சண்டை போடுவார்களே, அவர்கள் பரம்பரையிலிருந்து இந்த வேலைக்குப் போகத் தோன்றியதா? நட்ட பெண்ணை படையை விட்டுத் தாண்டி அனுப்புவதா, [illegible] போலீஸ் உடையைப் போட்டுக் கொண்டு நடப்பதா என்று எண்ணினார்கள். அதுதான் சோஷியல் பேக்வர்ட்னஸ் அவர்களில் கூட பணக்காரர்கள் போனதாகச் சொல்லவில்லையே But who It was the forward community that seized the opportunity. They could adapt. Adaptablity is there. யார் போனார்கள்? இன்றைக்கு பெண் போலீஸ் ஆஃபீசராக வருகிறார்கள் என்றால் அவர்களால் வர முடிகிறது. 10 வருஷம் கழித்து, இதைப் பார்த்து விட்டு, இப்போது கான்ஸ்டட்பிளாகப் போய், கூட்டத்தைத் தடுக்கத்தான் ஒழுங்குபடுத்தத்தான் வீரம் பொருந்திய வடக்கே இருக்கும் பரம்பரையும், தெற்கே இருக்கும் பரம்பரையும் உதவுகிறதே தவிர, ஆஃபிசராக வருவது யார்? That is where the backward community needs sympathetic help.

(பிற்பகல் 6-30)

பின்தங்கிய வகுப்பினருக்கு சலுகை தேவை என்கிற அவசியம் எப்போது வருகிறது என்றால், இந்தச் சங்கடங்கள் வரும்போது தான். இதைத் தீர்த்தாக வேண்டும். அதில் பணக்காரன் இல்லையா, இதில் பணக்காரன் இல்லையா என்பதல்ல பிரச்சினை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் குறிப்பாக இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். பின் தங்கியோரில் பணக்காரர்களுக்காக நான் வாதாடவில்லை. இங்கே சென்னையில் கொடுக்கிற கல்வியை மாநிலத்தில் எல்லோருக்கும் சமமாகக் கொடுக்கிறார்களா என்பது தான் என்னுடைய கேள்வி. பொருளாதார அடிப்படையை மறந்து கொடுப்பது என்று சொன்னால் காலா காலத்திற்கு இவர்கள் மட்டும்தான் முன்னேறி விடுவார்கள் என்று சொல்கிறார்களே, இன்றைக்கு மட்டும் என்ன நடக்கிறதாம்? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களுடைய பிள்ளையும், என் பிள்ளையும், மற்றும் இங்கே இருக்கிற எல்லோருடைய பிள்ளைகளும் இங்கிலீஷ் மீடியம் நர்சரிகளில் தான் படிக்கின்றனர். அமைச்சர்களுடைய பிள்ளைகளும் படிக்கின்றனர். நாளைக்கு வேலை என்கிற நிலைமை வந்தால், உங்களுடைய பிள்ளைகளும், உறுப்பினர்களுடைய பிள்ளைகளும், அமைச்சர்களுடைய பிள்ளைகளும் தான் போட்டியிட்டு அந்த வேலையைப் பெறுவார்கள். திண்டிவனத்துக்குப் பக்கத்தில் இருக்கிற, காவேரிப்பாக்கத்தில் இருக்கிற பிள்ளைகளுக்கு யார் வேலை வாங்கிக் கொடுப்பது? அங்கே இருக்கிறவர்கள் ஏதோ கொஞ்சம் நிலம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்



1983 ஏப்ரல் 21] [திரு. க. இராமமூர்த்தி]

களுடைய குழந்தைகள் படிக்கவும், படித்து நல்ல வேலைவாய்ப்பினைப் பெற்று வாழ்க்கையில் முன்னேறவும் சம நீதியை வழங்கியிருக்கிறோமா என்பது தான் என்னுடைய கேள்வி. இன்றைக்கு இருக்கிற பிரச்சினை அதுவல்ல என்றாலும் கூட, இந்தச் சமுதாயம் கல்வி மூலமாக கிளர்ப்பதற்கு என்னென்ன வசதிகளை மேலும் செய்து கொடுக்க வேண்டும் என்பது தான் இப்போதுள்ள அடிப்படைப் பிரச்சினை. மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் திண்டிவனத்தைப்பற்றி, தென்னாற்காடு மாவட்டத்தைப்பற்றி அவர்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. காரணம் ஒன்றை மிகவும் தெளிவாக அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பின்தங்கியோரின் துர்பாக்கியம் என்று கூட நான் நினைக்கிறேன். அந்த சமயத்தில் 1967-ல் ஹைகோர்ட்டிலிருந்து ஒரு ஜட்ஜ்மெண்ட் இதுசம்பந்தமாக வந்தது. அதற்கு அப்புறம் தான் மாவட்ட ரீதியாக இடம் ஒதுக்கீடு செய்வது நின்று போனது. அது நின்று போனதால் நாட்டிலே இருக்கிற எல்லோரையும் 'பேக்வர்ட் கம்யூனிட்டீஸ்' என்று மாற்றி, அதன் காரணமாக 'பேக்வர்ட் கம்யூனிட்டீஸ்' உண்மையிலேயே வளர முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. இதுபற்றி இங்கே பேசும்போது மட்டும் கல்வியமைச்சர் போன்றவர்களால் 'சேலஞ்ச்' பண்ணி பேச முடிகிறதே தவிர, நடைமுறையில் அவர்களுக்கு நன்மை செய்ய முடியவில்லை. இன்றைக்கு வருமான வரம்பு வைத்தால் சைக்கிள் கடைக்காரனுக்கும், சினிமா டிக்கெட் விற்றுக்கொண்டிருந்தவனுக்கும் இந்தச் சலுகை கிடைத்திருக்கிறது என்று கல்வியமைச்சர் சொல்வதிலே எனக்கு சந்தோஷம் தான்.

ஆனால், 4, 5 மாவட்டங்களில் பெருவாரியாக இருக்கிற வன்னியர் குலத்திற்கு எத்தனை மெடிக்கல் சீட் வருமான வரம்பு வைத்த ஆண்டில் கொடுத்தார்கள்? 2 அல்லது 3 பேருக்கு மட்டும் தான் கொடுத்திருக்கிறார்கள். அது போல் என்ஜினியரிங் காலேஜில் சீட் எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறார்கள்? அரசாங்க சர்வீசில் எத்தனை சதவிகிதம் கொடுத்திருக்கிறார்கள்? இதைச் சொல்லட்டுமே. இங்கே மட்டும் வன்னியர்களில் எக்னாமிக் பேக்வர்ட்னஸ் இல்லையா? இவ்வளவு பெரிய சமுதாயத்திற்கு உரிய இடங்கள் ஏன் கிடைக்கவில்லை? வருமான அடிப்படையில் தானே கொடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். வர்க்கப்போராட்டம் என்கிற அடிப்படையில் பின்தங்கியவர்களில், ஏழைகளுக்குத் தானே இது கிடைத்திருக்கிறது, பின்தங்கியவர்களுக்குத் தானே கிடைத்திருக்கிறது, ஒத்துழைக்க வேண்டியது தானே என்று சொன்னார்கள். இன்றைக்கு மிகப் பின்தங்கிய சமுதாயம், என்ன காரணத்தாலே அவர் சொன்ன அடிப்படையில் வாய்ப்பு பெறமுடியாமல்

போய்விட்டது? இன்றைக்கு எக்கனாமிக் பாக்வர்ட்னஸ் அடிப்படையில் கொடுத்திருக்கிற சலுகையின்படி வன்னியர்களுக்கு மெடிக்கல் காலேஜில் எத்தனை இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** குறிப்பிட்ட சமுதாயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கணக்கு கேட்கிறார். இப்படி ஒவ்வொரு சமுதாயம் பற்றியும் கணக்கு கேட்டுக்கொண்டிருந்தால், அந்தக் கணக்கு எங்கே போய் முடியும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்துகிறேன்.

**திரு. க. இராமமூர்த்தி:** அப்படி என்றால் பேக்வர்ட்னெஸை எப்படி கண்டுபிடிக்கப் போகிறார்கள்? மாண்புமிகு கல்வி அமைச்சர் அப்படித் தான் சொல்கிறார். சாதிப் பெயர் அடிப்படையில் தான் சலுகை கொடுத்திருக்கிறார்கள். சாதிப் பெயரை எடுத்தால் கஷ்டம் வரும். இந்த நிலைமைகள் எங்கே போய் முடியும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். 35 ஆண்டுகளாக எந்த வேலைக்கும் போட்டி இருக்கிறது. அமென்ட்மென்ட் வந்திருக்கிற நிலைமையில் கூட திரும்பத் திரும்ப இது பிரச்சினையாகிக் கொண்டிருக்கிறதேயொழிய பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இன்று அவர்களுக்கு R.D.O., D.S.P. ஆகிய ஸ்டேட் சர்வீசில் கிடைத்துள்ள சதவிகிதம் என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன். நான் எந்த ஒரு ஆட்சியையும் பற்றி குறிப்பிட்டு குற்றம் சொல்லவில்லை. ஆனால் ஒரு நேரத்தில் காமராசர் ஆட்சிக்காலத்தில் அப்படி வந்திருக்கிறது. பணம் படைத்தவர்களுக்கு எல்லாம் பேக்வர்ட் கம்யூனிட்டிஸ் என்கிற சலுகை கிடைத்திருக்கிறது என்றால், அது எந்தக் காலத்தில் என்று பார்க்க வேண்டும். Socially and Economically Backward சோசியல் எஜுகேசனல் பேக்வர்ட்னஸ் என்பது நிச்சயமாக தமிழகத்தில் இருக்கிறது. அதை மாற்றியமைக்க வேண்டும் அதற்கு என்னென்ன வழி என்பதை யோசித்துப்பார்க்க வேண்டும். மீண்டும் நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அண்ணா அவர்கள் அன்றைக்கு ஒரு உறுதிமொழி கொடுத்தார்கள். அதை அப்போது செய்ய முடியவில்லை. அன்றைக்கு பின்தங்கியோரை மாவட்ட அளவில் தீர்மானிக்காமல், மாநில அளவில் தீர்மானிக்க வேண்டுமென்று நீதிமன்றம் ஒரு தீர்ப்பை அளித்தது. "உங்களுக்கு எந்தவித பாதகமும் ஏற்படாமல் மாவட்ட அளவில் அதற்குரிய ஏற்பாட்டினைச் செய்கிறேன்" என்று அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்னார்கள். இன்றைக்கு அதைக்கூட இல்லை என்று சொல்வார்கள். அவர் சொன்ன நிலைமையை, உணர்வுகளை தெரிந்தவர்கள் நாம் உணர்ந்தவர்கள் நாம் இருந்து கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் இப்போதும் கொண்டு வரட்டுமே. அதை தைரியமாகச் செய்யலாமே. அப்படி துணிந்து செய்யலாமே. அப்படி இல்லையென்றால் மாண்புமிகு உறுப்





பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் சொன்னதைப் போல, புதிய பிரச்சினைகளை உண்டாக்கிவிடும். இப்போது அம்பாசங்கர் குழுவைப் போட்டிருக்கிறோம். அவர்கள் இருக்கிற சாதியில் எதையாவது விடுவதா, இல்லை எதையாவது சாதியைச் சேர்க்கிறதா, இல்லை மோஸ்ட் பேக்வர்ட் கிளாஸ் என்பதை எந்த அடிப்படையில் செய்வது என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், முடிவு தெரிகிறபோது, பெரும் சண்டையே நடக்கும். இப்போதே இந்த சாதிக்கு கொஞ்சம், அந்த சாதிக்கு அதிகம். அங்கே போய்விட்டது, இங்கே போய் விட்டது என்கிற சண்டை குழு அமைத்ததிலேயே வந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட நிலையில் குழுவின் முடிவுகள் வரும்போது என்ன நேருமோ என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

அதைத் தாண்டி ஒரு மன நிலைமை வர வேண்டும். பேக்வர்ட் கம்யூனிட்டிசுக்கு நியாயம் கிடைத்திருக்கிறதா என்பது தான் இங்கே முக்கியம். நியாயம் கிடைத்திருக்கிறது என்றால், அதை இங்கே தைரியமாகச் சொல்லலாமே. ஆனால் உள்ளபடியே நியாயம் கிடைக்கவில்லை என்பதால்தான் நான் உதாரணத்தைச் சொல்கிறேன். வேலை தந்தால் தானே அவர்கள் அதனைப் பெற முடியும். வேலையைத் தந்தால் கூட அவர்கள் அதை வாங்கி பயன் படுத்துகின்ற நிலைமைக்கு இன்னும் வரவில்லை. அதற்குரிய தகுதி அவர்களுக்கு இல்லையா? அரசாங்கம் அதற்குரிய வழிவகைகளை அவர்களுக்காகச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது—எக்கனாமிக்கலி பேக்வர்ட் என்கிற நிலையைப் பொறுத்தவரையிலும்—ஏழை மாணவர்களுக்கு, அவர்கள் எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களானாலும், அரசாங்கம் சில சலுகைகளைத் தர வேண்டும் என்பதிலே பேக்வர்ட் கம்யூனிட்டிசைப் பொறுத்தவரையிலும் யாரும் குறுக்கே நிற்கப்போவதில்லை. (Infact) உண்மையில் மாண்புமிகு முதலமைச்சரிடம் நான் இதுகுறித்து அப்பீல் பண்ணக் கூட தயார். எல்லோரும் சேர்ந்து அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால் சோசியலி அன்ட் எக்கனாமிக்கலி Socially and Economically Backward என்கிற இரண்டையும் இணைத்து இதைச் செய்ய முற்படுகையில் தான் ஒன்றைப் பார்க்க வேண்டும். காலம் காலமாக அவர்கள் பெற்றிராத படிப்பு, அவர்களுடைய சமுதாய அமைப்பு, அவர்களுடைய சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி இவை எல்லாவற்றையும் ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு என்னையே எடுத்துக் கொள்ளலாம். என் அளவு வசதியுடைய, ஆனால் வளர்ந்துள்ள ஒரு சமுதாயத்

பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்குவதை 31 சதவீதமாக உயர்த்தியும், 15 சதவீதமாக ஒதுக்கப்பட்டிருப்பதை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை ஏற்றுத்தான், 25 சதவீதம் என்று இருந்ததை 31 சதவீதமாக உயர்த்தி, அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருந்த 15 சதவீதத்தை 18 சதவீதமாக உயர்த்தி, அன்றைக்கு நடைமுறைப்படுத்தினார்கள்.

ஆனால், பிற்படுத்தப்பட்டவர்களை இரண்டாகப் பிரித்து, பெரும்பான்மையாக இருக்கக்கூடிய மக்களை வஞ்சிக்கக் கூடிய வகையில் சில முன்னேறியவர்கள், அதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள், மிகப் பின் தங்கியவர்கள் அதனால் பாதிக்கப்படுகிறார்கள், என்பதால் இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்ன கருத்தை அன்றையதினம் நிறைவேற்றவில்லை. என்னைப் போன்று இருப்பவர்கள் அன்றையதினம் அந்தக் கருத்தை ஏற்று, அந்த முறையைக் கடைப்பிடிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டாலும், அன்றைக்கு அது செயல்படுத்தப்படவில்லை. இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அதை ஏற்றுச் செயல்படுகிறார்கள். இவர்கள், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை, தமிழகத்தின் சமுதாய மறுமலர்ச்சி காணவேண்டுமென்று திராவிட இயக்கம் மேற்கொண்ட சமுதாய சீர்திருத்தக் கொள்கையை ஏற்று, பட்டி தொட்டியெங்கும், அவர்களுடைய பாஷையில் சொல்லப்போனால், முழங்கினார்கள் என்பதை நானும் அறிவேன். ஆனால் திரு. இராமமூர்த்தி அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல சாதாரணமாக கூலி வேலை செய்யும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் மேல் பட்டப்படிப்பு படித்து, சர்வீஸ் கமிஷன் மூலம் குரூப் 1 ஆபீசராக, ஆர்.டி.ஓ. வாகவோ, டி.எஸ்.பி. யாகவோ, வணிக வரி அதிகாரியாகவோ வந்துவிட்டால், அவனெல்லாம் பொருளாதார அடிப்படையில் உயர்ந்தவன் என்ற நிலைமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ரூ. 9000 வருமானத்திற்குள்ளே இருப்பவர்கள்தான் சலுகை பெறலாம், அதற்கு மேலே இருப்பவர்களுக்குக் கிடையாது என்ற சூழ்நிலையை உருவாக்குவது வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்குப் பெரிய தீங்கை ஏற்படுத்தும் என்ற நிலை இருந்ததால் பிற்படுத்தப்பட்ட மக்கள் ஓரளவுக்கு சமுதாயத்தில் முன்னேறிக்கொண்டிருக்கும்போது நீங்கள் அவர்கள் காலைத் தட்டி விடுகிறீர்களே என்ற எதிர்ப்பு இருந்தால்தான், 1981-ம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலின்போது, தோற்று, பிறகு அந்தக் கொள்கையைக் கைவிட்டார்கள்.





திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலத்தில் 31 சதவீதமாக இருந்ததை, நான் என்ன குறைந்தவனா என்று அதை 50 சதவீதமாக உயர்த்தினார்கள். என்ன காரணம்? ஒருவேளை நான் நினைக்கிறேன், அப்போது சென்னை மாநகரில் மத்திய சென்னையில் நாடாளுமன்றத் தொகுதிக்கு ஆளும் கட்சி சார்பில் திருமதி சுலோசனா சம்பத் அவர்களை திரு. ஆர். வெங்கட்ராமனுக்கு எதிராக நிறுத்தி போட்டியிட்ட நேரத்தில், திரு. வெங்கட்ராமன் அவர்கள் வெற்றி பெற்றுவிட்டார் என்ற ஆத்திரத்தில் அப்படி அதை உயர்த்தினார்களா என்ற கேள்வியை அப்போது கேட்டேன். மக்கள் எதிர்த்தார்கள், மக்கள் புரிந்துகொண்டார்கள், அதனால் கைவிட்டோம் என்று சொல்லுவார்கள். வெளியிலே பேசுகிறபோது கூட அதைத் தான் சொல்வார்கள். பொருளாதார அடிப்படையில் கொண்டு வந்த நோக்கத்தைப் புரிந்து கொள்ளாமல், தன்னுடைய கட்சி கொண்டு வந்தது என்பதற்காக, சளைக்காமல் 31 சதவிகிதத்தை 50 சதவீதமாக உயர்த்தினார்கள் என்றுதான் நான் சொல்ல முடியும்.

(பிற்பகல் 6-50)

**டாக்டர் இரா. சனார்த்தனம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர்களுக்கு ஒதுக்கீட்டை அதிகப்படுத்தியதற்காக அனைவருமே மகிழ்ச்சியடைகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அதனால் மகிழ்ச்சியடைந்திருக்கிறாரா இல்லையா என்பதைத் தெரிவிக்காமல், இல்லாத ஒரு காரணத்தை இங்கே கற்பித்துக் கொண்டிருக்கிறார். 1977 ஆம் ஆண்டும் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார். 1980 ஆம் ஆண்டும் வெற்றி பெற்றிருக்கிறார். இந்த நிலையில் எதை வைத்துக் கொண்டு இப்படி உள்நோக்கம் கற்பிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்? நாடே இந்த ஒதுக்கீட்டால் மகிழ்ச்சியடைந்திருக்கிறது. அதற்காகப் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் உள் நோக்கம் கற்பிப்பது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அப்போது நடைபெற்ற தேர்தல் தென் சென்னைக்காக மட்டும் நடைபெற்றதல்ல. ஒரு தேர்தலின்போது ஒரு விதமான உணர்வு வருவது இயற்கை. 39 இடங்களில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. ஆனால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றது 2 இடங்களில் தான். எனவே கணக்குப் போட்டு, ஒட்டு மொத்தமாக இப்படி ஒரு

தினருடைய வீடு இருக்கிற நிலைமையையும், என் வீடு இருக்கிற நிலைமையை யும் ஒப்பிட்டுப் பார்க்கும்போதே, தெரிகிறதே. என் வீட்டில் கால் வைக்க எனக்கே கூசுகிறது. ஆனால் என் வீட்டைச் சுற்றியிருக்கிற, முன்னேறிவிட்ட சமுதாயத்தினுடைய வீட்டிலுள்ள நிலைமை அதுவல்லவே. அதுதான் 'சோசியலி பேக்வர்ட்' என்பது. அதுதான் நம்முடைய கல்வியிலுள்ள 'எஜுகேசனல் பேக்வர்ட்னஸ்'. என் பெண் ஓரளவு படித்துக்கொண்டிருக்கும் போதே, பக்கத்து வீட்டு அம்மாள் "உங்கள் பெண்ணுக்கு சீக்கிரம் கல்யாணம் பண்ணி வையுங்கள்" என்று சொல்வார்கள். ஆனால் முன்னேறிய சமுதாயத் தில் அப்படி இல்லையே. முதலில் பெண்ணை எவ்வளவு முடியுமோ அவ்வளவு நன்றாகப் படிக்க வைத்து முடிந்ததும் யார் யாரையோ வைத்து சிபாரிசு செய்து வேலையையும் வாங்கிவிடுகிறார்கள். அவர்களுக்குச் சிபாரிசு செய்ய அப்படி என்றால் அது அவன் தலைவிதி, இது உன் தலைவிதி என்று சொல்வதா? தந்தை பெரியார் அவர்கள், முத்தைய செட்டியார் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், அண்ணா அவர்கள் போன்றவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்ப்பதற்காகத் தானே தீவிரமாகப் போராடினார்கள், நடவடிக்கை எடுத்தார்கள். அதற்குப் பிறகும் இப்படிப் பட்ட நிலைமைகள் இருக்கலாமா? சோசியலி அண்ட் எக்கனாமிக்கலி பேக்வர்ட்' என்று வருகிற போது நிலைமைகளை மிகவும் நன்றாகப் பரிசீலிக்க வேண்டும். எந்தெந்த சமுதாயத்தினர் தெளிவாக பலன்களைப் பெற வில்லையோ எந்தெந்த சமுதாயத்தினர் தெளிவாக இதன் விளைவை அனுபவிக்கவில்லையோ அவர்கள் எல்லாம் இதனுடைய பலனைத் தெளிவாக அனுபவிக்கின்ற அளவுக்கு நிலைமைகளை இந்த அரசு அவசியம் மாற்றி அமைக்க வேண்டும். மூன்றாவதாக பொருளாதாரத்தில் பின்தங்யவர்கள். அவர்களுக்குத் தனிச் சலுகை அளிப்பதாக இருந்தால், அதைச் செய்வதற் கான அவசியம் இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும். பொருளாதாரத்தில் பின் தங்கியோர்,

(பிற்பகல் 6-40)

சமூகத்திலே பின்தங்கியோர் என்று இரண்டையும் இணைத்து குழப்ப வேண்டாம். இது வேறு, அது வேறு என்று பிரித்து அணுக வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கேற்ற வகையில் மாவட்ட அளவில் பின்தங்கியோர் நிலையைப் பிரித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அதற்குத் தக்க நடைமுறைகளை அரசாங்கம் எடுத்தால், பின் தங்கிய சமுதாயம் என்றும் நன்றியோடு நினைத்துப் போற்றும் என்று தெரிவித்து உரையை முடிக்கிறேன்.





**திரு. சோ. ஆறுமுகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்துள்ள பிற் பட்டோர் நலத் துறை கொள்கைக் குறிப்பின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பிற்பட்டோர் நலத் துறை கொள்கைக் குறிப்பின் மீது இன்றைக்கு தமிழ கத்தில் இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட மக்கள் நலனை நாம் ஆராய வேண்டி யுள்ளது, எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டிய அளவுக்கு இன்று நிலைமை வளர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டக் கூடிய வகையில், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக் களைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மீனாட்சி சுந்தரமும், திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும், திரு. இராமூர்த்தி அவர் களும் தெளிவாக பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுக்கு அரசாங்கத்தின் அணுகு முறை எந்த வகையில் நிலையாக இருக்க வேண்டுமென்று சொன்னார் கள். பிற்பட்ட மக்களுடைய நலனைத் தனியாக கவனிக்க வேண்டுமென்று தான் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், பாடு பட்டார்கள். அவர்களுடைய கொள்கை வழி நின்று ஆட்சியை நடத்திய எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களும், 1969 ஆம் ஆண்டு முதல் இதற்கென்று தனியாக ஒரு துறையை அமைத்து, 1971 முதல் இதற்காக மானியம் ஒதுக்கி, இதற்கென்று ஒரு அமைச்சரையே பொறுப்பாக்கி, பெரும்பான்மையாக இருக்கக்கூடிய நீண்ட நெடுங்காலமாகப் புறக் கணிக்கப்பட்டும் தனிந்த நிலையில் இருக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களை கைதூக்க வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு அன்றைக்கு உருவக்கினார்கள். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் இங்கே விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசும்போது சொன்னதைப் போல, இந்த மக்களின் நலனை வேறு எந்த வகையில் கவனிக்கலாம் என்று ஆராய்ந்து வழிவகை காணவேண்டு வேண்டுமென்று, உயர்திரு ஏ.என். சட்டநாதன் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவும் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையைத் தந்தார்கள். அந்தக் குழுவினரும் அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கையைத் தந்தது. தொழில் செய்து கொண்டிருக்கிறார்கள், பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் யார் யார் இடம் பெற்றிருக்கிறார்கள், பிற்பட்ட மக்களாக இருப்பவர்கள் பெரும்பான்மையாக இருந்தாலும், சிறுபான்மை மக்களாக இருப்பவர்கள் முன் னேறியவர்களாக இருக்கிறார்கள், அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதி யாகவும், எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டி, இன்றைக்கு ஒரு சரியான விடை காணப்படவேண்டுமானால், இப்போது இருக்கக்கூடிய பிற்படுத்தப் பட்டோர் பட்டியலை இரண்டாகப் பிரித்து, மிகப் பின் தங்கியோர் என்றும், பின் தங்கியோர் என்றும் பிரித்து, 25 சதவீத

முடிவுக்கு வந்து, தேர்தலையே சாதாரணப்படுத்துவது என்பது மாண்புமிகு உறுப்பினருக்கும் நல்லதல்ல, அவர் கட்சிக்கும் நல்லதல்ல, ஆட்சிக்கும் நல்லதல்ல நாட்டுக்கும் நல்லதல்ல. கொள்கைக்கு வலு ஏற்றுகிற வகையில், வாதங்களை எடுத்து வைப்பதுதான் நலமாக இருக்கும், பொருத்தமாக இருக்கும்.

(மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சனார்த்தனம் எழுப்பிய கேள்விக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களே பதில் சொல்லி விட்டார்கள். இப்படி 29 இடங்களில் போட்டியிட்டு 2 இடங்களில் மட்டும் தான் அண்ணா தி.மு.க. வெற்றி பெற்றது. ஆகவே ஒரு பெரிய எதிர்ப்பு வருமான வரம்பு கொண்டு வரப்பட்டதற்கு எழுந்ததன் காரணமாக அதுவும் நாடு தழுவிய அளவில் மக்களின் உணர்ச்சி பிரதிபலிக்கப்பட்டதன் காரணமாக, இந்தத் தோல்வி ஏற்பட்டது என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

திரு. ஆ. நல்லசிவன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதைப் போல் ஒரு கருத்து சொல்லப்பட்டாலும், இன்னொரு கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறதே. அப்போது மத்திய அரசில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த ஜனதா கட்சியின் மீது மக்களுக்கு ஏற்பட்ட வெறுப்பின் காரணமாகத்தான் அவர்களைத் தோற்கடித்தார்கள். ஆனால் அதே மக்கள்தான் 3 மாத காலத்திற்குள்ளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை இங்கே ஆட்சிக்குக் கொண்டு வந்தார்கள். ஜனதா கட்சியின்மீது இருந்த கோபத்தின் காரணமாக இந்திரா காந்தி கட்சிக்கு வாக்களித்தார்கள். இங்கே அதே மக்கள்தான் அண்ணா தி.மு.க. வுக்கு சட்டசபைத் தேர்தலின்போது, பெரும்பான்மையாக வாக்களித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்கு அவர் என்ன பதில் சொல்ல விரும்புகிறார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் தெரிவித்ததைப் போல, ஒரு தேர்தல் நடப்பதற்கு முன்பு நாட்டு மக்களின் உள்ளத்தை ஈர்க்கிற வகையில் அல்லது உலுக்குகிற வகையில் வருகிற பிரச்சினைகள்—பர்னிங் பிராப்ளம்ஸ்—தேர்தல் முடிவுகளை நிர்ணயிக்கின்றன. ஆனால் 1980 ஆம் ஆண்டுத் தேர்தல் இந்தப் பிரச்சினையின் அடிப்படையில் அமையவில்லை என்பதை நாம் எல்லோரும் அறிவோம். மாண்புமிகு



உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டதைப் போல், 1977 முதல் 1980 வரை காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஏற்பட்ட சூழ்நிலைகளின் விளைவாகத்தான் அப்போது தேர்தல் முடிவுகள் வெளிவந்தன. எனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்லுகிற கருத்தின் அடிப்படையில்தான், 1980 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அமைந்தன என்ற முடிவுக்கு வருவது சரியல்ல. இதையெல்லாம் விட்டுவிட்டு, நேரடியாகப் பிற்பட்டோர் நலத்துக்கு வந்துவிடுவதுதான் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்கள் குறிப்பிட்டபடி, பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டில் 40 சதவீத மார்க்குகளைப் பெற்றிருந்தால்தான் உதவித் தொகை பெற முடியும் என்று வைத்திருப்பது சரியானதல்ல என்பதை தி.மு.க. சார்பில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அநேகமாக, கிராமப்புறங்களில் இருப்பவர்கள்தான் இப்படிப்பட்ட சலுகைகளைப் பெறக்கூடியவர்களாக இருக்கிறார்கள். எனவே அப்படிப் பட்டவர்கள் தேர்வு பெற்றாலே போதும் என்று கொண்டு வந்தால்தான், அந்தச் சமுதாயத்து மக்கள் பெரும்பாலும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்கள் தங்கிப் படிக்கவும், உணவுக்காகவும் என்று ரூ. 50, ரூ. 55, ரூ. 60, ரூ. 70 என்றெல்லாம் உதவித் தொகை அளிக்கப்படுகிறது என்று கொள்கைக்குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொகை மிகவும் குறைவான தொகை என்பதால், இதனை உயர்த்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற் கல்வி படிக்கும் மாணவர்களைப் பொறுத்தவரையில், அவர்களின் பெற்றோர்களின் வருவாய் ஆண்டுக்கு ரூ. 5,000 முதல் ரூ. 10,000-க்கு மேற்படாமல் இருந்தால், ஆண்டுக்கு ரூ. 500 வீதம் 5 ஆண்டு காலத்திற்கு ரூ. 2,500 கடன் வழங்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏழை எளிய மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டுமென்றால், இந்த அளவுக்குக் குறைவான கடன் உதவித் தொகை போதாது என்பதால், இதையும் அரசு உயர்த்துவதற்கு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் விடுதிகளில் சேர்ந்து படிக்க, அவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குள் இருக்க வேண்டும் என்று விதிக்கப் பட்டிருப்பதும் சரியல்ல. பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களைப் பொறுத்த வரையில், அவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் எதுவாக இருந்தாலும், அதற்கு ஒரு வரம்பு வைக்கப்படாமல், மாணவர்கள் விடுதியில் சேர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள் கிறேன்.

மாணவர்கள் விடுதிகள் பெரும்பாலும் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கும் இடங்களிடையே அமைத்திருப்பதாக் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. எனக்கு நினைவு சரியாக இருக்குமானால், திராவிடர் இயக்கத்தில் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களின் வழியில் நம்முடைய நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களைப் போன்றவர்களின் தலைமையில் பணியாற்றிய திரு. என். வி. நடராசன் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார்கள். தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு மட்டுமல்லாமல், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கும் மாணவர் இல்லங்கள் உயர்நிலைப் பள்ளி அளவில் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லி வற்புறுத்தப்பட்டபோது, தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு மட்டும்தான் அப்படிப்பட்ட விடுதி கள் இருக்கின்றன; ஆனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இல்லம் கள் இருக்கின்றன ஆனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இல்லம் வைக்க வேண்டுமென்றால், தனியாக இயலாது என்பதால், தாழ்த்தப்பட்ட மாணவர்களையும் அதில் 10 சதவீதம் சேர்த்துக்கொள்ளலாம் என்ற விதியைச் சேர்க்கலாம் என்று சொல்லி, முதன் முதலாக சேலம் மாவட்டத்தில் ஒரு மாணவர் விடுதி ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு நான் அவரை அழைத்துப் போய் திறப்பு விழா செய்தேன். இன்றையதினம் பல்வேறு மாணவர் விடுதி கள் அமைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் சுற்றிப் பார்த்த அனுபவம் மிக்கவர்கள்; கிராமங்களில் உள்ள ஏழை எளிய மாணவர்கள் கல்வியில் அக்கறை கொண்டு நன்றாகப் படித்து அதிகமான மதிப்பெண்களை வாங்க வேண்டும் என்று நினைத்தால், உயர்நிலைப்பள்ளிகள் இருக்கும் அனைத்து இடங்களிலும் பிற்பட்டோர் மாணவர் விடுதிகளை ஏற்படுத்தியாக வேண்டும். அதற்காக என்று ஒரு சிறப்புத் திட்டத்தையாவது உருவாக்கி, அமைச்சரவையில் வைத்துப் பேசி முடிவெடுத்து, செயல்படுத்திவந்தால்தான், அந்தச் சமுதாயம்



உண்மையிலேயே பயன் அடைய முடியும். அப்படிச் செய்தால், பிற்பட்டோர் வகுப்பைச் சார்ந்த அனைத்துப் பெற்றோர்களின் சார்பாகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவனாக இருப்பேன் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்களுக்காக என்று பல்வேறு மாவட்டங்களுக்கும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறேன். எங்களால், சேலத்து மாப்பிள்ளை என்று அழைக்கப்படக்கூடியவர் மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள். என்ன காரணத்தாலோ சேலம் மாவட்டத்தில் மாணவர் விடுதிக்கான கட்டிடத்திற்கு நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்பது வேதனைக்குரியதாக இருக்கிறது. சேலம் மாவட்டத்தில் முன்பே துவக்கப் பட்டிருந்தாலும் கட்டிடங்களுக்கான நிதி ஏதும் ஒதுக்கப்படவில்லை என்ப தைப் பார்க்கும்போது, வேதனையாக இருக்கிறது. எனவே எங்களுடைய சேலம் மாவட்டத்து மாப்பிள்ளையான மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை, சேலம் மாவட்டத்திற்கும் கட்டிடங்கள் கட்ட நிதி ஒதுக்கம் செய்ய வேண்டும் என்று மிகவும் உரிமையோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் என்ற ஒரு அமைப்பை உருவாக்கி இருப்பது நல்லதுதான். அதன் செயல்முறை எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். ரூ. 100 வீதம் ஒரு பங்கு என்றும் ரூ. 10 லட்சம் வரை பங்கு எடுக்கலாம் என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ரூ. 10 கோடி முதலீட்டில் இக்கழகம் உருவாக்கப்பட்டிருக் கிறது. ஆனால் என்ன காரணத்தாலோ இந்த மேம்பாட்டுக் கழகத்தில் காவல் துறை அதிகாரிகளையும், வேறு சில பல துறைகளைச் சார்ந்த அதிகாரி களையும் உறுப்பினர்களாக நியமித்திருக்கிறார்கள். . . .

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பிற்பட்டோர் நலன் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பின் மீதான விவாதம் முடியும் வரையில், அவையின் நேரம் அவையின் அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 7-00)

**திரு. சோ. ஆறுமுகம் :** பிற்பட்டோர் நலத் துறையைச் சேர்ந்தவரை வேண்டுமானால் தலைவராக நியமித்திருக்கலாம். காவல் துறையில் இருப்ப வரைக் கொண்டு வந்து இதிலே போட வேண்டுமா? காவல் துறையில் தனி யாக எத்தனையோ பதவி உயர்வுகளைக் கொடுத்து அவர்களைத் திருப்திப் படுத்த வேண்டும் என்று பல பதவிகளை ஏற்படுத்தி உதவி செய்திருக்கிறோம். இதிலேயும் அவர்களைப் போட்டு அவர்களுடைய திறமை, ஆற்றல் ஆகிய

வற்றை வீணாக்குவது சரியல்ல. இதிலே பொது மக்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறவேண்டாமா? இதிலே பொது மக்களுடைய பிரதிநிதிகள் இடம் பெறவில்லை என்பது என்னுடைய வருத்தம். பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் குழுவில் பிற்பட்ட மக்களுடைய நிலைமைகளை எடுத்துச் சொல்ல, அந்தக் குழுவில் பொது மக்களுடைய பிரதிநிதிகள் இடம் பெற்றால்தான், சிறப்பாக இருக்கும். அதிலே அதிகாரிகளை மட்டும் வைத்துக் கொண்டிருந்தால், புள்ளிவிவரங்களைத் தயாரித்துக் கணக்கைத்தான் சொல்லுவார்களே தவிர, அதிலே எத்தனிதமான முன்னேற்றத்தையும் பார்க்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதே போல இப்போது புதிதாக தமிழ் நாடு இரண்டாவது பிற்பட்டோர் உயர் ஆணைக்குழுவை அமைத்து திரு. ஜே. ஏ. அம்பாசங்கர் அவர்களைத் தலைவராகவும் மற்ற பல்வேறு உறுப்பினர்களையும் நியமித்திருக்கிறார்கள். எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியதைப் போல, ஏற்கெனவே ஒரு முறை வருமான அடிப்படையிலே கல்வி பெற முடியும் என்ற நிலையைக் கொண்டு வந்து, அதிலே தோல்வி கண்ட ஆட்சியாளர்கள் மீண்டும் இந்தக் குழுவைப் பயன்படுத்தி அப்படிப்பட்டதொரு சூழ்நிலையை உருவாக்கிவிடுவார்களோ என்ற ஐயப்பாடு தமிழகத்திலே பெரும்பான்மையான பிற்பட்டவர்களுடைய மனதிலே எழுந்திருக்கிறது. அந்த ஐயப்பாட்டைப் போக்க வேண்டியது ஆட்சியில் இருப்பவர்களுடைய கடமை. போக்கிவிடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது, இடைமறித்துப் பேசிய மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய கருத்தைக் கேட்கிறபோது, பொது மக்களுடைய அந்த ஐயப்பாடு மேலும் வலுப்படக் கூடிய வகையில் இந்தக் குழுவினுடைய பரிந்துரை இருக்குமோ என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. தமிழகத்திலே தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கக் கூடியவர்கள் செய்யக் கூடிய காரியமா இது என்பதைச் சிந்திக்க வேண்டும். அப்படிப்பட்டதொரு கொள்கைக்கு இந்த ஆட்சியாளர்கள் ஆட்பட்டால், தமிழகத்திலே மீண்டும் பெரிய புரட்சியைச் சந்திக்க வேண்டிய கட்டாயம் நிச்சயமாக இந்த ஆட்சியாளர்களுக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லசிவன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மத்திய அரசால் அமைக்கப்பட்ட மண்டல் குழு தன்னுடைய அறிக்கையை மத்திய அரசாங்கத்திடம் தந்த பிறகும், அந்த அறிக்கையை நிறைவேற்ற முடியாத அளவிற்கு இன்றைக்கு எந்தச் சூழ்நிலை தடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். முன்னேறிய வகுப்பிலே உள்ளவர்களில் சிலருடைய ஆதிக்கத்தால் மத்திய ஆட்சியில் இருக்கக் கூடிய திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களே கூட யோசனை செய்து மீண்டும் ஒரு உயர்மட்டக் குழுவைப் போட்டு, ஒரு அறிக்கையைப் பெற வேண்டும் என்ற எண்ணத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார் என்றால், நாம் அந்த நிலைமையைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆனால் பிற்பட்ட சமுதாய மக்களுக்காக தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள், திரு. காமராஜ் போன்றவர்கள் எல்லாம் பாடுபட்டு வளர்த்த இந்தக் கொள்கைக்கு விரோதமாக நாம் செயல்படக்கூடாது.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். கர்நாடகாவிலே சமீபத்தில் ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்தது. ஜனதா ஆட்சியைச் சேர்ந்தவர் முன்னேறிய வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும், அவர் கூட ஆளுநர் உரையில், நிதிநிலை அறிக்கையில், மத்திய அரசாங்கம் மண்டல் குழுவின் அறிக்கையை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கோடிட்டுக் காண்பித்திருக்கிறார். ஆனால் இங்கு "நாங்கள் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக வாழக்கூடியவர்கள்" என்று சொல்லக்கூடியவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, இந்த மண்டல் குழுவின் அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று ஆளுநர் உரையின் மூலம் ஏன் வலியுறுத்தியிருக்கக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். ஆளுநர் உரையிலே சுட்டிக்காட்டத் தவறி இருந்தாலும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையை வைக்கிறபோதாவது, மத்திய அரசாங்கம் மண்டல் குழுவின் அறிக்கையை ஏற்று உடனடியாக அமுல்படுத்த வேண்டும் என்று ஏன் வலியுறுத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன். இப்போது கூட காலம் கடந்துவிட வில்லை. இப்போது கூட சட்டமன்றம் 17 ஆம் தேதி வரையில் நடக்கவிருக்கிறது.

**திரு. க. இராமமூர்த்தி:** துணைத் தலைவர் அவர்களே,
It has all-India implications and therefore it has to be scrutinised. அந்த அறிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பிறகு, அதை எப்படி அமுல்படுத்துவது, எந்தெந்த நிலையில் அமுல்படுத்துவது என்ற அடிப்படையில் ஆய்வு செய்யப்படுகிறது. அந்தக் குழு கொடுத்த அறிக்கையை அப்படியே அமுல்படுத்த முடியாது. ஆகவேதான் ஆய்வு செய்யப்படுகிறது.

திரு. சோ. ஆறுமுகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஒரு குழு தன்னுடைய அறிக்கையை அரசாங்கத்திடத்திலே தந்தால், அதை மந்திரி சபை கூடி விவாதித்து எந்தெந்தப் பரிந்துரைகளை ஏற்றுக் கொள்ளலாம், எதையெதை ஏற்றுக்கொள்ள வேண்டாம், அல்லது பின்னாலே பரிசீலனை செய்யலாம் என்று முடிவு எடுப்பார்களே தவிர, அந்தக் குழு கொடுத்த அறிக்கைக்கு மேல் இன்னுமொரு உயர்மட்டக் குழுவைப் போடுவதை நான் எனக்குத் தெரிந்த வரையில் பார்த்ததில்லை.

THIRU A. R. DAMODARAN : Sir, the Mandal Commission Report is for all India. There are States like Punjab where even 3 per cent reservation does not exist. So, my hon. Friend will realise the difficulties of the Prime Minister when she wants the subject to be studied because, while Tamil Nadu has 68 per cent, there are States which do not even have 5 per cent. So, it is a matter for consideration. I am not saying that the Report should not be accepted. I am only saying that these matters have to be considered because lakhs of people are involved.

* திரு. க. இராமமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, சில மாநிலங்களில் பிராமணர்கள் கூட மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களாக இருக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தில் பிராமணர்கள் மிகவும் பின்தங்கிய வகுப்பினர்களாக இருக்கிறார்கள். பல மாநிலங்களில் 22 சதவீதம் 30 சதவீதம் வரையில் இருக்கிறார்கள். ஆகவே வெறும் சாதியின் அடிப்படையில், சாதிப் பெயர்களின் அடிப்படையில் மட்டும் பின் தங்கியோரை முடிவு செய்ய முடியாது. ஆகவேதான் அதற்குக் கொஞ்ச காலம் தேவைப்படுகிறது.

திரு. சோ. ஆறுமுகம்: இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழும் என்ற காரணத்தாலேதான், பட்டியில் இருப்பவர்கள் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும், காலம் கடத்தக்கூடாது என்பது எங்களுடைய கருத்தாகும். அந்த அடிப்படையிலே ஒரு தீர்மானத்தை இந்த இரு அவைகளிலும் நிறைவேற்றி, மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் சொன்னதைப் போல மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்குச் சலுகை அளிக்க வேண்டுமானால், பொருளாதார அடிப்படையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பவர்களுக்கு என்று "ஓப்பன் காம்படிஷன்" என்பதற்குள்ளவற்றில் 10 சதவீதத்தை ஒதுக்கி, அவர்களுக்கு உதவி செய்யலாம். ஆனால் மிகவும் பிற்பட்டவர்களுக்கு இருக்கக் கூடிய சதவீதத்திலே



கை வைக்கக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை என்பதைத் தெரிவித்து, இந்த இலாக்கா மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தலைமையில் எவ்வளவுதான் வேகமாகச் செயல்பட்டாலும், இதற்கென்று தனியாக ஒரு அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தையும் வலியுறுத்தி முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலக் கொள்கைக் குறிப்பின் மீது இந்த அவையைச் சேர்ந்த உறுப்பினர்கள் பேசுகின்றபோது, பிற்பட்டோர் நலக் கொள்கைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு கருத்துக்களை வரவேற்று, பாராட்டி இருப்பதோடு, சீரிய பரிந்துரைகளைப் பயன்படுகிற வகையில் எடுத்துரைத்தமைக்காக அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பட்டோர் நலத் துறை இன்றியமையாத பணிகளைச் செய்ய வேண்டும் என்பதையும் அதன் மூலம் எப்படிப்பட்ட பணிகளை நாடும், சமுதாயமும் எதிர்பார்க்கிறது என்பதையும் இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 7-10)

ஆக பிற்பட்டவர்கள் நலன்கள் கவனிக்கப்பட வேண்டும் என்ற முறையில் இந்தத் துறை எப்படியெல்லாம் வளர்ந்துகொண்டிருக்கிறது, வளர்ச்சி பெற்று வந்திருக்கின்றது என்பது இந்தக் கொள்கைக் குறிப்பிலே சிறப்பாக எடுத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. முன்பு, ஆதிதிராவிடர் நலத் துறையும், பிற்பட்டோர் நலத் துறையும் ஒன்றாக இருந்ததுபோய், இன்றைக்கு அவைகள் பிரிக்கப்பட்டு இரண்டு துறைகளாக ஆகியிருக்கின்றன. இந்த இரண்டிற்கும் தனித்தனி அமைச்சர் இருக்கிறார். இப்போதும் தனி அமைச்சராகத்தான் இருக்கின்றார்களே தவிர வேறல்ல. இன்றைக்கும் தனி அமைச்சர்தான் இன்றைக்கும் அதற்குத் தனித் துறைதான். தனிச் செயலாளர்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

1967-68-ல் ரூ. 1 கோடியே 66 லட்சம் என்று செலவழித்த துறை 1983-84-ல் ரூ. 10 கோடியே 22 லட்சம் ரூபாய் செலவழிக்கத் தக்க அளவுக்கு வளர்ந்திருக்கின்ற தன்மையை நாம் ஓரளவுக்கு மிக நன்றாகக் காணலாம். ஆனால் பிற்பட்டோர் நலத் துறைக்கு ரூ. 10 கோடியே 22 லட்சம் ரூபாய்தான் நாம் ஒதுக்கியிருக்கிறோம் என்றாலும் கூட, பிற்பட்டவர்களுடைய பல்வேறு தன்மைகள், பல்வேறு நிலைமைகள் ஆகியவற்றிற்கு மொத்தத்திலே ஒதுக்கட்

பட்ட தொகை இதுதான் என்ற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் வந்து விடக்கூடாது. ஏனென்றால் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை என்கின்ற ஒரு துறையின் மூலமாக செய்யப்படுகின்ற சில பல சலுகைகள், சிலபல வசதி வாய்ப்புகளுக்காகத்தான் இவ்வளவு செலவழிக்கப்படுகின்றது. இந்தத் துறையை இயக்குவதற்காக ரூபாய் 59 லட்சத்தி 54 ஆயிரம் ரூபாய் செலவானாலும், இந்தத் துறையினுடைய மேம்பாட்டுப் பணிகளுக்காகவும் நல்வாழ்வுப் பணிகளுக்காகவும் இந்தத் துறை மூலமாக மட்டும் ரூ. 9,62,72000 அளவுக்கு செலவழிக்கப்பட்டு வருகிறது. இந்தத் துறை அவ்வளவுதான் செலவு செய்கிறது என்று கருதக்கூடாது. நாளையதினம் உங்களிடத்திலே நான் ஒப்புதலுக்கு வைக்க இருக்கிறேன். ரூ. 1,491 கோடிக்கு வைக்க இருக்கிறேன். அவ்வளவு செலவழித்த வகையில் இந்த 10 கோடி ரூபாய் தான் என்று ஒரு முடிவுக்கு வந்துவிடக்கூடாது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்களின் மூலமாக சமுதாய நல்வாழ்வுத் திட்டங்கள் மூலமாகச் செலவழிக்கப்படுகின்ற தொகைகள், உணவுத் துறை மூலமாகச் சலுகைத் திட்டங்கள், விதவைப் பாதுகாப்புத் திட்டங்கள், கலப்புத் திருமணம், விதவை மறுமணத் திட்டங்கள், வேளாண்மைத் துறை மூலமாகச் அமுல் செய்யப்படுகின்ற திட்டங்கள், 2½ ஏக்கர் நிலத்திற்குக் குறைவாக வைத்திருக்கிற சிறு விவசாயிகளுக்குச் செய்யப்பட்டுவருகின்ற வசதி வாய்ப்புக்கள், 5 ஏக்கருக்குக் கீழே வைத்திருக்கின்ற விவசாயிகளுக்கு மற்றவர்களுக்குச் செய்யக்கூடிய வசதி வாய்ப்புக்கள், கால்நடைத் துறை, மருத்துவத் துறை, நலத்துறை இப்படி எல்லாத் துறைகளையும் எடுத்துக்கொண்டால், அதன் மூலம் அமுல் செய்யப்படுகின்ற பொதுவான வளர்ச்சித் திட்டங்கள், நல்வாழ்வுத் திட்டங்கள், பொதுவாக மேற்கொள்கின்ற அத்தனையும் பெரும் பகுதி இந்த நாட்டில் பெரும்பகுதியினராக இருக்கும். பிற்படுத்தப்பட்ட மக்களுக்குச் செல்கின்ற அளவுக்குத்தான் இருக்கின்றது. எனக்கு நேரம் இருந்தால், அந்தந்தத் துறைகளிலே எவ்வளவு செலவழிக்கிறோம் என்று சொல்லலாம். அதைக் கணக்கு எடுத்துப்பார்த்தால், சிலபல கோடிகளுக்கு மேல் தான் அது செல்கின்றது. பிற்பட்டோர் நலத்துறையினுடைய தன்மைகளைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பாராட்டினார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் பாராட்டியிருக்கின்றார்கள் என்பதிலே எனக்கு மிக்க மகிழ்ச்சி. ஆனால் அவரே பாராட்டி விட்ட பிறகு, மற்றவர்கள் பாராட்டுவார்களா என்ற ஐயப்பாடு கொள்ள வேண்டியதில்லை. அந்த இன்றியமையாமை இப்போது ஏற்படவில்லை. அந்த அளவுக்கு அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒவ்



வொரு துறையாக எடுத்துச்சொல்ல நேரம் இல்லை என்பதனால் நாம் மற்ற புள்ளிவிவரங்களை எடுத்து அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில், ஏன் இப்படி வகுப்புகள் வந்தன, சாதிகள் வந்தன என்று வரலாற்றுக் காரணங்களை, சமுதாயக் காரணங்களை ஆராயத் தொடங்கினாலும், வேறு பல பழக்க வழக்கங்கள், இப்படிப் பல்வேறு சம்பிரதாயங்கள், வேத புராணங்கள், இதிகாசங்கள் இவைகளையெல்லாம் ஆராயப் போனால், இது பெரிய ஆராய்ச்சிக் கூடமாக அமைந்தாலும் அமைந்துவிடும். அதற்கெல்லாம் நான் போகவில்லை. அப்போது எப்படியோ அமைத்து விட்டார்கள். ஏன் இப்போது நாம் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்று சொல்லவேண்டிய அவசியம் வருகிறது என்று சொன்னால், நூறு ஆண்டுக் காலம், ஆயிரம் ஆயிரம் ஆண்டுக்காலம் என்று எந்த அடையாளத்தைக் காட்டி, எந்த வகுப்பினர்களைக் காட்டினார்களோ அந்த அடையாளத்தைக்காட்டி அவர்களைத் தூக்கிவிட்டு அவர்களைச் சமநிலைக்குக் கொண்டுவரவேண்டிய கால கட்டத்திலே இருக்கிறோம். அப்படி அவர்கள் வருகின்ற காலம் வரையிலே நாம் அடையாளம் காட்டத்தான் வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அப்படி நாம் குறிப்பிடவேண்டியதாக இருக்கிறது. எந்த அடையாளத்தின் காரணமாக, எந்த அடையாளம் காட்டப்பட்டு தாழ்த்தப்பட்டவர்கள் ஒதுக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், தனியாக ஆக்கப்பட்டவர்கள். தீண்டத்தகாதவர்களாக ஆக்கப்பட்டார்கள், வசதியற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள் என்று தெரிகிறது. ஏற்கெனவே நூற்றாண்டு நூற்றாண்டு காலமாக இந்த நிலை இருக்கின்றபோது, அவர்கள் எவ்வளவுக்குத் தாழ்த்தப்பட்டார்களோ அந்த அளவுக்குத் தூக்கிவிடவேண்டிய கட்டாயத்தில் நாம் இருப்பதால் தான், சிலபல ஆண்டுகளுக்கு நாம் அப்படிச் செய்யவேண்டியதாக இருப்பதால், நாம் அந்த அடையாளம் காட்டவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச் சொன்னதற்கு இணங்க, நாளுக்குநாள் சமுதாயத்திலே ஏற்படுகின்ற சூழ்நிலைகளை ஒட்டி, மற்றவர்கள் அந்த எண்ணங்களை எல்லாம் ஓரளவுக்கு மறக்கடிக்கச் செய்து, அது முழுமை தன்மையை அடைகின்ற பாங்கினை நாம் பார்க்கவேண்டும். அது ஓரளவுக்கு உண்மைதான். பள்ளத்திலே ஒரு திருடன் வீழ்ந்துவிட்டான் என்றால், வீழ்ந்துவிட்டவனை 'நீயாக உன்னுடைய திறமையின் அடிப்படையிலே மேலே ஏறி வா, மேலே ஏறி வா' என்று சொன்னால், அவனால் மேலே ஏறி வர முடியாது. ஆனால் மேலே கரையிலே இருப்பவர்கள் கை கொடுத்து குனிந்து சிரமப்பட்டு, கீழே இருப்பவர்களுக்குக் கைநீட்டி தூக்கி விட்டால்தான் மேலே வர முடியும். அது

மாதிரி பள்ளத்திலே வீழ்த்தப்பட்டிருப்பவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சலுகைகளைத் தந்து தூக்கிவிட்டால்தான், சமநிலைக்கு அவர்கள் வரமுடியும். அதிலே இன்னொன்றையும் கருத வேண்டும். எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு முயற்சியிலும் தாழ்த்தப்பட்டவர்களைத் தூக்கிவிடுவது, பிற்பட்டவர்களைத் தூக்கிவிடுவது, இவைகளில் எல்லாம் தான் நாம் கவனம் செலுத்துகிறோம். மேலே சென்றவர்களைக் கீழே வீழ்த்திவிடுகின்ற எந்த ஒரு முயற்சியும் நாம் செய்யவில்லை. கொடுக்கப்படுகின்ற சலுகைகள் எல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று தான் இருக்கிறது. அகில இந்தியாவைப் பொறுத்த வரையிலே, மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க பெரும்பாலும் இரண்டு தட்டுக்கள் தான் இருக்கின்றன. தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினர் என்று இருக்கின்றது. வகுப்பைப் பொறுத்தவரையில், அவர்கள் அத்தனை பேர்களையும் ஓரே வகுப்பினராகத்தான் வைத்திருக்கின்றார்கள். அப்படி தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினர்களுக்கு மத்திய அரசு தருகின்ற சலுகைகள், ஒதுக்கப்படுகின்ற தன்மைகள் மற்றவைகள் அடிப்படையிலேதான் அவர்கள் நடைபெற வேண்டும். அவர்கள் அத்தனை பேர்களையும் ஒன்றாகத்தான் அவர்கள் கருதுகிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், நீண்ட நெடுங்காலமாக 3 தட்டுக்களாக அமைந்திருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர்களும் அதை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலைமைகளை நாம் மிகச்சிறப்பாகக் காண முடிகிறது. அந்த வகையிலே தமிழகத்தைப் பொறுத்தவரையில். தாழ்த்தப்பட்டவர்கள் பழங்குடியினர் ஒரு தட்டாகவும், பிற்படுத்தப்பட்ட மக்கள் மற்றவர்கள் ஒரு தட்டாகவும், மற்ற முன்னேறிய வகுப்பினர் எல்லாம் ஒரு வகுப்பாகவும், தட்டாகவும் இருக்கின்றார்கள். முற்பட்ட வகுப்பினர் என்று தெளிவாகச் சொன்னாலும், மற்ற சமுதாயத்தினர் என்று அமைகின்றார்கள். ஆக மூன்று தட்டினர் அடிப்படையிலே அமைந்திருக்கின்ற தன்மைகளைத் தொடர்ந்து நம்முடைய மாநிலத்திலே வளர்ந்து வந்திருக்கின்ற தன்மைகளைப் பார்க்கலாம். மாண்புமிகு அங்கத்தினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களும் மற்றவர்களும் எடுத்துச்சொன்னதைப் போல், 1927 ஆம் ஆண்டு வரையில் நீதிக் கட்சி ஆட்சியிலே இருக்கின்றபோது, திரு. முத்தையா முதலியார் அவர்கள் கொண்டுவந்த அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலே இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டது 1927-ல் திரு. முத்தையா முதலியார் இங்கே அமைச்சராக இருந்து கம்யூனல் ஜி.ஓ. என்று கொண்டு வந்து நிர்ணயிக்கப்பட்டது. 1947-வது ஆண்டு வரையில் இருந்த ஆட்சியினரால் காப்பாற்றப்பட்டு வந்ததே தவிர, ஆட்சி மாறின நிலையிலேகூட, திரு. ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக வந்த நிலையிலேகூட, அதற்குப் பிறகு



அட்வைசர்கள் ஆட்சி நடைபெற்றபோது கூட 1947 வரையிலே எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. அதற்குப் பிறகு பல்வேறு வகுப்பினரிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் ஏற்பட்ட வேண்டுகோல் முறையீடுகள் ஆகியவற்றின் காரணமாக 1947 ஆம் ஆண்டில் ஒரு ஜி.ஓ. மூலமாக ஒரு சிறு மாற்றத்தைச் செய்தார்கள். ஏற்கெனவே பிராமணர் அல்லாதார் இந்துக்கள் 5/12 இடம் தரவேண்டும் என்று இருந்தது. 1947-ல் ஒரு பகுதி அரசு ஆணையின் மூலமாக 5/12 என்பதை 6/14 இடம் என்றும், அதுபோன்று பிராமணர்கள் 2/12 இடம் என்று இருந்ததை 2/14 இடம் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் அல்லது பழங்குடியினர் 1/12 இடம் என்று இருந்ததை 2/12 இடம் என்றும், முஸ்லீம்களுக்கு 2/12 என்ற இருந்ததை 2/14 இடம் என்றும் அதுபோலவே ஆங்கிலோ இந்தியர்கள் கிருஸ்தவர்கள் 2/14 என்று இருந்ததை 1/14 இடம் என்றும், பேக்வேர்ட் இந்துக்கள், பிற்படுத்தப்பட்ட இந்துக்கள் 2/14 இடம் என்றும் ஒரு மாறுதல் செய்யப்பட்டது. அந்த மாறுதல் 1951 ஆம் ஆண்டு வரையிலே இருந்தது. 1951 ஆம் ஆண்டிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, வழக்கு மன்றத்திற்குச் சென்று, சாதி வேறு பாடு கிடையாது, சாதி வேறுபாட்டின் அடிப்படையிலே சலுகைகள் தருவது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு வேறுபட்டு உள்ளது என்று சொன்னார்கள். 1950 ஜனவரி திங்கள் 26-ம் நாள் ஒரு புதிய அரசியல் அமைப்புச் சட்டம் வந்த பிறகு, அது கொள்கைகளுக்கு மாறுபட்டு இருக்கிறது என்ற காரணத்தைக் காட்டி, உச்ச நீதிமன்றத்திற்கு வழக்கு கொண்டுபோன பிறகு, அந்த வழக்கைக் காட்டி இப்படி சாதியின் அடிப்படையிலே இடங்கள் ஒதுக்கீடு செய்வது அரசியல் அமைப்புச் சட்டத்தினுடைய நோக்கத்திற்கு மாறுபாடானது என்று தீர்ப்பு அளித்து விட்டார்கள். அந்தத் தீர்ப்புக்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்னதற்கு இணங்க பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும், நாட்டிலே இருக்கின்ற பலரும் முயற்சி செய்தார்கள். உச்சநீதி மன்றத்தினுடைய தீர்ப்பின் மூலமாக இந்த முயற்சிகள் அடியோடு அழிக்கப்பட்டு விடுமானால், தொடர்ந்து வளர்த்து வரவேண்டிய அல்லது சலுகைகளைக் கொடுத்துத் தூக்கப்படவேண்டிய சமுதாயத்தினர் தூக்கிவிடப்படாமல் போய்விடுவார்களே என்று ஒரு பெரும் கூக்குரல இட்டனர். அப்போது இங்கேயிருந்து பெருந்தலைவர் காமராசர் உட்பட, திரு. ஓமந்தூர் ரெட்டியார் உட்பட அத்தனை பேர்களும் அதே கருத்திலே இருந்ததன் காரணமாக, இன்னும் சொல்லப்போனால், பெருந்தலைவர் திரு. காமராசர் அவர்கள் இதற்கு ஆதரவு தந்ததன் காரணமாக, அவருக்கு மத்திய அரசில் செல்வாக்கு இருந்ததன் காரணமாக, அவர்கள்

(பிற்பகல் 7-20)

ஒன்று திரண்டு செய்தார்கள். அப்போது மத்திய அரசிலே செல்வாக்கு படைத்தவர்களாக இருந்த காரணத்தால், இந்த உணர்வுகளை எல்லாம் ஒன்றாகத் திரட்டிச் சென்று, அங்கே நேரு அவர்கள் இருந்த காரணத்தாலே, அரசியல் அமைப்புச் சட்டத்திலே முதன் முதலாகத் திருத்தம் கொண்டுவரப் பட்டது. இந்த அளவிலே மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தாமோதரன் அவர்களும், திரு. இராமமூர்த்தி அவர்களும், மற்றவர்களும் எடுத்துத் தெரிவித்ததற்கு இணங்க, 'சோஷியலி மற்றும் எஜுகேஷனலி பேக்வார்ட்' என்ற அளவுக்குச் சலுகைகள் கொடுக்கலாம் என்று அரசியல் அமைப்புச் சட்டத்திலே ஒரு 'கிளாஸ்' சேர்த்த பிறகு, அதன்கீழ் இடம் ஒதுக்கலாம் என்ற நிலைமை ஏற்பட்டு, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பழங்குடியினருக்கு 16 விழுக்காடும், பிற்பட்டவர்களுக்கு 25 விழுக்காடும் என்று ஒதுக்கப்பட்டது. அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு, டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 16 விழுக்காடு என்று இருந்ததை 18 விழுக்காடு என்றும், பிற்பட்டவர்களுக்கு 25 விழுக்காடு என்று இருந்ததை 31 விழுக்காடு என்றும் சட்டநாதன் குழு அறிக்கைக்குப் பிறகு மாற்றினார்கள். அப்படி மாற்றும்போது 18, 31 என்று சொல்லும்போது மொத்தம் 49 விழுக்காடு வருகிறது. உச்சநீதி மன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்தது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டார்கள். எந்த ரிசர்வேஷன் என்றாலும் பாதிக்கு மேலே இருக்கக்கூடாது என்று உச்ச நீதி மன்றத்திலே சொன்னதற்குப் பின்னாலே, இட ஒதுக்கீடு—ரிசர்வேஷன்—49 விழுக்காடுதான் இருக்க முடியும் என்பதால், 18 விழுக்காடு தாழ்த்தப்பட்டவர்கள்—பழங்குடியினருக்கும், 31 விழுக்காடு பிற்பட்டவர்களுக்கும் என்று ஒதுக்கிவிட்டார்கள். மக்கள் கணக்கெடுப்பின்படி பார்த்தாலும், பிற்படுத்தப்பட்டவர்கள் 54 விழுக்காடு வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள்—பழங்குடியினர் 18 விழுக்காடு வருகிறார்கள். தாழ்த்தப்பட்டவர்கள்—பழங்குடியினரைப் பொறுத்தவரையில், ஒதுக்கப்பட்ட இடங்கள் சரி சமமாக இருக்கிறது., உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்புக்கு இணங்க 49 விழுக்காட்டுக்கு மேலே ரிசர்வேஷன் இருக்கக்கூடாது என்ற தன்மையின் அடிப்படையிலே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 31 விழுக்காடு என்று ஆக்கப்பட்டது. 31 விழுக்காடு என்று ஆக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பல கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அந்தத் தன்மையின் அடிப்படையிலே இட ஒதுக்கீடு வரும்போது, சட்டநாதன் அவர்கள் குறிப்பிட்டுள்ள தன்மையிலே பல வசதி படைத்த, வளர்ச்சி அடைந்த சமுதாயத்தினர் இருப்பதன் காரணமாக, அவர்களுக்குத்தான் அந்த இடங்கள் ஒதுக்கப்படுகிறதே தவிர,





உண்மையிலேயே பிற்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு இருக்கிறவர்களுக்கு அந்தச் சலுகைகள் சேராத அளவிலே இருக்கின்றன என்றும் வசதி படைத்தவர்கள் அதைக் கொத்திக் கொண்டுபோகிறார்கள் என்றும், பெரும் பகுதி இடங்களை குறிப்பிட்ட 2 அல்லது 3 வகுப்பினர்தான் பெற்றுக்கொண்டு போகிறார்கள், குறிப்பிட்ட சில இடங்களைத்தான் மற்றவர்கள் பெறுகிறார்கள் என்றும் சட்டநாதன் அவர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே ஆண்டு வருமானத்திற்கு 9000 ரூபாய் என்று உச்சவரம்பு கட்டி, அதற்குக் கீழே உள்ளவர்களுக்குத்தான் சலுகைகள் என்று கூறப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், மற்றவர்களும் ஒன்றைச் சுட்டிக் காட்டினார்கள். 9000 ரூபாய் வரையில் வருமானம் உடையவர்களுக்கு மட்டும்தான் ஒதுக்கீடு என்று சொல்லும்போது, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்களும் கூறியதுபோல, 9000 ரூபாயைத் தாண்டிவிட்டால், முற்பட்டோர் பட்டியலுக்குப் போய்ச் சேர வேண்டும். இன்டிவிஜுவலாகச் சேர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு வந்து, அவர்கள் வீட்டுப் பிள்ளைகள் இந்த வசதிகளைப் பெற முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே இதில் பிரச்சினை இருக்கிறது, குழப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கண்டறிந்து, பொது மக்களுடைய விருப்பத்தை அறிந்து, தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்கள் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார்கள். திராவிடர் கழகத்தைச் சேர்ந்த திரு வீரமணி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கலைஞர், மற்றவர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். இப்படி பிரச்சினை வந்திருக்கிறது, என்ன செய்யலாம் என்று கேட்டார்கள். இது நல்ல நோக்கத்தில் கொண்டு வந்ததுதான், இதில் மாற்றம் செய்ய வேண்டுமென்றால், செய்வோம் என்றும் சொன்னார்கள். அந்தக் கூட்டத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் நான் ஒரு கருத்தைச் சொன்னேன். 31 சதவிகிதம் பிற்பட்டவர்களுக்கு ஒதுக்கி 9000 ரூபாய்க்குக் கீழே ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்குதான் அந்தச் சலுகை என்று சொல்லும்போதுதான் சிலர் ஒதுக்கப்பட்டு, முற்போக்கு இனத்திற்குச் செல்லும் நிலை ஏற்படுகிறது; எனவே 31 சதவிகிதத்தில் 15 சதவிகிதத்தை யார் வேண்டுமானாலும் பெறலாம் என்றும், மீதி 16 சதவிகிதத்தைத் தனியாகப் பிரித்து பிற்பட்ட வகுப்பிலே யார் மிக மிகப் பின்தங்கியிருக்கிறார்களோ அவர்களுக்கு ஒதுக்கிடும் சூழ்நிலை ஏற்பட்டால் நல்லது என்ற கருத்தை எடுத்துச் சொன்னேன். அதற்குப் பிறகு அந்தத் திட்டத்தையே எடுத்து விட்டு 50 சதவிகிதம் என்று கர்நாடகாவிலே

முன்னாலே ஒதுக்கிவிட்டார்கள், அப்படி ஒதுக்கியதை சுப்ரீம் கோர்ட் ஒத்துக் கொண்டிருக்கும்போது நம் மாநிலத்தில் 54 சதவிகிதம் பிற்பட்டோர் இருக்கும் போது, 50 சதவிகிதம் என்று அவர்களுக்கு ஒதுக்கினால் பாதகம் இராது; கர்நாடகத்திற்கு வரும் பாதகம் நமக்கு வரட்டும், நமக்கு வரும் பாதகம் அவர் களுக்கும் ஏற்படட்டும் என்று கூறினார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை யில், இன்று நேற்றல்ல, எந்த அரசியல் கட்சி வந்தாலும் இதிலே அக்கறை நாட்டம் வைத்து, மாநிலம் வளர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் தொடர்ந்து பாடுபட்டு வந்திருக்கிறார்கள் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது மட்டுமல்ல, மண்டல் கமிஷனுடைய அறிக்கையிலேயே இதனுடைய வரலாறு, நாட்டின் நிலைமைகள் எல்லாவற்றையும் தெளிவுபடச் சொல்லியிருக் கிறார்கள். ஒரு இடத்திலே அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

Madras Government took the lead by framing a Grant-in-Aid Code in 1885 to regulate financial aid to educational institutions for backward class students.

என்று இந்தியாவுக்கு எடுத்துக் காட்டாகத் தமிழகம் இருந்திருக்கிறது என் றும், 1885 லேயே கிரான்ட்-இன்-எய்ட் என்று போட்டு, பிற்பட்டோருக்காக வைத்திருக்கும் பள்ளிக்கூடங்களுக்கு நிதி உதவி தர வேண்டுமென்ற தன்மையை சென்னை மாநிலம் ஏற்படுத்தி, எடுத்துக் காட்டாக விளங்கி இருக் கிறது என்பதைச் சிறப்பாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதே ரிப் போர்ட்டிலே, Unlike some other States, an open conflict between the Harijans and other backward classes has not developed in Tamil Nadu என்றும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரை யில், எங்களுக்கு வேண்டும், எங்களுக்கு வேண்டும், எங்களுக்குச் சலுகை வேண்டும், இட ஒதுக்கீடு வேண்டும் என்று கேட்கிறவர்கள்தான் இருக் கிறார்கள். பிற்பட்ட மக்களுக்கு ஏன் இவ்வளவு ஒதுக்கினீர்கள், தாழ்த்தப் பட்டவர்களுக்கு ஏன் இவ்வளவு சலுகைகள் தருகிறீர்கள் என்று தைரியமாகக் கேட்கிறவர்கள் இல்லை. ஒருவரோடு ஒருவர் பேசும்போது, இது அவசியம் தானா என்று பேசுகிறார்கள். ஆனால் வெளிப்படையாகப் பேசாமல் இருப் பதற்குக் காரணம், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் 50 ஆண்டுக்கால மாக இந்தக் கொள்கையைப் பரப்பியதாலும், பேரறிஞர் அண்ணா போன்ற வர்கள் இதில் கட்சி வேறுபாடு இன்றி கருத்துக்கள் சொன்னதாலும், சமுதாய நீதி நிலை நாட்டப்பட வேண்டுமென்ற கருத்திலே தமிழகம் ஒன்றிப் போய், இதற்கு எதிர்ப்பு தெரிவிக்காத சூழ்நிலை ஏற்படுத்துவதற்காக நல்ல மன நிலையில் இருக்கிறதென்று பாராட்டுகிறார்கள். Unlike some other States an open conflict between the Harijans and other backward classes has not developed in Tamil Nadu



என்று மண்டல் கமிஷன் அறிக்கை சிறப்பாகத் தெரிவிக்கிறது. எதற்காக இதைச் சொல்ல விரும்புகிறேன் என்றால், கூடுமான அளவுக்கு நாம் இந்தப் பணிகளை ஆற்றிக் கொண்டு வருவதால், அவர்கள் நன்மைகளைப் பெற்று வருகிறார்கள் என்பதை நாம் உணரலாம். இது நீடித்து வர முடியுமா என்றால், வர இயலாது. ஆனாலும் பல ஆண்டுகளுக்கு அவர்களைத் தூக்கி விடும் அளவுக்கு இதைச் செய்து தரும் கட்டாயத்தில், அவசியத்தில் இருக் கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் சொன்னது போல, ஒரு சில்லரை மாத்திரம் கணக்கெடுக்கவில்லை. எல்லா வகுப்பிலும் தனிப்பட்ட குடும்பங்களைச் சுட்டிக் காட்ட வாய்ப்பு இருக்கிறது. ஒரு சமுதாயம் என்று சுட்டிக்காட்டும் அளவுக்கு நிலைமைகள் வளரவில்லை.

(பிற்பகல் 7-30)

அதனால் தான் இந்த ஒதுக்கீடு முறைகளை எல்லாம் கடைப்பிடித்துத் தீர வேண்டிய அவசியமுடையவர்களாக இருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்த வரையில், தொடர்ந்து பல ஆண்டுகளாக இதற்காக நாம் பணியாற்றிக்கொண்டு வருகிறோம். இதை நாம் ஒரு நியாயத்தின் அடிப்படையில், நிதானத்தின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் தொடர்ந்து செய்துகொண்டு வரு கிறோம். தொடர்ந்து மக்களுடைய முழு ஆதரவையும் பெற்று வருகிறோம். மற்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், மண்டல் குழுவினுடைய தீர்ப்பில் சொல்லப்பட்டிருப்பவைகளை அமுல்படுத்தவில்லை. ஆகவே மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் மண்டல் கமிஷனுடைய தீர்ப்பை அனுப்பி மாநிலங்கள் தீர்ப்பை அமுல்படுத்தலாம் என்று சொன்னதன் அடிப்படையில், பல மாநிலங்கள் அதனை அமுல்படுத்த முன்வந்தன. தென் மாநிலங்களைப் பொறுத்தவரையில், தமிழகம், கர்நாடகம், ஆந்திரா போன்ற மாநிலங்களைப் பொறுத்தவரையில், நாம் இதை நல்ல முறையில் ஏற்கெனவே நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். வட மாநிலங்கள் அந்த அறிக்கையைப் புறக்கணித்து விட்ட நிலையில், உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் எல்லாம் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் போல பிற்பட்ட வகுப்பினர் என்று தனியாக ஒரு வகுப்பினரை ஏற்படுத்தி, அவர் களுக்குச் சலுகைகள் தரக் கூடாது என்கிற முறையில் கிளர்ச்சி ஏற்பட்டு கொந்தளிப்பு வந்தது. ஆகவே அவர்கள் இதை நடைமுறைப்படுத்தாமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆறுமுகம், ஏ. ஆர். தாமோதரன் போன்றவர்கள் எல்லாம் இதுகுறித்து சுட்டிக்காட்டினார்கள். மண்டல் குழுவை அமைத்தது மத்திய அரசு,

மாநிலங்களிலுள்ள நிலைமைகளைக் கண்டறிந்து பரிந்துரை செய்யச் சொன்னது மத்திய அரசு. அதன்படி மண்டல் குழு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. அப்படி செய்யப்பட்ட பரிந்துரைகள் பொதுவாக மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் பொருந்துமாறு அது சிபாரிசு செய்திருக்கிறது. ஆக, அந்தக் குழுவின் அறிக்கை தரப்பட வேண்டிய இடம் மத்திய அரசு. மத்திய அரசு தான் அதை வாங்கி வைத்திருக்கிறது. அவர்கள் எடுத்துச் சொல்லியிருப்பதுபோல், இன்னமும் அது புராசசிங்கில் தான் இருக்கிறது. சில மாநிலங்கள் அந்த அறிக்கையைப் பற்றி தங்களுடைய கருத்துக்களை அனுப்பி வைத்திருக்கின்றன. இன்னும் சில மாநிலங்கள் ஒரு கருத்தையும் அனுப்பி வைக்கவில்லை. மத்திய அரசு அவ்வாறு மாநிலங்களினுடைய கருத்துக்களை அனுப்பி வைக்குமாறு கேட்டிருக்கிறது. எல்லாக் கருத்துக்களும் மத்திய அரசுக்குக் கிடைத்த பிறகு, மொத்தத்தில் எல்லாவற்றையும் மத்திய அரசு பரிசீலித்து, மண்டல் குழுவினுடைய பரிந்துரைகள் மீது மத்திய அரசு என்ன கருத்தைக் கொண்டிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய கருத்தைப் பொறுத்தவரையில், நாம் ஏற்கெனவே மண்டல் கமிஷன் பரிந்துரை செய்திருப்பதற்கு அதிகமாகவே செய்து முடித்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால், சில விஷயங்களுக்காக அவர்கள் நம்முடைய மாநிலத்தைப் பாராட்டிச் சொல்லியிருக்கிறார்கள்.

"Tamil Nadu has been the pioneer in providing special concessions to other backward classes...." என்று குறிப்பிட்டு அவர்கள் 'பேக்வர்ட் கிளாசஸ்' என்று சொல்லியிருப்பது நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற பேக்வர்ட் கிளாசஸ் பற்றித்தான்.

"Tamil Nadu has been the pioneer in providing special concessions to other backward classes. As indicated in para 2 (1), in 1977 Madras Government has classified all the communities of the State into five categories under the famous Communal G.O. and earmarked separate quota for each group for recruitment to the Government Services"

என்று நம்முடைய கம்யூனல் ஜி.ஓ. பற்றியெல்லாம், இதனுடைய விளைவுகளைப் பற்றியெல்லாம், வரலாற்றைப் பற்றியெல்லாம், சிறப்பான தன்மைகளைப்பற்றியெல்லாம் மிகவும் தெளிவாக அவர்கள் எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். ஆக, மண்டல் குழுவினுடைய அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பவற்றை விட அதிகமாகவே தமிழக அரசைப் பொறுத்தவரையில், காரியங்களை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். மண்டல் குழுவினுடைய அறிக்கையைப் பொறுத்தவரையில் நாம் வரவேற்கிறோம்



என்பது மாத்திரமல்லாமல், அண்மையில் டெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் கூட நம்முடைய மாண்புமிகு மின்சார அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்கள் இதுகுறித்து மத்திய அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிற நம்முடைய கொள்கையைத் தெளிவாகவே எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள். பேரவையிலும் இதை நான் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதுபோல் தமிழகத்திற்குப் பொருந்துகின்ற சில பரிந்துரைகள் வேறு சில மாநிலங்களுக்குப் பொருந்துவதில்லை. சில பரிந்துரைகள் தமிழகத்திற்குத் தேவை என்கிற அடிப்படையில் நிலைமைகளை ஆராயும்போது, நமக்குத் தேவைப்படுகின்ற புள்ளிவிவரம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. இதையெல்லாம் மனதில் வைத்து ஒன்றை மத்திய அரசுக்குச் சொன்னோம். சென்சஸ் அடிப்படையில் ஜாதி உணர்வைக் காட்ட வேண்டாம். ஒரு சாதி பெரிது, இன்னொரு சாதி சிறிது என்று பொதுவாக சாதிகளைப்பற்றி எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. இதுபற்றி விளம்பரப் படுத்த வேண்டாத அளவுக்கு இருக்க வேண்டும். எந்த அளவுக்கு ஒரு சாதி பெரிது அல்லது சிறிது என்று வெளிப்படுத்துகின்ற அளவுக்கு, விளம்பரப் படுத்துகின்ற அளவுக்கு இருக்கின்ற அறிகுறிகள் எல்லாம் தடுத்து நிறுத்தப் பட வேண்டும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சமுதாயத்தில் வீழ்ந்து கிடக்கின்றவர்களை ஓரளவுக்கு உயர்த்த வேண்டிய அளவுக்கு நாம் நிலைமைகளைக் கொண்டு வந்திருக்கிறோம்.

ஒவ்வொரு சாதி மாநாடு நடைபெறும்போது, எங்கள் சாதி தான் இந்த நாட்டை ஆண்டது என்று தீர்மானித்து விடுகிறார்கள். இப்படி ஒவ்வொரு சாதியினரும் எங்கள் சாதி தான் ஒரு காலத்தில் இந்த நாட்டை ஆண்டது என்று சொல்கிறார்களே தவிர, மக்களாக அவர்கள் இருந்ததாக எந்த ஒரு மாநாட்டிலும் சொல்லவில்லை. (சிரிப்பு) தாங்கள் தான் சேர, சோழ, பாண்டியர் பாரம்பரையினர் என்று ஒவ்வொருவரும் எடுத்துச் சொல்கிறார்கள். அதோடு மாத்திரமல்லாமல், ஒவ்வொரு வகுப்பினரும் சொல்கின்ற எண்ணிக்கையை நாம் கணக்குக் கூட்டிப் பார்த்தால், மிக அதிக ஜனத்தொகை வருகிறது. ஒவ்வொரு சாதியினரும் இன்றைக்கு 1½ கோடி பேர் இருக்கிறோம், 2½ கோடி பேர் இருக்கிறோம் என்று கணக்கு சொல்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற கணக்கை எல்லாம் கூட்டிப்பார்த்தால் இன்றைக்கு தமிழகத்தினுடைய மக்கள் தொகை 15 கோடிக்கு மேல் வருகிறது. ஆனால் உண்மையில் தமிழகத்தினுடைய மக்கள் தொகை இதில் பாதிக்கும் கீழ் தான் இருக்கிறது. ஆனாலும் கூட விளம்பரப்படுத்துவதைப் பொறுத்தவரையில், தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவையொட்டி தெருவின் பெயர், பகுதிப் பெயர்

போன்றவற்றில் சாதிப் பெயர் இருந்தால், அகற்றிவிட ஏற்பாடுகளைச் செய்தோம். அந்த அடிப்படையில் கூடுமானவரை முதலியார் தெரு, செட்டியார் தெரு, பாப்பான் தெரு என்று இருந்த பெயர்களில் சாதிப் பெயர்களை அகற்றி விட்டோம். அதுபோல் அரசியல் தலைவர்களுடைய பெயர்கள், புலவர்களுடைய பெயர்கள், சிறந்த தலைவர்களுடைய பெயர்கள் போன்றவற்றிலும் கூடுமானவரை சாதிப் பெயர் இல்லாமலிருக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். ஆனால் தவிர்க்க முடியாமல் சில நேரங்களில் இந்தப்பெயர்கள் இருக்க வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு ஜி. டி. நாயுடு என்கிற பெயரிலுள்ள நாயுடுவை நீக்கி விட்டால், குழப்பம் எற்படுகிறது. அதுபோல் துரைசாமி முதலியார் என்று இருக்கிற பெயரில் உள்ள முதலியார் என்ற வார்த்தையை நீக்கிவிட்டால், எந்த துரைசாமி என்கிற பிரச்சினை வருகிறது. அதுபோல் வ. உ. சுப்பிரமணியம் என்கிற பெயரில் வெறும் சுப்பிரமணியம் என்று போட்டால் எந்த சுப்பிரமணியம் என்கிற பிரச்சினை வருகிறது. ஆனால் அதேசமயத்தில் தமிழ் நாட்டிலுள்ள பெண்களைப் பாராட்ட வேண்டும். பெண்களைப் பார்த்து இந்த விஷயத்தில் ஆண்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும். செல்லம்மாள் செட்டிச்சி என்று எந்தப் பெண்ணுக்கும் பெயரில்லை. அதுபோல் முனியம்மாள் என்று இருக்கிறதே தவிர முனியிச்சி என்றோ முதலிச்சி என்றோ பெயர் இல்லை. அந்த வகையில் பெண்கள் இந்தச் சமுதாயத்தில் ஒரு பெரிய ஒற்றுமையை உருவாக்கியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** பொதுவாக பெண் சாதி என்கிற ஒரு சாதியை அவர்கள் வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பொதுவாக சாதியின் பெயரைச சொல்லி யாரும் விளம்பரப்படுத்தக் கூடாது. ஆனால் சர்ட்டிபிக்கேட் என்று வருகிறபோது, அதிலே அதை நாம் உணர்த்த வேண்டிய நிலை வருகிறது. காரணம் மருத்துவக் கல்லூரியில் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நிலை வருகின்றபோது, பிற்பட்டவர் என்கின்ற நிலை வருகின்றபோது, என்ன வகுப்பு என்று கேட்கிற நிலை ஏற்படுகிறது.

**திரு. ஆ. நல்லசிவன் :** பெண்களுக்குத் தனி 'ஐடென்டிட்டி' இல்லாமல் போனதற்கு male chauvinism என் காரணமாக இருந்திருக்கக் கூடாது?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நூற்றுக்கு நூறு அவர்கள் ஐடென்ட்டிட்டிக்காகத் தான் அவ்வாறு பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனாலும் நாமெல்லாம் வெளியில் தான் இம்மாதிரியெல்லாம், பல்வேறு விஷயங்கள் பற்றியெல்லாம் பேசுகிறோமே தவிர, வீட்டைப் பொறுத்தவரையில், அவர்கள் தான் எல்லாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய குறைகள் எல்லாம் காலப் போக்கிலே சரியாக ஆகிவிடும். என்றாலும் இதுபற்றிய உண்மை நிலைமைகளைக் கண்டுபிடிக்க சென்சஸ் எடுக்கிறபோது, இன்ன வகுப்பைச் சார்ந்தவர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்பதைப்பற்றி, ஒவ்வொரு வகுப்பினர் பற்றிய விவரங்களைச் சரியாக எடுக்க வேண்டுமென்று சென்சஸ் கமிஷனருக்கு எழுதினோம். அதை வைத்துக்கொண்டு ஒவ்வொரு வகுப்பினரின் எண்ணிக்கை என்ன என்பதை நாம் எளிதில் கணக்கிட்டுப் பார்க்க முடியும் என்ற அடிப்படையில் நாம் இதைச் செய்தோம். ஆனால் இவ்வாறு தகவல்களை அதில் சேர்க்க மாட்டோம் என்று அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். பள்ளிக்கூடங்களைப் பொறுத்தவரையில், கணக்கிடும்போது கூட, இப்போது நாம் 1971 சென்சசை அடிப்படையாக வைத்துதான் கணக்கிட வேண்டிய நிலை இருக்கிறது. இதையெல்லாம் வைத்துத் தான், நம்மைப் பொறுத்தவரையில், மண்டல் குழுவினுடைய அறிக்கையை முழுமையாக அமுல்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மேலும் 3, 10. 18 வயதில் எல்லாம் கூட சில வகுப்பினர் திருமணம் பண்ணுகிறார்கள். இந்த விவரங்கள் பற்றியெல்லாம் சென்சஸ் ரிப்போர்ட்டில் இருந்தால் தான், நாம நல்லமுறையில் நிலைமைகளை அணுக முடியும். மற்றபடியாக நாமே தனிபாக இந்த விவரங்களைக் கணக்கெடுக்க முடியாது. ஆனால் ஒன்றைப் பொறுத்தவரையில், நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆதி திராவிடர்களைப் பொறுத்தமட்டில், பழங்குடியினரைப் பொறுத்தமட்டில், பிற்பட்டோரைப் பொறுத்தமட்டில் தமிழ் நாட்டில் சலுகைகள் வழங்கப்படுவதைப் போல வேறு எந்த மாநிலத்திலும் சலுகைகள் எந்த வகுப்பினருக்கும் வழங்கப்படவில்லை. அதுபோல் எல்லோரும் தங்களுக்குச் சலுகைகள், உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்று தான் கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பிற்பட்டவர்களுக்கு 50 சதவிகிதம் என்று ஆக்கியதைப் பொறுத்தவரையில், எங்களையும் பிற்பட்டோர் வகுப்பினருடன் சேருங்கள், நாங்களும் இந்த 50 சதவிகிதத்தினருக்கு உள்ளே வந்து, போட்டி போட்டு அதன் அடிப்படையில் சலுகைகளைப் பெறுகிறோம் என்கிற எண்ணத்தில் சொல்கிறார்களே தவிர,

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்) [1983 ஏப்ரல் 21

(பிற்பகல் 7-40)

வேறு ஒன்றுமில்லை. அந்த வகையில்தான் நகரத்து செட்டியார்களையும் பிற்பட்ட வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். பத்திரிகையில் கூட பார்த்தேன், பிராமண சங்கத்தில் கூட ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். எங்களையும் பிற்பட்ட வகுப்பில் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதையும் சேர்த்துவிட்டால், வேறு விவகாரமே இல்லை. அது ஒன்றுதான் வெளியில் இருக்கிறது. எல்லாவற்றையுமே ஒன்றாக்கிவிடலாம். அதுமட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்க்கலாமா அல்லது பிரிக்கலாமா என்று மாநிலத்தைப் பொறுத்த வரையில், இருக்கிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவரை தாழ்த்தப்பட்டவராகச் சேர்க்க வேண்டுமென்று சொன்னால், அதை மத்திய அரசுதான் செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். வேட்டுவ கவுண்டர் சமுதாயத்தை தாழ்த்தப்பட்ட சமுதாயமாக அறிவிக்க வேண்டுமென்று சொன்னார். தமிழகத்தைப் பொறுத்த வரையில், கிட்டத்தட்ட ஆதி திராவிடர்கள் எந்தச் சூழ்நிலையில் எப்படி இருக்கிறார்களோ, அப்படியே 402 கிராமங்களில் மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தங்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகச் சேர்க்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களைச் சேர்க்கின்ற அளவுக்கு நமக்கு உரிமை இல்லை. மத்திய அரசுதான் இதைச் செய்ய வேண்டும். மத்திய அரசுக்கு நாம் பரிந்துரை செய்திருக்கிறோம். முடிவு செய்யவேண்டியது மத்திய அரசுதான்.

உள்ளபடியே சமூகத்தில் பின்தங்கிய நிலையில், பல நூற்றாண்டு காலமாக இருப்பதால், பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களாக இருக்கிறார்கள். அதற்கு அடிப்படைக் காரணமே, சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு சலுகைகள் மறுக்கப்பட்டவுடனேயே அவர்களுக்கு எல்லாவற்றிலும் பின்தங்கிய நிலை வந்துவிட்டது. கல்வி வசதி போய்விட்டது. எப்போது கல்வி வசதியும் போய், சமுதாயத்திலும் பின்தங்கிவிடுகிறார்களோ அப்போதே பொருளாதார வசதியும் போய்விடுகிறது. அப்படி யாரும் எதிர்பார்க்கவும் முடியாது. ஒன்றிரண்டு நூற்றாண்டு காலமாக இருந்தால் பரவாயில்லை. பல நூற்றாண்டுகளாக அப்படி இருந்து வருவதால்தான், அந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளபடியே, தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்பது குறித்து வெள்ளையர்கள் ஆண்ட காலத்தில் ஏற்பட்ட கணக்குதான் உண்மையானதாக இருக்கும். இப்போது கணக்கு எடுப்பது ரொம்ப கடினம். எல்லா சமுதாயத்திலும் இன்ஜினியர்களும்



1983 ஏப்ரல் 21] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

டாக்டர்களும் வந்துவிட்டார்கள். உண்மையிலேயே சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டிருக்கிறவர்களை அடையாளம் காணக்கூடிய அளவுக்கு, வெள்ளையர்கள் போட்ட லிஸ்டோடு நின்றிருந்தால், நமக்கு எவ்வளவோ நன்றாக இருந்திருக்கும். அது நிற்காமல், எந்த அரசாங்கமோ செய்த தவறை, தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் செய்து கொண்டேயிருந்ததால்தான், இந்தச் சங்கடம் வந்திருக்கிறது. எலக்ஷன் என்று ஒன்று வந்து, அதில் எல்லோருடைய தயவும் எல்லோருக்கும் வேண்டுமென்று வந்துவிட்டதாலும், அதிலே ஆக்கம் பெற்றவர்கள், ஆதிக்கம் பெற்றவர்கள் எல்லாம் இருந்ததாலும், பல சமுதாயங்களைச் சேர்க்கச் சேர்க்க, உண்மையான சமுதாயத்தைப் பார்க்க முடியாத அளவுக்கு (ஹிஸ்டாரிகல் பிளண்டர்) வரலாற்றில் தவறு ஏற்பட்டதன் காரணமாக, இந்த நிலை ஏற்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினார்கள். அந்த நிலை மட்டும் இல்லாமல் இருந்தால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெள்ளையர்கள் எழுதிய கெஜட்டுகளில் கொடுத்திருக்கிற கணக்குதான் உள்ளபடியே அப்போது இருந்த நிலை. பிரிட்டிஷார் கல்வி வசதி தந்த பிறகு, சாதாரண மக்களும் படிக்க ஆரம்பித்து, அதன்பிறகு தாழ்த்தப்பட்டவர்கள், பின்தங்கியவர்கள் கிருஸ்தவ மதத்தைத் தழுவி அவர்களும் படிக்க ஆரம்பித்து, படிப்படியாக பாளையங்கோட்டை திடீரென்று வந்து, அது தென்னாட்டு ஆக்ஸ்போர்டு என்று சொல்கிற அளவுக்கு வளர்ந்ததற்குக் காரணம் இந்தச் சூழ்நிலைகள்தான். அதற்குப் பிறகு பட்டியலில் யாரையும் சேர்த்திருக்கக்கூடாதுதான். அப்படிச் சேர்த்துக் கொண்டே போகும்போது, எங்களையும் சேருங்கள் என்று இன்னும் 28 சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் விண்ணப்பம் தந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, பல சங்கடங்கள் இருக்கின்றன. சேர்த்ததை எடுத்தாலும் தகராறு. புதிதாக ஒருவரை நுழைந்தாலும் தகராறு. இரண்டு பேருக்கும் இருக்கிற பங்கு குறைந்துபோய்விடும் என்ற அச்சம் இருக்கும். இவ்வளவையும் சேர்த்து ஆராய, இங்கே குழு அமைக்கப்பட்டுள்ளது.

இப்போதுகூட முதலமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நடைபெற்றபோது, தென்னக முதலமைச்சர்கள், குறிப்பிட்ட சில முதலமைச்சர்களைத் தவிர, பல முதலமைச்சர்கள் மண்டல் குழு அறிக்கைக்கு ஆக்கம் தராமல், அந்தந்த மாநில மக்களின் ஆதரவைப் பெற வேண்டுமென்று எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். ஏன் இந்த நிலை வந்திருக்கிறது என்றால், மண்டல் குழுவினர் அந்த அளவுக்குச் சொல்லியிருக்கிறார்கள். திரு. தாமோதரன் அவர்கள் பஞ்சாபில் பிற்பட்ட வகுப்பினருக்கு 3 சதவீதம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள்

என்று சொன்னார். மூன்று பர்சென்ட் தான் கிடைக்கிறது. ஆனால் 50 சதவீதத்துக்கு மேல் பிற்பட்டவர்கள் இருப்பதாக மண்டல் கமிஷன் கணக்கு இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில், 54 சதவீதம் இருப்பதாக மண்டல் கமிஷன் அறிக்கை கொடுக்கிறது. தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்களைப் பொறுத்த வரையில் அகில இந்திய கணக்கு, 22 சதவீதம், தமிழகத்தைப் பொறுத்த வரையில் 18 சதவீதம்தான் வருகிறது. உதாரணத்துக்கு ஒன்றைச் சொல்கிறேன். மண்டல் குழு அறிக்கையில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசுக்குத் தெரிவிக்க வேண்டிய அவசியம் வந்தபோது, மண்டல் குழுவினர் என்ன சொல்கிறார்கள் என்றால், 22 சதவீதம் பழங்குடிகளுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கிவிட்டால், உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பின் படி, 49 சதவீதம் என்று கழித்துவிட்டால், மிச்சம் இருப்பதில் 27 சதவீதம் தான் கொடுக்க முடியும். ஆகவே 50 சதவீதம் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கவேண்டிய நியாயம் இருந்தாலும், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு அடிப்படையில் பார்த்தால், 22 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒதுக்கியது போக, மீதி இருக்கும் 51 சதவீதத்தில் 27 சதவீதம்தான் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு ஒதுக்க முடியும். ஆகவே, எல்லா மாநிலங்களும் குறைந்தது 25 சதவீதமாவது பிற்பட்ட மக்களுக்கு ஒதுக்க வேண்டுமென்ற சிபாரிசை மண்டல் குழு தெரிவித்திருக்கிறது. நாம் 50 சதவீதம் கொடுத்திருக்கிறோம். கர்நாடகமும் கொடுத்திருக்கிறது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், மத்திய அரசு, கிளாஸ்-1 அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில், மண்டல் குழு கணக்குப்படி, இந்தியா பூராவும் 11,707 பேர்கள் இருக்கிறார்கள். இதில் பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்டவர்களாக இருப்பவர்கள் வெறும் 840 பேர்தான். பிற்பட்ட வகுப்பினர் என்று இருப்பது 303 பேர். மற்றைய முற்போக்கு வகுப்பினர் என்று கருதப்படக்கூடியவர்கள், அகில இந்திய சர்வீசில் 10,564 பேர்கள் இருக்கிறார்கள். சதவீதக் கணக்குப்படி பார்த்தால், பழங்குடி மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், 7.18 சதவீதம் என்றும், பிற்பட்ட வகுப்பிற்கு 2.59 சதவீதம் என்றும், மற்றவர்களுக்கு 90.23 சதவீதம் என்றும் போயிருக்கிறது. கிளாஸ்-1 சர்வீசுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது இப்படி. ஆகவேதான் இந்த அநியாயம் ஏற்பட்டிருக்கிறது. பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு செய்யாமல் இருந்தால்தான், இந்தக் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது என்று புள்ளி விவரங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன.



அதேமாதிரி, கிளாஸ் 2 ஐ எடுத்துக்கொண்டால், இந்தியா பூரா
43,800 பேர்கள் இருப்பதில், தாழ்த்தப்பட்டவர்கள் 5,955 பேர்க
பிற்பட்டவர்கள் 1,842 பேர்களும், முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவ
36,706 பேர்களும் என்று இந்தக் குழு சுட்டிக்காட்டியிருக்கிறது. சத
கணக்கில் பார்த்தால், தாழ்த்தப்பட்டவர்கள் 13.66 சதவீதம், பிற்பட்டவ
3.98 சதவீதம், மற்றவர்கள் 82.36 சதவீதம் வருகிறது என்று அந்தக் கமி
சுட்டிக் காட்டுகிறது.

கிளாஸ் 3 மற்றும் கிளாஸ் 4-ஐ எடுத்துக்கொண்டால், மொத்தம் உ
17,829 இடங்களில் தாழ்த்தப்பட்ட-பழங்குடி மக்கள் 5,328 பேர்களுக்குத்
கிடைத்திருக்கிறது. இது 30.95 சதவீதமாகும். பிற்பட்டவர்கள்
பேர்கள் இருப்பது, 8.41 சதவீதமே ஆகிறது. முற்போக்குப் பட்டிய
இருப்பவர்கள் 10,851 பேர்கள் இதில் அடங்குவதால் அவர்கள் சதவீதம்
ஆக உயர்ந்திருக்கிறதையும் அந்தக் கமிஷன் சுட்டிக் காட்டியிருக்கிறது.

இதுபோல் ஒவ்வொரு துறைக்கும், தனியார் துறைக்கும், பொதுத் து
நிறுவனங்களுக்கும் இதுமாதிரி கணக்கு கொடுத்திருக்கிறார்கள். இ
காரணத்தை வைத்துத்தான் சமூக நீதி வழங்கப்படவில்லை என்று மண்
குழுவினர் சொல்லியிருக்கிறார்கள். இது நடைமுறைப்படுத்தப்பட வேண்
ஒன்று என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை
மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன மாதிரி, அவர்களுக்கு ஓரளவு சலு
அளிப்பதன் காரணமாக, படிக்கவே தெரியாத தலைமுறையினருக்
சலுகைகள் தந்து, அதன் மூலம் ஒருவருக்குப் படிக்க வாய்ப்பு அளி
வேலை வாய்ப்பு அளித்து, அடுத்த தலைமுறை, அடுத்த தலைமுறை எ
அவர்களுக்கு எவ்வளவு வாய்ப்பு அளித்தால், எவ்வளவு வசதி அளித்த
விரைவாக முன்னேற முடியுமோ அந்த அளவுக்கு சில புள்ளி விவரங்க
இங்கே குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டு, அதாவது 1982—

(பிற்பகல் 7.50)

அண்ணா தொழில் நுட்பப் பல்கலைக் கழகத்தைப் பொறுத்த வரை
மாணவர்கள் சேர்க்கை விவரத்தை மட்டும் இங்கே தெரிவிப்பது நல்லது எ
கருதுகிறேன். அந்தப் பல்கலைக் கழகத்தில் மொத்தம் இருக்கிற இ
களின் எண்ணிக்கை 279, இந்த 279 இடங்களுக்கு விண்ணப்பம் செய்
களின் எண்ணிக்கை 4,752. இதில் பழங்குடியினர் மற்றும் ஆதி திராவிடர்
50 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது 18 சதவீதம் (
அந்த வகுப்பைச் சார்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அடு
பிற்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்பட்டவர்கள் என்ற வகையில் இர...

மாகச் சேர்ந்து மொத்தம் 170 பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். அதாவது 61 சதவீதம் பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். 50 சதவீதம் தான் இந்தப் பிரிவினருக்கு என்று நாம் ஒதுக்கியிருந்தாலும்கூட, ஓப்பன் காம்படிஷன் என்ற வகையில் அதிலும் தங்களின் திறமையைக் காட்டி வெற்றி பெறுகிற சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, அதிலே 11 பேருக்கு இடம் கிடைத்திருக்கிறது. ஆக 50 பிளஸ் 11 என்று வரும்போது 61 சதவீதம் பேர் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். மற்ற சமுதாயத்தைச் சார்ந்தவர்களில் 21 சதவீதம் பேருக்கு இடம் கிடைத்திருக்கிறது. மற்ற பிரிவினருக்கு நாம் 32 சதவீதம் கிடைக்க வேண்டும் என்று எண்ணினாலும், 21 சதவீதம் தான் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது. இதை நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு அரசு தொடர்ந்து கொடுத்துவரும் சலுகைகள் காரணமாக, ஊக்கம் காரணமாக இன்றையதினம் அதிகமான இடங்களைப் பெறும் அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்.

விண்ணப்பம் செய்வதற்கு மொத்தத்தில் 70 சதவீதம் மார்க் வாங்கியிருக்க வேண்டும் என்று விதி செய்கிறோம். எனவே 70 மதிப்பெண்களுக்கு மேலும் வாங்கியவர்கள்தான் இடம் கோரி விண்ணப்பிக்கிறார்கள். அப்படி விண்ணப்பித்தவர்களிலும் 70 முதல் 75 சதவீதம் மார்க் வாங்கியவர்களில் ஒருவருக்குக் கூட இடம் கிடைக்கவில்லை. நான் சொல்லும் இந்த விவரம் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களைப் பற்றியதாகும். இந்த அடிப்படையில் பார்க்கும்போது, 70 முதல் 75 சதவீத மார்க் வாங்கிய மொத்த பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 400 ஆக இருந்தும் அதில் ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதைப்போலவே அதற்கு அடுத்த நிலையில் 75 முதல் 80 மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களிலும்—அவர்களின் மொத்த எண்ணிக்கை 579—ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதுமட்டுமல்ல, அதற்கும் மேலே 80 முதல் 85 சதவீத மதிப்பெண்களைப் பெற்ற பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் எண்ணிக்கை 608 ஆகும். அப்படிப்பட்டவர்களிலும் ஒருவர்கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அடுத்து, 85 முதல் 90 சதவீத மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 431. அதிலும் ஒருவர்கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை. அடுத்து பிற்பட்டவகுப்பு மாணவர்களில், 90 முதல் 95 சதவீத மதிப்பெண்கள் பெற்றவர்களின் எண்ணிக்கை 275. அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 97. இறுதியாக 95 முதல் 100 மதிப்பெண்கள் வரை பெற்ற மாணவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 77. என்றாலும்



அதில் 4 பேர் 'ஆப்சென்ட்' ஆன காரணத்தால் 73 பேர் மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 275 பேரில் 94 சதவீதத்திற்கும் அதிகமாக மார்க் வாங்கிய 97 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு தொடர்ந்து பல ஆண்டுகளாக அளித்து வரும் சலுகைகள் காரணமாக, இன்றையதினம் 90 லிருந்து 95 சதவீத மதிப்பெண்களைப் பெறுகிற அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பிற்பட்டவர்களாக இல்லாத மற்றவர்களைப்பற்றிய கணக்கைப் பார்த்தால், அதாவது முற்போக்குச் சமுதாயத்தைச் சார்ந்தவர்களைப் பொறுத்த வரையில், 70 முதல் 75 சதவீத மதிப்பெண்களைப் பெற்ற மாணவர்களில் ஒருவருக்குக் கூட இடம் அளிக்கப்படவில்லை. மொத்தம் அந்த நிலையில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 758. அடுத்து 75 முதல் 80, 80 முதல் 85, மற்றும் 85 முதல் 90 மார்க்குகள் வாங்கியவர்களுக்கு யாருக்கும் இடமில்லை. 90 முதல் 95 மார்க்குகள் வாங்கிய மாணவர்களில் ஒருவருக்கும் தேர்வு அளிக்கப்படவில்லை. முற்போக்கு சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்களில் 95 முதல் 100 மார்க் வாங்கியவகையில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 110 பேர். இப்படி 110 பேர் தகுதி படைத்திருந்தும் அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 59 தான். அதாவது 98 சதவீதம் மார்க் வாங்கியவர்களில்—110 பேரில் 59 பேர்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மற்றவர்கள் விடுபட்டுப் போனார்கள். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர் ஒருவர் 95 மார்க்கையும் தாண்டி இருக்கிறார். 90 முதல் 95 வரை மார்க் வாங்கியவர்களில் 9 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் இருக்கிறார்கள். அதைப்போலவே 85 முதல் 90 வரை மார்க் வாங்கியவர்கள் 16 பேர் இருக்கிறார்கள். அப்படி ஓப்பன் காம்படிஷன் மூலமாகக் கூட அவர்கள் இன்றைக்குத் தேர்வு பெற முடியும் என்ற தன்மை ஏற்பட்டிருக்கிறது. அவர்களில் 345 பேர் விண்ணப்பித்திருந்தாலும், ஒரு சில குறிப்பிட்டவர்களை மட்டும் தான் இன்றைக்கு எடுக்க முடிந்திருக்கிறது. முன்பெல்லாம் மினிமம் மார்க் வாங்கியவர்கள் யார் வந்தாலும் சேர்த்துக் கொள்ளப்படுவது என்ற நிலைமை மாறி, இன்றைக்கு அவர்களே ஓப்பன் காம்படிஷனுக்கும் போகிறார்கள் என்ற நிலைமை வந்திருக்கிறது. அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட பர்சென்டேஜுக்குரிய முறையில் ஆட்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்குப் பிறகும் நிறைய பேர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள் என்ற அளவுக்கு நிலைமைகள் வளர்ந்திருக்கின்றன. எப்படிச்

சலுகைகள் கொடுக்கக் கொடுக்க அந்தச் சமுதாயம் வளர்ந்து வந்திருக்கிறது என்றும், இன்னும் வளர்ந்து கொண்டிருக்கிறது என்றும் புரிந்துகொள்வதற்காக நான் இதைச் சொல்ல முன்வருகிறேன்.

1970—71 ஆம் ஆண்டில் விண்ணப்பித்தவர்களில் 40 பேர்கள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அதாவது 3.70 சதவீதம்தான் ஆட்களே கிடைத்தார்கள். அப்போது 16 சதவீதம் இட ஒதுக்கீடு செய்திருந்தபோதும், 4 சதவீதம் பேருக்குத்தான் கிடைத்தது. அதைப்போலவே 1976—77 ஆம் ஆண்டில் 18 சதவீதம் ஒதுக்கீடு செய்திருந்தாலும்கூட, கிடைத்தது 11 சதவீதம்தான். வந்தவர்கள் அத்தனை பேரையும் எடுத்துக்கொண்டோம். என்றாலும் அது 11.4 சதவீதம் அளவுக்குத்தான் வந்தது. 1978—79 ஆம் ஆண்டில் 18.1 சதவீதம் அளவுக்கு வந்தார்கள். 1982—83-ல் 18 சதவீதம்தான் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், 19 சதவீதம் அளவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் ஓப்பன் காம்படிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 259, தாழ்த்தப்பட்டவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் மட்டும் 1,069, அதில் 19 சதவீதம் அதாவது 259 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு, மற்றவர்கள் ரிஜெக்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அந்த அளவுக்கு 60, 70 சதவீதம் மார்க் வாங்குகிற அளவுக்கு அந்த வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் முன்னேறியிருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகவே நான் இதை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

பிற்பட்டவர்களைப் பொறுத்த வரையில், 1970—71 ஆம் ஆண்டில் 41 சதவீதம்தான் கிடைத்தது. ஆனால் இன்றையதினம் 1982—83-ல் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்கள் 853. அதனுடைய பர்சென்டேஜ் பார்த்தால் 62 சதவீதம் ஆகும். ஆனால் விண்ணப்பித்தவர்கள்—அதாவது எல்லாத் தகுதிகளோடும்—விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை அதிகம். 4,399 பேர், 80, 85 மார்க் வாங்கியவர்களாக இருக்கிறார்கள். அதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 853. அதாவது 62 சதவீதம்.

மீனவர்கள் வீட்டுப் பிள்ளைகள் அந்த அளவுக்கு வாங்க முடியுமா என்ற நிலை வரும்போது, ஒரு சில குறிப்பிட்ட வகுப்பைச் சார்ந்தவர்களே இந்த இடங்களைப் பெற்றுச் சென்று விடுகிறார்கள் என்றும் புகார் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி, ஒட்டுமொத்தமாகப் பிரித்துக் கொடுப்பதால், உண்மையிலேயே ஏழைகளாக இருப்பவர்களுக்கு இடம் கிடைக்காமல், அந்தச் சமுதாயத்திலேயே பணக்காரர்களாக இருப்பவர்களுக்கே போய்விடுகிறது என்ற நிலை இருக்கிறது. ஓரளவுக்கு அப்படித்தான் போயிருக்கிறது. எல்லோரையும் வசதி படைத்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. இதிலும் ஏழை எளியவர்களாக இருந்து உயர்ந்த அளவுக்கு மார்க் வாங்கியவர்கள்கூட ஏராளமாக இருக்கிறார்கள். இதன் காரணமாகவே நான அம்பாசங்கர் குழுவுக்கே ஒரு யோசனையைத் தெரிவிக்கலாமா என்றுகூட யோசித்தேன். தற்போது பிற்பட்ட வகுப்பினருக்கு என்று 50 சதவீத இடங்களை ஒதுக்கியிருக்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே சட்டநாதன் குழு தன் அறிக்கையைத் தருவதற்கு முன்னால் ஏறத்தாழ 270-க்கும் மேற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் பிற்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர் சில பல தலைப்புகளைக் கொடுத்து, பிற்பட்டவர்கள் பட்டியலில் சுமார் 177 பிரிவினரை மட்டும் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள். இந்த 177 பிரிவினரிலும் மிகவும் பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு வன்னியகுலத்தைச் சார்ந்தவர்கள், மீனவர்கள், குயவர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழில் செய்பவர்கள், போயர்கள் போன்று ஒரு 39 பிரிவினர் வருகிறார்கள்.



(பிற்பகல் 8-00)

ஆகவே நான் இந்தக் குழுவினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இந்த 39 சமுதாயத்தினரில் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களுடைய எண்ணிக்கையை ஓரளவிற்குக் கணக்கிட்டு அந்த 50 சதவீதத்தில் இந்த 39 சாதியினரில் மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு இவ்வளவு சதவீதம் என்று ஒதுக்கிவிட்டு மீதியை மற்ற பிற்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கலாமா என்று ஆராய்ந்து சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறேன். இது சட்டத்திற்கு உட்பட்டு வருகிறதா என்பதையும் யோசிக்கும்படி நான் கேட்டிருக்கிறேன். இப்போது ரிசர்வேஷன் மூன்று தட்டாக இருந்தாலும், அதை நான்கு தட்டாக மாற்றவிருக்கிறோம். நான்கு தட்டாக மாற்றுகிறபோது, தாழ்த்தப்பட்ட பழங்குடியினர், மிகவும் பிற்பட்டவர்கள், பிற்பட்டவர்கள், மற்றவர்கள் என்ற அளவிற்கு ஓரளவிற்கு நியாயமான முறையில் எடுத்துக்கொண்டு போகலாம். அந்த அடிப்படையிலே யோசிக்கும்படி சொல்லியிருக்கிறோம்.

அம்பாசங்கர் குழுவைப்பற்றிச் சொன்னார்கள். சட்டநாதன் குழுவிலே மூன்று பேர் இருந்தார்கள். ஐந்து பேர்களுக்கு மேலே போகக் கூடாது என்பது என்னுடைய எண்ணம். மூன்று பேர் போட்டபோது இரண்டு பேர் "டிசன்டிங் நோட்" (Disenting note) எழுதிவிட்டார்கள். அதே

போல மண்டல் குழுவில் ஆறு பேர்களில் சிலர் டிசன்டிங் நோட் எழுதியிருக்கிறார்கள். மூன்று பேர் போட்டதிலேயே இரண்டு பேர் டிசன்டிங் நோட் எழுதியிருக்கிறார்கள் என்றால், 18 பேர் என்ன செய்யப் போகிறார்களோ என்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. இருந்தாலும் கட்சி அடிப்படையிலே, சாதி அடிப்படையிலே நிலைமைகள் இல்லை. மேலும் நாம் சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்கிணங்க செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்றால், 31-ஐ 50 ஆக உயர்த்தியபோது என்ன எண்ணிக்கையை வைத்து அப்படி உயர்த்தியிருக்கிறீர்கள் என்று கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்த எண்ணிக்கையை எங்கே கண்டுபிடிப்பது? நாம் கண்டுபிடித்துப் போவதற்குள் அடித்து தாக்கிவிட்டு விடுவார்களோ என்று நினைத்து, நாங்கள் மறுபடியும் ஒரு கமிஷனைப் போட்டு ஆராய்ந்து பார்க்கிறோம் என்று சொன்னவுடனே நல்லவேளையாக நீதிபதி அதை ஏற்றுக் கொண்டு கமிஷன் போட்டு ஆராய்ந்து முடிவை அறிவியுங்கள் என்று சொல்லி கேசை டிஸ்போஸ் செய்திருக்கிறார்கள். ஆகவே கமிஷன் போட்டு ஓராண்டுக்குள் ரிப்போர்ட் வாங்க வேண்டும். அதன் மேல் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே இந்தக் கமிஷனைப் போட்டு அவர்களிடமிருந்து அறிக்கையை வாங்கி அதன் அடிப்படையில் நியாயமான நடைமுறையில் இந்த அரசு செய்ய வேண்டும். அப்படி செய்யத் தவறிவிட்டால், 1—1—1985 அன்று மறுபடியும் 31 சதவீதமாகப் போகும், அந்த ஒன்பது ஆயிரம் ரூபாய் என்கிற வருமான வரம்பு வந்து நிற்கும், இந்த இரண்டு உத்தரவுகள் வந்து நின்றுவிடும் என்று சுப்ரீம் கோர்ட்டில் ஜட்ஜ்மெண்ட் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே நானும் ஒரு வருஷத்திற்குள் ரிப்போர்ட் கொடுங்கள் என்று கேட்டிருக்கிறேன். நல்லவேளையாக ரிப்போர்ட்டைத் திருப்பி எங்களிடம் கொடுங்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. ரிப்போர்ட் வாங்கி அதை அமுல்படுத்த வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த கண்டிஷன்களையெல்லாம் ஆலோசனை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறோம்.

நேரம் அதிகமாகிவிட்டதால் இன்னும் ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன். தமிழ்நாடு பிற்பட்டோர் மேம்பாட்டுக் குழுவைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். உள்ளபடியே மிகவும் பிற்பட்டவர்களாக விளங்குகிறவர்களுக்கு நாம் கல்விச் சலுகையையும் வேறு பல இட ஒதுக்கீடு சலுகையையும் அளித்தால், அதன்மூலம் பொருளாதாரத்திலே அவர்கள் உயர வழி இருக்கிறது, அதற்கு உறுதுணையாக இருக்கும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் பிற்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் 16—11—1981-ல் பதிவு செய்யப்பட்டது. 25—2—1982 முதல் இயங்கி வருகிறது. 25—2—1982



அன்று இதற்குத் தலைவரும், மேலாண்மை பொறுப்பாளரும், கமிட்டி உறுப்பினர்களும் போடப்பட்டார்கள். இதனுடைய நோக்கம் பிற்பட்ட குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்கள் பொருளாதார மேம்பாடு பெற தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி, மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் கடன் உதவித் தொகை அளித்து ஊக்குவிக்க வேண்டும் என்பதுதான். ஆண்டு வருமானம் ரூபாய் ஐந்தாயிரத்திற்கு உட்பட்டவர்களுக்கு இந்தத் திட்டம் பயன்படும் என்று எடுத்துச்சொல்லி, ஆண்டு வருமானம் ரூபாய் ஐந்தாயிரத்திற்குக் குறைந்த வருமானம் உடைய பிற்பட்ட குற்றப் பரம்பரையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு இந்தச் சலுகை கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொழில் துவங்கும் முதலீட்டுத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கை மேம்பாட்டுக் கழகம் அளிக்கும். அதிகப்படியாக ஐந்தாயிரம் ரூபாய் ஒருவருக்குக் கடனாகத் தந்தால் அவர்கள் வங்கிகள் மூலமாக மேலும் 20 ஆயிரம் ரூபாயை வாங்கி, ஆகமொத்தம் 25 ஆயிரம் ரூபாய் வாங்கி, கூட்டுறவுச் சங்கங்களாக வைத்துக்கொண்டு கூட்டுறவுத் தொழில் முயற்சியில் இருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சங்கத்திலும் குறைந்தது 10 உறுப்பினர்களாவது இருக்க வேண்டும் என்றும், அதிகபட்சமாக ஐந்தாயிரம் ரூபாய், நான்காயிரம் ரூபாய், மூன்றாயிரம் ரூபாய், ஆயிரம் ரூபாய் என்று அந்தந்த மாவட்டத்தில் உள்ள தொழில்களுக்கேற்ப கொடுத்து அவர்கள் தொழில் செய்து பிழைக்க வழி செய்திருக்கிறோம். காதி கிராமத் தொழில், மற்றும் தொழில் துறை, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியவர்களைக் கலந்து ஆங்காங்கு இருக்கின்ற நிலைமைகளுக்கேற்ப ஆராய்ந்து திட்டம் கொண்டு வர வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இதிலே சேருகிற ஒவ்வொருவரும் ஷேர் காபிட்டலாக (share capital) 12 ரூபாய் போட வேண்டும், நுழைவுக் கட்டணமாக 50 காசுகள் தர வேண்டும் என்றும் ஆகமொத்தம் ரூபாய் 12.50 கொடுத்தால் போதும், அவர்கள் பெயரில் 25 ஆயிரம் ரூபாய் தருகிறோம் என்ற அளவிற்குக் கூறியிருக்கிறோம். இதற்கு நான்கு சதவீத வட்டி. அவர்கள் ஓராண்டிற்குள் இதைத் திருப்பிச் செலுத்தத் தேவையில்லை. தேவைப்பட்டால் ஓராண்டுக்கு மேலும் காலம் கேட்டுப் பெறலாம் என்ற விதிகளை வைத்து, இந்த ஆண்டு மட்டும் 20 இலட்சம் ரூபாய் அதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அந்தந்தப் பகுதிகளில் தாராளமாக உதவி செய்ய முன்வந்துள்ள வங்கிகள் மூலம், கூட்டுறவு வங்கிகள், கனரா வங்கி, இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகியவற்றின் மூலம் ரூ. 80 இலட்சம் இந்த ஆண்டு மட்டும் பெற்று, ஆகமொத்தம் ஒரு கோடி ரூபாயில் இராமநாதபுரம் போன்ற ஐந்து மாவட்டத்திலே ஐந்து கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கவிருக்கிறோம். மதுரை மாவட்டத்திலே நாம் நான்கு இலட்சம் ரூபாய்

தருகிறோம், வங்கி 16 இலட்சம் ரூபாய் தருகிறது. ஆகமொத்தம் 20 இலட்சம் ரூபாய். இராமநாதபுரம் மாவட்டத்திலே நாம் ஐந்து இலட்சம் ரூபாய் தருகிறோம். வங்கிகளிலிருந்து 20 இலட்சம் ரூபாய், ஆகமொத்தம் 25 இலட்சம் ரூபாய். நெல்லை மாவட்டத்தில் நான்கு இலட்சம் ரூபாயை நம் கழகம் தருகிறது, 16 இலட்சம் ரூபாயை வங்கிகள் தருகின்றன. ஆகமொத்தம் 20 இலட்சம் ரூபாய். புதுக்கோட்டையில் நான்கு இலட்சம் ரூபாய் கழகம் தருகிறது, 16 இலட்சம் ரூபாயை வங்கிகள் தருகின்றன. ஆகமொத்தம் 20 இலட்சம் ரூபாய். செங்கை மாவட்டத்தில் மூன்று இலட்சம் ரூபாயை நாம் கொடுக்கிறோம், 12 இலட்சம் ரூபாயை வங்கி கொடுக்கிறது, ஆகமொத்தம் 15 இலட்சம் ரூபாய். ஆகமொத்தம் ஒரு கோடி ரூபாய் திட்டத்திலே கிட்டத்தட்ட மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ஏழு, எட்டு ஆண்டுக் காலத்திற்குப் பிறகு அவர்கள் திருப்பிச் செலுத்துகிற அளவிற்குச் சலுகை தந்து அவற்றை 'மேனேஜ்' செய்ய வேண்டிய ஆட்களை நாமே போட்டு, மேற்பார்வை செய்து, பிறகு அவர்களுக்கே அந்தத் தொழில் கூடங்களைச் சொந்தமாக்குவதன் மூலமாக, வேலை வாய்ப்பை உருவாக்க இருக்கிறோம். இதற்காக பத்து கோடி ரூபாயை வைப்பு நிதியாக ஒரு வங்கியில் வைத்தால், அதிலிருந்து வரும் ஒரு கோடி ரூபாய் வட்டியைப் பெற்று, மேலும் நான்கு கோடி ரூபாயை வங்கிகளிடத்திலேயிருந்து பெற்று ஒவ்வொரு ஆண்டும் ஐந்து கோடி ரூபாயைச் செலவழிக்கும். இந்தத் திட்டத்தைப் பரவலாக ஆக்கினால் ஏழு, எட்டு ஆண்டுகளில் அவர்கள் ஓரளவிற்கு நிரந்தரமான ஊதியத்தைப் பெற்று வாழ்க்கையை நடத்திச் செல்லும் அளவிற்கு 500, 600, 700 ரூபாய் பெறக்கூடும் என்ற அடிப்படையில் இத்திட்டம் இப்போது ஐந்து மாவட்டங்களில் துவக்கப்பட்டிருக்கிறது. இன்னும் மீதமுள்ள மாவட்டங்களில் 1983-84 ஆம் ஆண்டில் துவக்கலாம் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து நடைமுறைப்படுத்துகிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறிய பல கருத்துக்களையெல்லாம் அரசு ஆராய்ந்தறிந்து அதன்மீது தக்க முடிவுகள் எடுக்கும். இப்படிப்பட்ட பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களுக்கு மன்ற உறுப்பினர்களுடைய ஆதரவும், ஒத்துழைப்பும் தொடர்ந்து இருக்க வேண்டும். நாம் யாருக்காகச் செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ அவர்களுக்குப் போய்ச் சேர்வதற்கான முறையில் அதிகாரிகள் காரியங்களை மேற்கொள்ள வேண்டும், கண்காணித்துச் செய்ய வேண்டிய பொதுமக்களும் ஒத்துழைப்பு தர வேண்டும். இந்த நிலைமைகள் ஏற்படுமானால், தமிழகம் பலவகைகளில்





எடுத்துக்காட்டாக இருப்பது போன்று, இந்த வகையிலும் எடுத்துக்காட்டாக இருந்தால், பிற மாநிலங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் அமையும். அந்த வகையிலே சீரிய கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து இந்த அளவில் முடித்துக்கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, அவை மீண்டும் நாளை 22—4—1983 வெள்ளிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 8-09)

## இணைப்பு I

[489 ஆம் பக்கத்தில் இனம் 2(2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

தஞ்சை மாவட்டம் சீர்காழிப் பகுதியில் கீழ் மூவக்கரை கிராமத்தில் சரியான முறையில் சமைக்கப்படாத மீன் அருந்தியதால் காலரா நோயால் ஐவர் (5) பாதிக்கப்பட்டு அதில் இருவர் இறந்துள்ளனர். முதலில் இந்நோய் தோன்றிய தேதி 22—3—1983. கடைசியாகத் தோன்றிய தேதி 25—3—1983. இறந்துபோன இருவரில் ஒருவரின் வயது ஐந்து மற்றவர் வயது 60. இக்கிராமத்தின் மக்கள் தொகை 1,500. நோயால் பாதிக்கப்படவாய்ப்புள்ளவர்கள் 560. 428 பேருக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட வீடுகளில் பூச்சி கொல்லி மருந்து தெளிக்கப்பட்டுள்ளது. நன்றாகக் காய்ச்சிய நீரைக் குடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பேதி ஏற்பட்டால் உடலில் நீர் வற்றியதை ஈடு செய்ய காய்ச்சி குளிர் செய்யப்பட்ட நீரில் ஒரு கரண்டி சர்க்கரையும் ஒரு சிட்டிகை உப்பையும் கலந்து (Oral Rehydration Salt) குடிக்க வேண்டியதென்றும் அதன்பின் மருத்துவம் செய்ய வேண்டுமென்றும் பொது மக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. பொது சுகாதாரத்துறை ஊழியர்கள் இப்பகுதியை கண்காணிப்பில் வைத்து உள்ளார்கள். இக்கிராமத்தில் தற்போது இந்நோய் இல்லை.

**தென்னாற்காடு மாவட்டம், பாக்கம் கிராமம்.**

இக்கிராமத்தில் 7—1—1983 முதல் 20—1—1983 வரை கடும் குடல் அழற்சி நோயால் ஏழு பேர் பாதிக்கப்பட்டு அதில் மூவர் இறந்து விட்டனர். இந்தக் கிராமத்திலுள்ள அனைத்துக் குடிநீர் நிலையங்களிலும் குளோரின் கலக்கப்பட்டுள்ளது. இந்தக் கிராமத்தின் மக்கள் தொகை 4,006. இவர்களில் 2,382 பேருக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. நன்றாகக் காய்ச்சிய நீரைக் குடிக்க வேண்டியதன் அவசியத்தையும் முறையாகச் சமைக்கப்பட்ட உணவை உண்ண வேண்டிய அவசியத்தையும் பேதி ஏற்படின் உடலில் நீர் வற்றுதலை தடுக்கும் (Oral Rehydration) முறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. தற்போது இப்பகுதியில் இந்நோய் இல்லை.



தமிழ் நாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சியின் காரணமாக நீர் நிலையங்களில் நீர் வற்றி இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைச் சுட்டிக் காட்டி அவைகளைத் தடுக்க என்ன என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற விரிவான சுற்றறிக்கை ஒன்று பொது சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்து இயக்குநர் அவர்களால் அனைத்து பொது சுகாதார அலுவலர்களுக்கும் நகராட்சி சுகாதார அலுவலருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. வறட்சியின் காரணமாக ஏற்படக்கூடிய சுகாதாரக் கேடுகளிலிருந்து பொது மக்களைக் காக்க வேண்டி, பொது சுகாதார பணிகளுக்கு ரூ. 17 கோடியை இந்த அரசு மைய அரசிடம் கேட்டுள்ளது. தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்திருப்பதாலும் தேவையிருப்பின் மேல் நடவடிக்கை எடுக்கவும் அரசு தயங்காது என்பதாலும் பொது மக்கள் எவ்வித பதட்டமும் அடையத் தேவையில்லை எனவும் கூறிக்கொள்கிறேன்.

## இணைப்பு—II.

(492 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

### பிற்பட்டோர் நலத்துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

பிற்பட்ட வகுப்பினர் நலனுக்காக 1983—84 ஆம் ஆண்டுக்கான ரூ. 10,22,26,000 மானியக் கோரிக்கையை நான் இம்மன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் ஆகியோரின் நலனுக்காக தமிழக அரசு முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றியுள்ள பணிகள் 1983—84 ஆம் ஆண்டில் எடுக்கவிருக்கும் முன்னேற்றப் பணிகள் ஆகிய விவரங்களைக் கீழே தருகிறேன்.

2. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கு முன்புவரை பிற்பட்ட வகுப்பினரின் நலனுக்கான திட்டங்கள் தொழிலாளர் நல ஆணையாளரால் ஆதி திராவிடர் நலம் மற்றும் பழங்குடியினர் நலம் ஆகியவற்றுடன், ஒருங்கே கவனிக்கப்பட்டு வந்தன. பின்னர் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம், காவல் துறையினரால் கவனிக்கப்பட்டு வந்தது. 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளில் ஆதி திராவிடர் நலத்துறை ஏற்படுத்தப்பட்டு, ஆதி திராவிடர்கள், பழங்குடிகள், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர், பிற்பட்டோர் ஆகியோரின் நலன்கள் அத்துறையால் கவனிக்கப்பட்டன. பிற்பட்ட வகுப்பினர், மக்கள் தொகையில் பெரும் பகுதியினர் என்பதன் காரணமாக அவர்களுடைய முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும் வகையில், பிற்பட்டோர் நலத்துறை புதியதாக ஏற்படுத்தப்பட்டு 1969 ஆம் ஆண்டு மே திங்கள் முதல் செயல்பட்டு வருகிறது. அதுவரை ஆதி திராவிடர் நலத்துறையால் கவனிக்கப்பட்டு வந்த பிற்பட்டோர் நலம், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் நலம் தொடர்பான பணிகள் இத்துறைக்கு மாற்றப்பட்டன.

3. இத்துறை இந்திய ஆட்சிப் பணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. மாவட்டங்களில் மே 1974 ஆம் ஆண்டு வரை இத்துறையின் வேலைகளை மாவட்ட நல அதிகாரிகள் கவனித்து வந்தனர். 1974-ம் ஆண்டு மே திங்கள் 17-ம் நாளிலிருந்து துணை ஆட்சியாளர் பதவி நிலையில் மாவட்ட பிற்பட்டோர் நல அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிகாரிகள் மாவட்ட ஆட்சியாளரின் நேரடிப் பார்வையில் பணி புரிகின்றனர்.



பிற்பட்டோர் நலன்களுக்கான திட்டங்களைப் பற்றி ஆலோசனைகளைத் தெரிவிப்பதற்கு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் 'மாநில பிற்பட்டோர் நல ஆலோசனைக் குழு, ஒன்று இயங்கி வருகிறது. இக் குழு 1974-ம் ஆண்டு டிசம்பா திங்களில் திருததி அமைககப்பட்டது. இக் குழுவை மீண்டும் திருத்தி அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது. இதுபோன்று மதுரை மாவட்டத்தில் பிரமலைக்கள்ளர் சமுதாய முன்னேற்றத்திற்கு ஆலோசனை கூற மதுரை மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் ஒரு தனிக் குழு செயல்பட்டு வருகிறது.

4. பிற்பட்டோர் முன்னேற்ற நலனுக்கென 1971—72 முதல் தனியாக மானியக் கோரிக்கை ஏற்படுத்தப்பட்டது. 1967—68-ல் பிற்பட்டோர் வகுப்பினர் நலனுக்காக ரூ. 1,61,40,000 ஆக இருந்த மானியத் தொகை ஆண்டு தோறும் வளர்ந்து 1983—84-ல் ரூ. 10,22,26,000 ஆக எட்டியுள்ளது. இது பிற்பட்டோர் நலனுக்கென அரசு மேற்கொண்டுவரும் தீவிர நடவடிக்கைகளைக் காட்டுகிறது.

5. மேலும் இந்த தனி ஒதுக்கீடு தவிர இம்மாநில அரசு மேற்கொள்ளும் பல்வேறு பொது திட்டங்கள் பிற்பட்ட வகுப்பினர் முன்னேற்றம் கருதியே செயலாக்கப்பட்டு வருகின்றன என்பதை இப்பேரவையில் கூற விரும்புகிறேன். இந்தத் துறையின் முக்கியமான பணிகள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

6. (i) *படிப்பு உதவித் தொகை.*—பிற்பட்ட வகுப்பினைச் சார்ந்தவர்கள் கல்வி கற்க போதிய வசதியின்மையால்தான் பிற்பட்ட நிலைமையில் இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர்கள் எல்லோரும் அறிவர். அவர்களுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு கல்வி மேம்பாட்டிற்கு வழி வகை செய்வது மிக அவசியம். எனவே, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் கல்வி வசதிக்காக படிப்பு உதவித்தொகை மற்றும் உண்டி உறையுள் வசதிகள் அளித்து ஊக்குவிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு ஒன்பதாம் வகுப்பிலிருந்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கு நான்காம் வகுப்பிலிருந்தும் படிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், இந்த இனத்து மாணவர்களுக்கு மூன்றாம் வகுப்பு வரை பாடப் புத்தகங்கள் இலவசமாக கல்வித் துறை மூலம் அளிக்கப்படுகிறது. இந்த உதவித்தொகை பெறுவதற்கு மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்குள் இருக்க வேண்டும். இந்தப் புதிய வருமான வரம்பு 1981—82 ஆம ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

உதவித்தொகை பெற பிற்பட்ட வகுப்பு மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் 40 சதவீதம் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும். ஆனால், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட அனைத்து மாணவர்கள் முந்தைய ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் ஒரு இலட்சம் ரூபாயுடன் 1948—49-ல் தொடங்கப்பட்டு 609 மாணவர்களுக்குப் பயனளித்தது. பின்னர் இத்தொகை 1949—50-ம் ஆண்டில் ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்ந்ததில் 2,908 மாணவர்கள் பயனடைந்தனர். 1960—61-ல் 19,900 மாணவர்களுக்கு ரூ. 41 இலட்சம் செலவழிக்கப்பட்டது.

1981—82-ம் ஆண்டிற்கு முன்பு வரை கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கான உதவித்தொகை சென்னை பிற்பட்டோர் நல இயக்குநரின் நேர்முக உதவியாளராலும், அந்தந்த மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர்களாலும், மதுரை கள்ளர் சீரமைப்பு தனித்துணை ஆட்சியர் அவர்களாலும் வழங்கப்பட்டு வந்தது.

1982—83 ஆம் ஆண்டிலிருந்து அரசு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தை மாற்றி அமைத்துள்ளது. கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு அந்தந்த கல்வி நிறுவனத் தலைவர்களே உதவித்தொகை வழங்குவதற்கான அதிகாரத்தை வழங்கி, பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்றப்பரம்பரை இனத்தைச் சார்ந்த மாணவர்கள் பயிலும் கல்வி நிறுவனத்தாலேயே உதவித்தொகை வழங்க வழிவகை செய்யும் புதிய நடைமுறை அமுலாக்கப்பட்டு செயல்முறையில் உள்ளது. புதிய உதவித் தொகை கோரும் மனுக்களுக்கு தகுதிக்கான அட்டைகளும் இத்துறை அலுவலர்கள் மூலமாக கல்லூரிகளுக்கும் வழங்கப் படுகின்றன. புதிய திட்டத்தின் மூலமாக உதவித் தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது. தகுதியான மாணவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்குவதற்கு கல்லூரி நிறுவனங்களுக்கு முன் வருடம் வழங்கப்பட்ட உதவித் தொகையில் 90 சதவீதம் முதல் தவணையாகவும் இந்தத் துறை மூலமாக வழங்கப்படுகிறது. இது பின்னால் சரிக்கட்டப்படுகிறது.





(ii) கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் படிப்பு உதவித் தொகை வழங்குவதில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் காட்டும்.;— குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டோர் இனத்தவர் எண்ணிக்கை :

| ஆண்டு. | | உயர் நிலைப் பள்ளிப் படிப்பு. | கல்லூரிப் படிப்பு. | ரூபாய் இலட்சங்களில். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1969—70 | .. | 41,361 | 2,828 | 21,16 |
| 1970—71 | .. | 53,769 | 3,173 | 25.55 |
| 1971—72 | .. | 60,614 | 3,805 | 30.85 |
| 1972—73 | .. | 67,772 | 4,638 | 34.29 |
| 1973—74 | .. | 65,876 | 4,338 | 34.38 |
| 1974—75 | .. | 60,661 | 4,673 | 35.66 |
| 1975—76 | .. | 61,845 | 3,964 | 29.64 |
| 1976—77 | .. | 57,026 | 3,985 | 33.65 |
| 1977—78 | .. | 1,10,639 | 4,183 | 29.80 |
| 1978—79 | .. | 1,84,772* | 3,902 | 31.08 |
| 1979—80 | .. | 1,71,486 | 6,939** | 33.60 |
| 1980—81 | .. | 1,65,820 | 6,398 | 35.16 |
| 1981—82 | .. | 1,69,413 | 7,438 | 38.69 |
| 1982—83 | .. | .. | .. | 43.82 (ஒதுக்கீடு) |

இணைப்பு

[1983 ஏப்ரல் 21

இந்த ஆண்டில் 1977—78 ம் ஆண்டும் அடக்கம்.

* இந்த ஆண்டில் 1977—78 ம் ஆண்டு மேல்நிலைப் பள்ளிப் படிப்பு படித்த

** 1978—79 ம் ஆண்டு மேல்நிலைப் பள்ளிப் படிப்பு படித்த

** 1978—79 ம் ஆண்டு உதவித்தொகைகள் —அரசாணை பெறப் மாணவர்களுக்கான உதவித்தொகைகள் 1979—80ம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப் பட்ட பின்னர் 1979—80ம் ஆண்டில்தான் சேர்த்து வழங்கப் பட்டது. ஆதலால் 1979—80ல் பயன் பெற்றோர் எண்ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால் 1980—81ல் அங்ஙனம் உதவித்தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

பிற்பட்ட வகுப்பினர் :

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 1969—70 | 42,515 | 48,050 | 160.89 |
| 1970—71 | 74,842 | 59,407 | 201.20 |
| 1971—72 | 92,694 | 72,281 | 290.50 |
| 1972—73 | 1,04,486 | 87,652 | 324.65 |
| 1973—74 | 94,032 | 80,025 | 318.86 |
| 1974—75 | 88,897 | 86,494 | 331.68 |
| 1975—76 | 90,620 | 71,433 | 317.08 |
| 1976—77 | 80,372 | 78,741 | 295.00 |
| 1977—78 | 1,07,501 | 74,469 | 291.53 |
| 1978—79 | 1,02,490 | 66,341 | 264.83 |
| 1979—80 | 1,02,672 | 1,03,911 | 261.61 |
| 1980—81 | 1,07,073 | 94,456 | 275.49 |
| 1981—82 | 1,10,155 | 1,04,779 | 293.25 |
| 1982—83 | .. | .. | 329.18 (ஒதுக்கீடு) |

குறிப்பு :—

(1) 1977—78-ம் ஆண்டு முதல் பள்ளிக் கல்வி மாணவர் களுக்கான உதவித் தொகை பொருள் வடிவில் அதாவது புத்தக வடிவில் வழங்கப்பட்டது. சிறப்பு மற்றும் தேர்வுக் கட்டணங்கள் நேரிடையாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் செலுத்தப் படுகின்றன.

(2) 1978—79 ஆம் ஆண்டில் இவ்வுதவித் தொகையினால் பயனடைந்தோர் எண்ணிக்கை குறைந்துள்ளது. இதற்குக் காரணம் உதவித்தொகை வழங்க +1, +2 வகுப்புகளைப் பாகுபடுத்த மைய அரசின் விளக்கமும், அரசு ஆணையும் காலம் கடந்து பெறப்பட்டமையாகும்.

(3) 1979—80 ஆம் ஆண்டில் கல்லூரி வகுப்பு மாணவர் களின் எண்ணிக்கை 40,000 ஆக அதிகரித்துள்ளது. ஆனால் செலவினத்தில் அதன் மாறுதல் காட்டப்படவில்லை. காரணம்



33 ஏப்ரல் 21]

ந்தைய ஆண்டுகளில் கல்லூரி விடுதிகளில் தங்கியிருந்த புகுமுக தப்பு மாணவர்களுக்கு விடுதி வசதியுடனான உதவித் தொகை ழங்கப்பட்டது. ஏனெனில் ப்ளஸ் 1 மற்றும் ப்ளஸ் 2 ாணவர்கள் மேல் நிலைப் பள்ளிகளைச் சார்ந்திருந்தனர். மேலும் இப்பள்ளிகளில் அவைகளுக்கான சொந்த விடுதிகள் பாதுவாக நடத்தப்படுவதில்லை.

(4) 1978—79-ம் ஆண்டு மேல் நிலைப் பள்ளி படிப்பு படித்த ாணவர்களுக்கான உதவித் தொகைகள் அரசாணை பெறப்பட்ட ன்னர் 1979—80-ம் ஆண்டில் தான் சேர்த்து வழங்கப்பட்டது. ஆதலால் 1979—80-ம் ஆண்டில் பயன் பெற்றோர் எண் ணிக்கை மிகுந்துள்ளது. ஆனால், 1980—81-ல் அங்ஙனம் எந்த டிப்பிற்கும் உதவித் தொகை சேர்த்து வழங்கப்படவில்லை. ஆதலின் பயன் பெற்றோர் எண்ணிக்கை அதிகமாக இல்லை.

(iii) மேற்கண்ட விவரங்கள் பிற்பட்டோர் கல்வி வளர்ச்சிக்காக புதிதாக இத்துறை தொடங்கப்பட்ட பிறகு உதவித் தொகையினால் பயனடைந்த மாணவர்களின் எண்ணிக் கை உயர்ந்துள்ளதைக் காட்டும். மேலும் கலை, அறிவியல், மருத்துவம், பொறியியல், பட்ட மேற்படிப்பு மற்றும் சட்டம் போன்ற படிப்புக்களுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. தகுதி பெற்ற பின்தங்கிய வகுப்பு மாணவர்களும், குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களும், படிப்பு உதவித் திட்டத்தினால் பயன் பெறுகின்றனர். மேலும் பட்டயக் கணக்கர் (சார்ட்டர்டு அக்கவுண்டன்ட்) பயிற்சிக்காக 1973— 74-ம் ஆண்டு முதல் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| ஆண்டு. | உதவித் தொகை பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1973 — 74 .. .. .. | 32 |
| 1974 — 75 .. .. .. | 40 |
| 1975 — 76 .. .. .. | 47 |
| 1976 — 77 .. .. .. | 72 |
| 1977 — 78 .. .. .. | 68 |
| 1978 — 79 .. .. .. | 67 |
| 1979 — 80 .. .. .. | 65 |
| 1980 — 81 .. .. .. | 61 |
| 1981 — 82 .. .. .. | 45 |

1982 — 83, (1982 டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை) 26

1983 — 84 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

(iv) பிற்பட்ட வகுப்பு மாணவர் பெற்றுவரும் உண்டி, மற்றும் உறைவிடச் செலவுகள் 1971—72-ம் ஆண்டிலிருந்து கீழ்க்கண்டவாறு அனுமதிக்கப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும் படிப்பு வகையும். | சென்னையில். | | வெளியூர்களில். | |
|---|---|---|---|---|
| | பி.வ.* | கு.ப.நீ.இ.** | பி.வ.* | கு.ப.நீ.இ.** |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ஒவ்வொரு மாதத்திற்கான ரூபாய்) | | | |
| 1. கலை, விஞ்ஞானம், சட்டம். | 60 | 70 | 50 | 55 |
| 2. மருத்துவம், பொறியியல், விவசாயம், கால்நடை மருத்துவம் ஆகியவை. | 60 | 75 | 55 | 70 |
| 3. தொழில் நுட்பக் கல்வி | 50 | 60 | 45 | 50 |

* பி.வ. * பின்தங்கிய வகுப்பினர்.

** கு.ப.நீ.இ. * குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்.

(v) உதவித் தொகை வழங்குவதற்காகக் கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:—

| | செலவு 1981-82 | மதிப்பீடு 1982-83 | திருத்திய மதிப்பீடு 1982-83 | மதிப்பீடு 1983-84 |
|---|---|---|---|---|
| | (ரூபாய் ஆயிரத்தில்.) | | | |
| பிற்பட்டோர் வகுப்பு மாணவர்கள் | 2,93,76 | 3,28,78 | 3,28,22 | 3,28,22 |
| குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்கள். | 38,59 | 43,82 | 43,82 | 43,82 |
| மொத்தம் .. | 3,32,35 | 3,72,60 | 3,72,04 | 3,72,04 |



7. (அ) படிப்புக் கட்டணச் சலுகைகள் — மேல்நிலைப் பள்ளிப் படிப்பு வரை (ப்ளஸ் 2) சாதி பாகுபாடில்லாமல் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மேல்நிலைப் பள்ளிப்படிப்பில் (ப்ளஸ் 2) தமிழை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் எந்த விதமான படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. ஆனால் மேல்நிலைப் படிப்பில் (ப்ளஸ் 2) ஆங்கிலத்தை போதனா மொழியாகக் கொண்டு கல்வி கற்கும் மாணவர்கள் படிப்புக் கட்டணமும் செலுத்த வேண்டும். ஆதிதிராவிடர், பழங்குடிமக்கள், மற்றும் பிற்பட்ட வகுப்பினைச் சேர்ந்த ஆங்கிலத்தைப் போதனா மொழியாகக் கொண்டு மேல்நிலைப் பள்ளிக் கல்வி கற்கும் மாணவர்கள் தமிழ்நாடு கல்வி விதிகள் 92—ன் கீழ் வழங்கப்படும் படிப்புக் கட்டணச் சலுகைகள் பெறத் தகுதியுடையவராவர்.

மேல்நிலைப் பள்ளி (ப்ளஸ் 2) வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு கல்வித் துறையின் மூலமும் பிற்பட்டோர் நலத் துறையின் மூலமும் சம்பளச் சலுகைகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன :—

| வருமானப் பிரிவு. | மிகவும் பிற்பட்ட வகுப்பினர். | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர். | பிற்பட்ட வகுப்பினர். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,500 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | முழுச் சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண். 92—ன்படி. | முழுச்சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண். 92—ன்படி. | அரைச் சம்பளச் சலுகை தமிழ் நாடு கல்வி விதி எண். 92—ன்படி. மிகுந்த அரைச் சம்பளம் இத் துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. |
| ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,501 முதல் ரூ. 5,000 வரை வருமானம் உள்ளவர்களுக்கு. | | | மூன்று பிரிவினருக்கும் அரைச் சம்பளச் சலுகை பிற்பட்டோர் நலத்துறையின் மூலம் உதவித் தொகையுடன் சேர்த்து வழங்கப்படுகிறது. |

7. (ஆ) கடன் உதவித் தொகை — தொழில் நிறுவனங்களில் படிக்கும் மாணவ—மாணவிகளுக்கு அவரவர்களின் பெற்றோர்/ பாதுகாவலர் ஆண்டு வருமானம் ரூ. 5,001-லிருந்து ரூ. 10,000-க் குட்பட்டு இருந்தால், வருடத்திற்கு ரூ. 500 வீதம் ஒரு குறிப் பிட்ட படிப்பிற்கு படிக்கும் காலம் முழுவதற்கும் அதிக பட்சம் ஐந்து வருட காலத்திற்கு, ரூ. 2,500-க்கு மேற்படாது இத்துறை யின் மூலமாக கடன் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த புதிய வருமான வரம்புகள் 1981—82-ம் ஆண்டிலிருந்து நடை முறைக்கு வந்துள்ளன.

8. (1) அரசு மாணவர் இல்லங்கள்— மாணவர்கள் கல்வி பயில வசதியாக இருக்கும் பொருட்டு அரசினர் உணவு விடுதிகள் திறக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் பல்வேறு வகுப்பு மாணவர்கள் கீழ்க்கண்ட விகிதத்தில் சேர்க்கப் படுகின்றனர் :—

| | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக் கான விடுதிகள். | பின்தங்கிய வகுப்பின ருக்கான விடுதிகள். | தாழ்த்தப் பட்ட வகுப் பினர் விடுதிகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (விழுக்காடு) | |
| பிற்பட்ட வகுப்பினர் | 10 | 65 | 20 |
| குற்ற மரபினர் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் | 60 | | |
| தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | 25 | 25 | 75 |
| இதர வகுப்பினர் | 5 | 10 | 5 |
| மொத்தம் .. | 100 | 100 | 100 |

பெற்றோர் / பாதுகாவலர்களின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மிகைப் படாது இருக்கும் மாணவர்கள் இவ்விடுதி களில் சேர்வதற்கு தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.



(2) பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காகவும், குற்ற மரபினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர் களுக்காகவும் நடத்தப்பெறும் விடுதிகளின் விவரங்கள் :—

| ஆண்டு. | பிற்பட்ட வகுப்பினர். | | குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்கள். | |
|---|---|---|---|---|
| | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. | விடுதிகளின் எண்ணிக்கை. | மாணவர்கள் எண்ணிக்கை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1969—70 | 11 | 979 | 37 | 3,619 |
| 1970—71 | 28 | 2,144 | 40 | 4,039 |
| 1971—72 | 82 | 5,333 | 46 | 4.369 |
| 1972-73 | 123 | 7,608 | 46 | 4,369 |
| 1973-74 | 144 | 9,348 | 54 | 5,099 |
| 1974-75 | 177 | 11,210 | 54 | 5,099 |
| 1975-76 | 196 | 12,060 | 53* | 5,069 |
| 1976-77 | 215 | 13,305 | 51* | 4,919 |
| 1977-78 | 227 | 14,065 | 57 | 5,219 |
| 1978-79 | 237 | 14,565 | 57 | 5,219 |
| 1979-80 | 261 | 15,538 | 60 | 5,369 |
| 1980-81 | 295 | 17,263 | 62 | 5,469 |
| 1981-82 | 335 | 19,263 | 62 | 5,469 |
| 1982-83 | 375 | 21,028 | 65 | 5,684 |

* தேவையான மாணவர்கள் இல்லாததினால் மூன்று குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோருக்கான விடுதிகள் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான விடுதி களாக மாற்றப்பட்டன.

(3) மேலே குறித்த 440 விடுதிகளில் 56 விடுதிகள் கல்லூரி மாணவர்களுக்கானவை.

(4) 1983-84-ம் ஆண்டில் மேலும் நாற்பது பிற்பட்ட மாணவர்கள் விடுதிகளும், மூன்று குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட மாணவர் விடுதிகளும் ரூ. 23·19 இலட்சங்கள், ரூ. 1·91 இலட்சங்கள் செலவில் முறையே திறக்க உத்தேசிக்கப் பட்டுள்ளன.

(5) (அ) விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு குறைந்த பட்ச மரச்சாமான்கள் (பர்னிச்சர்) வசதி செய்து தரும் திட்டத்தின் கீழ் நான்காம் கட்டமாக 1983-84-ம் ஆண்டில் 6,000 மாணவர்களுக்கு மரச்சாமான்கள் வசதி செய்து தர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த 483 விடுதிகளையும் பராமரிக்க 1983-84 ம் ஆண்டில் ரூபாய் 3,08,12,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

1981-82-ம் ஆண்டு முதல் மேற்படி விடுதிகளில் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் உணவுச் செலவுத் தொகை கீழ்க் கண்டவாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது :—

| (1) | சென்னை. (2) ரூபாய் | வெளியூர். (3) ரூபாய் |
|---|---|---|
| 1. கல்லூரி மாணவர் விடுதிகள் | 95 | 80 |
| 2. தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 95 | 80 |
| 3. இதர விடுதிகள் | 60 | 60 |

குறிப்பு 1 : (1) அனைத்து மாணவியர்க்கும் ஒப்பனைக்காக மேற்குறித்த தொகையை விட அதிகமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றும், மலைப் பிரதேசங்களில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கு மேலும் ரூபாய் ஒன்றும் அதிகம் அளிக்கப்படுகிறது. மேலும், சில்லறைச் செலவுகளுக்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ. 2 வீதமும், ஒவ்வொரு மாணவியர்க்கும் மாதம் ரூ. 1 வீதமும் அளிக்கப்படுகிறது.



(2) அரசு உணவு விடுதிகளில் இது நாள் வரை ரூ. 55 மற்றும் ரூ. 65 வீதம் மாதத்திற்கு சம்பளமும், இலவச உணவும் பெற்று வந்த சமையற்காரர்கள் அனைவருக்கும் 1980-81-ம் ஆண்டிலிருந்து ரூ. 150-5-200-10-300 என்ற அடிப்படைச் சம்பள விகிதத்தில் எல்லா இதர படிகளும் சேர்த்து சம்பளமும், விடுதிகள் திறந்திருக்கும் காலங்களில் இலவச உணவும் வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

(6) மாணவர் விடுதிக்கான கட்டிடங்கள்.—மாணவர் விடுதிகளுக்கான கட்டிடங்கள் கட்டும் பொறுப்பைத் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் ஏற்றுக் கொண்டு தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்காக 50 விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. இந்த 50 விடுதிகளில் 25 விடுதிகள் முடிக்கப்பட்டு திறக்கப் பட்டுள்ளன. 1981-82-ல் புதிதாக மூன்று விடுதிகள், விழுப்புரம் தென்னாற்காடு மாவட்டம், ஆரணி, வடாற்காடு மாவட்டம் மற்றும் திருத்தணி, செங்கல்பட்டு மாவட்டம் இவைகளில் கட்ட அரசு ரூ. 24·05 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்தது. அவற்றில் ரூ. 15 இலட்சங்களை 1981-82 லும், மீதி ரூ. 9·05 இலட்சத்தை 1982-83 ஆண்டிலும் செலவிடவும் ஆணையிடப் பட்டிருந்தது. அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடிக்கப் பெறாத நிலையில் உள்ள ஏழு விடுதி கட்டிட வேலைகளை முடிப்பதற்காகவும், புதிய கட்டிடம் கட்டவும் அரசு 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 70·40 இலட்சங்கள் ஒப்பளிப்பு செய்துள்ளது.

9. (i) பள்ளிகள். குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்காக செயல்பட்டு வரும் 277 பள்ளிகளின் விபரம் மாவட்ட வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:—

| மாவட்டங்கள். | மேல்நிலைப்பள்ளி. | | உயர்நிலைப்பள்ளி. | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. வட ஆற்காடு | .. | .. | .. | .. |
| 2. தென்னாற்காடு | .. | .. | .. | .. |
| 3. மதுரை (கள்ளர் சீரமைப்பு). | 2 | 1,576 | 8 | 1,955 |
| 4. இராமநாதபுரம் | .. | .. | .. | .. |
| 5. திருநெல்வேலி | .. | .. | .. | .. |
| 6. சேலம் | .. | .. | .. | .. |
| 7. பெரியார் | .. | .. | .. | .. |
| 8. கோவை | .. | .. | .. | .. |
| 9. தர்மபுரி | .. | .. | .. | .. |
| மொத்தம் .. | 2 | 1,576 | 8 | 1,955 |

| மாவட்டங்கள். | நடுநிலைப் பள்ளிகள். | | ஆரம்பப் பள்ளிகள். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். | எண்ணிக்கை. | மாணவ மாணவியர். |
| | (6) | (7) | (8) | (9) |
| 1. வட ஆற்காடு | .. | .. | 4 | 445 |
| 2. தென்னாற்காடு | .. | .. | 1 | 225 |
| 3. மதுரை (கள்ளர் சீரமைப்பு). | 30 | 12,207 | 208 | 29,497 |
| 4. இராமநாதபுரம் | 1 | 390 | 5 | 1,057 |
| 5. திருநெல்வேலி | 1 | 322 | 9 | 1,098 |
| 6. சேலம் | 1 | 170 | 1 | 261 |
| 7. பெரியார் | 1 | 350 | 1 | 272 |
| 8. கோவை | .. | .. | 1 | 36 |
| 9. தர்மபுரி | 2 | 430 | 1 | 122 |
| மொத்தம் .. | 36 | 13,869 | 231 | 33,013 |



மொத்த பள்ளிகள் .. 277
மொத்த மாணவர்கள் .. 50,413

9. (ii) அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தும் 2 கள்ளர் மேல் நிலைப் பள்ளிகளுக்காக அறிவியல் சோதனைக் கூடங்கள் கட்ட ரூ. 5·00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9. (iii) இவ்விரு மேல் நிலைப் பள்ளிக்காக கட்டப்படவிருக்கும் 2 அறிவியல் சோதனைக் கூடங்களுக்கு தேவையான உபகரணங்கள், பொருள்கள் வாங்கி வழங்க ரூ. 2·00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9. (iv) ஆசிரியர் மாணவர்களுக்கு நவீன கழிவறை வசதி செய்து தரவேண்டிய அவசியத்தை முன்னிட்டு அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தப்படும் 2 கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 8 உயர்நிலைப் பள்ளிகளிலும் கழிவறைகள் கட்டுவதற்காக ரூ. 3·00 இலட்சங்கள் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9. (v) மாணவர்களை சிறந்த முறையில் பயிலுவிக்க, மேலும் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்த அரசு இத்துறை மூலம் மதுரை மாவட்டத்தில் நடத்தப்படும் 2 கள்ளர் மேல்நிலைப் பள்ளிகளிலும் மற்றும் 8 உயர்நிலைப் பள்ளிகளிலும் போதனை உபகரணங்கள் (உ-ம்) உலகப்படங்கள் முதலியன வாங்கி வழங்க ரூ. 0·18 இலட்சம் ஒதுக்க முடிவெடுத்துள்ளது.

9. (vi) இத்துறை மூலம் நடத்தப்படும் பள்ளிகளில், விளையாடுமிடம் உள்ள பள்ளிகளுக்கு ரூ. 3,000 வீதமும், விளையாடுமிடம் இல்லாத பள்ளிகளுக்கு ரூ.1,500-ம் விளையாட்டு கருவிகள் (பந்துகள், வலைகள், பந்தடிக்கும் மட்டைகள் முதலியன) வாங்கி வழங்க வகை செய்யும் வகையில் அனுமதித்துள்ளது. இதற்கென ரூ. 0·20 இலட்சம் 1983–84-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டு ஒன்றுக்கு எட்டாவது மற்றும் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் மற்றும் அடுத்த அதிக மதிப்பெண் பெறும மாணவ/மாணவியருக்கு முதல் மற்றும் 2வது பரிசு வழங்க ரூ, 4,000 ஒதுக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் பள்ளி இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் பின்தங்கிய வகுப்பினைச் சேர்ந்த மாணவர் ஒருவருக்கும் மாணவியர் ஒருவருக்கும் தலா ரூ. 500 மதிப்பில் பரிசு வழங்கப் படுகிறது.

மாவட்ட அளவில் வழங்கப்படும் பரிசுகளின் மதிப்பு விவரம் பின்வருமாறு:—

| | ரூபாய் |
|---|---|
| பள்ளி இறுதித் தேர்வு—முதற் பரிசு | 100.00 |
| இரண்டாவது பரிசு | 50.00 |
| எட்டாவது வகுப்பு—முதல் பரிசு | 50.00 |
| இரண்டாவது பரிசு | 10.00 |

மேல்நிலைப் பள்ளித் தேர்வில் மாநில அளவில் முதல் மதிப் பெண் பெறும் 1 மாணவன், 1 மாணவிக்கு புதிதாக பரிசு வழங்கு திட்டத்தையும் 1983–84 ஆம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட வாறு அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி ஆண்டுதோறும் ரூ. 1,000 மதிப்பில் இரு பரிசுகள் வழங்கப்படவிருக்கின்றன. இதற்கென ரூ. 0.04 இலட்சம் 1983–84-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

பரிசு பெற தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவன் தான் கடைசி யாக பயின்ற மாவட்டத்தில் இல்லாமல் வெளி மாவட்டத் தில் வசித்தாலோ அல்லது மேற்படிப்பைத் தொடர்ந்து கொண் டிருந்தாலோ பரிசு பெற்றுக் கொள்ள போக்குவரத்து செலவுக்கு உதவிப் பணமாக ரூ. 100-ம், அவ்வாறில்லாமல் தான் கடைசியாக படித்த மாவட்டத்திலேயே இருந்தாலோ அல்லது படித்துக் கொண்டிருந்தாலோ பரிசு பெற போக்குவரத்துச் செலவுக்கு உதவிப் பணமாக ரூ. 50 கொடுக்கவும் அரசு முடிவெடுத்துள்ளது.

கல்விச் சுற்றுப்பயணம்—ஒவ்வொரு ஆண்டும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பொது அறிவு மற்றும் பாட அறிவு வளர் வதற்காக அவர்கள் கல்விச் சுற்றுப் பயணம் அழைத்துச் செல் லப்படுகின்றனர்.



பகுதி நேரப் போதனை.—பிற்பட்ட வகுப்பினர் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவ/ மாணவியர் உணவு விடுதிகளில் சேர்ந்து படிக்கும் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு மற்றும் மேல் நிலை வகுப்பு மாணவ/ மாணவியரின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும் அவர் கள் சமூகத்தில் மற்றப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களுக்கு சரிசமமான அறிவினைப் பெறவும் எல்லா உயர்நிலைப் பள்ளி விடுதிகளிலும், பகுதிநேர போதனை ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர்.

10. மதிய உணவு—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப் பட்ட இனத்து மாணவர்கள் தம் வறுமையின் காரணமாக பள்ளிகளில் தொடர்ந்து படிப்பதில்லை. அவர்கள் பள்ளிகளை விட்டுச் செல்லாமல் இருப்பதற்குத் தூண்டுகோலாக இப் பள்ளிகளில் அம்மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்கப்படுகிறது. இதனால் மாணவர்கள் தொடர்ந்து படிக்க ஊக்கம் ஏற்பட்டிருக்கின்றது. அரசு இதற்கான அதிகச் செலவினத்தை தவிர்க்க அம்மாணவர்களுக்கு (கேர்) நிறுவனத்தின் மூலமாக மதிய உணவு வழங்கும்படி உத்தரவிட்டுள்ளது. இது அரசுப் பள்ளிகளில் மார்ச் 1975ம் ஆண்டுமுதற்கொண்டும் திருநெல்வேலி இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் உள்ள தனியார் பள்ளிகளில் சனவரி திங்கள் 1976 ஆம் ஆண்டு முதற்கொண்டும் நடைமுறையில் இருந்தது. பிற்பட்டோர் நலத்துறையின் கீழ் நகர்ப்புறம் மற்றும் நாட்டுப்புறங்களில் நடத்தப்படும் எல்லா குற்றப்பரம்பரை பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பள்ளிகளிலும் 1—7—1982லிருந்து முதலமைச்சரின் சத்துணவுத்திட்டம் செயல் பட்டுவருகிறது. ஒரு சத்துணவின் மதிப்பு 45 பைசாவாகிறது. முதலமைச்சரின் புதிய சத்துணவுத் திட்டத்தின் கீழ் எல்லா பள்ளி மாணவர்களுக்கும் அதாவது 5 முதல் 9 வரை மற்றும் 10 முதல் 14 வயது வரை உள்ள மாணவர்கள் பயன்பெறு கின்றனர். 1983–84ஆம் ஆண்டு இந்தத் திட்டத்திற்காக ரூ. 23,82,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

11. **உணவு மானியங்கள்.**—(1) தனிப்பட்ட நபர்களாலும் சமூக நல நிலையங்களாலும் நடத்தப்படும் பள்ளி விடுதிகளில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவர்களுக்கு 1955–56ஆம் ஆண்டுவரை ஆதி திராவிடர் நலத்துறை உணவு மானியம் வழங்கி வந்தது. 1956-57 ஆம் ஆண்டு முதல் இம்மாதிரி தனியாரின் உணவு விடுதிகளைப் புதியதாக அங்கீகரிக்க வேண்டாம் என்று அரசு முடிவு செய்து தேவையான இடங்களில் அரசே விடுதிகளைத் திறந்து வருகின்றது. மற்றும் ஒழுங்காகப் பராமரிக்கப்படாத தனியார் விடுதிகளையும் அரசே எடுத்து அரசாங்க விடுதிகளாக மாற்றி நடத்தி வருகின்றது. தற்பொழுது பிற்பட்டோர் நலத்துறை உதவி பெறும் தனியார் உணவு விடுதிகள் 48 ஆகும் இவைகளுக்கு உணவு செலவுக்காக பத்து மாதங்களுக்கு உணவு

மானியம் வழங்கப்படுகிறது. 1981–82ஆம் ஆண்டுமுதல் சென்னை மற்றும் மாவட்ட, வட்ட தலை நகரங்களில் உள்ள மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ. 45 ஆகவும் மற்ற இடங்களில் உள்ள விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ. 40 ஆகவும் உணவு மானியத் தொகை உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்டவாரியாக அங்கீகரிக்கப்பட்டுள்ள விடுதிகளின் விவரம் கீழ்வருமாறு:—

| மாவட்டத்தின் பெயர். | அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| சென்னை | 5 |
| செங்கற்பட்டு | 4 |
| வட ஆற்காடு | 2 |
| தென்னாற்காடு | 3 |
| தஞ்சாவூர் | 14 |
| திருச்சிராப்பள்ளி | 2 |
| மதுரை | 10 |
| இராமநாதபுரம் | 2 |
| திருநெல்வேலி | 3 |
| கோயம்புத்தூர் | 1 |
| பெரியார் | 1 |
| நீலகிரி | 1 |
| மொத்தம் | 48 |

உணவு மானியம் பெறும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமான வரம்பு ரூ. 2,500–லிருந்து ரூ. 5.000–க்கு 1981–82 ஆண்டு முதல் உயர்த்தப்பட்டுள்ளது. 1983–84ஆம் ஆண்டுக்கு ரூ. 10,52,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2. கல்லூரிப் படிப்பு:—கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு இவ்வளவு மானியம் வழங்கப்படுவதில்லை. இந்த மாணவர்கள் அங்கீகரிக்கப்பட்ட கல்லூரியைச் சார்ந்த விடுதிகளில் தங்கிப் படித்தாலும், கல்வித்துறையினர்



அல்லது ஆதி திராவிடர் நலத்துறை மற்றும் பிற்பட்டோர் நலத்துறையின் அங்கீகாரம் பெற்றுள்ள விடுதிகளில் தங்கிப் படித்தாலும், அவர்களுக்குப் படிப்பு உதவித் தொகையுடன் உணவுச் செலவுக்கான தொகை வழங்கப்படுகிறது. இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண். | மாவட்டம். | விடுதிகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | சென்னை | 4 |
| 2. | திருச்சிராப்பள்ளி | 1 |
| | மொத்தம் | 5 |

தற்போது புதிதாக எந்த தனியார் விடுதியையும் அங்கீகரிப்பதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. இம்மாணவர்களுக்கு உண்டி மற்றும் உறையுள் தொகை பத்தி 6 (iv)—ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் வழங்கப்படுகிறது.

12. புத்தகங்களும், எழுது பலகைகளும்.—அரசினர் நடத்தும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தோர் பள்ளிகளில் படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இலவசமாக புத்தகங்களும், எழுது பலகைகளும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு இலவச உதவி பெற்ற மாணவர்கள் 1969-70 ஆம் ஆண்டில் 7,600 பேர்கள். அதனால் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. ஆரம்பப்பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் மூன்றாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களும் மற்றும் எழுது பலகைகளும் 4 ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் அளிக்கப்படுகின்றன. இதனால் 1982-83 ஆம் ஆண்டில் பயன் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை 40,108 ஆகும். 1983-84 ஆம் ஆண்டில் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 42,000 ஆக உயரும்.

13. (i) சீருடைகள் வழங்குதல்.—மதுரை மாவட்டம் நீங்கலாக இதர மாவட்டங்களில் உள்ள குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களுக்கான பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு முறை சீருடைகள் வழங்கப்படுகின்றன. முதல் முறை பள்ளி ஆரம்பித்தவுடன் அல்லது தீபாவளிக்கு முன்பாகவும், இரண்டாவது முறை பொங்கல் சமயத்திலும் வழங்கப்படுகின்றன. முதன் முதலாக இவ்வாறு இலவச சீருடைகள்

வழங்கும் திட்டம் மதுரை மாவட்டத்தில் 1969-70 ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. அப்பொழுது கள்ளர் வகுப்பினர் பள்ளிகளில் படிக்கும் ஒன்று முதல் மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கு ஒரு முறை மட்டும் சீருடைகள் வழங்கப்பட்டது. இப்பொழுது இரு முறை வழங்கப்படுகின்றன. இத்திட்டத்திற்காக 1972-73 ஆம் ஆண்டில் 3,91,000 ரூபாயும் 1973-74ம் ஆண்டில் 8,06,000 ரூபாயும், 1974-75 ஆம் ஆண்டில் 6,58,000 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் 10,39,000 ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 8,94,000 ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 10,47,000 ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டில் 9,37,000 ரூபாயும், 1979-80 ஆம் ஆண்டில் 9,08,000 ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 14,25,000 ரூபாயும், 1981-82 ஆம் ஆண்டில் 19,05,000 ரூபாயும் செலவிடப்பட்டுள்ளது. ஆதி திராவிடர் நலப்பள்ளிகளில் நடைமுறையில் இருந்து வருவதுபோல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கான பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் எல்லா மாணவர்களுக்கும் இரண்டு செட் சீருடைகள் 1981-82 ஆம் ஆண்டு முதல் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 22,71,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில் 24,18,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் 1971-72 ஆம் ஆண்டு முதல் அரசினர் நடத்தும் பிற்பட்ட வகுப்பு பள்ளி மாணவ, மாணவியர் உணவு விடுதிகளில் தங்கி பயிலும் மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் ஆண்டுதோறும் இரண்டு முறை சீருடைகள் அளிக்கப்படுகின்றன. இதற்கு 1973-74 ஆம் ஆண்டில் 1,67,000 ரூபாயும், 1974-75 ஆம் ஆண்டில் 2,16,000 ரூபாயும், 1975-76 ஆம் ஆண்டில் 2,38,000 ரூபாயும், 1976-77 ஆம் ஆண்டில் 2,98,000 ரூபாயும், 1977-78 ஆம் ஆண்டில் 3,03,000 ரூபாயும், 1978-79 ஆம் ஆண்டில் 3,80,000 ரூபாயும், 1979-80 ஆம் ஆண்டில் 4,05,000 ரூபாயும், 1980-81 ஆம் ஆண்டில் 5,33,000 ரூபாயும், 1981-82 ஆம் ஆண்டில் 6,97,000 ரூபாயும் செலவிடப்பட்டது. 1982-83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டில் ரூ. 8,62,000 ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டில் 9,23,000 ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) நன்றாகப் படிக்கும் மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளித்தல்.—கல்லூரிகளில் படித்து அதிக மதிப்பெண்கள் பெற்ற பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கும், ஆதி திராவிடர் மாணவர்களுக்கும் மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்து மாணவர்களுக்கும் தாங்கள் எடுத்துள்ள பாடத்தில் அதிகத் திறமை பெற 1975-76 ஆம் ஆண்டு முதல் தனிப்பயிற்சித் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. இதற்கு 1982-83 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டது. 1983-84 ஆம் ஆண்டிற்கு ரூ. 40,000 ஒதுக்கப்பட்டுள்ளது.



14. ஆசிரியர்கட்கு வீடுகள்:—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு நடத்தப்படும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க ஒரு திட்டம் உள்ளது. இதன்படி ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 10,000 மதிப்பில் ஒரு வீடு கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1983-84-ம் ஆண்டில் 13 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 1.35 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

15. ஐ. ஏ. எஸ்., ஐ. பி. எஸ். மற்றும் அரசு உயர் பணிகளுக்கான சிறப்பு பயிற்சிக் கூடம்.—1971 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் பிற்பட்ட வகுப்பு மாணவர்களை இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் உயர் அரசு பணிகளுக்கான தேர்வுகள் எழுத பயிற்சி அளிக்கும் வகையில் சிறப்புப் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

பயிற்சிக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் நடந்த யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வில் கலந்து கொண்டு தேறிய மாணவர்கள் விவரங்கள் பின்வருமாறு:-

பழைய முறை

| அணி எண். | ஆண்டு. | சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை. | யு.பி.எஸ்.ஸி. தேர்விற்குச் சென்றவர்கள். | நேர்முக தேர்விற்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். | நேர்முகதேர்விற்கு பின் இறுதியாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள். | ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். | மத்திய அரசுப் பணிகள் |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | 1971-72 | 12 | 8 | 3 | .. | .. | .. |
| 2 | 1972-73 | 57 | 34 | 6 | 1 | .. | 2 |
| 3 | 1973-74 | 46 | 33 | 4 | 1 | 1 | .. |
| 4 | 1974-75 | 55 | 46 | 8 | .. | 1 | 2 |
| 5 | 1975-76 | 60 | 52 | 3 | .. | 1 | .. |
| 6 | 1976-77 | 40 | 35 | 2 | 1 | .. | .. |
| 7 | 1977-78 | 42 | 38 | 1 | .. | .. | 1 |

புதிய முறை.

| அணி எண். (1) | ஆண்டு. (2) | பூர்வாங்கத் தேர்விற்குச் சேர்க்கப்பட்டவர்கள். (3) | அதில் தேறியவர்கள். (4) | யு. பி. எஸ். ஸி. தேர்விற்குச் சென்றவர்கள். (5) | நேர்முகத் தேர்விற்கு தேர்வு செய்யப்பட்டவர்கள். (6) | நேர்முக தேர்வில் இறுதியாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். (7) | ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். (8) | மத்திய அரசுப் பணிகள். (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1979 | 48 | 12 | 16 (12+4*) | 4 | 1 | .. | 1 |
| 9 | 1980 | 49 | 22 | 27 (22+5*) | 6 | .. | .. | 2 |
| 10 | 1981 | 42+90** | 8+4** | 4+3** | .. | .. | .. | .. |
| 11 | 1982 | 38+62** | 5+5** | 5+5** | முடிவுகள் எதிர் பார்க்கப்படுகின்றன. | | | |

இது தவிர, இந்நிலையத்தில் பயிற்சி பெற்ற 19 மாணவர்கள் பல்வேறு துறைகளில் கீழ்க்கண்டவாறு பதவி பெற்றனர்:

| பதவியின் பெயர். | எண்ணிக்கை. |
|---|---|
| 1. துணை ஆட்சியாளர்கள் .. | 3 |
| 2. இணை வணிகவரி அலுவலர் .. | 1 |
| 3. துணைப் பேராசிரியர்கள் .. | 7 |
| 4. ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி மற்றும் அரசு உடைமையாக்கப்பட்ட வங்கிகள் (இளநிலை அலுவலர்) .. | 3 |
| 5. வருமானவரி முதல் வகுப்பு அலுவலர் .. | 1 |
| 6. காப்பீட்டுக் கழகம் பயிற்சி அலுவலர் .. | 1 |
| 7. மாவட்டக் கல்வி அலுவலர் .. | 1 |
| 8. கல்வெட்டுக்கலை உதவி அலுவலர் (கர்நாடக அரசு) .. | 1 |
| 9. எண்ணெய் மற்றும் இயற்கைவாயு கழகம் .. | 1 |

* வெளியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.
** துணைப் பயிற்சி நிலையத்தில் சேர்க்கப்பட்டவர்கள்.



சென்னையில் உள்ள இந்தப் பயிற்சிக் கல்லூரிக்கு இறுதித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்து அனுப்புவதற்காக மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய ஒவ்வொரு நகரங்களிலும் 50 மாணவர்களைக் கொண்ட ஒரு மாலை நேர துணைப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து அங்கு பூர்வாங்கத் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் படுத்த அரசு ஆணை பிறப்பித்தது. இந்தத் துணைப் பயிற்சி நிலையங்கள் 1981 ஆம் ஆண்டில், மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் துவக்கப்பட்டன. 1982-ம் ஆண்டு முதல் திருநெல்வேலியிலும் செயல்படுகிறது.

துணைப் பயிற்சி நிலையங்களில் 1982-ம் ஆண்டு பயிற்சி பெற்றவர்களின் விபரங்கள் கீழ்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் | .. | .. | 11 |
| மதுரை .. | .. | .. | 26 |
| திருச்சிராப்பள்ளி | .. | .. | 14 |
| திருநெல்வேலி | .. | .. | 11 |
| | மொத்தம் | .. | 62 |

இத்துடன் ஒரு முன்னோடி திட்டமாக பல்கலைக் கழகங்களில் முதுநிலைப் பட்டப்படிப்புத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற முதல் 10 பிற்பட்ட வகுப்பு மாணவர்களை, புதுடில்லியில் உள்ள ''டாக்டர் ராவின் அனைத்திந்திய ஆட்சிப் பணி பயிற்சி மன்றம், புதுடில்லி'' என்ற நிறுவனத்தின் மூலமாக மத்திய அரசு நடத்தும் தேர்வாணைக்குழுவின் குடிமைப் பணி தேர்வுக்கு நல்ல பயிற்சி அளித்து அனுப்பி வைப்பதுஎன்று அரசு உத்தேசித்துள்ளது

மேலும் இந்திய அரசின் தேர்வாணைக்குழு நடத்தும் அகில இந்தியத் தேர்வுகளில் ஒன்றான தேசிய பாதுகாப்பு கல்லூரித் தேர்வுக்கு மாணவர்களைத் தயார் செய்வதற்காக ஒரு தனிப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதில் 15 பிற்பட்ட வகுப்புமாணவர்களுக்கும் 15 ஆதிதிராவிடர் பழங்குடி மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்படுகிறது. அம்மாணவர்களுக்கு கைச் செலவுக்காகவும்,

போக்குவரத்துச் செலவுக்காகவும், மாதம் ரூ. 40 வழங்கப்படுகின்றது. இப்பயிற்சியில் பலன் பெற்றவர்கள் எண்ணிக்கை பின்வருமாறு:

| வரிசை எண். | அணி எண். | வருடம். | அனுமதிக்கப் பட்டவர்கள் — பிற்பட்ட வகுப்பினர். | அனுமதிக்கப் பட்டவர்கள் — தாழ்த்தப் பட்டவர்கள். | தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் — பிற்பட்ட வகுப்பினர். | தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் — தாழ்த்தப் பட்டவர்கள். |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | 1 | 1973-74 | 6 | 3 | .. | .. |
| 2 | 2 | 1974-75 | 15 | 7 | 2 | .. |
| 3 | 3 | 1975-76 | 15 | 6 | 1 | — |
| 4 | 4 | 1976-77 | 14 | 2 | .. | .. |
| 5 | 5 | 1977-78 | 15 | 1 | 2 | .. |
| 6 | 6 | 1978-79 | 12 | 3 | 3 | .. |
| 7 | 7 | 1979-80 | 11 | 5 | .. | .. |
| 8 | 8 | 1980-81 | 5 | 1 | .. | .. |
| 9 | 9 | 1981-82 | 13 | 2 | .. | .. |
| 10 | 10 | 1982-83 | 15 | .. | .. | .. |

16. (i) பொருளாதார வளர்ச்சி:-இத்திட்டத்தின்கீழ் முடிதிருத்துவோருக்கும், சலவைத் தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்களைச் செய்துவர தொழில் கருவிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1971-72 ஆம் ஆண்டு முதல் சென்னை நகரத்திற்கும் விரிவாக்கப்பட்டது.



சென்ற ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்தோரின் எண்ணிக்கை பின்வருமாறு:

| ஆண்டு | பயன் அடைந்த நபர்கள் |
|---|---|
| (1) | (2) |
| 1969-70 | 1542 |
| 1970-71 | 1512 |
| 1971-72 | 1633 |
| 1972-73 | 1654 |
| 1973-74 | 4081 |
| 1974-75 | 3961 |
| 1975-76 | 3506 |
| 1976-77 | 3695 |
| 1977-78 | 4095 |
| 1978-79 | 7240 |
| 1979-80 | 8000 |
| 1980-81 | 8000 |
| 1981-82 | 8000 |
| 1982-83 | 7445* |

* முடிதிருத்தும் கருவிகளுக்கு அதிக தேவை இல்லாததால் இவ்வாண்டில் 3000 முடிதிருத்தும் கருவிகள் மட்டும் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளன. உபரியாக இருந்த தொகையில் மேலும் 445 சலவைத் தொழிலாளிகளின் கருவிகள் வாங்கி விநியோகிக்கப்பட்டன.

(ii) 1982-83 ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின் கீழ் ரூ 19,42,000-ம், 1983-84 ஆம் ஆண்டிற்கு, ரூ. 19,42,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்டவை தவிர சலவைத் தொழிலாளர்கள் இயங்கும் சலவையகம் நடத்த பாரத ஸ்டேட் வங்கியிலிருந்து கடன் பெறுவதற்காக ஒவ்வொரு நபருக்கும் ரூ 165 மானியமாக வழங்கப்படுகிறது. மேலும் ரூ. 1,050- மதிப்பளவில் சலவையகம் தொடங்குவதற்கு வங்கியிலிருந்து கடன்பெற வசதியாக ஒவ்வொரு சலவைத் தொழிலாளர்களுக்கும் ரூ. 210 மான்யமாகவும் வழங்கப்படுகிறது. 1983—84—ம் ஆண்டிற்கு ரூ. 1,000 அடையாள ஒதுக்கீடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கல் உடைக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போயர்களுக்கு இலவச தொழில் கருவிகள் வழங்கும் திட்டம் 1979-80-ல் ஆரம்பிக்கப்பட்டது. ஒரு செட் தொழில் கருவிகளின் விலை ரூ. 100 ஆகும். இதன் மதிப்பு 1981—82 முதல் ரூ. 150 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இத்திட்டம் முதலில் சேலம், தென்னாற்காடு, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் செயலாக்கப்பட்டது. இது 1979—80 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு, வடஆற்காடு, தர்மபுரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்

பட்டுள்ளது. 1982—83ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ரூ. 75,000-ம், 1983-84ஆம் ஆண்டிற்கு ரூ. 75,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1982—83ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினால் பயனடைவோரின் எண்ணிக்கையை 250-லிருந்து 500 ஆக எல்லா மாவட்டங்களுக்கும் உயர்த்தி விரிவாக்கப்பட்டுள்ளது, (சென்னையைத் தவிர).

(iii) சலவைத் துறைகள் கட்டுதல்:—சலவைத் தொழிலாளர்கள் தங்கள் தொழிலை திறம்பட செய்வதற்கு சில இடங்களில் சலவைத் துறைகள் தேவையாக உள்ளன. இவைகளை சுகாதார முறைகளில் அமைப்பதற்காக பேரூராட்சிகளுக்கும், நகராட்சி மன்றங்களுக்கும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. மொத்த செலவில் பாதித் தொகை கடனாகவும், மீதித்தொகை மானியமாகவும் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் இதுவரை 57 உள்ளாட்சி மன்றங்களுக்கு சலவைத்துறைகள் கட்ட நிதி உதவி செய்யப்பட்டுள்ளது.

1980-81ஆம் ஆண்டிலிருந்து மாநகராட்சிகளையும் இந்தத் திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற அங்கீகரித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(iv) சென்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட 3 பொது நோக்கு பொறியியல் பணிமனைகள் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர்களின் உயர்வு கருதி தொடர்ந்து நடத்தப்படுகின்றன. இவைகள் இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூரிலும், மதுரை மாவட்டம் செக்கானூரணியிலும், திருநெல்வேலி மாவட்டம் வீரகேரளம்புதூரிலும் அமைந்துள்ளன. இவை தொழில் வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் 25-2-1981 வரை இருந்தன. தற்போது அவைகள் பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் அவர்கள் நேரடி பராமரிப்பின் கீழ் கொணரப் பட்டுள்ளன. இவைகளில் பற்றவைத்தல், சேர்த்தல் மற்றும் இரும்பு தொழிற்கூடம் ஆகிய துறைகளில் 18 மாத காலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. பிற்பட்ட வகுப்பு மற்றும் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் நலத்திற்காக கீழ்க்கண்ட இடங்களில் தொழிற்பயிற்சி கூடங்கள் நடத்தப்படுகின்றன :—

1. தையல் மற்றும் ஆயத்த ஆடைகள் பயிற்சிக்கூடம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி மாவட்டம்.
2. தையற் பயிற்சிகூடம், செக்கானூரணி, மதுரை மாவட்டம்.
3. பிரம்பு மற்றும் நார்ப்பொருள்கள் செய்யும் பயிற்சி நிலையம் (1) தக்கலை, (2) குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம்.



4. மேலும், 1978-79ஆம் ஆண்டில் தையல் பயிற்சி அளிப்பதற்காக புதியதாக 5 தையல் பயிற்சிக் கூடங்கள் கீழ்க்கண்ட இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு, நிலையம் ஒன்றில் 20 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது:—

(i) கிருஷ்ணன்கோயில்—கன்னியாகுமரி மாவட்டம்
(ii) அஜீஸ்நகர் குடியிருப்பு—தென்னாற்காடு மாவட்டம்
(iii) கம்பம்—மதுரை மாவட்டம்.
(iv) திருவாடானை—இராமநாதபுரம் மாவட்டம்
(v) தேவர்குளம்—திருநெல்வேலி மாவட்டம்.

இப்பயிற்சிக் கூடங்களையும், பொதுநோக்கு பொறியியல் பணி மனைகளையும் பராமரிப்பதற்காக ரூ.6.02 இலட்சங்கள் 1981-82-ல் செலவிடப்பட்டது. 1982-83-ல் திருத்திய மதிப்பீட்டில் ரூ 8.01 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1983-84-ல் இதற்காக ரூ.7.90 இலட்சங்கள் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

விவசாயம்.—குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவர் விவசாயம் செய்து முன்னேறுவதற்காக அவர்களுக்குப் பாசனக் கிணறுகள் வெட்டுவதற்கு ஒரு கிணற்றுக்கு ரூ. 2,500 வீதம் மானியம் அளிக்கப்படுகிறது. 1982-83-க்கு திருத்திய மதிப்பீட்டில் ரூ. 1.53 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டன. இதன் மூலம் 64 நபர்கள் பயனடைந்தனர். 1983-84 மதிப்பீட்டில் ரூ 1,43,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

வீட்டு வசதி.—1956-57 ஆம் ஆண்டு முதல் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்காக கடன் மற்றும் மானிய அடிப்படையில் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருந்து வருகிறது. முன்னர் ஒரு வீடு ரூ. 1,200 மதிப்பீட்டில் கட்டப்பட்டது. இதில் கடன் ரூ. 300, மானியம் ரூ. 900. 1975-76ஆம் ஆண்டிலிருந்து வீடு கட்டுவதற்கான மொத்தத் தொகை ரூ. 2,700 ஆக உயர்த்தப்பட்டது. இதில் ரூ. 2,025 மானியமாகவும், ரூ. 675 பொருளாகவோ, உழைப்பாகவோ, பணமாகவோ பயனடைவோர் பங்காகவும் இருந்தது. இத்தொகை 1979-80ஆம் ஆண்டில் ரூ. 4,300 ஆக உயர்த்தப் பட்டது. இதில் மானியம் ரூ. 3,225 ஆகவும் பயனடைவோர் பங்கு ரூ. 1,075 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. 1979-80, 1980-81-ம் ஆண்டுகளில் முறையே 665 மற்றும் 392 வீடுகள் "தாட்கோ" நிறுவனம் மூலமாக கட்டுவதற்கு நிதி வழங்கப் பட்டுள்ளது. கட்டுமான தளவாடங்களின் விலைகள் மற்றும் கூலி உயர்வு காரணமாக ஒரு வீட்டிற்கு அனுமதிக்கப்பட்ட தொகையை மேலும் உயர்த்தும் யோசனை பரிசீலனையில் உள்ளது. 1983-84 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள அரும்பருதி கிராமத்தில் வசிக்கும் நரிக்குறவர்களுக்கு 76 வீடுகள்

தலா ரூ 5,600 என்ற விகிதத்தில் கட்டித் தருவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 4,27,000 ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

1982-83ல் திருச்சி மாவட்டம், தேவராயனேரியில் உள்ள நரிக்குறவர் காலனியில் உள்ள சமூககூடத்தில் ஒரு சமையல் அறையும் உண்ணும் அறையும் கட்ட ரூ. 15,000 அரசால் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

19. குழந்தைகள் காப்பகம்—அஜீஸ் நகர் குடியிருப்பில் குற்ற மரபினர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட இனத்தவரின் 6 வயதிற்குட்பட்ட குழந்தைகள் சரியாக பராமரிக்கும் பொருட்டு அஜீஸ் நகரில் 5 குழந்தைகள் காப்பகங்கள் 1977—78ஆம் ஆண்டில் திறக்கப்பட்டுள்ளன. இவை சமூக நலத்துறை இயக்குநரின் மேற்பார்வையில் இயங்குகின்றன. அப்படி இருந்த போதிலும் இவைகளுக்கான செலவினை பிற்பட்டோர் நலத்துறை ஏற்கிறது. 'கேர்' நிறுவனத்தின் உதவியும் இவைகளுக்கு சமூக நல இயக்ககத்தின் மூலமாக கொடுக்கப்படுகிறது. இவைகளில் பேறு காலத்தை எதிர் நோக்கும் தாய்மார்களும், குழந்தைகளும் சத்துணவு வழங்கப்பட்டு ஐந்து பால சேவிகாக்களால் பராமரிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்திற்காக 1982-83 திருத்திய மதிப்பீட்டில் ரூ 17,000—ம், 1983-84க்கு ரூ.17,000-ம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

20. பிற்பட்ட வகுப்பினருக்காக வீட்டு மனைகள் கையகப் படுத்துதல்.—பின் தங்கிய வகுப்பினரில் சிலர் ஆதி திராவிட மக்களைவிட நலிந்த நிலையில் உள்ளனர். இத்தகைய ஏழை மக்களுக்கு குறிப்பாக தொழில் அடிப்படையிலான பிற்பட்ட வகுப்பினரான ஒட்டர், நாவிதர், வண்ணார், நரிக்குறவர் முதலியோருக்கு இலவச வீட்டு மனைகள் வழங்க நிலங்கள் கையகப்படுத்த 1981—82 முதல் அரசு ஒரு சிறப்புத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. மேற்படி ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 99.69 ஏக்கர் நிலம் கையகப்படுத்த ரூ. 6.77 இலட்சங்கள் செலவிடப்பட்டு, 1,065 குடும்பங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட்டன.

1983–84ஆம் ஆண்டிற்கு ரூ. 15 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

21. தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்.—பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார நிலையை உயர்த்தவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் "தமிழ்நாடு பிற்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்", என்ற அமைப்பை நிறுவி அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு முதலீடு ரூ. 100 வீதம் 10 இலட்சம் சமபங்குகளாக ரூ. 10 கோடியாக வரையறுக் கப்பட்டுள்ளது.





திரு. பொன். பரமகுரு, இ.கா.ப., டைரக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் அவர்கள் மேற்படி கழகத்திற்கு தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநராக அரசால் நியமனம் செய்யப்பட்டிருக் கிறார். அக்கழகத்தில் கீழ்கண்ட நபர்கள் பொறுப்பாளராகவும் அங்கத்தினர்களாகவும் இருக்கிறார்கள்:—

| | | |
|---|---|---|
| 1 | ஆணையர் மற்றும் செயலாளர், சமூக நலத்துறை, சென்னை. | அங்கத்தினர். |
| 2 | ஆணையர் மற்றும் செயலாளர், தொழில் துறை, சென்னை. | அங்கத்தினர். |
| 3 | ஆணையர் மற்றும் செயலாளர். விவசாயத்துறை, சென்னை. | அங்கத்தினர். |
| 4 | இணைச் செயலாளர், நிதித்துறை, சென்னை. | அங்கத்தினர். |
| 5 | பிற்பட்டோர் நல இயக்குநர் சென்னை: | அங்கத்தினர். |

இக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:—

1. பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக குறைந்த வட்டி விகிதத்தில் பொருளாதார தொழில் முயற்சிகளுக்கு மார்ஜின் தொகை (மார்ஜின் மணி) அளித்தல்

2. பிற்பட்ட வகுப்பினரின் பொருளாதார மேம்பாட்டிற்காக தேவையென்று கருதப்படும் வர்த்தக, வணிக, தொழில் தியான பல திட்டங்களை நேரிடையாகவும், மறைமுகமாகவும் மேற்கொள்ளுதல்.

இக்கழகம் அரசு நிதி பெறுவதுடன், வங்கிகள், இதர நிறுவனங்கள் மற்றும் இதர வகையில் நிதி உதவி பெற்று இயங்கும். இக்கழகம் மாநில ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம் போன்ற ஏனைய பொருளாதாரத் திட்டங்களில் தீவிர முறையில் பங்கேற்கும்.

இம்மேம்பாட்டுக் கழகம் 1956ஆம் ஆண்டு கம்பெனிகள் சட்டப்படி தனியார் கம்பெனியாகப் பதிவு செய்யப்பட்டு 25-2-1982 முதல் செயல்பட்டு வருகிறது. மேற்படி கழகம் சென்னை அண்ணா சாலையில் உள்ள இலக்கம் 807 என்ற கட்டிடத்தில் (5வது மாடியில்) இயங்கி வருகிறது.

22. தமிழ்நாடு இரண்டாம் பிற்பட்டோர் உயர் ஆணைக் குழு.—தமிழ்நாடு அரசு இரண்டாவது பிற்பட்டோர் உயர் ஆணைக் குழுவினை திரு. ஜே. ஏ. அம்பாசங்கர், இ.ஆ.ப. (ஓய்வு பெற்றவர்) அவர்களின் தலைமையின்கீழ் 18 உறுப்பினர் களுடன் அமைத்து ஆணை பிறப்பித்திருக்கிறது. இயக்குநர்' பிற்பட்டோர் நலத்துறை, சென்னை, இக்குழுவின் உறுப்பினர்-செயலர் இந்தக் குழு சென்னை ஆழ்வார்பேட்டையில் சர். சி. வி. ராமன் ரோட்டில் க. எண் 27 இலக்கமிட்ட கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது.

இக்குழு உச்ச நீதி மன்றத்தின் பல்வேறு முடிவுகளைக் கருத்தில் கொண்டும், விஞ்ஞான மற்றும் சரியான புலனாய்வு களை மேற்கொண்டும், பிற்பட்டோர் இனப் பட்டியல்களை ஆய்வு செய்வதோடு அவர்களுடைய உண்மை நிலையை அறிந்து அவர்கள் முன்னேற எடுக்கவேண்டிய நடவடிக்கைகளைப் பற்றி இந்திய அரசியல் அமைப்பின் விதி எண். 15 உட்பிரிவு (4) மற்றும் 16 உட்பிரிவு (4) இவைகளின் அடிப்படையில் பரிந்துரை கள் வழங்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

இவ்வாறாக பிற்பட்டவகுப்பு மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. எனவே, பிற்பட்டோர் நல மானியக் கோரிக்கைக்கு ஒப்புதல் அளிக்க வேண்டிக் கொள்கிறேன்.



அட்டவணை 'அ'

கொள்கை விளக்கக் குறிப்பு, 1983-84 ஆம் ஆண்டு
1983–84 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு
(ரூபாய் ஆயிரத்தில்)

மொத்தம் : 10,22,26
நிர்வாகத்தில் : 59,54
திட்டத்தில் : 9,62,72

| திட்டத்தின் பெயர் | ஐந்தாண்டுத் திட்டத்தில் 2,76,70 | | திட்டத்தில் இல்லாதவை 6,86,02 | |
|---|---|---|---|---|
| | பிற்பட்ட வகுப்பின ருக்காக. | குற்ற மரபினர் பட்டிய லிருந்து நீக்கப் பட்ட இனத்தவருக் காக. | பிற்பட்ட வகுப்பின ருக்காக. | குற்ற மரபினர் பட்டிய லிருந்து நீக்கப் பட்ட இனத்தவருக் காக. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | (ரூபாய் ஆயிரத்தில்) | | |
| உதவித் தொகை | 13,14 | 7,41 | 3,15,08 | 36,41 |
| பள்ளிகள் | .. | 3,88 | .. | 1,44,40 |
| மதிய உணவு | .. | 5,00 | .. | 18,82 |
| புத்தகம் மற்றும் துணி. | 6,40 | 25,87 | 2,83 | 4,15 |
| உணவு மானியம் | 1 | .. | 10,33 | 18 |
| விடுதிகள் | 1,38,50 | 26,18 | 1,10,18 | 33,26 |
| பல்கலைக் கழகத்திற்கு மானியம் | .. | .. | 3,00 | .. |
| ஆசிரியர்களுக்கு வீடுகள் | .. | 1,35 | .. | .. |
| விவசாயம் | .. | 1,43 | .. | .. |
| தொழிற்பயிற்சி | 30 | 5,96 | 1,02 | 62 |
| இலவசக் கருவிகள் | 20,18 | 31 | .. | .. |
| குடிநீர் | .. | .. | .. | 25 |
| சலவைத்துறை | 1,25 | ... | .. | ... |
| தனிப் பயிற்சி நிலையம் | — | .. | 4,69 | .. |

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| குற்ற மரபினர் பட்டியலி லிருந்து நீக்கப்பட்ட இனத்தவருக்கு வீடுகள் | .. | 4,27 | .. | .. |
| வீட்டு மனைகள் ஆர்ஜிதம் | 15,00 | .. | .. | .. |
| சிறப்புப் பயிற்சி | .. | .. | 40 | .. |
| பட்டயக் கணக்கர் படிப்பு | .. | .. | 40 | .. |
| சிறந்த மாணவர்களுக்குப் பரிசு | 8 | .. | .. | .. |
| குழந்தைகள் காப்பகம் | .. | 17 | .. | .. |
| விடுதிகள் கட்டுதல், சில்லரை வேலைகள் | 1 | .. | .. | .. |
| மொத்தம் .. | 1,94,87 | 81,83 | 4,47,93 | 2,38,09 |

அட்டவணை 'ஆ'.

அரசு பிற்பட்டோர் விடுதிகள்.
1982-83.

| சென்னை மாவட்டம் | | அனுமதிக்கப்பட்ட மாணவ/மாணவியர் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1 | கல்லூரி மாணவர் விடுதி, தென் சென்னை | 105 |
| 2 | கல்லூரி மாணவர் விடுதி, தியாகராயநகர் | 105 |
| 3 | கல்லூரி மாணவர் விடுதி, வடசென்னை | 105 |
| 4 | தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சென்னை-12 | 75 |
| 5 | மாணவியர் விடுதி, திருவான்மியூர் | 120 |
| 6 | மாணவியர் விடுதி, திருவல்லிக்கேணி | 70 |
| 7 | கல்லூரி மாணவியர் விடுதி, சென்னை | 50 |
| 8 | கல்லூரி மாணவர் இல்லம், சூளை, சென்னை | 50 |
| செங்கல்பட்டு மாவட்டம். | | |
| 9 | கல்லூரி மாணவர் விடுதி, காஞ்சிபுரம் | 100 |
| 10 | கல்லூரி மாணவர் விடுதி, செங்கல்பட்டு | 50 |
| 11 | கல்லூரி மாணவர் விடுதி, திருத்தணி | 50 |
| 12 | மாணவர் விடுதி, வங்கனூர் | 50 |
| 13 | மாணவர் விடுதி, கனகம்மாசத்திரம் | 50 |
| 14 | மாணவர் விடுதி, மதுரமங்கலம் | 25 |
| 15 | மாணவர் விடுதி, சாலவாக்கம் | 25 |
| 16 | மாணவர் விடுதி, பெரிய பாளையம் | 50 |



| செங்கல்பட்டு மாவட்டம்—தொடர்ச்சி | | |
|---|---|---|
| 17 | மாணவர் விடுதி, கருங்குழி | 30 |
| 18 | மாணவர் விடுதி, அத்திமாஞ்சேரிபேட்டை | 50 |
| 19 | மாணவர் விடுதி, பாதிரிவேடு | 50 |
| 20 | மாணவர் விடுதி, சுண்ணாம்புக்குளம் | 40 |
| 21 | மாணவர் விடுதி, சோமங்கலம் | 25 |
| 22 | மாணவர் விடுதி, ஒரத்தி | 50 |
| 23 | மாணவர் விடுதி, வாலாஜாபாத் | 100 |
| 24 | மாணவியர் விடுதி, வாலாஜாபாத் | 60 |
| 25 | மாணவியர் விடுதி, மதுராந்தகம் | 40 |
| 26 | மாணவியர் விடுதி, திருத்தணி | 50 |
| 27 | மாணவர் விடுதி, ஆவடி | 50 |
| 28 | மாணவர் விடுதி, மதுராந்தகம் | 50 |
| 29 | மாணவர் விடுதி, பேரம்பாக்கம் | 50 |
| 30 | மாணவர் விடுதி, மானாம்பதி | 50 |
| 32 | மாணவர் விடுதி, வள்ளியூர் | 50 |
| 32 | மாணவர் விடுதி, நந்திவரம் | 50 |
| வடஆற்காடு மாவட்டம்: | | |
| 33 | கல்லூரி மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 34 | கல்லூரி மாணவர் விடுதி, செய்யாறு | 60 |
| 35 | கல்லூரி மாணவர் விடுதி, வேலூர் | 50 |
| 36 | கல்லூரி மாணவர் விடுதி, வாணியம்பாடி | 50 |
| 37 | கல்லூரி மாணவியர் விடுதி, வாலாஜாப்பேட்டை | 50 |
| 38 | மாணவர் விடுதி, பொன்னை | 50 |
| 39 | மாணவர் விடுதி, திருவண்ணாமலை | 50 |
| 40 | மாணவர் விடுதி, திருப்பத்தூர் | 50 |
| 41 | மாணவர் விடுதி, குடியாத்தம் | 50 |
| 42 | மாணவர் விடுதி, ஜோலார்ப்பேட்டை | 50 |
| 43 | மாணவர் விடுதி, ஆரணி | 50 |
| 44 | மாணவர் விடுதி, போளூர் | 50 |
| 45 | மாணவர் விடுதி, செங்கம் | 50 |
| 46 | மாணவர் விடுதி, ஆற்காடு | 50 |
| 47 | மாணவர் விடுதி, வந்தவாசி | 50 |
| 48 | மாணவியர் விடுதி, செங்கம் | 50 |
| 49 | மாணவர் விடுதி, அரக்கோணம் | 50 |
| 50 | மாணவர் விடுதி, பேரணாம்பட்டு | 50 |
| 51 | மாணவர் விடுதி, கே.வி. குப்பம் | 50 |
| 52 | மாணவர் விடுதி, பேரணமல்லூர் | 50 |

வட ஆற்காடு மாவட்டம்—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 53 | மாணவர் விடுதி, சேத்துப்பட்டு | 50 |
| 54 | மாணவர் விடுதி, வேட்டவலம் | 50 |
| 55 | மாணவியர் விடுதி, காவேரிப்பாக்கம் | 50 |
| 56 | மாணவர் விடுதி, ஆலங்காயம் | 50 |
| 57 | மாணவர் விடுதி, தேசூர் | 50 |

தென்னாற்காடு மாவட்டம் :

| | | |
|---|---|---|
| 58 | கல்லூரி மாணவர் விடுதி, கடலூர் | 75 |
| 59 | கல்லூரி மாணவர் விடுதி, திண்டிவனம் | 50 |
| 60 | கல்லூரி மாணவர் விடுதி, விருத்தாசலம் | 150 |
| 61 | கல்லூரி மாணவியர் விடுதி, கடலூர் | 50 |
| 62 | மாணவர் விடுதி, விருத்தாசலம் | 100 |
| 63 | மாணவர் விடுதி, பெண்ணாடம் | 90 |
| 64 | மாணவர் விடுதி, பெரியகுப்பம் | 70 |
| 65 | மாணவர் விடுதி, சேத்தியாத்தோப்பு | 140 |
| 66 | மாணவர் விடுதி, திருநாவலூர் | 50 |
| 67 | மாணவர் விடுதி' சிறுபாக்கம் | 75 |
| 68 | மாணவர் விடுதி, கம்மாபுரம் | 50 |
| 69 | மாணவர் விடுதி, தேவபண்டலம் | 50 |
| 70 | மாணவர் விடுதி, சோமந்தர்குடி | 50 |
| 71 | மாணவர் விடுதி, வடக்கநேந்தல் | 50 |
| 72 | மாணவர் விடுதி, தொழுதூர் (தற்போது புவனகிரி) | 50 |
| 73 | மாணவியர் விடுதி, பரங்கிப்பேட்டை (தற்போது புவனகிரி) | 40 |
| 74 | மாணவியர் விடுதி, தியாகதுர்க்கம் | 50 |
| 75 | மாணவர் விடுதி, இல்லோடு | 50 |
| 76 | மாணவர் விடுதி, சித்தலிங்கமடம் | 50 |
| 77 | மாணவர் விடுதி, ஆனந்தபுரம் | 50 |
| 78 | மாணவர் விடுதி, கிடார் | 50 |
| 79 | மாணவர் விடுதி, ப. முட்லூர் | 50 |
| 80 | மாணவர் விடுதி, மஞ்சக்கொல்லை | 50 |
| 81 | மாணவர் விடுதி, சின்னசேலம் | 50 |
| 82 | மாணவர் விடுதி, சித்தேரிப்பட்டு | 50 |
| 83 | மாணவியர் விடுதி, அன்னியூர் | 50 |
| 84 | மாணவர் விடுதி, ஒரத்தூர் | 50 |
| 85 | மாணவர் விடுதி, ரெட்டணை | 50 |
| 86 | மாணவர் விடுதி, கிள்ளை | 50 |
| 87 | மாணவியர் விடுதி, கல்லக்குறிச்சி | 50 |



தஞ்சாவூர் மாவட்டம்

| | |
|---|---|
| 88 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்—1 |
| 89 | கல்லூரி மாணவர் விடுதி, தஞ்சாவூர்—2 |
| 90 | கல்லூரி மாணவர் விடுதி, கும்பகோணம் |
| 91 | கல்லூரி மாணவர் விடுதி, திருவாரூர் |
| 92 | கல்லூரி மாணவியர் விடுதி. மயிலாடுதுறை |
| 93 | கல்லூரி மாணவியர் விடுதி, தஞ்சாவூர் |
| 94 | மாணவர் விடுதி, பேராவூரணி |
| 95 | மாணவர் விடுதி, மகாதேவப்பட்டினம் |
| 96 | மாணவர் விடுதி, மன்னார்குடி |
| 97 | மாணவர் விடுதி, நீடாமங்கலம் |
| 98 | மாணவர் விடுதி, உம்பளச்சேரி |
| 99 | மாணவர் விடுதி, வேதாரண்யம் |
| 100 | மாணவர் விடுதி, ஆலத்தூர் |
| 101 | மாணவர் விடுதி, கண்ணத்தான்குடி |
| 102 | கல்லூரி மாணவர் விடுதி, மயிலாடுதுறை |
| 103 | மாணவர் விடுதி, மதுக்கூர் |
| 104 | மாணவர் விடுதி, செம்பணார் கோவில் |
| 105 | மாணவர் விடுதி, பூம்புகார் |
| 106 | மாணவர் விடுதி, களி |
| 107 | மாணவர் விடுதி, பாபநாசம் |
| 108 | மாணவியர் விடுதி, வலங்கைமான் |
| 109 | மாணவியர் விடுதி, நன்னிலம் |
| 110 | மாணவியர் விடுதி, குற்றாலம் |
| 111 | மாணவியர் விடுதி, ஈச்சாங்கோட்டை |
| 112 | கல்லூரி மாணவியர் விடுதி, கும்பகோணம் |
| 113 | மாணவியர் விடுதி, நாகப்பட்டினம் |
| 114 | மாணவர் விடுதி, திருவிடைமருதூர் |
| 115 | மாணவர் விடுதி, வைதீஸ்வரன் கோவில் |
| 116 | மாணவர் விடுதி, திருவோணம் |
| 117 | மாணவர் விடுதி, முத்துப்பேட்டை |
| 118 | மாணவர் விடுதி, மணக்குடி |
| 119 | மாணவியர் விடுதி, பட்டுக்கோட்டை |
| 120 | மாணவர் விடுதி, அம்மாப்பேட்டை |
| 121 | மாணவர் விடுதி, கீவளூர் |
| 122 | மாணவர் விடுதி, கொரடாச்சேரி |
| 123 | மாணவர் விடுதி, பூதலூர் |

சேலம் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 124 | கல்லூரி மாணவர் விடுதி, சேலம் சந்திப்பு | 100 |
| 125 | கல்லூரி மாணவர் விடுதி, நாமக்கல் | 40 |
| 126 | கல்லூரி மாணவியர் விடுதி, நாமக்கல் | 50 |
| 127 | மாணவர் விடுதி, எலம்பிள்ளை | 90 |
| 128 | மாணவர் விடுதி, கொங்கனாபுரம் | 70 |
| 129 | மாணவர் விடுதி, மகுடஞ்சாவடி | 70 |
| 130 | மாணவர் விடுதி, கண்ணங்குறிச்சி | 50 |
| 131 | மாணவர் விடுதி, தாரமங்கலம் | 70 |
| 132 | மாணவர் விடுதி, தீவட்டிப்பட்டி | 70 |
| 133 | மாணவர் விடுதி, எடப்பாடி | 70 |
| 134 | மாணவர் விடுதி, எருமைப்பட்டி | 70 |
| 135 | மாணவர் விடுதி, எலச்சிப்பாளையம் | 70 |
| 136 | மாணவர் விடுதி, மல்லசமுத்திரம் | 70 |
| 137 | மாணவர் விடுதி, வாழைப்பாடி | 50 |
| 138 | மாணவர் விடுதி, ராமாபுரம் | 40 |
| 139 | மாணவர் விடுதி, ஆட்டையாம்பட்டி | 40 |
| 140 | மாணவர் விடுதி, ஆதனூர் | 50 |
| 141 | மாணவர் விடுதி, சாத்தபாடி | 75 |
| 142 | மாணவர் விடுதி, வீரகனூர் | 50 |
| 143 | மாணவியர் விடுதி, தாரமங்கலம் | 50 |
| 144 | மாணவர் விடுதி, காரைக்குறிச்சிபுதூர் | 50 |
| 145 | மாணவியர் விடுதி, முள்ளுக்குறிச்சி | 50 |
| 146 | மாணவர் விடுதி, மங்களாபுரம் | 50 |
| 147 | மாணவர் விடுதி, விட்டம்பாளையம் | 50 |
| 148 | மாணவர் விடுதி, சேலம் | 50 |
| 149 | மாணவர் விடுதி, கொளத்தூர் | 50 |
| 150 | கல்லூரி மாணவியர் விடுதி, சேலம் | 50 |
| 151 | மாணவர் விடுதி, கீரிப்பட்டி | 50 |

தர்மபுரி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 152 | கல்லூரி மாணவர் விடுதி, கிருஷ்ணகிரி | 150 |
| 153 | மாணவர் விடுதி, ஹோசூர் | 50 |
| 154 | மாணவர் விடுதி, சிங்காரப்பேட்டை | 50 |
| 155 | மாணவர் விடுதி, பாலக்கோடு | 5 |



தர்மபுரி மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 156 | மாணவர் விடுதி, போச்சம்பள்ளி | 50 |
| 157 | மாணவர் விடுதி, ஹரூர் | 40 |
| 158 | மாணவர் விடுதி, தொகரப்பள்ளி | 40 |
| 159 | மாணவர் விடுதி, காரிமங்கலம் | 40 |
| 160 | மாணவர் விடுதி, அஞ்செட்டி | 50 |
| 161 | மாணவர் விடுதி, பெண்ணாகரம் | 50 |
| 162 | மாணவர் விடுதி, மாரண்டஹள்ளி | 50 |
| 163 | மாணவர் விடுதி கோணங்கிநாயக்கன்ஹள்ளி | 50 |
| 164 | மாணவர் விடுதி, கோட்டப்பட்டி | 50 |
| 165 | மாணவியர் விடுதி, பாப்பாரப்பட்டி | 50 |
| 166 | மாணவியர் விடுதி, காவேரிப்பட்டினம் | 50 |
| 167 | மாணவர் விடுதி, திருமலவாடி | 50 |
| 168 | மாணவர் விடுதி, மொரப்பூர் | 50 |
| 169 | மாணவர் விடுதி, கெலமங்கலம் | 50 |
| 170 | மாணவியர் விடுதி, லளிகம் | 50 |
| 171 | மாணவர் விடுதி, பேரிகை | 50 |
| 172 | மாணவர் விடுதி, சூளகிரி | 50 |
| 173 | மாணவர் விடுதி, குன்னத்தூர் | 50 |
| 174 | மாணவர் விடுதி, பாலதொட்டனப்பள்ளி | 50 |

கோயம்புத்தூர் மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 175 | கல்லூரி மாணவர் விடுதி, கோயம்புத்தூர் | 100 |
| 176 | கல்லூரி மாணவர் விடுதி, திருப்பூர் | 100 |
| 177 | மாணவர் விடுதி, தொண்டாமுத்தூர் | 50 |
| 178 | மாணவர் விடுதி, மேட்டுப்பாளையம் | 50 |
| 179 | மாணவர் விடுதி, சொக்கம்பாளையம் | 50 |
| 180 | மாணவர் விடுதி, பெத்திக்குட்டை | 50 |
| 181 | மாணவர் விடுதி, உடுமலைப்பேட்டை | 50 |
| 182 | மாணவர் விடுதி, பல்லடம் | 50 |
| 183 | மாணவர் விடுதி, கிணத்துக்கடவு | 50 |
| 184 | மாணவர் விடுதி, ஆனைமலை | 50 |
| 185 | மாணவர் விடுதி, கோட்டூர் | 50 |
| 186 | மாணவர் விடுதி, பொங்கலூர் | 50 |
| 187 | மாணவர் விடுதி, கோயில்பாளையம் | 50 |
| 188 | மாணவர் விடுதி, மடத்துக்குளம் | 50 |
| 189 | மாணவியர் விடுதி, சின்னத்தடாகம் | 50 |

[1983 ஏப்ரல் 21

பெரியார் மாவட்டம்

| | | |
|---|---|---|
| 190 | கல்லூரி மாணவர் விடுதி, ஈரோடு | 50 |
| 191 | கல்லூரி மாணவர் விடுதி, கோபிசெட்டிபாளையம் | 100 |
| 192 | மாணவர் விடுதி, பெருந்துறை | 50 |
| 193 | மாணவர் விடுதி, சத்தியமங்கலம் | 60 |
| 194 | மாணவர் விடுதி, குருவாரெட்டியூர் | 40 |
| 195 | மாணவர் விடுதி, அந்தியூர் | 40 |
| 196 | மாணவர் விடுதி, கோபிசெட்டி பாளையம் | 50 |
| 197 | மாணவியர் விடுதி, புஞ்சைப் புளியம்பட்டி | 50 |
| 198 | மாணவர் விடுதி, புஞ்சைப்புளியம்பட்டி | 50 |
| 199 | மாணவர் விடுதி, சிவகிரி | 50 |
| 200 | மாணவர் விடுதி, சென்னிமலை | 50 |
| 201 | மாணவர் விடுதி, தாராபுரம் | 50 |
| 202 | மாணவர் விடுதி, காங்கேயம் | 50 |
| 203 | மாணவர் விடுதி, தாளவாடி | 50 |
| 204 | மாணவர் விடுதி மூலனூர் | 50 |
| 205 | மாணவர் விடுதி வெள்ளகோவில் | 50 |
| 206 | மாணவியர் விடுதி, பெருந்துறை | 50 |

நீலகிரி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 207 | கல்லூரி மாணவர் விடுதி, உதகமண்டலம் | 100 |
| 208 | கல்லூரி மாணவியர் விடுதி, உதகமண்டலம் | 50 |
| 209 | மாணவர் விடுதி, கூனூர் | 30 |
| 210 | மாணவர் விடுதி, தேவர்சோலை | 40 |
| 211 | மாணவர் விடுதி, அம்பலமூலா | 50 |
| 212 | மாணவர் விடுதி, தூதுர்மடம் | 50 |
| 213 | மாணவர் விடுதி, எருமாடு | 50 |
| 214 | மாணவர் விடுதி, கூடலூர் | 30 |

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

| | | |
|---|---|---|
| 215 | கல்லூரி மாணவர் விடுதி, தென்னூர், திருச்சி | 100 |
| 216 | கல்லூரி மாணவர் விடுதி, காஜாமலை, திருச்சி | 125 |
| 217 | கல்லூரி மாணவர் விடுதி, கரூர் | 40 |
| 218 | கல்லூரி மாணவர் விடுதி, அரியலூர் | 40 |
| 219 | கல்லூரி மாணவியர் விடுதி, உறையூர், திருச்சிராப்பள்ளி | 40 |



1983 ஏப்ரல் 21]

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—தொடர்ச்சி.

220 மாணவர் விடுதி, கொளக்குடி
221 மாணவர் விடுதி, திருவெறும்பூர்
222 கல்லூரி மாணவர் விடுதி, புதூர்,
223 மாணவர் விடுதி, பெரம்பலூர்
224 மாணவர் விடுதி, ஜெயங்கொண்டான்
225 மாணவர் விடுதி, லாலாப்பேட்டை
226 மாணவர் விடுதி, பஞ்சப்பட்டி
227 மாணவர் விடுதி, கண்ணனூர்
228 மாணவர் விடுதி, துங்காபுரம்
229 மாணவர் விடுதி, அரியலூர்
230 மாணவர் விடுதி, மருவத்தூர்
231 மாணவர் விடுதி, மணப்பாறை
232 மாணவர் விடுதி, பொன்பரப்பி
233 மாணவர் விடுதி, வி. களத்தூர்
234 மாணவர் விடுதி, குலக்காநத்தம்
235 மாணவர் விடுதி, உடையார்பாளைய
236 மாணவியர் விடுதி, செட்டிக்குளம்
237 மாணவர் விடுதி, திருமழப்பாடி
238 மாணவியர் விடுதி, மேட்டுப்பாளையம்
239 மாணவியர் விடுதி, இராமலிங்கபுரம், திருச்சிராப்பள்ளி
240 மாணவர் விடுதி, தரகம்பட்டி
241 மாணவர் விடுதி, கூத்தூர்
242 மாணவர் விடுதி, நொய்யல்
243 மாணவர் விடுதி, திருமானூர்
244 மாணவர் விடுதி, டி. பழூர்
245 மாணவர் விடுதி, தோகைமலை
246 மாணவர் விடுதி, மீன்சுருட்டி
247 மாணவர் விடுதி, துவரங்குறிச்சி
248 மாணவர் விடுதி, கீழப்புலியூர்
249 மாணவியர் விடுதி, சின்னத்தாராபுரம்

புதுக்கோட்டை மாவட்டம் ;

| | | |
|---|---|---|
| 250 | கல்லூரி மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 175 |
| 251 | கல்லூரி மாணவர் விடுதி, (கூடுதல்) புதுக்கோட்டை | 75 |
| 252 | மாணவர் விடுதி, திருமயம் | 50 |
| 253 | மாணவர் விடுதி, ஆலங்குடி | 40 |
| 254 | மாணவர் விடுதி, விராலிமலை | 75 |
| 255 | மாணவர் விடுதி, இலுப்பூர் | 50 |
| 256 | மாணவர் விடுதி, வடகாடு | 50 |
| 257 | மாணவர் விடுதி, சுப்ரமணியபுரம் | 50 |
| 258 | மாணவர் விடுதி, மணமேல்குடி | 50 |
| 259 | மாணவர் விடுதி. பொன்பேத்தி | 40 |
| 260 | மாணவியர் விடுதி, அறந்தாங்கி | 40 |
| 261 | மாணவர் விடுதி, ஆவுடையார் கோயில் | 50 |
| 262 | மாணவர் விடுதி, திருக்களம்பூர் | 50 |
| 263 | மாணவர் விடுதி, அண்டக்குளம் | 50 |
| 264 | மாணவியர் விடுதி, அரிமளம் | 50 |
| 265 | மாணவர் விடுதி, கீரமங்கலம் | 50 |
| 266 | மாணவர் விடுதி, கீரனூர் | 50 |
| 267 | மாணவர் விடுதி, கரம்பக்குடி | 50 |
| 268 | மாணவர் விடுதி, புதுக்கோட்டை | 50 |
| 269 | மாணவர் விடுதி, பூவைமாநகர் | 50 |
| 270 | மாணவர் விடுதி, சின்னக்கோட்டை | 50 |

மதுரை மாவட்டம்:

| | | |
|---|---|---|
| 271 | கல்லூரி மாணவர் விடுதி, மதுரை | 50 |
| 272 | மாணவர் விடுதி, திண்டுக்கல் | 50 |
| 273 | கல்லூரி மாணவர் விடுதி, மேலூர் | 100 |
| 274 | கல்லூரி மாணவியர் விடுதி, மதுரை | 40 |
| 275 | மாணவர் விடுதி, அலங்காநல்லூர் | 104 |
| 276 | மாணவர் விடுதி, திருநகர் | 80 |
| 277 | மாணவர் விடுதி, தல்லாகுளம் | 110 |
| 278 | மாணவர் விடுதி, தர்மபுரி (பெரியகுளம் தாலுக்கா) | 60 |
| 279 | மாணவர் விடுதி, திருமங்களம் | 50 |
| 280 | மாணவர் விடுதி, பெரியகுளம் | 80 |
| 281 | மாணவர் விடுதி, சேக்காப்பட்டி | 75 |
| 282 | மாணவர் விடுதி, மேலவளவு | 50 |
| 283 | மாணவர் விடுதி, போடிநாயக்கனூர் | 120 |
| 284 | மாணவர் விடுதி, தி. வாடிப்பட்டி | 80 |
| 285 | மாணவர் விடுதி, அச்சம்பட்டி | 70 |
| 286 | மாணவர் விடுதி, மட்டப்பாறை | 40 |



மதுரை மாவட்டம்—தொடர்.சி

| | |
|---|---|
| 287 | மாணவர் விடுதி, பாப்பநாயக்கன்பட்டி |
| 288 | மாணவர் விடுதி, கே. பெருமாள்பட்டி |
| 289 | மாணவர் விடுதி, ஏழுமலை |
| 290 | மாணவர் விடுதி, கருங்காலக்குடி |
| 291 | மாணவர் விடுதி, பழனி |
| 292 | மாணவர் விடுதி, சின்னாளப்பட்டி |
| 293 | மாணவியர் விடுதி, சின்னாளப்பட்டி |
| 294 | மாணவர் விடுதி, பேரையூர் |
| 295 | மாணவியர் விடுதி, தி. கல்லுப்பட்டி |
| 296 | மாணவியர் விடுதி, ஆண்டிப்பட்டி |
| 297 | மாணவர் விடுதி, கூடக்கோயில் |
| 298 | மாணவர் விடுதி, லெம்பர்பட்டி |
| 299 | மாணவர் விடுதி, கொடைக்கானல் |
| 300 | மாணவர் விடுதி, சேடப்பட்டி |
| 301 | மாணவர் விடுதி, நெய்க்காரப்பட்டி |
| 302 | மாணவர் விடுதி, கே. இராமநாதபுரம் |
| 303 | மாணவர் விடுதி, ரெங்கசமுத்திரம் |
| 304 | மாணவர் விடுதி, கோட்டம்பட்டி |

இராமநாதபுரம் மாவட்டம்.—

| | |
|---|---|
| 305 | கல்லூரி மாணவர் விடுதி, விருதுநகர் |
| 306 | கல்லூரி மாணவர் விடுதி, இராமநாதபுரம் |
| 307 | கல்லூரி மாணவர் விடுதி, சிவகங்கை |
| 308 | மாணவர் விடுதி, கண்டரமாணிக்கம் |
| 309 | மாணவர் விடுதி, வடக்குசமுத்திரம் |
| 310 | மாணவர் விடுதி, திருக்கோஷ்டியூர் |
| 311 | மாணவர் விடுதி, காரியாப்பட்டி |
| 312 | மாணவர் விடுதி, புதுவயல் |
| 313 | மாணவர் விடுதி, திருத்தங்கல் |
| 314 | மாணவர் விடுதி, மண்டலமாணிக்கம் |
| 315 | மாணவர் விடுதி, கூமாபட்டி |
| 316 | மாணவர் விடுதி, பரமக்குடி |
| 317 | மாணவர் விடுதி, பெரியக்கோட்டை |
| 318 | மாணவர் விடுதி, செய்தூர் |
| 319 | மாணவர் விடுதி, தேவிப்பட்டினம் |
| 320 | மாணவர் விடுதி, சாயல்குடி |

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 321 | மாணவியர் விடுதி, பாகனேரி | 30 |
| 322 | மாணவியர் விடுதி, நாட்டரசன்கோட்டை | 40 |
| 323 | மாணவியர் விடுதி, தேவக்கோட்டை | 50 |
| 324 | மாணவியர் விடுதி, குள்ளூர்சந்தை | 75 |
| 325 | மாணவியர் விடுதி, பிரான்மலை | 50 |
| 326 | மாணவியர் விடுதி, காரியப்பட்டி | 50 |
| 327 | மாணவர் விடுதி, பெருநாளி | 50 |
| 328 | மாணவர் விடுதி, மண்டபம் | 50 |
| 329 | மாணவர் விடுதி, நரிக்குடி | 50 |
| 330 | மாணவர் விடுதி, ராஜபாளையம் | 50 |
| 331 | மாணவர் விடுதி, திருவாடானை | 50 |
| 332 | மாணவியர் விடுதி, இராமேஸ்வரம் | 50 |
| 333 | மாணவர் விடுதி, ஜோகில்பட்டி | 50 |
| 334 | மாணவர் விடுதி, மானாமதுரை | 50 |
| 335 | மாணவர் விடுதி, அபிராமம் | 50 |
| 336 | மாணவர் விடுதி, சிக்கல் | 50 |
| 337 | மாணவர் விடுதி, தொண்டி | 50 |

திருநெல்வேலி மாவட்டம்—

| | | |
|---|---|---|
| 338 | கல்லூரி மாணவர் விடுதி, திருநெல்வேலி | 50 |
| 339 | கல்லூரி மாணவர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 340 | கல்லூரி மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 40 |
| 341 | மீனவர் மாணவர் விடுதி, தூத்துக்குடி | 150 |
| 342 | மாணவர் விடுதி, ஏருவாடி | 30 |
| 343 | மாணவர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 150 |
| 344 | மாணவர் விடுதி, சாமிநாதபுரம் | 49 |
| 345 | மாணவர் விடுதி, மேலப்பாளையம் | 50 |
| 346 | மாணவர் விடுதி, இடிந்தகரை | 60 |
| 347 | மாணவர் விடுதி; மணப்பாடு | 70 |
| 348 | மாணவர் விடுதி, விளாத்திகுளம் | 40 |
| 349 | மாணவர் விடுதி, பழவூர் | 50 |
| 350 | மாணவர் விடுதி, எட்டையாபுரம் | 50 |
| 351 | மாணவியர் விடுதி, புதூர் | 75 |
| 352 | மாணவியர் விடுதி, நாங்குனேரி | 40 |
| 353 | மாணவியர் விடுதி, தூத்துக்குடி | 50 |
| 354 | மாணவியர் விடுதி, பாளையங்கோட்டை | 50 |



திருநெல்வேலி மாவட்டம்—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| 355 | மாணவர் விடுதி, பேட்டை | 50 |
| 356 | மாணவர் விடுதி, கூட்டப்புலி | 50 |
| 357 | மாணவர் விடுதி, கழுகுமலை | 50 |
| 358 | மாணவர் விடுதி, இடைக்கல் | 50 |
| 359 | மாணவியர் விடுதி, பனிக்கநாடார் குடியிருப்பு | 50 |
| 360 | மாணவியர் விடுதி, கருங்குளம் | 50 |
| 361 | மாணவியர் விடுதி, கூட்டப்புலி | 50 |
| 362 | மாணவியர் விடுதி, சங்கர்நகர் | 50 |
| 363 | மாணவர் விடுதி, பேட்டைக்குளம் | 50 |
| 364 | மாணவர் விடுதி, ஊவரி | 50 |
| 365 | மாணவர் விடுதி, இராதாபுரம் | 50 |

கன்னியாகுமரி மாவட்டம்.—

| | | |
|---|---|---|
| 366 | கல்லூரி மாணவியர் விடுதி, நாகர்கோவில் | 50 |
| 367 | கல்லூரி மாணவர் விடுதி, குழித்துறை | 50 |
| 368 | கல்லூரி மாணவியர் விடுதி, அகதீஸ்வரம் | 50 |
| 369 | மாணவியர் விடுதி, குளச்சல் | 50 |
| 370 | மாணவியர் விடுதி, குலசேகரம் | 50 |
| 371 | மாணவியர் விடுதி, பூதப்பாண்டி | 50 |
| 372 | மாணவியர் விடுதி, தக்களை | 50 |
| 373 | மாணவர் விடுதி, ஆரல்வாய்மொழி | 50 |
| 374 | மாணவியர் விடுதி, கருங்கல் | 50 |
| 375 | மாணவியர் விடுதி, இரணியேல் | 50 |

சுருக்கம்.

| | | மொத்தம் |
|---|---|---|
| 41 | கல்லூரி மாணவர் விடுதிகள் | 3,260 |
| 15 | கல்லூரி மாணவியர் விடுதிகள் | 710 |
| 263 | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள் | 14,183 |
| 55 | உயர்நிலைப் பள்ளி மாணவியர் விடுதிகள் | 2,800 |
| 1 | தொழிற் பயிற்சி விடுதி | 75 |
| 375 | | 21,028 |

[1983 ஏப்ரில் 21

திருநெல்வேலி மாவட்டம்.

| | | |
|---|---|---|
| 54 | மாணவர் விடுதி, கயத்தார் | 50 |
| 55 | மாணவர் விடுதி, கோவில்பட்டி | 60 |
| 56 | மாணவர் விடுதி, சங்கரன்கோயில் | 110 |
| 57 | மாணவர் விடுதி, அம்பாசமுத்திரம் | 75 |
| 58 | மாணவர் விடுதி, பாளையங்கோட்டை | 75 |
| 59 | மாணவர் விடுதி, தென்காசி | 60 |
| 60 | மாணவர் விடுதி, வீரகேரளம்புதூர் | 40 |
| 61 | மாணவர் விடுதி, வெள்ளாங்குளம் | 40 |
| 62 | மாணவர் விடுதி, வன்னிக்கோநேந்தல் | 30 |
| 63 | மாணவர் விடுதி, சாயமலை | 30 |
| 64 | மாணவர் விடுதி, வாசுதேவநல்லூர் | 50 |
| 65 | மாணவியர் விடுதி, சங்கரன்கோவில் | 50 |

| | சுருக்கம். | மொத்தம் |
|---|---|---|
| 49 | உயர்நிலைப் பள்ளி மாணவர் விடுதிகள் | 4,109 |
| 14 | உயர்நிலைப் பள்ளி மாணவியர் விடுதிகள் | 1,425 |
| 2 | தொழிற்கல்வி மாணவர் விடுதிகள் | 150 |
| 65 | மொத்தம் .. | 5,684 |



1983 ஏப்ரல் 21]

அட்டவணை 'ஈ'.

அ. பிற்பட்டோர் நலத் துறை மற்றும் தொழில் வணிகத் துறை இயக்குநரின் கீழ் நடப்பவை.

| | தொழிற்பயிற்சிக்கூடங்கள். | துவங்கப் பட்ட வருடம். | பயிற்சியாளர்களின் எண்ணிக்கை. | உதவி பண விகிதம். |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1 | பொதுநோக்கு பொறியியல் பட்டறை, முதுகுளத்தூர், இராமநாதபுரம். | 1961 | 30 | 45 |
| 2 | பொதுநோக்கு பொறியியல், பட்டறை செக்காணூரணி, மதுரை. | 1963 | 15 | 45 |
| 3 | பொதுநோக்கு பொறியியல் பட்டறை, வீரகேரளம்புதூர், திருநெல்வேலி. | 1965 | 15 | 45 |
| 4 | பிரம்பு பயிற்சி நிலையம், தக்கலை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 15 | 30 |
| 5 | தும்பு பயிற்சி நிலையம் குழித்துறை, கன்னியாகுமரி மாவட்டம். | 1960 | 25 | 30 |

ஆ. சமூக நல இயக்குநரின் கீழ் நடப்பவை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தையல்மற்றும் ஆயத்த ஆடை நிலையம், ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி. | 1970 | 20 | 30 |
| 2 | தையல் மற்றும் எம்ப்ராய்டரி நிலையம், செக்காணூரணி, மதுரை. | 1971 | 50 | 30 |

| தொழிற்பயிற்சிக் கூடங்கள். | துவங்கப் பட்ட வருடம். | பயிற்சி யாளர் களின் எண் ணிக்கை. | உதவி பண விகிதம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 3 தையல் பயிற்சி நிலையம், ஊமங்கலம், தென்னாற்காடு மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 4 தையல் பயிற்சி நிலையம், கம்பம், மதுரை மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 5 தையல் பயிற்சி நிலையம், திருவாடானை, இராமநாதபுரம் மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 6 தையல் பயிற்சி நிலையம், தேவர் குளம், திருநெல்வேலி மாவட்டம். | 1978 | 20 | 30 |
| 7 தையல் பயிற்சி நிலையம், கிருஷ்ணன் கோவில், கன்னியாகுமரி மாவட்டம். | 1978 | 20 | 30 |

நூலகம் ★ 600 008 ★
143185

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road Madras-5.
10 The South India Saiva Siddhantha Works Publishing Society (Tirunelveli), Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFASSIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Thanjavur District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Thanjavur District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers 9/31, Cross Cut Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jagannathan Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mari Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No 46-D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathippagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District)
19 Baby Stores Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-*

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi-1.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, TAMIL NADU ON THE AUTHORITY OF THE CHAIRMAN OF THE LEGISLATIVE COUNCIL.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

**தவணைத்தாள்.**

சே எண் : 143185 ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.